# அட்சய வடம்

கலாபூஷணம்
மாத்தளை பெ. வடிவேலன்



F
220

பூபாலசிங்கம் புத்தகசாலை

# அட்சய வடம்

# 2

Jaffna Central College Library
11812

கலாபூஷணம்

இலக்கியச்செம்மல்

**மாத்தளை பெ. வடிவேலன்**

நூலின் பெயர் : அட்சய வடம் 2
பதிப்பாசிரியர் : கலாபூஷணம், இலக்கியச் செம்மல்
**மாத்தளை பெ. வடிவேலன்**
முதற் பதிப்பு : 2012
அட்டைப்பட வடிவமைப்பு: கலாபூஷணம் எஸ். டி. சாமி
வெளியீடு : பூபாலசிங்கம் பதிப்பகம்
202, செட்டியார் தெரு, கொழும்பு - 11
தொலைபேசி : 2422321
அச்சு : யுனி ஆர்ட்ஸ் [பிறைவேட்] லிமிட்டட்
48 B, புளூமெண்டால் வீதி, கொழும்பு - 13
பக்கங்கள் : XXIV + 180
பிரதிகள் : 500
அளவு : 1/8
கடதாசி : 70 ஜி. எஸ். எம். வெள்ளைத்தாள்
விலை : ரூபா 350

Jaffna Central College Library

Title : Atchaya Vadam
Editor : Kalaapoosanam Ilakiya Chemmal
**Mathalai P. Vadivelan**
First Edition : 2012
Cover Design : Kalaapoosanam S. D. Samy
Published by : Poobalasingham Pathippaham
202, Sea Street, Colombo - 11
Tel : 2422321
Printers : Unie Arts (Pvt) Ltd
48 B, Bloemendhal Road, Colombo 13.
Tel: 2330195
No of Pages : XXIV + 180
No of Copies : 500
Size: : 1/ 8
Paper Used : 70 GSM White Paper
Price : Rs. 350
ISBN : 978-955-9396-55-0

# பதிப்புரை

எங்கள் தந்தையார் பூபாலசிங்கம் அவர்கள் எங்களின் புத்தகசாலையை வியாபார நிலையமாக மட்டுமன்றி ஓர் அறிவுக்கூடமாகவும் ஆக்கியவர். அவர் காலத்தில் இலக்கியகர்த்தாக்கள் ஒன்றுகூடும் இடமாக எங்கள் புத்தகசாலை விளங்கியது. இன்று பெருமைபடப் பேசப்படும் பல பேரறிஞர்கள் எங்கள் தந்தையின் நண்பர்கள். வியாபாரமே நோக்கமாக அல்லாது வாசிப்பினை ஊக்குவிக்க வேண்டும் எனும் நோக்கோடு எங்கள் தந்தையார் ஆரம்பித்த பூபாலசிங்கம் புத்தகசாலை இன்றும் அப்பணியைத் தொடர்கிறது. தந்தையாரிட்ட அத்திவாரத்தால் இன்றைக்கும் எங்கள் வியாபார நிலையம் அறிஞர்களின் ஒன்றுகூடுகளமாகவே திகழ்கிறது. அது எங்களின் பேறு.

இத்தகு அறிஞர்களின் தொடர்பால் வெறுமனே புத்தக வியாபாரம் மட்டுமன்றி வெளியீட்டு முயற்சிகளிலும் ஈடுபடவேண்டும் எனும் பெருவிருப்பு உண்டாகியது. அந்த விருப்பதால் யாழ்ப்பாணத்தில் இருந்த போது 'பூபாலசிங்கம் புத்தகசாலை வெளியீடு' என்ற பெயரில் மூதறிஞர் 'சொக்கன்' அவர்களின் "பத்திக் சந்" எனும் மொழிபெயர்ப்பு நூலினை முதன்முதலில் வெளியிட்டோம். தொடர்ந்து ஓரிரு புத்தக வெளியீடுகளோடு போர்ச்சூழலால் அம்முயற்சி நின்றுபோனது. பின் 1993இல் கொழும்புக்கு இடம்பெயர்ந்து இங்கு எங்கள் புத்தகசாலையை ஆரம்பித்ததும், அடி மனதில் கிடந்த நூல் வெளியீட்டு விருப்பம் மீண்டும் தலை தூக்கியது. 1993இல் 'பூபாலசிங்கம் பதிப்பகம்' எனும் அமைப்பைத் தொடங்கி தரமான நூல்களை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டோம்.

"ஈழத்தவர் வரலாறு" (செங்கை ஆழியான்) "கலைக்குரல்கள்" (V.N.S உதயச்சந்திரன்) "மனநதியின் சிறு அலைகள்" (மு. விஜயன்), "வேட்கை" (நீர்வை பொன்னையன்), "பாதை" (நீர்வை பொன்னையன்), "மரக்கொக்கு" (தெணியான்), "காத்திருப்பு" (தெணியான்) ஈழத்து முன்னோடி சிறுகதைகள் ஆகிய நூல்கள் இதுவரை பூபாலசிங்கம் பதிப்பகத்தினால் வெளியிடப்பட்டன.

ஈழத்தைப் பொறுத்தவரை வெளியீட்டு முயற்சிகள் இன்னும் வளர்ச்சி பெறவில்லை என்பதே உண்மை நிலை. தமிழகத்தைப் போல விரிந்த வாசகர் வட்டம் இங்கில்லாதிருப்பது பெரிய குறை. அரசாங்கத்தின் ஆதரவும், ஏற்றுமதி வசதியும் இல்லாத நம் நாட்டுச்சூழலில் வெளியீட்டு முயற்சி என்பது மிகச் சிரமமான காரியம். இந்நிலையில் புத்தக விற்பனைத் தொடர்புகள் இருப்பதால், இவ்வெளியீட்டு முயற்சியில் தொடர்ந்து துணிந்து முயன்று வருகிறோம்.

அண்மைக்காலமாக, கல்வியமைச்சினால் நூல்கள் வாங்கப்படுவது வெளியீட்டாளர்களுக்குக் கிடைத்திருக்கும் பெரிய ஊக்கம். அதற்குக் காரணமாயிருந்து பணியாற்றிய கல்வியமைச்சின் மேலதிகச் செயலாளர் திரு. எஸ். தில்லைநடராஜா அவர்களுக்கு வெளியீட்டாளர் அனைவரும் கடமைப்பட்டுள்ளனர். அவருக்கு எமது நன்றியினையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஈழத்து இலக்கிய உலகில் மலையக இலக்கியம் தனித்துவம் மிக்கது. மலையக பாரம்பரியகலைகள் அடங்கலாக மலையக நாட்டுப் புறவியல் செழுமைமிக்கத்துடன் உழைக்கும் மலையகத் தமிழ் தொழிலாளர்களின் இதய குமுறல்களை வெளிப்படுத்தும் உன்னத கலை இலக்கிய வடிவங்களாகும்.

சமகால ஈழத்துப் படைப்பிலக்கியத் துறையிலும் மலையகத்தின் பங்களிப்பு காத்திரமானது. எனினும் ஆற்றல் மிக்க பல மலையக எழுத்தாளர்களின் படைப்புகள் இதுவரை நூலுரு பெறாமை வருந்தத்தக்கது.

மலையக எழுத்தாளர் கலாபூஷணம் மாத்தளை பெ. வடிவேலனுடன் நான் கொண்டுள்ள நட்பு மிக நீண்டது மட்டுமன்றி, ஆழமானது. எளிமையும் மானுட நேயமும், இனிய சுபாவமும் கொண்ட ஆளுமைமிக்க அவரது தனியான ஒரு சிறுகதைத் தொகுதி இதுவரை வெளிவராமை எனது மனதை உறுத்திக்கொண்டே இருந்தது. **அட்சய வடம்** என்னும் மகுடத்தின் அவரது இருபது சிறுகதைகளை தொகுத்து வெளியிடுவதில் பெரும் மனநிறைவும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். அவரது இலக்கிய முயற்சிகளுக்கு துணை புரிவதுபோல மேலும் பல மூத்த எழுத்தாளர்களின் படைப்புக்களை நூலுரு பெற முயற்சிகளை மேற்கொண்டுள்ளேன்.

இதுவரை எமது நூல்களுக்கு ஆதரவு வழங்கிய வாசகர்களுக்கு நன்றி கூறுவதுடன், இலங்கை எழுத்தாளர்களின் ஆக்கங்களை அச்சிட்டு இலக்கிய உலகிற்கு, வளம் சேர்க்கும் எமது முயற்சிகளுக்கு தங்களது மேலான பேராதரவினை வழங்கி எம்மை ஊக்குவிக்கும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**பூ. ஸ்ரீதர்சிங்**

**14.09.2012**

# என்னுரை

இந்தியாவிலிருந்து தமிழர்கள் கடல் கடந்து வாணிபத்தில் ஈடுபடுவதும், புலம் பெயர்ந்து வேறு நாடுகளில் குடியேறுவதும் கிறிஸ்து சகாப்தத்திற்கு முந்திய காலப்பகுதியிலேயே நிகழ்ந்து வந்துள்ளது. எனினும், பிரித்தானியர் ஆட்சிக்காலப்பகுதியில் புலம் பெயர்ந்த தமிழ் மக்களின் பின்புலம், முந்திய காலகட்டங்களில் நிகழ்ந்த புலப்பெயர்ச்சிக்கு முற்றிலும் மாறுபட்ட காரணத்தைக் கொண்டது.

அந்நியருக்குச் சொந்தமான கரும்பு, தேயிலை, இறப்பர் தோட்டங்களை உருவாக்கி, அவற்றில் மெய் உழைப்பையே மூலமாகக்கொண்டு; மூடிமறைக் கப்பட்ட உண்மைகளுக்கும், வஞ்சக சூழ்ச்சிகளுக்கும் உட்பட்ட மக்கள் பட்டாளமாகவே அது விளங்கியது.

இம்மக்கள், வெறும் உழைப்பாளிகள் மட்டுமல்ல; ஒரு நீண்ட கலாசார பாரம்பரியத்தினதும் இந்து பண்பாட்டினதும் பிரதிநிதிகளாகவும் அப்பாரம்பரியங்களின் நிலைக்களனுமாவர். அத்தோடு கடும் உழைப்பாளிகளான இவர்கள் கலாநயமிக்க மாந்தர்களுமாவர்.

இன்று இலங்கையில் தனித்துவமான இனக்குழுவாக பரிமாணம் பெற்றுள்ள இந்திய வம்சாவளி தமிழ் மக்களின் கலை, இலக்கிய வளர்ச்சி நாங்கள் இங்கு குடியேறிய காலத்திலேயே ஆரம்பித்து விட்டது.

தம், பாரம்பரியக்கலைகளை, சமய சடங்காசார பின்னணியில் இங்கு வளர்த்து வரும் மலையகமக்களின், வரலாறு, நாகரீகம், கலாசார பண்பாடு, பழக்கவழக்கங்கள், நாட்டு நடப்பு, தெய்வ இலக்கியங்கள், கலைத்துறை மரபு நாட்டுப்புற மருத்துவம் வழக்காறுகள் என்பன மலையக நாட்டுப்புறவியலில் தனித்துவமான மூலக்கூறுகளாகும்.

ஈழத்து இலக்கியப்பரப்பில், சமகால சிருஷ்டி இலக்கியத் துறையில், மலையகம் பிந்தியே பிரவேசித்தாலும் அது "ஈழத்து இலக்கியத்திற்கு புதிய இரத்தம் பாய்ச்சியவர்கள்" என்னும் கணிப்பீட்டிற்குரிய அளவில் மலையக படைப்பாளிகள் இன்றும் தம் பங்களிப்பினை நல்கிவருவதையிட்டு பெருமை கொள்ள முடியும்.

மலையக நாட்டுப்புறவியல் அம்சங்களை அறிமுகப்படுத்தும் முதல் நூலும், பிரசுரமாகிய எனது முதல் நூலுமான மலையகப் பாரம்பரியக்கலைகள் உட்பட எனது ஆக்கங்கள் பத்திற்கும் அதிகமானவை நூல் வடிவில் பிரசுரமாகியுள்ளதுடன், காத்திரமிக்க சிறுகதை இலக்கியத்தொகுதிகள் பலவற்றில் எனது சிறுகதைகள் இடம் பெற்றிருப்பினும் "அட்சய வடம்" என்னும் இத்தொகுதியே எனது முதல் தனிச்சிறு கதைத் தொகுதியாகும்.

ஐம்பதிற்கும் அதிகமான சிறுகதைகளையும், பல கவிதைகளையும், மூன்று தொடர்கதைகளையும் எழுதியுள்ள நான், இத்தொகுதியில் மலையக மக்களின் வாழ்வியலை சித்தரிக்கும் கதைகளோடு, சுதந்திர இலங்கையில் புரையோடிப்போன இனப்பிரச்சினை தீர்க்கப்படாததினால் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தத்தின் விளைவாக, மலையகத் தமிழர் தனித்தேசிய இனமாக விளங்கிவருகின்ற போதும், இந்நாட்டில் வாழும் தமிழர் என்ற அடிப்படையில் முகம் கொடுத்த கொடுமைகள், அனுபவித்த இன்னல்கள், ஏற்பட்ட பாதிப்புகள் இழப்புகள் என்பனவற்றை பிரதிபலிக்கும் கதைகளையே அதிகமாக உள்ளடக்குவது இன்றைய காலகட்டத்தின் அவசியமானதும், பொருத்தமானதும் என்பதை உணர்ந்து ஒரு சமுதாய கடமையாக ஏற்று தெரிவு செய்து சேர்த்துள்ளேன்.

“இலக்கியம் ஒரு சமுதாயப்பணி” என்ற நம்பிக்கையில் எழுதி வரும் நான், பல்வேறு வகையான சுரண்டல்களுக்கும், இன ஒதுக்கல்களுக்கும் உட்பட்டு துன்பமே நித்தியமானதும், நிரந்தரமுமான எம் மக்களின் அவலம் தோய்ந்த துயரவாழ்க்கையினையும், அவர்கள் முகம்கொடுத்த, எதிர்கொள்கின்ற பிரச்சினைகளையும் உலகிற்கு எடுத்துக் காட்டுவதே எனது எழுத்தின் பயன் என திடமாக நம்புகின்றேன்.

எம்மக்களின் துயரங்கள் பல நாங்கள் குடியேறிய வரலாற்றுடன் வழி வந்தவைகளாகும், சுதந்திரத்திற்கு பின்னர் தேசிய இனப்பிரச்சினை உக்கிரமடைந்த நிலையில் வாழ்விட பிரதேச பாதுகாப்பின்மை, பெருந்தோட்டப் பொருளாதாரத்தின் ஸ்திரமற்ற தன்மை, பொருளாதார பலமின்மை என்பனவற்றினால் பல்வேறு கொடுமைகளுக்காளாகியுள்ள அப்பாவி மக்களின் வாழ்வை இலக்கியத்தில் பதிவுசெய்து விட வேண்டும் என்பதுவே எனது படைப்புகளின் முக்கிய நோக்கமாகும். இதுவே எனது கருப்பொருள்.

“வெள்ளைக்காரன் சுதந்திரம் கொடுத்து விட்டோம் என்று நாட்டைவிட்டு வெளியேறினாலும், காலனித்துவ நாடுகளிலும் இலங்கையைப் போன்று அவர்களை நம்பி வந்த இந்தியவம்சாவளியினருக்கும், சிறுபான்மை தேசிய இனங்களுக்கும் அரசியல் யாப்பு ரீதியாக அவர்கள் அளித்த காப்பீடுகள் போதுமானவைகள் அல்ல. காலனித்துவ ஆட்சிக் கொடுமைகளுடன் புதிய துன்பங்களும், துயரங்களும் தொடர்ந்தன. இவ்வடிப்படையான அம்சங்களிலிருந்து மீறவும், மீளவும் முடியாமல் நம்மவர்கள் காலங்காலமாக அனுபவித்து வரும் “வதைகளை” புறக்கணித்து விட்டு வெறும் ரசனைக்காக மட்டும் கதைகளை படைத்தால் நாம் வரலாற்றுக்கு துரோகம் இழைத்தவர்களாவோம்.

இருநூறு ஆண்டு கால சமூகவாழ்க்கையில் விடா முயற்சியுடன், எதிர் நீச்சல் போட்டு, தனி மனிதன் அடைந்த கல்வி முன்னேற்றம் சமூகத்தில், சில பிரிவினர் பெற்ற பொருளாதார உயர்ச்சியும், மலையகத்தில் உண்டென்பது உண்மைதான். இது பாராட்டுக்குரியது. எனினும் முழு சமூகத்தின் ஒட்டு

மொத்தமான வாழ்வினை நோக்குமிடத்து மனசாட்சியுடைய எவராலும் நிறைவு கொள்ள முடியாது.

இலங்கையில் மாதசம்பளம் இன்றி ஆகக்குறைந்த தினக்கூலியை பெறுபவர்கள் மலையக தோட்டத்தொழிலாளர்களேயாகும். மலையக சமூகத்தில் முடிவின்றி தொடரும் அவலங்களையே எனது படைப்புகள் பிரதிபலிக்கின்றன. இவற்றிலிருந்து ஒதுங்கி இலக்கியம் படைக்க முடியாது.

எனது இச்சிறுகதைத்தொகுதி வெளிவரும் இவ்வேளையில், எனது சிருஷ்டி இலக்கிய முயற்சிகளுக்கு களம் அமைத்துக்கொடுத்து, ஊக்கமளித்த தினபதி, சிந்தாமணி, வீரகேசரி தினகரன், தினக்குரல் செய்தி, உதயன், சுடரொளி, தினமணிக்கதிர் ஆகிய பத்திரிகைகளின் நிர்வாகத்தினருக்கும், ஆசிரிய பீடத்தினருக்கும் சிரித்திரன், மல்லிகை, சமர், கொழுந்து, குங்குமம் உட்பட அனைத்து சஞ்சிகைகளுக்கும் நன்றியினை தெரிவிக்கின்றேன்.

இதுவரை எனது எழுத்துக்கள் பல, நூல் வடிவில் வெளிவந்துள்ள, இவ்வேளையில் எனது முதல் நூலான, ''மலையகப் பாரம்பரியக் கலைகள்'' வெளியிட்ட சட்டத்தரணி வீரையா விவேகானந்தன் அவர்களுக்கும், மலையகத்தில் மாரியம்மன் வழிபாடும், வரலாறும். கதிர்காம முருகன் திருவடி போற்றி 108 ஆகிய இரு நூல்களை பிரசுரித்ததுடன். மலையக இலக்கிய வெளியீட்டு முயற்சிகளுக்கு தனது காத்திரமான பங்களிப்பினை நல்கி வருபவரும், இலக்கியக் கர்த்தாக்களுக்கு சேவை ஆற்றிவரும் ஊடகவியலாளர் எச். எச். விக்கிரமசிங்க (மாத்தளை செல்வா) அவர்களுக்கு அவரது குடுத்தினருக்கும் எனது நன்றிகள்.

மாத்தளை தமிழ் இலக்கிய வட்டத் தலைவர் த. விஜயகுமார் வி. நமசிவாயம், ஜனாப் நஸீர் ரியால், ஏ. எச். எம். தௌபீக், எம். லாபீர் உட்பட அனைவருக்கும், மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான அறங்காவலர் சபையின் தலைவர் உறுப்பினர்கள் உட்பட, மாத்தளை விபுலானந்த கலா மன்றத்தினர், தலைவர் கலாபூஷணம் ராஜ் சிவா உட்பட உறுப்பினர்கள் இந்து இளைஞர் மன்றத்தினர், வே. தங்கராஜா உட்பட இந்து கலாசார பேரவையினர், மாத்தளை மாருதி இல்ல சுவாமிஜி மாணிக்கம் சேர்வை சுரேஸ், மாத்தளை சைவ மகாசபையின் தலைவர் உட்பட உறுப்பினர்கள், மாத்தளை இஸ்லாமிய இலக்கிய பேரவை தலைவர் உட்பட உறுப்பினர்கள், இலக்கிய ஆர்வலர்கள், அபிமானிகள், மாத்தளை மாவட்ட இந்து ஆலயங்கள், இந்து சமய நிறுவனங்கள், பாடசாலை, அதிபர்கள், ஆசிரியர்கள், ஆசிரியர் சங்கங்கள் உட்பட சகலருக்கும் எனது பணிவான நன்றி உரித்தாகுக.

இந்து சமய கலாசார அமைச்சு, இந்து சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் கே. சண்முகலிங்கம், திருமதி சாந்திநாவுகரசன், தில்லை எஸ். நடராஜா, தி. யோகநாதன் மற்றும் செயலாளர்கள், மேலதிக செயலாளர்கள், பணிப்பாளர்கள், உதவிப்பணிப்பாளர்கள் உட்பட அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

முன்னாள் அமைச்சர்களான கலாநிதி செல்லையா இராஜதுரை, வி. புத்திரசிகாமணி, பி. பி. தேவராஜ் ஆகியோருக்கும் அமரர்களான பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி, அம்பலவாணர் சிவராசா ஆகியோருக்கும், எனது நல்வாழ்வில் அக்கறை கொண்ட பேராசிரியர்களான எஸ். தில்லைநாதன், துரை மனோகரன், எஸ். மௌனகுரு, சோ. சந்திரசேகரன், செயலாளர் எம். வாமதேவன் வீ. விக்கிரமராஜா உட்பட எனது இலக்கிய முயற்சிகளுக்கு ஊக்கமளித்த எழுத்தாளர்களும், சிந்தனையாளர்களுமான காலத்தை வென்ற பெரியார் எ. இளஞ்செழியன், செ. யோகநாதன் கெ. டேனியல் முதலான அனைத்து எழுத்தாளர்களுக்கும் எனது நன்றிகள்.

எனது நூல்கள் வெளிவர அனுசரணை வழங்கிய வர்த்தக பிரமுகர்கள், இலக்கிய அபிமானிகளுக்கு என்றும் நன்றியுடையேன். மாத்தளை மாவட்ட தமிழ், இஸ்லாமிய பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், நான் பிறந்த ஊரான நோர்த் மாத்தளை உட்பட, குருணாகல் மற்றும் மலையகத்திலும் இலங்கையிலும் கடல் கடந்து வாழும் இலக்கிய அபிமானிகள் அளித்த ஆக்கபூர்வமான உதவிகளுக்கு என்றும் நன்றியுடையேன்

எனது சிறுகதைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்த பன்னாமத்துக்கவிராயர், கே. எஸ். சிவகுமாரன், ஏ. பி. வி. கோமஸ், சிங்களத்தில் மொழி பெயர்த்த விமல் சுவாமிநாதன் ஆகியோருக்கும் கொழுந்து சஞ்சிகை ஆசிரியர் அந்தனி ஜீவா அவர்களுக்கும் குடும்பத்தினருக்கும் மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா அவர்களுக்கும் தெளிவத்தை எஸ். ஜோசப், பேராசிரியர் சோ. சந்திரசேகரன், சு. முரளிதரன், கலைச்செல்வன், லெனின் மதிவாணம், எஸ். விஜயசந்திரன், அ. இராமன் கண்டி பெ. முத்துலிங்கம், மேமன்கவி ஜனாப் பீர்முகம்மது, ஜனாப் மரிக்கா உக்குவெல வாசுதேவன், திரு. கே. சுப்பிரமணியம்ஆகியோருக்கும் எனது நன்றிகள் உரித்தாகும்.

வீரகேசரியுடன் இணைந்து நான்காவது மலையக சிறுகதைப் போட்டியினை நடாத்தி "பிஞ்சு உலகம்" சிறுகதைக்கு முதற் பரிசு வழங்கி கௌரவித்த அமரர்கள் எஸ். எம். கார்மேகம், இரா. சிவலிங்கம், திருச்செந்தூரன் ஆகியோருக்கும், பதுளை கலை ஒளி முத்தையாபிள்ளை நினைவுதின சிறுகதைப் போட்டியில் பரிசு வழங்கிய ஆய்வாளரும், விமர்சகருமான மு. நித்தியானந்தன், துரைவி – தினகரன் சிறுகதைப் போட்டியில் பரிசு வழங்கிய அமரர் துரை விஸ்வநாதன், வெள்ளி விழாவினையொட்டி நடாத்திய சிறுகதைப் போட்டியில் பரிசு வழங்கி சிறப்பித்த "உதயன்" பத்திரிகை நிறுவனத்தினருக்கும் எனது மன மார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந் நூலை மனமுவந்து பிரசுரித்த இலக்கிய அன்பரும், நூல் விற்பனை சாதனை படைத்துவருபவரும், ஈழத்தின் நூல் விற்பனைத் துறையில் முன்னோடியும், பிரசுர வசதியின்றி தவிக்கும் பல எழுத்தாளர்களின் நூல்களை சுயலாபம் கருதாமல் பிரசுரித்து இலக்கியத்துறைக்கு காத்திரமான பங்காற்றி வரும் பூபாலசிங்கம் நிறுவனத்தின் உரிமையாளருமான திருவாளர் ஸ்ரீதர்சிங் அவர்கள் எமது குடும்பத்தின்பால் அன்பும், பாசமும் கொண்டவர். எமது

வாழ்வில் அக்கறை கொண்டவர். மலையக கலை, இலக்கிய முயற்சிகளுக்கு அரும் சேவையாற்றும் இவருக்கும் என்றும் நன்றி கூற கடமைபட்டுள்ளேன்.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய பேராசிரியர் க. அருணாசலம் அவர்கள் மலையக மக்களின் நல்வாழ்வில் பெரும் கரிசனைகொண்டவர். மலையக மக்களின் இருப்பு, வாழ்வியல் போராட்டங்களை நன்கறிந்தவர். மலையக இலக்கியம் பற்றி ஆய்வு செய்து நூல்கள் பலவற்றை எழுதியவர். எனது ஆசிரியர். என் இலக்கிய முயற்சிகளுக்கு ஆலோசனை வழங்கி ஆற்றுப்படுத்தியவர். பேராதனை பல்கலைகழகத்தின் தமிழ்த்துறை தலைவராக விளங்கி, மணிவிழாக் கண்ட இவருக்கும் எனது பணிவான நன்றியினைத் தெரிவிக்கின்றேன். இதே போல் இந்நூலுக்கு அட்டைப் படத்தினை வரைந்துள்ள நண்பர் ஓவியர் கலாபூஷணம் எஸ். பி. சாமி அவர்களுக்கும் எனது நன்றிகள்.

வீரகேசரியின் வார வெளியீட்டின் பிரதம ஆசிரியர் வீ. தேவராஜ், ஊடகவியலாளர் சிவலிங்கம் சதீஸ்குமார், தினகரன் ஆசிரியர், அமரர் எஸ். சிவகுருநாதன், வாரமஞ்சரி ஆசிரியர் வே. செந்தில்வேலர், சட்டத்தரணி கோ. சேனாதிராஜா மற்றும் மலையக தொழிற்சங்க பிரமுகர்களான பதுளை கே. வேலாயுதம், மாத்தளை எஸ். ராமநாதன், நாவல் நகர் பொன்னுத்துரை, ஜனாப் மொஹினுதீன் ஆகியோருக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். நான் மனம்சோர்ந்த போதெல்லாம் துவண்டுவிடாது உறுதுணையாக நிற்கும் என் வாழ்க்கை துணைவி சியாமளா தேவிக்கும் எம் எழுத்துக்கு துணை நின்ற மாணவர்களுக்கும் வாசகர்களுக்கும் என்றும் நன்றியுடையேன்.

இந்நூலை சென்னையில் அறிமுகம் செய்து விமர்சன ஆய்வரங்கு நடாத்த விருக்கும், சமூக சேவையாளரும், எழுத்தாளருமான, கலைமாமணி வி. கே. டி. பாலன் அவர்களுக்கும், சென்னை கனகரத்தினம் ராஜேஸ்வரி குடும்பத்தின ருக்கும் நன்றியறிதலை தெரிவித்துக்கொள்கின்றேன்.

நூல்கள் அச்சிடுவதை ஓர் அருங்கலையாக, உளமார்ந்த பணியாக மேற்கொண்டு வரும் யுனிஆர்ட்ஸ் நிறுவன உரிமையாளரும், சமூக சேவையாளருமான திருவாளர் பொன். விமலேந்திரன் அவர்களுக்கும், அவரது குடும்பத்தாருக்கும் அங்கு பணிபுரியும் சகோதர, சகோதரிகளுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக.

கலாபூஷணம் இலக்கியச் செம்மல்,
**மாத்தளை பெ. வடிவேலன்.**

# அட்சய வடம்

## ஓர் அறிமுகக்குறிப்பு

**பேராசிரியர் க. அருணாசலம்**
**தமிழ்த்துறை,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்,**
**பேராதனை.**

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் 1960கள் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றன. ஏறத்தாழ 1930களிலிருந்து இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் நவீன இலக்கிய குறிப்பாகச் சிறுகதை இலக்கியம் தோன்றி வளரலாயிற்று. ஆயின் 1960களிலிருந்தே இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கப்பால் வன்னிப்பிரதேசம், மலையகம், தென் இலங்கை, சிங்கள மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேசங்கள் முதலியவற்றில் சிறுகதை இலக்கியம் தோன்றி வேகமாக வளரலாயிற்று. 1960களில் மலையகத்தில் உருவான எழுத்தாளர் பரம்பரையை மிகப் பொருத்தமான முறையில் இர. சிவலிங்கம் 'ஆந்திரப் பரம்பரை' எனக் குறிப்பிட்டார். இவ் ஆந்திரப் பரம்பரையைச் சேர்ந்தவர்களுள் ஒருவரே மாத்தளை வடிவேலன் ஆவார். மாத்தளை என்றதும் நம்மனக் கண்ணில் நிற்பவர்களில் மாத்தளை வடிவேலனும் ஒருவர்.

மாத்தளை வடிவேலன் படைப்பிலக்கியத்துடன் மட்டும் அமையாது மலையகம் பற்றிய ஆய்வுத்துறையிலும் கூடுதலான கவனம் செலுத்தி வருகின்றார். மலையக பாரம்பரியக்கலைகள் (1992) இறத்தோட்டை அருள்மிகு ஸ்ரீ செல்வ விநாயகப் பெருமானின் அருளாட்சியும் ஆலய வளர்ச்சியும். மலையக நாட்டுப்புறவியலில் மாரியம்மன், மலையகத்தில் மாரியம்மன் வழிபாடும் வரலாறும். 'கடலம்மா ஏனிந்த சீற்றம் - (கவிதை), மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் திருப்பள்ளியெழுச்சி, 108 ராஜகோபுர ஸ்ரீ முத்துமாரியம்மன் போற்றி, மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் திருப்பொன்னூஞ்சல். திருக்கோயில்களில் குடமுழுக்கு என்னும் கும்பாபிஷேகம், மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் 108 அடி ராஜகோபுர நவதள நவகலச கும்பாபிஷேகம், இலக்கியத்தில் மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன், கதிர்காம முருகன் திருவடி போற்றி 108 முதலிய நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

# I

அட்சய வடம் என்னும் இத்தொகுதியில் இருபது கதைகள் அடங்கியுள்ளன. இக்கதைகளில் மலையகத்தின் ஒரு பகுதியான மாத்தளை மாவட்டத் தொழிலாளரின் வரலாறும் வாழ்வியல் அம்சங்களும் தக்க முறையில் புலப்படுத்தப்பட்டுள்ளமையை அவதானிக்கலாம் ஆசிரியர் தான் பெற்றுக்கொண்ட அனுபவங்களையும் தேடுதல் மூலம் அறிந்து - கொண்டவைகளையும் இயன்றவரை கலைத்துவம் குன்றாமற் சிறுகதைகள் ஆக்கியுள்ளார். மலையகத்தின் நுழைவாயிலாக விளங்கும் மாத்தளை மாவட்டமே அதிகமான கதைகளின் களமாக விளங்குகின்றது. தென்னிந்தியாவிலிருந்து பிரித்தானிய ஏகாதிபத்தியத்தினால் வரவழைக்கப்பட்ட தொழிலாளர்கள் கடற்பயணத்திற்கு முன்னதாக அனுபவித்த துயரங்கள், கடற்பயணத்தின் போதுபட்ட வேதனைகள், தலை மன்னாரில் இறங்கி, அடர்ந்த காட்டுப் பாதைகளினூடாக கால் நடையாகவே பயணம் செய்தபோது அனுபவித்த பல்வேறு வகையான இன்னல்கள் முதலியவற்றை வெவ்வேறு உத்திகளைக் கையாண்டு பலகதைகளிலும் காட்டியுள்ளார். மலையக எழுத்தாளர்கள் பலரையும் பாதித்த விடயங்களுள் இதுவுமொன்றாகும்.

மலையகத்தின் நுழைவாயிலாக விளங்கும் மாத்தளை மாவட்டத்தின் பழைய பெயர் பன்னகமம் என்பதாகும். அவ்விடப்பெயர் பற்றிய ஆய்வினையும் கதாசிரியர் மேற்கொண்டுள்ளார். பன்னகமம் என்பது காலப்போக்கில் பன்னாமம் என மருவிற்று.

# II

இத் தொகுதியில் அமைந்துள்ள கதைகள் பலவற்றிலும் 'ஆலடிச்சந்தி' மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது.

இவ்விடம் ஆசிரியருக்கு நன்கு பரிச்சயமான இடம்போலும், இத்தொகுதியின் முதலாவது கதையான 'அட்சய வடம்' என்பதில் ஆலமரச் சந்தியின் முக்கியத்துவத்தினையும் ஆலமரத்தின் வீழ்ச்சியினையும் சுவாரஷ்யமாகப் புலப்படுத்தியுள்ளார். நாநூறு வருடங்கள் பழைமை வாய்ந்த ஆலமரத்தை மையமாகக் கொண்டு பல செய்திகள் விளக்கப்படுகின்றன. அந்த ஆல மரம் ஒருநாள் சாய்ந்து விழுந்தது. அதன் வீழ்ச்சியைக் கண்டு மனவேதனை கொண்ட தோட்டத்தொழிலாளர்கள் அந்த ஆல மரம் பற்றி பலவாறெல்லாம் விமர்சிப்பதை ஆசிரியர் தத்ரூபமாகக் கட்டியுள்ளார். "நானூறு வருடங்களுக்கு மேலான வரலாற்றைக் கண்ணாரக் கண்டு களித்த ஆலமரத்துக்கு மட்டும் வாய் பேச முடிந்தால்; எழுத முடிந்தால்; எத்தனை

எத்தனை கதைகளைச் சொல்ல முடியும். எத்தனை எத்தனையோ சம்பவங்களை அனுபவங்களை இந்த மண்ணின் வரலாற்றை இதில் வாழ்ந்து மடிந்த மக்களின் இன்ப துன்பங்களை எழுத முடியும். வாய்திறந்து சொல்லாது விட்டால் என்ன? மனதில் உள்ளதைக் கொட்டி எழுதாது விட்டால் என்ன? உண்மை உண்மை தானே!'' எனக் கூறப்பட்டாலும் வ. வே. சு. ஐயரின் குளத்தங்கரை அரச மரம் பேசவில்லையா?

இலங்கை – இந்திய அரசுகளுக்கிடையிலான ஒப்பந்தங்களின் படி பல இலட்சம் தோட்டத் தொழிலாளர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர். அவ்வாறு அனுப்பப்பட்ட தொழிலாளர்கள் பட்ட துயரங்கள் சொல்லுந்தரமன்று. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி வரை மாத்தளை மாவட்டம் அதிகளவிலான தொழிலாளர்களைக் கொண்டுவிளங்கியது. தேயிலை, இறப்பர் தோட்டங்களை மட்டுமன்றிப் பல்வேறு வகையான வாசனைத் திரவியங்களின் உற்பத்திக்கும் பெயர் பெற்ற இடமாக விளங்கியது.

காலத்திற்குக் காலம் ஏற்பட்ட இனசங்காரக் கொடுமைகள், அவற்றின் காரணமாகப் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்தமை, பல இலட்சக் கணக்கானதொழிலாளர்கள் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட்டமை, 'தோட்டங்கள் தேசிய மயமாக்கப்படல்' என்னும் போர்வையிற் தாழ்நிலப்பகுதிகள் பெரும்பான்மை மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டமை முதலிய பல்வேறு காரணங்களால் மாத்தளை மாவட்டத் தொழிலாளர்களின் வரலாறு, 'உலக்கை தேய்ந்து உளிப்பிடியான' கதையாக மாறியதை கதாசிரியர் மிகுந்த மனவேதனையுடன் பல கதைகளில் வெளிப்படுத்தியுள்ளார்.

# III

மலையகத் தொழிலாளர்களின் பிரஜாவுரிமைப்பிரச்சினை, இருப்பிடப் பிரச்சினை, வறுமைக் கொடுமை கல்விப் பிரச்சினை, தோட்டத்து அதிகாரிகளின் அடாவடித்தனங்கள், இன வன் செயல்கள், முதிய தொழிலாளர்களின் அனாதரவான நிலை முதலியவை மலையக எழுத்தாளர்கள் பலரது கவனத்தையும் ஈர்த்தவையாகும். மாத்தளை வடிவேலனும் இதற்கு விதிவிலக்கல்ல. மேற்கண்ட பிரச்சினைகளைப் பல்வேறு உத்திகளைக் கையாண்டு பல கதைகளிலும் வெளிப்படுத்தியுள்ளார்.

'கறிவேப்பிலைகள்' என்னும் கதையில் ''பாதையோர வாழ்வு. பாதைக்கு வந்துவிட்டு வாழ்வு வீதிக்குத்தள்ளி விடப்பட்ட முதியோர்கள் சமுதாயத்தில் எத்தனை மேடுபள்ளங்கள் வளைவு நெளிவுகள் – உயர்வு தாழ்வுகள் உண்டோ, அத்தனையும் சூக்குமமாகக் காட்டும் காட்சியாக அவ்வீதி காட்சியளித்தது.'' என வேதனைப்படுகின்றார்.

'அக்கினி' என்னும் கதையில் ரெங்கையாக் கிழவன் என்னும் பாத்திரம் வாயிலாகத் தாயகம் திரும்ப வேண்டியவர்கள் படும் அல்லல்களையும் இனசங்காரத்தில் ஈடுபடுவோரின் வெறித்தனத்தையும் அச்சொட்டாக வெளிப்படுத்தியுள்ளார்.

“லயம் அக்கினி வெள்ளத்தில் தீக்குதித்துக்கொண்டிருந்தது! ஆடு மாடுகளை அடைத்த பட்டிகள் அக்கினியில் சங்கமமாகிக் கொண்டிருந்தன.

தீ நாக்குகளிற் சிக்கிய மிருகங்களின் ஓலம்.....!

அவலக்குரல் எழுப்பி அழுவோரும், சிதறி ஓடுவோரும் !

பொருட்களை இழந்தோரின் பரிதவிப்பு....!

செய்வதறியாத பிஞ்சுக் குழந்தைகள்... !

எல்லாமே வெறியாட்டத்தின் விளைவுகள்.. !

எங்கும் மனத்தைக் குமட்டும் நெடியும் புகையும்...!

நேரம் நிதானமாகக் கடந்து கொண்டிருக்கின்றது.

அக்கினி தேவனின் வெளி தணிந்து கொண்டபோது,

லயத்தின் தகரங்கள் கூட உருகிக் கிடந்தன!

விக்கினங்கள் செய்தவர்கள் விரைவாக மறைந்து விட்டார்கள்.”

.............. “இந்த நாட்டிற்கு என்ன நடந்து விட்டது? இங்கு ஏன் மனிதர்கள்? வெறிபிடித்த மிருகங்களாகி விட்டனர்?” என கதையை முடிக்கின்றார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் ஏற்பட்ட பெரும்பஞ்சம், வாந்திபேதி நோய், கங்காணிமாரின் ஆசைவார்த்தை முதலியன பெருந் தொகையான தொழிலாளர்களை இலங்கைக்கு வர நிர்ப்பந்தப் படுத்தியமை, இலங்கைக்கு வந்த பின் அவர்கள் பட்ட துயரங்கள் முதலியவற்றைப் பல்வேறு கதைகளில் வெளிப்படுத்தினாலும் 'வதைப்படலம்' என்னும் கதையிலேயே தத்ரூபமாகக் காட்டியுள்ளார் கதையின் முடிவில், பாலத்தைக் கட்டி முடிப்பதற்காக ஏதுமறியாத அப்பாவிச் சிறுவன் கணபதியை 'நரபலி' இடும் கொடுமை மனதைக் துணுக்குறச் செய்கிறது.

மலையகத் தொழிலாளர்களின் பிள்ளைகளது கல்வி எவ்வாறெல்லாம் தடைப்படுகிறது என்பதை ஆங்கோர் ஏழைக்கு....” என்னும் கதையில் காட்டியுள்ளார். “மேசை நாற்காலி வாங்கிக் கொடுக்க முடியாதபடியால் மேசை துடைக்க வேண்டியுள்ளதே என்பதை உணராத கிட்டு கண்ணாடி அலுமாரியினுள் வகை வகையாக நிறைந்து கிடக்கும் இனிப்புக்களையும், தின்பண்டங்களையும் கண்ணால் அளந்து, மனதில் சுவைத்துக் கொண்டிருந்தான். பாடசாலையில் சேருவதற்கு வாங்கு மேசை நாற்காலி வாங்க முடியாத அவனை சைவக் கடை மேசையுமா “தன்னை துடைக்க வேண்டாமென விரட்டியடித்து துரத்தி விடவா போகின்றது.” எனக் கதையை

முடிக்கும் போது வாசகளின் மனம் வேதனைக்குள்ளாவது தவிர்க்க முடியாததொன்றாகும். 'பிஞ்சு உலகம்' என்னும் கதையும் இவ்வகையில் மனங்கொளத்தக்கது.

மலையகக் கல்வி வளர்ச்சிக்காக தேவநாயகம் தம்மையே அர்ப்பணித்துச் செயற்பட்டவர். கண்டியிலுள்ள பிரபல கல்லூரி ஒன்றில் படிப்பினை முடித்த பின்னர் கம்பனித் தோட்டம் ஒன்றில் சேர்ந்து இரண்டு வருடப் பயிற்சியினைப் பெற்றுக் கொண்டு தோட்டம் ஒன்றில் உத்தியோகத்தராகச் சேர்ந்தார். கைநிறையச் சம்பளம்; கூப்பிட்ட குரலுக்கு ஓடிவர ஆட்கள்; இட்டவேலைக்கு எடுபிடிகள் என்று அதிகாரம் குறைவில்லாத உத்தியோகம். எனினும் தொழிலாளர் மீது அதிகாரம் காட்டத் தெரியாமை, அவர்களோடு மிக அன்னியோன்னியமாகப் பழகியமை முதலியவற்றால் அவர் உத்தியோகத்தையே இழக்க நேரிடுகின்றது. அதன் பின் அவர் தமது சமூகம் உயர்வு பெறுவதற்குக். கல்வி வளர்ச்சி மிகமிக அவசியம் என்பதை உணர்ந்து தொழிலாளர்களின் கல்வி வளர்ச்சிக்காக அரும்பாடுபட்டார். தாமே ஒரு பாடசாலையை ஆரம்பித்து காலை மாலை இரவு என்று பாராமல் வருவாயை முதன்மைப்படுத்தாது பாடுபட்டுழைத்தமை காரணமாக அப்பாடசாலை மிக முன்னேற்றம் கண்டது. அவ்வாறு முன்னேறிய பாடசாலையை அரசாங்கம் பொறுப்பேற்ற போது தேவநாயகத்திற்குப் பிரஜாஉரிமை இல்லாமையினால் அவருக்குப் பாடசாலையில் ஆசிரியராகக்கடமையாற்ற முடியாமற் போய்விடுகின்றது.

'உரிமை வேண்டும்' என்னும் கதையின் மூலம் ஆசிரியர் மலையகத் தொழிலாளர்களது பிள்ளைகளின் கல்வி நிலை, பிரஜா உரிமைப் பிரச்சினை முதலியவற்றை விண்டுகாட்டியுள்ளார்.

# IV

மாத்தளை வடிவேலன் தொழிலாளர்களின் பல்வேறு பட்ட பிரச்சினைகளை அலச முயன்றுள்ள அதே வேளை தமது கதைகள் மூலம் அவர்களது வாழ்வியல் அம்சங்களையும் இயன்றவரை சிந்தாமல் சிதறாமல் வெளிப்படுத்தியுள்ளமை விண்டுரைக்கத்தக்க தொன்றாகும். மலையகத்திலேயே பிறந்து வளர்ந்து தொழிலாளர்களின் இன்பங்களிலும் துன்பங்களிலும் சமய பண்பாட்டு நிகழ்ச்சிகளிலும் பங்கு பற்றி நிறைந்த அனுபவத்தைப் பெற்றவர். மலையகத் தொழிலாளர்கள் தாயகத்திலிருந்து இலங்கைக்கு வரும் போது வெறுமனே வராது தமது சமயபண்பாட்டு அம்சங்களையும் கூடவே கொண்டு வந்தனர். வாழ்நாள் முழுவதும் வறுமையில் வாடினாலும்; இனசங்காரக் கொடுமைகளுக்கு உள்ளாகித் தவித்தாலும்; தோட்டத்து உயர் அதிகாரிகளின் அடாவடித்தனங்களுக்கு

உள்ளாகினாலும் அவர்களுக்கு வாழ்க்கையில் நம்பிக்கையையும் பற்றுதலையும் ஏற்படுத்தியவை கடவுள் நம்பிக்கையும் சமயச் சடங்குகளுமே என்பதைத் தெளிவாக உணர்ந்து கொண்ட கதாசிரியர் அவற்றைத் தமது கதைகளிற் சிறப்புற வெளிப்படுத்தியுள்ளார். சமூகத்தின் அடிமட்டத்து மக்களது சமய நம்பிக்கைகள், சமயச் சடங்குகள், வழிபடு தெய்வங்கள் முதலியன பற்றி நீண்ட காலமாக உயர்கல்வி கற்றவர்களால் அலட்சியம் செய்யப்பட்டு வந்தன. ஆயின் கடந்த சில தசாப்தங்களாகத் தமிழகத்திலும் இலங்கையிலும் பல்கலைக் கழக மட்டத்தில் இடம் பெற்று வரும் நாட்டாரியல் பற்றிய ஆய்வு முயற்சிகளினால் இவை முக்கியத்துவம் பெறத் தொடங்கியுள்ளன.

'சனங்களின் சாமிகள்' என்னும் பெயரில் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் பேராசிரியர்களும் பல நூல்களையே வெளியிட்டு வருகின்றனர். மாத்தளை வடிவேலனும் ஒரு பல்கலைக்கழகப் பட்டதாரி எனது மாணவர். இந்து சமய பண்பாட்டலுவல்கள் திணைக்கள அலுவலராகப் பலவருடகாலம் கடமையாற்றிக்கொண்டிருப்பவர். சமய பண்பாட்டம்சங்களில் நிரம்பிய அறிவும் அனுபவமும் பெற்றவர். மலையகத் தமிழ் மக்களின் வழிபடுதெய்வங்கள், சமய பண்பாட்டம்சங்கள், கலைகள் முதலியன தொடர்பாகப் பல நூல்களை எழுதி வெளியிட்டவர் இந்து சமய பண்பாட்டலுவல்கள் அமைச்சு நடாத்திய தமிழக அறிஞர்கள் உட்பட பல நாட்டுப் புறவியல் ஆய்வாளர்கள் கலந்து கொண்ட மகாநாட்டில் (1993) பேராசிரியர் க. சிவத்தம்பி தலைமையில் மலையகக் காமன் கூத்து பற்றிய ஆய்வுக் கட்டுரையினை வாசித்து பாராட்டு பெற்றார். இத்தகையதொரு பின்னணியில் நோக்கும்போது அவரது சிறுகதைகளிற் தொழிலாளரின் வாழ்வியல் அம்சங்கள் செவ்வனே புலப்பட்டு நிற்பதில் வியப்பேதும் இல்லை எனலாம்.

மாத்தளை மாவட்டக் கோயில்கள் பலவற்றின் வரலாற்றினைக் 'கதையோடு கதையாக' பல கதைகளில் சுவாரஷ்யமாக வெளியிட்டுள்ளார். எடுத்துக்காட்டாக மூன்று கோயில்களினை இங்கே குறிப்பிடலாம். இத்தொகுதியிலுள்ள ஒரு சிறுகதையின் பெயரே 'உமையன் கோயில்' என்பதாகும். மலையகம் முழுவதும் எத்தனையோ தெய்வங்கள் வழிபடப்படுகின்றன. ஆயின் மாத்தளை மாவட்டத்தில் ஓரிடத்தில் மட்டுமே அமைந்துள்ள 'ஊமை மையன் கோயில் வரலாறு, அதற்கான வழிபாட்டு முறை முதலியவற்றைக் கதையின் இறுதியில் பாரிசவாதத்தில் படுத்திருக்கும் தந்தை தன் மகனுக்குக் கூறும் பாங்கில் வெளிப்படுத்தியுள்ளார்.

மேற்கண்ட கதையின் ஆரம்பத்தில் ஸ்ரீமுத்துமாரியம்மன் கோயில், சிந்தாகட்டி கோயில், வால்ராசு கோயில், குலக்கருப்பு கோயில், வெட்டரிவாள் சாமி கோயில், ஏழுகன்னியம்மன்கள் கோயில், சித்திரபுத்திரர் கோயில்,

முனியாண்டி கோயில், வேட்டைக் கறுப்பன், மின்னடையான், இடுப்பன் கோயில்கள், வைரவர் கோயில், காமன் கோயில், தொட்டிச்சி அம்மன் கோயில், ரோதமுனி, கவ்வாத்துச் சாமி, மதுரை வீரன் கோயில்கள் முதலியவற்றைச் சுவைபட அறிமுகப்படுத்துகின்றார்.

"ஒரு பிரளயம்" என்னும் கதையில் மாத்தளை மாவட்டத்தில் மாத்தளை நகருக்கு அடுத்ததாக இரத்தோட்டை நகரும் அதனைச் சூழ்ந்துள்ள பிரதேசமும் பல்வேறு வகைகளிலும் பெறும் முக்கியபத்துவம், அதன் வரலாறு, அங்குள்ள காளியம்மன் கோயில் வரலாறு முதலியவற்றை விரிவாக விளக்கியுள்ள கதாசிரியர் கூடவே 1958 ஆம் ஆண்டில் இடம் பெற்ற இனசங்காரக் கொடுமைகளையும் 'தாஷ்கண்ட்' ஒப்பந்தம் ஏற்படுத்திய பயங்கர விளைவுகளையும் 2004 ஆம் ஆண்டில் இடம் பெற்ற ஆழிப்பேரவையின் அனர்த்தங்களையும் நெஞ்சை உலுக்கும் வகையிற் சித்திரித்துள்ளார்.

பல கதைகளில் மாத்தளை முத்துமாரி அம்மன் கோயில் முக்கியத்துவம் பெறுகின்றது. இந்து மக்களின் நெஞ்சங்களில் மாத்தளை என்றதும் முதலில் தோன்றுவது அருள்மிகு முத்துமாரியம்மன் ஆலயமே ஆகும். மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம் மாத்தளை மாவட்டத்தின் தலைநகராக விளங்கும் மாத்தளை நகரின் நடுவில் வானுற உயர்ந்து ஓங்கி விளங்கும் ராஜகோபுரத்துடன் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. அக் கோயில் வெறுமனே வழிபாட்டிடமாக மட்டுமன்றி, மலையகக் கலைகள் பலவற்றின் நிகழிடமாகவும் இனசங்காரக் கொடுமைகளின் போது அப்பாவி மக்களின் புகலிடமாகவும் திகழ்கின்றது. ஆண்டுதோறும் இடம் பெறும் தேர்த்திருவிழாவில் நிகழும் 'பஞ்சரத' பவனியின் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு கழிக்கவும் அம்மனின் அருளைப் பெறவும் மலையக மக்கள் மட்டுமன்றி இலங்கையின் பல்வேறு பாகங்களிலிருந்தும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் திரள்வர்.

தென்னிந்தியாவிலிருந்து பல இலட்சக் கணக்கான தொழிலாளர்கள் அலைகடலைத் தாண்டி மன்னாரில் இறங்கிய பின் அடர்ந்த காடுகளுக்கூடாக மிகுந்த அவலங்களுக்கு மத்தியில் கால்நடையாகவே முதலில் மாத்தளையை வந்தடைவர். அங்கு முத்துமாரியம்மனை வழிபட்டு ஒருசிலநாட்கள் தங்குவர். அதன் பின்னர் அவர்களுள் ஒருபகுதியினர் மாத்தளையிலேயே தங்கி விட ஏனையோர் கம்பளை, நாவலப்பிட்டி, நுவரெலியா முதலிய இடங்களை நோக்கிப் பயணமாவர். ஆரம்பத்தில் மாத்தளை முத்துமாரி அம்மன் கோயில் சிறு குடிசையாகவே விளங்கியது. காலப்போக்கில் நிலையான கட்டிடத்தைக் கொண்டதாக விளங்கிப் படிப்படியாக இன்றைய நிலைக்கு வளர்ச்சியுற்றது. மலையக மக்கள் மத்தியில் எத்தனையோ வழிபடுதெய்வங்கள் காணப்பட்ட போதும் மாரியம்மன் வழிபாடே அதிக முக்கியத்துவம் பெறுகின்றது. ஏனைய தெய்வங்களிலும் பார்க்க மாரியம்மனே அதிகம் அருள் பாலிப்பார் எனும்

நம்பிக்கை மக்களிடையே நிலவுகின்றது. இவைபற்றியெல்லாம் கதாசிரியர் சந்தர்ப்பம் கிடைக்கும் போது ஆங்காங்கே விளக்கிச் செல்கின்றார்.

புதுவருடப்பிறப்புக் கொண்டாட்டம் இந்துக்கள் மத்தியிலும் பௌத்தர்கள் மத்தியிலும் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது. மலையகத்திலும் புதுவருடப்பிறப்புக் கொண்டாட்டம் சிறப்பிடம் பெறுகின்றது. எனினும் அன்றாடம் வயிற்றுப்பாட்டிற்கே அலையும் ஏழைத்தொழிலாளர்கள் தங்கள் பிள்ளைகளின் விருப்பப்படி புதிய ஆடைகள் வாங்கிக் கொடுக்க முடியாது தவிக்கும் நிலையே அதிகம் காணப்படுகிறது. இந்நிலைமைகளை 'புத்தாண்டு புதிதல்ல' என்னும் கதையில் உள்ளத்தை உருக்கும் வகையில் விளக்கிச் செல்கின்றார். இக்கதையில் வரும் காமாட்சிப் பாட்டி மறக்க முடியாத பாத்திரமாக விளங்குகின்றது. இதே போன்று தீபாவளிப் பண்டிகையையும் மிக்க மகிழ்ச்சியுடன் கொண்டாட முயல்கின்றனர். தொழிலாளர்கள் மத்தியில் சிறுவர்கள் முதல் முதியோர் வரை தீபாவளிக் கொண்டாட்டத்தை மிகுந்த ஆவலோடு எதிர்பார்க்கின்றனர் என்பதை 'இராமு தீபாவளிக்குத் தனது தோட்டத்திற்கு வருகின்றான்' என்னும் சிறுகதையிற் கச்சிதமாக விளக்கியுள்ளார்.

பொதுவாக இளம் எழுத்தாளர்கள் தமது ஆரம்பப்படைப்புகளில் காதல் மன உணர்வுகளுக்கே அதிக முக்கியத்துவம் கொடுப்பது இயல்வாகும். மாத்தளை வடிவேலனும் இதற்கு விதிவிலக்கல்ல. இருபது கதைகள் கொண்ட இத்தொகுதியில் அருமருந்தாக ஒரே ஒரு கதை காதல்மன உணர்வு பற்றியதாக அமைந்துள்ளது. அக்கதையின் பெயர் 'சின்னச் சின்ன மேகங்கள்' என்பதாகும்.

ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தொன்பதாம் ஆண்டு வெளி வந்த இக்கதையில் ஆணும் பெண்ணும் உள்ளத்தால் ஒருவரை ஒருவர் விரும்பினால் தங்கள் உள்ளக்கிடக்கையை யார் முதலில் வெளியிடுவது என்ற தயக்கம் ஏற்படுவது இயல்பே எனினும் தயக்கத்தின் மத்தியிலும் ஆண்களே முதலில் தமது விருப்பத்தை வெளியிடுவது வழமையாகும். அதற்குப் பெண்ணிடமிருந்து பதில் கிடைக்காது விட்டால் ஆணுக்கு மிகப் பெரிய ஏமாற்றமாக இருக்கும். "இனி அவள் முகத்தில் விழிக்கவே கூடாது. வேண்டாம் வேண்டவே வேண்டாம்....... ம் வேதனை .... அவன் சோர்ந்து போனான். கவலை ம்.. ... அழக்கூடாது. இனி அவளோடு பேசுவதே இல்லை. அடுத்த நாள் காலை அவள் சிரித்து நின்றபோது......... குழந்தைத் தனமான சிரிப்பு ....... அவனது நெஞ்சுறுதி கரைந்து போய் விட்டது. அவனது கேள்விக்கு அவளிடமிருந்து பதிலில்லாத போதும், விசித்து, விசித்து அவள் அழுத போது, அவன் அவளில் கரைந்து போய்விட்டான்" ம்..... என்று ஒரு வார்த்தை

சொல்வாள் என அவன் எதிர்பார்த்தான். அவன் திரும்பவும் கேட்டான். "நான் கேட்டதற்கு பதில் சொல்லவில்லையே." அவள் "நான் இன்னமும் இல்லையென்று சொல்லயில்லையே" சிரிப்பு உதிர்ந்தது." எனவரும் பகுதி இவ்வகையில் மனம் கொளத்தக்கது.

இத் தொகுதியில் அமைந்துள்ள கதைகளுள் 'தோழர் விக்கிரம யாழ்ப்பாணம் செல்கின்றார்' என்னும் படைப்பு ஏனைய கதைகளிலிருந்து வித்தியாசமானதாக அமைந்துள்ளது. 2010ஆம் ஆண்டில் வெளிவந்த இக்கதை மாத்தளையினதும் இலங்கையினதும் சமகால வரலாறு எனக் கூறத்தக்க அளவிற்கு பலஅரிய செய்திகளைக் கொண்டுள்ளது. இன்றைய இளம் தலைமுறையினர் பலர் அறிந்திராத செய்திகள் பலவற்றை வெளிக்கொணர்கிறது.

1983ஆம் ஆண்டு இடம் பெற்ற இனசங்காரக் கொடுமையை அடுத்தே இலங்கையில் மூவினங்களுக்குமிடையே முரண்பாடு தீவிரமடையத் தொடங்கியது. அதற்கு முன்னர் அரசியல்வாதிகள் சிலரின் போக்கினால் இனங்களுக்கிடையே ஓரளவு முரண்பாடுகாணப்பட்ட போதும் பெருமளவிற்கு அன்னியோன்னிய நிலைமை காணப்பட்டது. தோழர் விக்கிரம ஆராச்சி, அதிபர் ஜனாப் இசட் ஓமர்தீன், தோழர் பஸ்னாயக்கா முதலிய பாத்திரங்களுக்கிடையிலான உரையாடல் மூலம் மாத்தளையில் மூவினங்களுக்கிடையில் நிலவிய ஒற்றுமை, மாத்தளையிலும் யாழ்ப்பாணத்திலும் நிலவிய அரசியற் சூழல், மாத்தளையைச் சேர்ந்த பொதுவுடைமைவாதிகள் யாழ்ப்பாணம் சென்று வி. பொன்னம்பலம் முதலிய பொதுவுடைமை வாதிகளுடன் சேர்ந்து சமதர்மப்பிரச்சாரத்தில் ஈடுபட்டமை, யாழ்ப்பாணத்தோடு நெருங்கிப் பழகியமை, சிவப்புச் சட்டை அணிந்து கொண்டு சிவப்புக்கொடிகளை ஏந்தித் தோழர்களோடு சமதர்மகீதம் இசைத்ததை, 'பிளாவில்'கள் குடித்து மீன், நண்டு வகைகளைச் சுவைத்தது, ஒடியற் பிட்டு, கூழ் என்பனவற்றை அருந்தி மகிழ்ந்தது போன்றனவற்றை நினைவு கூர்ந்தனர்.

1981ல் யாழ்ப்பாணப் பொது நூலகம் எரிக்கப்பட்டமை, 1974 ஆம் ஆண்டு நடைபெற்ற உலகத்தமிழாராய்ச்சி மகாநாட்டு நிகழ்வின் முடிவில் ஏற்பட்ட துக்ககரமான முடிவு முதலியவற்றை பஸ்னாயக்கா ஆவேசத்துடன் கண்டித்தமை, 1971 ஆம் ஆண்டிலிருந்து 1983 ஆம் ஆண்டு வரை இடம் பெற்ற கலவரங்களில் மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த இளைஞர்கள் பலர் அநியாயமாகக் கொல்லப்பட்டமை முதலிய செய்திகள் எல்லாம் உரையாடலின் வாயிலாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

அதிபர் சுதுமலை தம்பிராசா, அளவெட்டி கு. திரவியராசா ஆசிரியர் ஆகியோர் பாடசாலைக் கதம்ப விழாவில் அரங்கேற்றிய நாடகங்கள் பற்றி

நினைவு கூரல், கவிஞர் சுபத்திரன், சாருமதி, புதுவை இரத்தினதுரை, சில்லையூர் செல்வராஜன், மாத்தளை ஆ. இராஜலிங்கம் மலைத்தம்பி, திருகோணமலை கவிராயர், எஸ். பொ. முதலியோர் பாரதியின் பேத்தி விஜயபாரதியின் வருகையின் போது அவரை வரவேற்றுக் கவிபாடிக் கௌரவித்தமை பண்ணாமத்துக் கவிராயர் பலஸ்தீனக் கவிதைகளை மொழிபெயர்த்து ஆற்றிய இலக்கியப் பணி, தோழர் அகஸ்தியர், தோழர் கே. டானியல் முதலியோர் தோழர் விக்கிரம ஆராச்சி முதலியோரை வரவேற்று விருந்தளித்தமை, இன, மத பேதங்களின்றி வர்க்க நலனுக்கு முன்னுரிமை கொடுத்துத் தேசிய, சர்வதேசிய போராட்டங்களை முன்னெடுத்தமை முதலியன பற்றியெல்லாம் உரையாடலின் போது நினைவு கூர்ந்தமை முக்கியமாகக் குறிப்பிடத்தக்க விடயங்களாகும்.

தோழர் பஸ்னாயக்கா நண்பர்களோடு யாழ்ப்பாணம் செல்ல ஏற்பாடு செய்தமையை அறிந்து மிகுந்த மகிழ்ச்சி கொண்ட தோழர் விக்கிரம ஆராச்சி அவரது மனைவி ஆமினே ஆகியோரும் யாழ்ப்பாணம் செல்லத் தயாராகின்றனர் தோழர் பஸ்னாயக்காவும் தோழர் விக்கிரம ஆராச்சியும் சமதர்மக் கொள்கையில் தீவிர பற்றுக் கொண்டவர்கள். யாழ்ப்பாண மக்களின் அவலநிலை கண்டு மனம் வெதும்பியவர்கள். ஆயின் பயணத்திற்கு முதல்நாள் கச்சேரியைச் சேர்ந்த இளைஞர்களும் யுவதிகளும் அவர்களோடு சேர்ந்து புறப்படுவதாக ஏற்பாடு செய்யப்பட்டது. யாழ்ப்பாணம் புறப்பட இருந்த அன்றுகாலை பஸ்வண்டியில் ஏறிய இளைஞர்களும் யுவதிகளும் செய்த கூத்துக்களையும் கொட்டங்களையும் கண்டு மனம் வெதும்பிய தோழர் விக்கிரம ஆராச்சி, தர்மரத்தின தேரர் முதலியோர் யாழ்ப்பாணப் பயணத்தைத் தவிர்த்துக் கொண்டனர். விக்கிரம ஆராச்சியின் மனைவி ஆமினே யாழ்ப்பாணத்து ஏழை மக்களிடம் கொடுப்பதற்காகக் கொண்டுவந்திருந்த கொண்டை பலகாரம், கொக்கிஸ், அதிரசம் முதலிய பட்சணங்கள் அடங்கிய பார்சலை யாழ்ப்பாணம் செல்லவிருந்தவர்களிடம் கையளித்தனர்.

"நாம் யாழ்ப்பாணத்திற்குப் போவது உடைந்த உள்ளங்களை ஒன்றுசேர்க்க; அகதிகளாகக் கவலையுற்று வாழும் நம் சகோதரர்களுக்கு ஆறுதல் சொல்ல; அவர்களின் நாளைய வாழ்விற்கு நம்பிக்கையூட்ட, அவர்களது மனங்களை வெற்றிகொள்ள, காயப்பட்ட மனங்களை தழும் பேறி வைரம் பாயாது சுகமடைய விக்கிரமவின் எண்ணங்கள் சுழன்றன. "ஆமினே நாம் திரும்பி வீட்டுக்குப் போவோம்" அவர் குரல் திடமாக ஒலித்தது. இது ஆமினே எதிர்பார்த்தது தான்." என வரும் கூற்று மனங் கொளத்தக்கது. இக்கதையில் இடம் பெறும் தோழர் விக்கிரம ஆராச்சி மனதை விட்டகலாத பாத்திரமாக விளங்குகின்றார்.

# V

மாத்தளை வடிவேலனது படைப்பாற்றல் பற்றியும் சுருக்கமாக இங்கு நோக்குதல் அவசியமாகும். சிறுகதை என்பது சிலவற்றைச் சொல்லிப் பலவற்றைச் சிந்திக்க வைப்பதாகும். புதுமைப்பித்தனின் பலகதைகள் வாசித்து முடிந்தபின் அதிகநேரத்திற்கோ அதிக நாட்களுக்கோ சிந்திக்க வைக்கின்றன. சிறுகதையின் தலைப்பு, தொடக்கம், முடிவு ஆகியன கதைக்கு மிகவும் பொருத்தமானவையாகவும் வாசகனது சிந்தனையைத் தூண்டுபனவாகவும் அமைதல் இன்றியமையாததாகும். இத் தொகுதியில் அமைந்துள்ள பலகதைகள் அத்தகைய சிறப்புகளைப் பெற்றிருக்கின்றன. இத்தொகுதியில் அமைந்துள்ள முதலாவது தொகுதியின் தலைப்பு 'அட்சய வடம்' என்பதாகும், என அமைகின்றது. 'அட்சய வடம் என்பதற்கான விளக்கத்தைத் கதையில் ஆங்காங்கே வெளிப்படுத்தினாலும் கதையின் இறுதியில்,

ஆலமரம் மண்ணில் சாய்ந்து விட்டது.
அது என்ன, விஷ்ணு காயா, புத்தகாயா வழியிலுள்ள அட்சய
வடமா? இல்லையே.
சாதாரண சந்தி ஆலமரம் தானே!
மண்ணில் சாய்ந்து விட்டது.
ஓர் ஆலமரத்தால் வேறு என்னதான் செய்ய முடியும்?'

என முடித்துள்ளமை சிந்தனையைத் தூண்டுவதாகும்.

இதே போன்று இன்னுமொரு கதையின் தலைப்பு 'வெட்டு மரங்கள்' என்பதாகும். இங்கு வெட்டு மரங்கள் என்பது ஒரு குறியீடாகும். மேலெழுந்த வாரியாகப் பார்க்கின்ற பொழுது இறப்பர் (பால்) மரங்கள் நீண்டகாலம் பால் வழங்கிய பின் முதிர்ந்த நிலையில் அவை விறகுக்காக வெட்டப்படுகின்றன. இறப்பர்த் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களும் முதிர்ந்த இறப்பர் மரங்களின் கதிக்கு உள்ளாகின்றார்கள். கதையின் இறுதியில் "இலையை உதிர்த்துக் குச்சி குச்சியாக நீட்டிக் கொண்டு இளமைபோய் முதுமையில் சோர்ந்து நிற்கும் தங்களை வாழ்வித்த அந்தப் பால்மரக் காட்டினை அழிக்க அவர்களுக்கு மனம் இல்லை. இருந்தாலும் வேறு வழி.........?

மரங்களுக்கு மட்டுமா அந்நிலை இத்தனை காலமும் உழைத்து.. உழைத்து இன்று உடலில் வலுவற்ற நிலையிலும்... தங்கள் நிலைமை அவர்களுக்கு நன்கு புரிந்தது.

அவர்கள் வேகமாக நடக்கின்றனர்." என வரும் பகுதி சிந்தனையைத் தூண்டுவதாகும்.

'கறிவேப்பிலைகள்' என்னும் தலைப்பும் ஒரு குறிப்பீடாகவே அமைந்துள்ளதை அவதானிக்கலாம். சாதாரணமாக பயன்பாடு கருதிக்

கறிவேப்பிலையைச் சமையலுக்குப் பயன்படுத்துகிறோம். அதன் பயன்பாடு முடிந்தபின் உண்ணும் போது அவற்றை விலக்கி விடுகின்றோம். இதே நிலைமையே தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்கள் முதுமையடையும் போது தோட்டத்தை விட்டு விலக்கப்படும் பரிதாப நிலையினை வெளிப்படுத்துகின்றார்.

'பிஞ்சு உலகம்' என்னும் தலைப்பிலான கதையும் இவ்வகையில் நோக்கத்தக்கது. இங்கு பிஞ்சு என்பது சிறுகுழந்தைகளைக் குறிக்கும். "எனக்குப் பள்ளிக்கூடம் போக விருப்பந்தான். அப்ப ஏன் போகலையாமுன்னு கேட்கிறீங்களா? விருப்பம் மட்டும் இருந்தால் பள்ளிக்கூடம் போக முடியுமா? நான் பள்ளிக்கூடம் போயிட்டா அம்பிப்பயலை யாரு பாத்துக்கிறதாம்? ...... மலைக்குத் தேத்தண்ணி கொண்டு போறது யாராம். கேக்கிறேன்!" எனச் சிறுவனின் கூற்றாக வரும் தொடக்கம் படிப்போரை அதிர வைப்பதாக அமைந்துள்ளது. இக்கதையில் வரும் சிறுவன் நெஞ்சில் நிலைக்கும் பாத்திரமாக விளங்குகின்றான்.

இதே போன்று 'ஊமையன் கோயில்' என்னும் தலைப்பில் அமைந்துள்ள கதையினைப் படிக்கும் போது உண்மையில் அவன் ஊமையன் அல்ல என்பதும், ஊமையன் கோயில் அமைந்த வரலாறும் கதையின் பிற்பகுதியிற் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. கதையின் முடிவு பின்வருமாறு அமைந்துள்ளமை சிந்திக்கத்தக்கது. "முத்துவின் கண்களில் கண்ணீர் துளிர்த்தது. "காலம் காலமாக தொடர்ந்தும் சுயநலக்காரர்களால் பல்வேறு விதமாக வஞ்சிக்கப்பட்டும் கொடுமைப்படுத்தப்பட்டும் வந்துள்ளோம்." நெஞ்சில் பெரு மூச்சாகக் கிளம்பும் வார்த்தைகள்."

'வதைப்படலம்', 'ஒருபிரளயம்', 'இருதேசங்களும்', 'ஒரு மனித சங்கிலியும்', 'தலைக்கொரு கூரை', 'மண்ணில் தெரியுது.......' முதலிய கதைத்தலைப்புகளும் இவ்வகையிற் கவனிக்கத்தக்கவை. தோழர் விக்கிரம யாழ்ப்பாணம் செல்கின்றார்' எனக் கதையின் தலைப்பு அமைந்துள்ள போதும் கதையின் முடிவில் அவர் மனமுடைந்த நிலையில் யாழ்ப்பாணம் செல்லாது தனது வீட்டை நோக்கிச் செல்கின்றார்.

இக்கதைத் தொகுதியில் இடம் பெறும் பல பாத்திரங்கள் மனதைவிட்டு அகலாதவையாக விளங்குகின்றன. 'அட்சய வடம்', கதையில் வரும் ஆலமரம், 'புத்தாண்டு புதிதல்ல' கதையில் வரும் காமாட்சிப்பாட்டி, வெட்டு மரங்கள் கதையில் வரும் இராமையாக் கிழவன், மாரிமுத்துக் கிழவன், 'கறிவேப்பிலைகள்' கதையில் வரும் இராமையாக் கிழவன், 'ஆங்கோர் ஏழைக்கு'......... கதையில் வரும் இராமலிங்கம், உரிமை வேண்டும், கதையில் வரும் தேவநாயகம் ஆசிரியர், 'தோழர்விக்கிரம யாழ்ப்பாணம் செல்கிறார்'

என்னும் கதையில் வரும் விக்கிரம ஆராச்சி, கறுப்பையாத் தலைவர், சின்னையாக் கிழவன், ரொங்கையாக் கிழவன் முதலிய பாத்திரங்கள் குறிப்பிடத்தக்கவை.

சிறுகதைக்கு ஏற்ற வகையில் எளிமையும் விறுவிறுப்பும் சொற்சிக்கனமும் மிகுந்த நடையைக் கையாண்டுள்ளார். ஏற்ற ஏற்ற இடங்களில் மிகப் பொருத்தமான உவமைகளும், நிறுத்தக் குறியீடுகளும் இடம் பெற்றுள்ளன. அதிகமான கதைகள் மாத்தளை மாவட்ட மலைப் பிரதேசத்தையே களமாகக் கொண்டுள்ளதால் அதற்கேற்ப அதிகமான கதைகளின் தொடக்கம் கச்சிதமான களவருணனையுடனேயே ஆரம்பிக்கின்றன. ஒரு சிறு எடுத்துக்காட்டு வருமாறு: தலைவாரி உச்சிவகிடெடுத்து நெற்றிப் பொட்டிட்டாற் போன்று; சிரசாய் நிமிர்ந்து; மார்பென உயர்ந்து; புஜங்களாகப் பரந்த மலைகளிலும்; குன்றுகளிலும் சரிவுகளிலும், இறக்கங்களிலும்: சாய்வுகளிலும் இராட்சதமாய் பாய் விரித்துக் கிடக்கும் தோட்டத்திற்கு நடுவே அமைந்துள்ள தேயிலை ஸ்டோர். .........

அதிகமான கதைகள் வெளிவந்த ஆண்டு விபரங்களுடனும் பரிசுபெற்ற விபரங்களுடனும் இடம் பெற்றுள்ளன. இத் தொகுதியில் இடம் பெற்றுள்ள இருபது கதைகளுள் அதிகமானவை 1970 களிலேயே வெளிவந்துள்ளன. இத் தொகுதியில் இடம் பெற்றுள்ள 'புத்தாண்டு புதிதல்ல', 'வெட்டுமரங்கள்', 'கறிவேப்பிலைகள்' ஆகிய மூன்று கதைகளும் 1980 ஆம் ஆண்டு வெளிவந்த 'தோட்டக் காட்டினிலே' என்னும் சிறு கதைத் தொகுதியில் இடம் வெற்றுள்ளன. 'பிஞ்சு உலகம்', என்னும் கதை 1971ஆம் ஆண்டு வெளிவந்த 'கதைக்கனிகள்' என்னும் கிறுகதைத் தொகுதியியல் இடம் பெற்றுள்ளது. தோட்டக்காட்டினிலே என்னும் சிறுகதைத் தொகுதிக்கு க. கைலாசபதி எழுதியுள்ள முன்னுரையின் முடிவில் "இம் மூவரும் தனித்தனியே சிறுகதைத் தொகுதிகள் வெளியிடக் கூடிய விதத்தில் இன்னும் அதிகமாகவும் ஆணித்தரமாகவும் எழுதவேண்டும் என்பது என் விருப்பம் ஓரளவு தொய்ந்து காணப்படும் இன்றைய இலங்கைச் சிறுகதையுலகில், இத்தொகுதி நம்பிக்கையையும் நல்லுறுதியையும் பாய்ச்சும் என எதிர்பார்க்கலாம், அதற்காகவும் ஆசிரியர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள்" எனக் கூறியுள்ளமை மனங்கொள்ளத் தக்கது. கைலாசபதி குறிப்பிட்டுள்ளார் மூவருள் நான் அறிந்த வரையில் மாத்தளை வடிவேலனின் முதலாவது சிறுகதைத் தொகுதியாக இது இருக்கலாம். மலையகம் பற்றிப் பல ஆய்வு நூல்களை எழுதி வெளியிட்டுள்ள வடிவேலன் மேலும் காத்திரமான பல சிறுகதைகளை எழுதி வெளியிட எல்லாம் வல்ல முத்துமாரியம்மன் அருள் புரிவாராக.

**க. அருணாசலம்.**

# உள்ளடக்கம்


01. *அட்சய வடம்*
(வீரகேசரி) *01-13*

02. *புத்தாண்டு புதிதல்ல*
(சிந்தாமணி 1978) *14-21*

03. *வெட்டுமரங்கள்*
(சமர்) *22-28*

04. *கறிவேப்பிலைகள்*
(வீரகேசரி-1978) *29-35*

05. *வல்லமை தாராயோ..* *36-42*

06. *ஆங்கோர் ஏழைக்கு...*
(வீரகேசரி 1986) *43-50*

07. *பிஞ்சு உலகம்*
(வீரகேசரி 1971) *51-57*

08. *மேகம் மூடிய மலைகளில் ...*
நன்றி - வீரகேசரி - 1972 *58-65*

09. *உரிமை வேண்டும்.*
'தினகரன்' *66-73*

10. *ஊமையன் கோயில்*
(தினகரன்) *74-83*

11. *அக்கினி*
(சிரித்திரன்) *84-89*

12. வதைப்படலம் 90-102
(மல்லிகை - மாத்தளை மாவட்ட சிறப்பிதழ்)

13. குருஷேத்திரம் 103-109
[வீரகேசரி 1975]

14. சின்னச் சின்ன மேகங்கள்... 110-114
நன்றி – தினகரன் – 1989 / 07 / 16

15. மண்ணில் தெரியுது... 115-121
(நன்றி - கொழுந்து)

16. தலைக்கொரு கூரை 122-131
(வீரகேசரி 1997)

17. ஒரு பிரளயம் 132-140
தினக்குரல் (2005-09-25)

18. இராமு தீபாவளிக்கு தனது தோட்டத்திற்கு வருகின்றான் 141-154

19. தோழர் விக்கிரம யாழ்ப்பாணம் செல்கின்றார். 155-165
உதயன் 2010

20. இரு தேசங்களும் ஒரு மனித சங்கிலியும் 166-180
வீரகேசரி 2011



# அட்சய வடம்

## ஆலமரம் சாய்ந்து விட்டது

நோர்த்மாத்தளைச்சந்தி ஆலமரம் சாய்ந்து மண்ணில் வீழ்ந்து கிடக்கின்றது. ஆம் "அட்சய வடமாக" வீற்றிருந்த ஆலமரம் சாய்ந்து தான் விட்டது.!

சீதா பிராட்டி மீது இராவணன் கொண்ட காதல், இருக்கும் இடத்தைத் துருவித்தேடி; சல்லடையாகத் துளைத்த, இராமபாணங்களினால் உயிரை விட்டு மண்ணில் சாய்ந்து விட்ட அவனை: மண்டோதரி தலைவிரி கோலமாக, ஆரத் தழுவி; கிடப்பது போல; ஆலமரம் சாய்ந்து மண்ணில் வீழ்ந்து கிடக்கின்றது.

"ஜே.......... ஜே.........." திரண்டு விட்ட பெருங்கூட்டம். வேடிக்கை பார்க்க, விசனம் விசாரிக்க, விமர்சனம் செய்யவென்றெல்லாம் முண்டியடித்துக் கொண்டு அலை மோதுகின்றது. பேரிரைச்சல்... பெருங் கூக்குரல்களின் கதம்ப நிகழ்ச்சி; நிரலின்றி; சன்னதமாடும் மேடையாக ஆலமரத்துச்சந்தி அல்லோகல்லோலப்படுகின்றது; அவசரக்குடுக்கைகளின் பக்கவாத்தியங்களோடு. இவை எதையுமே கண்டு கொள்ளாது; நான்கு திசைகளிலுமிருந்தும்; சந்தியில் சங்கமிக்கும் வீதிகளை ஆக்கிரமித்து போக்குவரத்தை தடைப்படுத்தி நெடுஞ்சாண் கிடையாக; அவலமாகக் கிடக்கின்றது ஆலமரம்.

நாற்சந்தியில் "நான்" என்ற இறுமாப்புடன் நின்ற ஆலமரம் "தலைவிதியே" என்பது போல தலை சாய்த்து வீழ்ந்து விட்டது.

அது மண்ணில் சாய்ந்து விட்ட பரிதாபத்தை, ரப்பர் ஸ்டோரில் பற்றிய தீயாகப் பார்க்க வந்த பெருங்கூட்டம் "வார்த்தைப் பதாதைகளை" வீசி வழியை மறைத்து திரண்டு நிற்கின்றது.

"கச... முச..." என்ற களேபரத்தில் அல்லோலகல்லோலப்படுகின்றது. ஆலமரத்துச் சந்தி. இதற்கிடையில் பாதைகளில் நீண்டு விட்ட வாகனத் தொடரின் நெரிச்சல்.. நெரிச்சல்... நெரிச்சல்

எப்படியும் போய்விட வேண்டும் என்ற தவிப்பில் நாலாறு காதம் "ஹார்ன்" நாதமாக ஒலிக்கின்றது.

கூடி நிற்கும் கூட்டத்தில் சிறுசுகளின்களைகட்டும் கும்மாளம் 'ரெப்' சங்கீதம் என அதிர; வாய்க்கு வாய் விமர்சனம் வேறு! வகை வகையாக; வீழ்ந்துவிட்ட ஆலமரத்திற்கு இனாமாக கிடைக்கும் பரிசு இவை!

"என்னடா சந்தி ஆலமரமாக நிற்கிற..." "போ.... போ.... என் முன்னே நிக்காத" எரிச்சல் கொண்ட கன்டாக்கு ஆலமரத்தினை துணைக்கழைப்பது பிரட்டுக்களத்தில்! ஆலமரம் இங்கு செய்த தவறுதான் என்ன?

நின்றால் மரம். அது தரும் நிழல் சுகம். மரம் பழுத்தால் கனி. பட்சிகளின் அட்சய பாத்திரம். அரிந்தால் அதன் உடலம் தரும் ஆயிரமாயிர உபகரணங்கள், தளபாடங்கள். தலை சாய்க்க கட்டில். இறுதியில் சுடுகாட்டுப் பெட்டி. மரம் சரிந்து சாய்ந்ததால் கணப் பொழுதில் வெட்டி, சிதைத்து, பிளந்து, பிரித்து, கூர்கூராக்கி, பாகம் பாகமாக, வகிந்து, அங்கம் அங்கமாக அரிந்து அரிந்து.... விறகாக்கி.... என்னெ அநியாயம் என்ன அநியாயம்?

கத்தி, கோடாரி, வெட்டரி வாள்கள், ஆப்பு, சிலசு என்று விதம் விதமாக ஆயுதங்கள் வந்து குவிந்து விட்டன.

கணப்பொழுதில் மரத்தை துண்டாடும் வேலைகள் "ஜரூராக" நடக்கின்றது. எல்லாமே துரித கதியில். நான் முந்தி நீ... முந்தி என்று அவசரமாக வெட்டி வெட்டி விளையாடுகின்றனர்.

நோர்த்மாத்தளை சந்தியில் நின்ற ஆலமரம் சாய்ந்து நாழிகை கடக்கும் முன் நடக்கும் உபசாரங்கள் தான், இவை. காலங்காலமாக சந்தியில் நின்று; நிழல் தந்த ஆலமரத்திற்கு பிரதி உபகாரமாக நடக்கும்; கைமாறு நன்றி உபசரணைகள்.

கண்டி மாநகரின் தலையைச் சுற்றி வரும் மகாவலி நதியின் இருகரையிலும் கைகோர்த்து; மலையகத்தையும் வடக்கையும் இணைத்து கருஞ்சாரையென தெளியும் ஏ – நயின் பாதையில் ஒரு முக்கிய சந்திதான் நோர்த் மாத்தளை ஊர்ச்சந்தியாகும்.

பாரிய தோட்டங்களை உள்ளடக்கமாகக் கொண்ட இந்த சந்தியில் காலங்காலமாக குடைபிடித்து; நின்றது இந்த ஆலமரம். தலைமுறை தலைமுறையாக கிடைக்கும் நித்திய தரிசனம் இந்த ஆலமரம்.

மாத்தளை நகருக்கு வடக்கே அமைந்ததால் நோர்த் மாத்தளை வடக்கிலுள்ள மாத்தளை என ஊருக்கு பெயர் வந்துள்ளது. இவ்வாறு இவ்வூர் அணி சேர்த்துக் கொண்டு 'டால்' அடிக்க; சந்தியும் ; தன் பங்கிற்கு, ஆலடிச்சந்தியென உயர்வு நவிற்சிகொண்டது.

இந்த தோட்ட சாம்ராஜ்யத்தின் நாற்சந்தியில்; காலச்சக்கரத்தின் ஆணி வேரை ஊன்றி; கால ஓட்டத்துக்கு சாட்சியாக குடைப்பிடித்தது. ஓர் ஆலமரம்.

"ஆல் இல்லா ஊருக்கு அழகு பாழாகி விட்டது" என்ற ஊர் பேச்சுக்கு இடமின்றி சந்தியில் நிற்கும் ஆலவிருட்சத்தின் விழுதுகள், தரையோடு கைகோர்த்து, கர்ப்பார்ந்த காலம் மோனத்தவத்தில்; மெஞ்ஞானம் பெற, நிஷ்டை கூடி நிற்கும் முனி புங்கவர்களின் இலட்சணத்திற்கு கட்டியம் கூறி நின்றன.

சடாயுவின் இறக்கைகளைப் போன்ற கிளைகள், தாடகையின் கைகளைப் போன்ற நீண்ட வாதுகள்; அதில் சிவப்புக்கல் கருக்கண்களாக இலைக்காது களுக்கிடையில் எட்டிப் பார்க்கும் ஆலம் பழங்கள் ; கொத்துக் கொத்தாக....

கடும் பச்சை வட்டக்கிளைகளில் முத்துப் புன்னகை வீசி, எட்டிப் பார்க்கும் மூக்குத்தி மஞ்சள் தளிர்கள், "ஆலமரத்துக்குப் பூவா இல்லை இதோ நாங்கள் இருக்கின்றோம்" என முழம் போட்டு நிற்கும் இறக்கைகளில் முகிழ்க்கும் குருத்துக்கள் மலர்களாக 'டால்' அடிக்க அத்த குருத்துக்களில் குந்தி "கொட்டரா குருவிகள்" கோதி, குரல் கொடுத்து விளையாடினால். பகல் மணி ஒன்று. பச்சைக்கிளிகளைப் பழிப்பது போல சிறகடித்துப் பறக்கும். "கொட்டரா" குரல் கொடுத்தால்" மணிக் கூட்டினைப் பார்க்கத் தேவை இல்லை.

ஆலமரத்தில் அடிக்கடி மாறும் ரூபலாவண்ணியங்கள் இப்படி பலப்பலவாகும்.

இந்த ஆலமரத்தை ஒரு பத்து இருபது பேர் சங்கிலியாக கைகோர்த்து பிணைத்து கட்டிப் பிடித்தாலும் பிடிக்க முடியாது. மரத்தைச் சுற்றி சரம் கோர்த்துத் தொங்கும் விழுதுகள் வேறு, காவல் அரண்களாக புடை சூழ்ந்துள்ளன. தரையில் ஊன்றியும்; ஊஞ்சல்களாக தொங்கியும் அவை ஆடி அசைந்து நிற்கின்றன.

அன்று வெள்ளைக்காரன்; ஸ்டேலிங் பவுன் கம்பெனிகளாக நடத்திய ஆலமரத்தோடு தொடர்ந்துள்ள தோட்டம்; நாட்டின் சுதந்திரத்தோடு சுதேச முதலாளிமார்கைக்கு மாறிய போதே நாலாறு பிரிவுகளாகி விட்டது. முதலில் ரூபாய் பின்னர் சில்லரையாகி மவுசு குறைந்து விட்டது. ஆயிரத்து

தொளாயிரத்து எழுபத்து நான்கில் காணி உச்சவரம்பும்; காணி சீர்திருத்தமும் அமுலாகிய போது; மரத்திலிருந்து வீழ்ந்தவனை மாடேறி மிதித்தது போல தோட்டம் காடாக்கப்பட்டு படிப்படியாக கிராமமாக மாற தோட்டத்தில் வாழ்ந்தவர்களுக்கு லயமும் அதனைச் சுற்றிய பத்தடி நிலமும் மட்டுமே வாழ்க்கை என்றாகி விட்டது.

இவ்வாறு வாழ்ந்து; சிதைந்த; கதைக்கு ஒரே ஒரு மௌன சாட்சியாக நின்றது இந்த ஆலமரம் மட்டும் தான்.

இந்த தோட்டத்தில் பூர்வீகத்தையும், ; இன்று பொலிவிழந்த அதன் நிலையினையும்; கூறவும்; இந்த ஆலமரத்தின் ஆதிபூர்வீகத்தை எடுத்து சொல்லக் கூடியவர்கள் இருக்கின்றார்களா?

"வெள்ளைக்காரன் காடுகளை அழித்து தோட்டங்களை உருவாக்கிய காலத்தில் கரத்தை வண்டியும் வண்டித்தடமும் இருந்த காலத்திலேயே இருந்தது. இந்த ஆலமரம்" என்பது ஒரு கட்சி. இல்லை இல்லை தோட்டம் போட்ட போது; நம்ம கங்காணிகளில் ஒருவர் நட்டு வச்சது தான் இந்த ஆலமரம் என்பது இன்னுமொரு கட்சியின் வாதம்.

இப்படி பல வாதப் பிரதிவாதங்கள்... இந்த எரிந்த கட்சி; எரியாத கட்சி லாவணி ஒப்பாரிகளை எல்லாம் காதில் போட்டுக் கொள்ளாது யார் என்ன சொன்னால் எனக்கு என்ன? என்று காற்றின் இரகசியங்களைக் கேட்டு; தலையாட்டிக் கொண்டு சந்தியில் நின்றது ஆலமரம்.

எத்தனையோ மரங்களை அதிரடிச் சோதனை போட்டு அசைத்த காற்று; இந்த ஆலமரத்தை ஏனோ அசைத்தது கூடக் கிடையாது. காற்றுக்கும் ஆலமரத்துக்கும் அப்படி என்னதான் இரகசிய பேச்சு வார்த்தையோ? இயற்கையின் இரகசிய உடன்பாடா? உடன் படிக்கையா?

இந்த ஆலமரத்தின் வயசு தான் என்ன? ஒரு படையே தங்கி நிற்கும் அளவிற்கு – வியாபித்து நிற்கும் ஆலமரங்களின் வயசு தான் என்ன?

பேய் மழையோ! பெருங் புயற்காற்றோ இல்லாத ஒரு மாலை வேளையில் "யாரும் என்னை எப்போதும் சாய்க்க முடியாது" என்று தலை நிமிர்ந்து கம்பீரமாக நின்ற ஆலமரம் காற்றின் எந்த அதிரடி தாக்குதலோ!. சூறாவளியின் சுற்றுப் பயணமோ! வாயு பகவானின் கரந்தடி கண்டனமோ இல்லாமல் திடீரென குலுங்கி இலைகள் எல்லாம் சலசலத்து பலத்த ஓசையை எழுப்ப; மெல்ல சரிந்து; தரையில் பயங்கரமாக வீழ்ந்தது.

எதிர்பாராத திடீர் முடிவு. நினைத்தும் பார்க்காத நிகழ்வு ஆலமரம் வீழ்ந்து விட்டது. ஆலமரத்தின் அடியில் வீற்றிருந்த வழிப்பிள்ளையார் அப்படியே குந்தி இருக்கின்றார். ஆலமரத்தின் பிரம்மாண்டமான அடிப்பாகம் அவரை உரசாமல்

விலகி வீழ்ந்தது. ஆலமரம் வீழ்ந்தும் விநாயகனுக்கு எதுவிதமான விக்கினங்களும் கிடையாது.

அவர் விக்கினங்களை தீர்த்து வைக்கும் விக்னேஸ்வரர் அல்லவா

வீழ்ந்த ஆலமரத்தை துண்டாடும் வேலை துரிதமாக தொடங்கி விட்டது. தலைவேறு; கிளை வேறு, முண்டம் வேறாக தாமதமின்றி சிதைக்கின்றார்கள். வாள் பிடித்து அறுப்பவர்கள்; கோடரி தூக்கி கொத்துபவர்கள்; மத்தியில் 'விறகாக எரிக்கும் மரமாக இருந்தால் ஆகா! நல்லதொரு "சான்ஸ்" போய் விட்டதே" என்று வாயூறிக் கொண்டவர்கள் "வெட்டுங்க வெட்டுங்க" "சுறுக்கா வெட்டுங்க" என்று வெறுப்பைக் கக்கி விட்டு அகன்றனர். சலிப்புடன்!

மரம் பழுத்தால் வௌவால், மரம் சாய்ந்தால் வெட்டரிவாள்.. ச் சே..சே ..

சாலையின் இரு திசைகளிலும் மட்டுமல்ல நான்கு திசைகளிலும் நீண்ட வாகனத் தொடரின் "ஹார்ன்" ஓசை காதை பிளத்தெடுக்கின்றது.

அறக்கப்பறக்க ஓடி வந்த மரவியாபாரிகள் "என்ன பெரிய மரமாக இருந்து என்ன பிரயோசனம் ஒரு பலகைத் துண்டுக்கு ஆகுமா"? என்று பழித்து பேசினர் இந்த களேபரத்திலும் டிவி காமிராவிற்கு முகம் கொடுத்து நிற்கும் அவசரகுடுக்களை பின் தள்ளி; முந்திரிக் கொட்டைகளாக முந்திக் கொள்ளும் "லோக்கல் அரசியல் குஞ்சுகள்!"

சாய்ந்த மரத்தை அரிந்து குவித்த குவியலையும், அடிப்பாகம் முதல் நுனி

வரையும் ஒரு வாரத்துக்கும் பின் வந்து ஆராய்ந்த உத்தியோக ரீதியான வனபரிபாலன இலாக்கா அதிகாரிகள் ஆராய்ந்து; "ஐநூறு வருடங்களுக்கும் மேல் இருக்கலாமென" ஆலமரத்தின் வயதை ஊகித்துக் கூறி; மரண அத்தாட்சிப்பத்திரத்தை வாய் மொழியாக வழங்கிச் சென்றனர்.

சந்தி ஆலமரத்தின்! வயது ஐநூறு வருடங்களுக்கு மேல். பல தலைமுறை களுக்கு சாட்சியான இந்த ஆலமரம் எத்தனை தலைமுறைகளை கண்டிருக்கும்?

இந்தத் தோட்டத்திற்கு மட்டுமல்ல; பன்னாமத்துக்கும் இலங்கை நாட்டின் கடைசி முடி மன்னனை கொண்டிருந்த கண்டி இராஜ்ஜியத்துக்கும்; ஏகாதிபத்திய ஆட்சிக்கும் சாட்சி கூறும் பக்கங்களையும், பதிவுகளையும் தன்னுள் அடக்கியிருந்த ஆலமரம் சாய்ந்து விட்டது.

ஐநூறு வருடங்களுக்கு மேலான வரலாற்றை கண்ணாரக் கண்டு களித்த ஆலமரத்துக்கு மட்டும் வாய் பேச முடிந்தால், எழுத முடிந்தால், எத்தனை எத்தனை கதைகளை சொல்ல முடியும். எத்தனை எத்தனையோ சம்பவங்களை அனுபவங்களை இந்த மண்ணின் வரலாற்றை இதில் வாழ்ந்து மடிந்த மக்களின் இன்ப துன்பங்களை எழுத முடியும். வாய் திறந்து சொல்லாது

விட்டால் என்ன? மனதில் உள்ளதைக் கொட்டி எழுதாது விட்டால் என்ன? உண்மை உண்மைதானே!

இரு நூற்றாண்டுகளுக்கு முன்னர் தமிழகத்திலிருந்து படகேறி; மன்னாரில் இறங்கி அடர்ந்த வனாந்திரங்களுக்கூடாக நடந்து; நாலந்த கணவாயைக்கடந்து; மலையகத்தில் காடழித்து தோட்டம் போட்ட மக்களுக்கு ஒரு மௌன சாட்சியும்; சத்திய பிம்பமும் இந்த ஆலமரமே! மனசாட்சி இல்லாத மக்களுக்கும், நாட்டிற்கும் இந்த மரம் தான் சாட்சியோ?

"அன்று கண்டி சீமைக்கு" வெள்ளைக்காரனின் வெள்ளிப்பணத் திற்காக; தீரயோசிக்காமல் புறப்பட்டவர்கள், நடுவழியில் இறந்தவர்கள், திரும்பிப் போனவர்கள், போக நினைத்தும் போக முடியாமல் ஏக்கத்துடன் இறந்தவர்கள் உட்பட ; இங்கேயே தங்கி வம்சத்தை விருத்தி செய்து, இன்று மலையக தமிழ் தேசிய இனமாக பரிணமித்தவர்களின் வேர்களையும், விழுதுகளையும் இந்த ஆலமரம் உள்ளடக்கித்தானே உள்ளது!

கண்டியின் கடைசி மன்னனை வேலூக்கு கப்பலில் ஏற்றிய பின்னர் தாம் நினைத்தவை நடக்கவில்லை என ஏமாற்றம் அடைந்து, வஞ்சினம் தீர்க்கும் எண்ணத்துடன் வெங்கட சுவாமிக்கு தம்புள்ள குகைக் கோயிலில் பட்டம் சூட்டி; அவனை பல்லக்கில் சுமந்து வரும் வழியில்; கவுடுப்பளையில் வாழ்ந்த விவசாயி ஜனாப் செய்கு ஜுனைதீன் ஒளியா, காதர் சாகிபு ஆகியோரை சந்திப்பதற்கு முன்னர், இந்த ஆலமரநிழலில் இளைப்பாறிய போது; புது அரசனுக்கு ஏமாற்றம் காத்திருக்கின்றது; என்பதை ஆலமரம் தான் அறிந்திருக்குமா? வயிற்றோட்டம் கண்டிறந்த புது மன்னன் தான் அறிந்திருப்பானா?

கண்டி இராச்சியத்தில் சிறை பிடிக்கப்பட்டு சுற்றித் திரிந்த ரொபட் நொக்ஸ் தப்பி; திருகோணமலைக்குச் சென்று கப்பலேறியதை வழியில் நிழல் தந்து நின்ற இந்த ஆலமரம் அறியாதது என்ன?

இதன் பட்டையில் குத்தி; அவன் குறியீடு வைத்துப் போனதைக் கூற ஆலமரத்திற்கு வாயேது? நாவேது? வார்த்தைகள் தான் உண்டா?

எத்தனை பெரிய மரமாக இருந்தும் என்ன பிரயோசனம்? "எரிக்க முடியாதே" என வீழ்ந்து கிடக்கும் மரத்தின் மீது வசைபாடி எரிச்சலை கொட்டித் தீர்க்கும் கொடூரங்கள் வாழும் போது! ஒரு செம்புத் தண்ணீரை வார்க்காத வயிற் றெரிச்சல்களுக்கு பதில் சொல்ல வரம் இல்லாத மரம்; சூடாக, "ஒரு சொல்" சொன்னால் போதுமே!

மரத்திற்கு வாயிருந்தால்; நாம் வாயடைத்து ஊமையாக மௌனியாகி விட வேண்டும். என்பதால் தான் அவற்றிற்கு வாய் இல்லையோ? தெய்வமே...!

நம் வயிற்றை நிரப்பும் அவற்றிற்கு பேச வாயில்லை அந்த வரம் ஏன் இல்லை?

ஆதியில் தமிழ் நாட்டிலிருந்து ஆசை வார்த்தைகள் காட்டி; கங்காணிமார் கட்டி வந்த சனங்கள்; தங்கச்சி மடம், அக்காமடம் கடந்து, மண்டபம் கேம்ப்பில் பதிந்து இராமேசுவரத்தில் படகுகளில் ஏறி, தட்டப்பாறையில் நடந்து, இராமர் அணையைக் கடந்து, மன்னார், அரிப்பு, மாந்தை ஆகிய துறைகளில் இறங்கி, அடர்ந்த உலர்வலயக் காடுகளில் நடந்து; கொடிய காட்டுச்சுரம், அம்மை ஆகிய நோய்களில் பாதிப்புற்று; கொடிய வனவிலங்குகள், சர்ப்பங்கள் விஷ ஜந்துக்கள் என்பவற்றினால் தொல்லையுற்று மடிந்து; உறவுகளைப் பிரிந்து, தப்பிப்பிழைத்து, நாலந்த கணவாய்க் கூடாக பன்னாமத்தை நோக்கி நடந்து முன்னேறுகையில்; அவ்வழியில் நின்ற இந்த ஆலமரம் இந்த அவலங்களைக் கண்டு வாய்விட்டு; அழுது.... அழுது.

கண்கலங்கி நிற்கையில்; நடைபயணிகளின் மரணப்பயணம் நீண்டு கொண்டு தானே இருந்தது. தடுக்க முடிந்ததா?

அண்டிப் பிழைக்க வந்த மக்களை ஆலமரத்தினடியில் அமர்ந்து ஏமாற்றிப் பிழைத்த முடவனின் கதையை, வழிவழியாக செவிவழியாக கூறும் போது; ஆலமரம் தலையசைத்து, கிளைகளை உலுப்பி “ஆமாம்” போடத்தானே செய்தது ஒரு குரல் கொடுத்ததா இல்லையே இல்லை... இல்லை.

நோர்த் மாத்தளை தோட்டத்தைச் சுற்றி சவுக்குடன் குதிரையில் வலம் வரும் வெள்ளைதுரை. தோட்டத்தின் நடுமையத்திலுள்ள குன்றில் அவனுக்காக அமைத்த பெரிய பங்காளா. தேயிலை, இறப்பர், கொக்கோ தொழிற்சாலைகள் இவற்றை உருவாக்க தொழிலாளர்கள் பட்ட கஷ்டங்கள் அயரா உழைப்பு என்பவற்றையெல்லாம் கண்டு ஆலமரம் ‘மனசு’ வெதும்பாமலா இருந்திருக்கும்

துரைமார்களின் காட்டுத் தார்பார், பெரிய கங்காணிமார்களின் அடாவடித்தனம், பெண்டாளும் சண்டாளர்களின் துரோகங்கள் தொழிலாளர்களின் அப்பாவித்தனம் இவற்றையெல்லாம் கண்டு பெருமூச்சி விட்டு; இரவிலும் தூங்காது; சலசலத்துக் கொண்டு தானே இந்த ஆலமரம் காலங்காலமாக கண் விழித்து நின்றது.

தோட்டங்கள் தோறும் அமைக்கப்பட்ட அம்மன், பிள்ளையார், முருகன்; காளி ஆலயங்கள் மலை உச்சியில் நிறுவப்பட்ட முனி, சிந்தாகட்டி கோயில்கள் மற்றும் முனியாண்டி, மாடாசுவாமி, கவாத்து சாமி, ரோதமுனி, வால்ராசா, வால்முனி கோயில்கள் இவைகளில் நடந்த உற்சவங்கள் திருவிழாக்கள் என்பவற்றை யெல்லாம் வருடந்தோறும் பார்த்து பார்த்து மகிழ்ந்து வளர்ந்து கொண்டுதான் இருந்தது இந்த ஆலமரம்

தோட்டத்திற்குள் நாட்டாரும் வெளியாரும் நுழைய முடியாத காலம் அது!

வெற்றிலை பாக்கு விற்கும் மகாவெல நாட்டு விவசாயி முதல், வளையல், சீத்தை விற்கும் சீனாக்காரன் வரை அனுமதி பெற வேண்டும். இந்த சிறப்புரிமைக்கு ஆலமரமும் பச்சைக் கொடிதான்

அடைக்கப்பட்ட அந்த தோட்டத்தில் காமன் கூத்து, பொன்னார் சங்கர் கூத்து, அருச்சுணன் தபசு, கரகாட்டம், ஒயிலாட்டம், சிலம்படிவஸ்தா, காவடி, கும்மி, கோலாட்டம் என்பவைகள் எல்லாம் நடந்தேறிய போது; ஆலமரம் வரை இந்த ஆட்டங்கள் வந்து போயின. ஆலமரமும் ஓர் எல்லையாகி ஒரு கதாபாத்திரமானது.

வீரமாகாளி பூசாரி "ஓடாத பேயை எல்லாம் ஒட்டி வந்து;" உச்சி தலைமயிரை பிய்த்து ஆணி வைத்து அடித்தபோது; ஆடாமல் ஆசையாமல் நின்று; பேயையும் குடி ஏற்றுக் கொண்டது, இந்த ஆலமரம். விழுதுகள் பல துணையாக தாங்கும் போது; பேய்ப் பயம் எதற்கு? என்ற எண்ணமா? மனதில் உறுதி கொண்ட மரம்.

அந்த காலத்தில் இப்போது போன்று ஆலமரத்துச் சந்தியில் கடைகள் குடியிருப்புகள் இல்லை. சந்தியிலுள்ள அம்மன் ஆலயமும் "ஆத்தா" கட்டிய தாகத்தான் கூறுகின்றனர். சந்தியில் இறங்கி நேரே தோட்டத்திற்குள் போனால் தான் சனங்களை காணமுடியும் அரிசிக் காம்பிரா முதல்; ஆசுபத்திரி வரை அங்கே தான்!

சந்தியில் வடை சுட்டு விற்றபாட்டி, வடைக்காக மரக்கிளையில் ஏங்கி அமர்ந்திருந்த காகத்தை; பின்னர் வந்து சேர்ந்த சுண்டல் கடலைக்காரன் படிப்படியாக ரோட்டோரத்தில் வந்து சேர்ந்த பெட்டிக்கடை; பின்னர் வந்த டீக்கடை இவை பற்றி வரலாறுகளை இந்த ஆலமரம் மட்டும் தானே அறியும். அன்று தோட்டத்தில் பிள்ளை மடுவமாக ஆரம்பித்த பாடசாலை இன்று பதினைந்து ஆசிரியர்களோடு நிகழ்ந்தாலும் அன்று வித்தியா மாளிகை வாசிப்பிற்கும் சுந்தரமூர்த்தி வாத்தியாரின் மனக்கணக்கிற்கும் ஈடாகுமா என்று "நைற் ஸ்கூல் நல்ல தம்பி" நெஞ்சார புகழ்வதும் ஆலயத்திற்கு சரியெனவே படுகின்றது. அதன் மனசாட்சி அதற்கு!

எழுபத்தி நான்கில் தோட்டம் மூடப்பட்ட நிலையில்; தோட்டப் பாடசாலை மறையும் நிலை ஏற்பட, தனியார் தோட்ட முதலாளி ஒருவரை பிடித்து; அவர் பொறுப்பில் பாடசாலையை உயர்ப்பித்து கல்விக் கண்களை மூடவிடாது; தோட்டத்தில் படித்த இளைஞர் காப்பாற்ற, "சாகும் வரை இதில் படிப்பிக்கின்றோம்." "வாய்ப்பு தாருங்கள்" என்று வந்த சிலர் எல்லாம் நிறைவேறி, பாடசாலை சுவீகரிப்பும் நடந்து, அரசாங்க நியமனம் கிடைத்தவுடன் தலாவாக்கொல ஆசிரிய கலாசாலை என்று போய்; பின்னர் இந்த பாடசாலை பக்கமே வராது அட்டன் நுவரெலியா என்று அங்கேயே

குடியேறி மவுசு காட்டி, சொந்த பந்தங்களின் இழவு சாவு வீடென்றால் வேன் பிடித்து இறுதி நேரத்தில் சடங்கிற்காக வந்து, உடனே திரும்ப வேண்டும் என்று ஓடிய போது; ஆலமரம் தனக்குள் நகைக்காமலா இருந்திருக்கும்.

கல்விப் பொதுத்தராதர சாதாரண பத்திர பரீட்சையையே பல தடவைகள் எடுத்து, ஒட்டு மொத்தமாக ஆறுபாடங்களை சான்றிதழில் காட்டிய இவர்கள், தனக்கு வாழ்வளித்த தோட்டப் பாடசாலையை மதிக்காமல்; அற்ப மவுசு காட்டி ஆலமரத்துச் சந்தியில் புது வாழ்வுப் பெருமையில் "வேனை" விட்டு இறங்காமல் நடப்பு காட்டியது ஆலமரத்திற்கு மட்டுமா நகைப்பானது, நடிப்புச் சுதேசிகள்.

அன்று தோட்டத்துக்கு பாடசாலைக்கு ஆண்டிற்கு ஒரு தடவை வந்து, "பாஸ் பெயில்" போடும் ஸ்கூல்" இன்ஸ்பெக்டர் ஒரு சர்வபலதாரி பாடசாலை வரவு, பாஸ் பெயில் என்பதிலேயே "கிராண்ட்" தங்கி உள்ளது.

இன்று பாடத்திற்கொரு அதிகாரி. மாதா மாதம் வாரா வாரம் பாடசாலைக்கு வந்து, "காலை எட்டு மணிக்கு பாடசாலையை தரிசித்தேன். பிற்பகல் ஒரு மணிக்கு திரும்பிச் செல்கிறேன்" என்று காலை பத்து மணிக்கு வருகை தந்து, அரை மணித்தியாலத்திற்கு மேல் பாடசாலையில் தரிக்காது, ஏறாத வாகனத்தின் இலக்கத்தையும் "லொக் பூக்கில்" குறித்து "டிரவுலிங்கிளைமுக்கும்" ஏற்பாடு செய்து; திரும்பிச் செல்லும் வழியில் தனது மர பிசினஸ்சையும் கவனித்துவிட்டு ஆலமரச் சந்தியில் பஸ் ஏறிச் செல்லும் கல்வி அதிகாரியையும் புறக்கணிக்காது, நிழல் தந்து நின்று, வழியனுப்பி வைப்பதும் இச்சந்தி ஆலமரம் தான்; குறிப்பறியாத நாமும் மரம் என்பதாலா?

அல்லது, "காட்டகத்தே நிற்கும் அவை அல்ல நல்லமரம்" என்ற பாடலை ஆலமரம் மனப்பாடம் செய்தா வைத்துள்ளது?

தோட்டத்திலுள்ள சிலர் சம்பளக் கிழமையில் மூன்று மைல்களுக்கு அப்பாலுள்ள வள்ளிவெல கள்ளுத்தவறணைக்கு இரகசியமாக போய் வந்தார்கள். போகும் போது இரகசியமாக போனவர்கள் திரும்பி வரும் போது; "ஈன ஜென்மம் எடுத்தேனே என் ஐயனே என்னை ஏன் படைத்தாய்" என்று தள்ளாடி வந்து; தலைக்கேறிய சூர் தணியும் மட்டும் சந்தி ஆலமரத்தடியில் குந்தி இருந்து போனார்கள். இவர்கள் யார் எவர் என்ற இரகசியத்தை ஆலமரம் வெளியிட்டு காட்டிக் கொடுத்ததே இல்லை. இல்லவே இல்லை

தற்போதும் இரவு பகலின்றி கஞ்சா, பீடி, தூள்; "பாபுல்" என்று எத்தனையோ வியாபாரங்கள் ஆலமரநிழலில் நடக்கத்தான் செய்கின்றன. ம்...ம்... ஆலமரம் ஒன்றையுமே கண்டு கொள்வதில்லை அவனவன் பிழைப்பு அவனோடு! நமக்கென்ன என்று மாமூல் வாங்கும் அதிகாரியைப்போல் பாரா முகமாக இருக்கின்றது. கேட்பார் யார்?

வர்ண வர்ண சினிமா போஸ்டர்கள்; அரசியல் கட்சி போஸ்டர்கள் இன்னும் துண்டுப் பிரசுரங்கள் என்பவற்றை அடித்தவர்கள் பசை உலரும் முன்னே கிழித்தவர்கள் அனைவரையும் ஆலமரம் அறியும். நட்ட நடுநிசியில் நடந்தாலும் கண் கொண்டு பார்த்த காட்சி. ஆனால் ஒட்டை வாயனாக உளறியதே கிடையாது.

ஆலமரத்தின் பெருந்தன்மை இது. தோட்டத்தில் தொழிற்சங்கத்திற்கு ஆள் சேர்க்க இரவோடு; இரவாக சிலர் வந்து ஆலமரத்தின் அடியில் நின்றார்கள். இரகசியமாக சந்திப்பு நடந்தது. "ஜில்லாவில்" துண்டு எடுத்த விடயம் எப்படியோ நிர்வாகத்திற்கு எட்டிவிட்டது. "ஜில்லாவில்" துண்டு எடுக்க முன் நின்று பேசிய ஒருவனே அதனையும் நிர்வாகத்திடம் கூறி நல்ல பெயர் வாங்கி விட்டான்.

இரண்டு மூன்று குடும்பங்கள் போலியான குற்றச்சாட்டுக்களை சுமத்தி; பற்றுச்சீட்டில் சிவப்பு மையில் எழுதி; இருபத்தி நாலுமணி நேரத்தில் சட்டி; முட்டி சாமன்களுடன் வெளியேற்றப்பட்டு ஆலமரத்துச் சந்திக்கு அனுப்பப்பட்டனர். தொழிற்சங்கங்களுக்கு அங்கத்துவம் சேர்ப்போருக்கு இது ஒரு பாடமாக அமையட்டும் என்று நிர்வாகம் மேற்கொண்ட நடவடிக்கை இது!

பிள்ளைக்குட்டிகளோடு பதுளை பக்கம் போன இவர்களின் கதி என்ன என்று ஆலமரம் அறியவே இல்லை. ம்... ஏன் இப்படி? தன்னை கடந்து செல்லும் சவ ஊர்வலத்திற்கு கூட; ஒரு வெள்ளைக்கொடியைப் போட்டு அனுதாபத்தை தெரிவிக்காத மரம் தானே இது!

வர்ண வர்ண பெனர்களை மட்டும் கட்டிக் கொண்டால் போதுமா? அரசியல் கட்சிகளோடு அப்படி என்ன உறவு வேண்டி இருக்கிறது.

சவ ஊர்வலம்; திருமண ஊர்வலம்; சீர்கொண்டு செல்லும் ஊர்வலம் என்பவற்றிற்கு சாட்சியாக இருந்தால் மட்டும் போதுமா? இவ்வளவு பெரிய உருவம் இருந்தும் என்ன பயன்?

ஐம்பத்தி எட்டில் தனக்கு முன்னே ரோடுகளுக்கு விளக்கம் கூறி நிற்கும்; சீமெந்துத் திண்டில் உள்ள தமிழ் எழுத்துகளுக்கு தார் பூசும் போது பார்த்துக் கொண்டு தானே இருந்தது. பெரிய மகா உருவம் ஆனாலும் தடுப்பதற்கு தைரியம் இல்லையே!

தியசேனபுர, ஹிங்கிராங்கொட, மெதிரிகிரிய பகுதிகளில் தாரில் முக்கி; எரிகாயம் உட்பட; காயப்படுத்தி; குற்று உயிரும் குலை உயிருமாக போராடிக் கொண்டிருப்பவர்களை மாத்தளை வைத்தியசாலைக்கு கொண்டு வந்த போது, சாட்சியாக வழியில் ஒரு கைகாட்டி மரமாக, தலையாட்டி பொம்மையாக நின்றால் போதுமா?

எழுபத்தி நான்கில் தோட்டங்கள் திடீரென மூடப்பட்ட போது, பஞ்சத்தில் நடுரோட்டுக்கு வந்து, ஆலமரச்சந்தியில் முட்டி வைத்து சமைக்க, படுக்க மரம் இடம் கொடுத்தது பெரும் புண்ணியம் தான்! குஞ்சு குழுவான்கள் மீது கொண்ட வாஞ்சையோ....!

எண்பத்தி மூன்றில் லயங்கள்; கடைகள், ஆலயங்கள், வீடுகள் என்பனவெல்லாம் எரியூட்டப்பட்டு மக்கள் வெட்டி, அடித்து விரட்டப்பட்டு காடுகளில் தஞ்சம் புகுந்த போது யார்? யார்? அடித்தான். யார் யார்? எரித்தான் என்பதற்கு சரியான சாட்சி இந்த ஆலமரம் மட்டும் தான்!

தேரையும், கோயிலையும் எரித்தவன், பெற்றோல் கொடுத்தவன், கூடி நின்று களித்தவன், தண்ணீர் ஊற்றி அணைத்தவன், பரிகசித்தவன், பரிதவித்தவன் அனைத்திற்குமே நீதிமன்றம் ஏறி சாட்சி கூறாத ஒரே கண்கண்ட சாட்சி இந்த ஆலமரம் தான்.

“இனி இந்த தோட்டத்திற்கு திரும்பி வருவதே இல்லை” என்ற சுயமரியாதையுடன்; தன் மானத்துடன் வடக்கிற்கு போய் அங்கும் வாழமுடியாமல் தாயகத்திற்குச் சென்று முகாம்களில் நோயில் இறந்தவர்கள், வடக்கில் குடி புகுந்த இடங்களிலேயே வாழ்க்கையை அமைத்துக் கொண்டவர்கள், வீராப்புடன் போய்; “ஈரபலாக்கா, பொலஸ்கா” போல் ஆகுமா? என்று நப்பாசையுடன் வந்தவர்கள் யார் யார் எப்படியானவர்கள் என்ற புள்ளி விபரமும் ஆலமரத்திற்கு அத்துப்படி

திரும்பி வந்து ஆலமரத்தடியில் குந்தி, பல்லவராயன் கட்டையும், கைதடி முகாமைப் பற்றியும் குறை கூறியவர்களுக்கும் நிழல் கொடுத்து நின்று, ஓட்டுக் கேட்டு, மனம் நொந்து ‘தமிழ்ச்சாதியின்’ பெருமையைப்பற்றி எப்படி, என்ன... யூகித்திருக்கும்?

எண்பது வயதிலும் “இந்தியா கடுதாசி வருமா? அங்கு போய்விட்டால் போதும் என்று வராத தபாலை தினமும் எதிர்பார்த்து ஆலமரத்துச் சந்தில் குந்தி இருந்து “நாளை வரும்” என்ற நம்பிக்கையோடு கிழிந்த வேட்டியின் பக்கத்தை மூடிக்கொண்டு மேட்டுலயத்திற்கு திரும்பும் பழனி தாத்தா; “எங்க அப்பா என்னய சின்ன பிள்ளையா இந்த தோட்டத்திற்கு அழைத்து வந்த போதே இந்த ஆலமரம் இப்படித்தான் இருந்திச்சி” என்று தனது பெருமையைக் கூறும் கிழவன்; இந்தியா ஆசை நிறைவேறாமலே எண்பத்தி மூன்றில் நடக்கமுடியாத நிலையில், உறவுகள் காட்டிற்கு ஓடிவிட; பாயோடு எரிக்கப்பட்ட போதும் கிழவனின் நட்புக்காக ம்.... ஒரு ஒப்பாரி சொல்லி ஒரு பாட்டம் அழுதிருக்குமா இந்த மரம்? ம்.... கிடையாது

தலைமுறை தலைமுறைக்கு காட்சியாக நின்றால் மட்டும் போதுமா? அந்த புகழ் வேண்டியது தானா?

தோட்டத்து கிழவன் ஒருவனின் பேரனும் இன்னும் சில இளைஞர்களும் இரகசியமாக நடு இரவில் கூடி அதிகாலை வரை கிசுகிசுத்துக் கொண்டார்கள். சிவப்புச் சட்டை, கரிய மீசையுடன் வந்து போன அந்த சிங்கள இளைஞனுடன் சென்ற கிழவனின் பேரன் திரும்பி தோட்டத்திற்கே வரவில்லை. "கீழைக்காற்று" வீசியது. "இருண்ட விளக்குகள்" இருளில் பேசின. ஆலமரத்திற்கு ஒட்டகக்காது. துடிதுடிப்புடன் அவர்கள் பேசிய கருத்துகள், புரட்சிகரமான எண்ணங்கள் எல்லாம் பழமை வாய்ந்த இந்த "இராஜபாட் ஆலமரத்திற்கு" தெரியுமா? புரியுமா? என்ன? புரியுதோ இல்லையோ அது தன் போக்கில் வளர்ந்து நிற்கின்றது. மாற்றங்கள் மட்டும் தான் மாறாமல் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

ஒரு வித்து சிறிய விதை ஒரு பாரிய விருட்சமாக வளர்ந்து நிற்கின்றதே!

பிரம்ம வித்தையின் சூக்கும இரகசியம் இதுவா? காற்றின் அதிரடிச் சோதனையோ இல்லை. பறவைகள் சில ஆலமரக்கிளைகளில் அமர்ந்து பழங்களிலுள்ள புழுக்களை கொத்தி கொத்தி துளைத்து உண்டு மகிழ்கின்றன. அப்போது!

திடீரென சட... சடவென கிளைகளை நெட்டி முறித்து சடாரென்று சாய்ந்து நிலத்தில் வீழ்ந்தது ஆலமரம். இதனை யாரும் எதிர்பார்த்திருக்கவே இல்லை கிளைகள் பட்டுப் போயோ, இலைகள் கருகியோ, எதுவித பாதிப்போ, நோயோ இன்றி இருந்த ஆலமரம் சாய்ந்து வீழ்ந்து விட்டது.

அது அடியோடு சாய்ந்து விட்டது. அதன் ஆணிவேர் குடி கொண்டிருந்த இடத்தில் பெரும் பள்ளம். "இங்கிது பொறுப்பதற்கில்லை" இப்படி இனி வாழ்ந்து என்ன பயன் கொடுமைகளை கண்டு மனம் புழுங்கி; சாட்சியாக நின்றால் மட்டும் போதுமா? அநீதியை அழிக்க முடியாமல் சந்தியில் இனியும் சாட்சியாக நிற்பது அவமானம் அவமானம் என்று நினைத்தது போலும். சந்தி ஆலமரம் சாய்ந்து விட்டது.

விஷ்ணு காயாவை வழிபட்டு, புத்த காயாவிற்கு செல்லும் வழியில் காலம் காலமாக நிற்பது அட்சயவடம் என்ற ஆல விருட்சம். இந்த அட்சய வடத்தில் தான்; மோட்சம் செல்லாத பிதிர்கள் இருப்பிடமாக கொண்டுள்ளார்கள் என்பது ஒரு ஐதீகம். அங்கே பிதிர்கடன் செய்தால் அவர்கள் மோட்சம் செல்வார்களாம்...!

இலங்கையை தேயிலை தேசமாக்கிய பிதிர்களுக்கு சாட்சியான இந்த அட்சய வடம் மண்ணில் வீழ்ந்து விட்டது.

ஓடி வரும் காற்று உசுப்பி, அதிரடியாக தகர்க்கவில்லை அந்திமாலைப் பொழுதில் சந்தியில் காலங்காலமாக நின்ற ஆல விருட்சம் சாய்ந்து விட்டது.

பிரம்ம வித்தையின் சூக்ம இரகசியமாக நின்ற ஆலமரம் சாய்ந்து விட்டது.

அட்சய பாத்திரமாக, பரம்பரை பரம்பரையாக காலங்காலமாக கண்ணீரையே தீர்த்தமாகக் கொண்ட இலோட்சோபலட்ச மலையக மக்களுக்கு ஓர் அட்சய வடமாக நின்று, பிதிர் மோட்சம் கொடுக்காமல் இனியும் வெறும் பார்வையாளனாக குடை பிடித்த நிற்பதால்; பயன் ஏதும் இல்லை என்று சந்தியில் நின்ற ஆலமரம் நினைத்ததுவோ என்னவோ யார் அறிவார்! அது மண்ணில் சாய்ந்தே விட்டது. ஆலமரத்தின் மனசாட்சி அதன் தூரை, அரித்துத் தின்றிருக்க வேண்டும் அதன் வேர்கள் அதனுடன் உறவற்று வேறாகி விட்டனவோ?

*என்னவோ?*

*சாய்ந்து விட்டது.*

*ஆலமரம் மண்ணில் சாய்ந்து விட்டது.*

*அது என்ன, விஷ்ணுகாயா, புத்தகாயா வழியிலுள்ள அட்சய வடமா? இல்லையே*

*சாதாரண; சந்தி ஆலமரம் தானே!*

*மண்ணில் சாய்ந்து விட்டது.*

*ஓர் ஆலமரத்தால் வேறு என்ன தான் செய்ய முடியும்?*

**(வீரகேசரி)**



# புத்தாண்டு புதிதல்ல

அந்தி மயங்கிவிட்டது. கூன் விழுந்த மலைகளுக் கிடையே தேங்கிக்கிடந்த பனிப்புகாரையும் அணைத்துக் கொண்ட இருள் ஒரு திருடனைப் போல மெல்ல.... மெல்ல... வந்து பதுங்குகின்றது.

பார்வை.... பார்த்துக் கொண்டிருக்கும்போதே, கண்ணாமூச்சு காட்டி இருள் கரிய, திரைதிரையாய் வந்து படிந்து விடுகின்றது. எப்படி வந்தது? ம்.... தெரியாது.

மலைப்பாதையில் நின்றுவிட்ட சரக்கு வண்டியாக ஆங்காங்கே நீண்டுகிடக்கும் லயன், காம்பிராக்களில் 'கும்பிலாம்புகள்' ஒவ்வொன்றாகக் கண்சிமிட்டுகின்றன.

பீலிக்கரையிலிருந்து ஈரச்சேலையுடன் வீடு திரும்பிய காமாட்சிப்பாட்டி மண்வெட்டியைத் திண்ணையில் எறிந்து விட்டு அடுக்களைக்கு விரைந்தாள்.

அவளுக்குப் பகீரென்றது ம்... குளிர், தாங்கமுடியாத குளிர். முதுமையினால் தளர்ந்துபோன உடல் தட..... தட.... வென ஆடியது. அடுப்பு மூட்டப்படவில்லை. எப்படிக் குளிர் காய்வது? விளக்கும் ஏற்றப்படவில்லை. எங்கும் ஒரே கும்மிருட்டு. குகையினுள் சிக்கிக்கொண்ட உணர்வுதான் ஏற்பட்டது. கண்களைக் கசக்கியபடியே வெளியே வந்தாள்.

அவள் உடம்பு நடுங்கியது. உடுத்தியிருந்த ஈரச்சேலை வேறு தேகத்தை ஊதவைத்து விறைக்கச் செய்தது. விரல்கள் கொடுகி..... கொடுகி.... வெட்டி வெட்டி இழுத்தன. பற்களை இழுந்த முரசுகள் ஒன்றையொன்று அணைத்துக்கொள்ள வாய் "வில்வடிவில்" மேல்நோக்கி

வளைய சுருங்கித் தொங்கும் கன்னத்தோல் சிலந்திவலைப் பின்னலெனப் படம் காட்டுகின்றது.

"டேய் அம்பி... டேய்..... அம்பி" இயன்றமட்டும் குரலெடுத்துக் கூப்பிட்டாள் கிழவி.

பதில் இல்லை

"அம்பி..... அம்பியோ..."

பதில் இல்லை

"அம்பி.... அம்பியோ....."

பதிலுக்கு அடுத்த காம்பிரா அலுமேலு "ஐயோ முட்டை விடுற கறுப்புப் பொட்டையைக் காணலியே, காளி கோயிலுக்குக் காணிக்கை கட்டுறேன்" என்று அங்கலாய்க்கும் குரல்தான் கேட்டது.

நாலு லயன்களுக்கு அப்பால் உள்ள பெரட்டுக்களத்தில் தன் சகாக்களுடன் "பிள்ளையார் பந்து" அடிக்கும் அம்பிப்பயலுக்குப் பாட்டியின் பலவீனமான குரல் எங்கே கேட்கப்போகின்றது?

அப்படித்தான் தம்பித்தவறிக் காதில் விழுந்தாலும் கூப்பிட்ட குரலுக்கு மதிப்புக்கொடுத்து உடனே வந்துவிடப்போகின்றானா; என்ன?

மீனாட்சிப்பாட்டியின் மதிப்பு அப்படியாகிவிட்டது!

அவனைச் சொல்லியும் குற்றமில்லை. விளையாட்டுப்பிள்ளை. புத்தாண்டுத் திருநாள் வேறு வருகின்றது. "சித்திரைப் பெருநாள்" "வருஷப்பிறப்பு" என்று சிறுவர்களெல்லாம் ஒரே இன்பக் குதூகளிப்பில் மிதக்கின்றார்கள்.

திண்ணையிற் கிடந்த தேயிலை மிலாரை எடுத்துக்கொண்டு போய், அடுப்பில் திணித்துவிட்டுத் தீப்பெட்டியைத் தேடினாள். விறகு அட்டல், ஜன்னல் திண்டு, போத்தல் ராக்கை இன்னும் எங்கெல்லாமோ துளாவினாள். ஹும்... ஹும்... கிடைத்தபாடாக இல்லை.

கிழவிக்கு இப்பொழுது பகற்பொழுதிலேயே கண் சரியாகத் தெரிவதில்லை. தேயிலைப் புதருக்குள்ளே "வத... வத.... வென்று செழுமையாகப் படர்ந்துக் கிடக்கும் அமலப்புற்களே கிழவியின் கண்களைப் பொத்திவிட்டு மெதுவாக நழுவித்தப்பிவிடுகின்றன.

"இனியும் பார்வை என்ன வேண்டியிருக்கின்றன" என்று அலுத்துப்போய் உள்வாங்கிக் கொண்ட கண்களோடு, ஏதோ ஒரு நிதானத்தில்தான் கிழவி நடமாடிக்கொண்டிருக்கின்றாள்.

"கண்வெளிச்சம்" இருந்தால் கிழவி இப்படி ஏன் இந்த 'முடியாத வயதில் கொந்தரப்புக்காட்டில் உயிரைப்பிடித்துக்கொண்டு ஏறிஇறங்க வேண்டும்.

கொழும்புப் பங்களாவில் கிடைத்த ஆயா வேலையோடே எப்படியோ காலத்தை ஓட்டி இருக்கலாம்.

ஆனால் "கண்தெரியாத கிழடை வைத்துக் கொண்டு மாரடிக்க முடியாது" என்ற நற்சாட்சிகளுடன் தோட்டத்திற்கே கிழவி திரும்பிவந்த போது "கொந்தரப்பு" மட்டும் ஒதுக்காமல் ஏற்றுக்கொண்டு விட்டது.

கொந்தரப்புச் சம்பளம் மாதா மாதம் கிடைக்கின்றதோ என்னவோ; கொந்தரப்புக் கணக்குப்பிள்ளையின் "திட்டு" மாதம் தவறாமல் கிழவிக்கு கிடைக்கும்.

உழைக்கக்கூடாத வயது. உழைக்கமுடியதா உடம்பு. ஆனால் கிழவி உழைத்துக்கொண்டுதான் இருக்கின்றாள். தெம்பு உடலில் அல்ல. உள்ளத்தில்தான். என்னசெய்வது? வயிறு என்ற ஒன்று ஒட்டிக் கொண்டிருக் கின்றதே? "ஒரு நாள் உணவை ஒழியென்றால்........ ஒழியுமா" ஒளவைக்கே இந்த சோதனை என்றால் காமாட்சி எம்மாத்திரம்?

உண்டு இல்லையென்று பாராமல் நேரம் தவறாது பற்றி எரிகின்றதே!

ஐம்பத்தி ஐந்து வயதுவரை உழைத்துவிட்டு "அக்கடா" என்று ஒய்வாக மூலையில் குந்த முடியாது. மருமகளின் பெயரிலுள்ள இரண்டு ஏக்கர் கொந்தரப்பில் புல்வெட்டுகிறாள் கிழவி.

பெற்ற தாயையும், கட்டிய மனைவியையும், இருபிள்ளைகளையும் தவிக்கவிட்டுவிட்டு யாரோ ஒருத்தியை இழுத்துக்கொண்டு வவுனியாவிற்கு ஓடிப்போன மகனைப்பெற்ற பிழைக்காக மட்டுமன்றி, தனக்கும்வேறு ஒட்டிக்கொள்ள உறவில்லாதபடியால் மருமகளுடனேயே தங்கிவிட்டாள் கிழவி.

வேறு எங்குதான் போவது....? ஏச்சுப்பேச்சு, இன்பதுன்பம் எல்லாவற்றிற்குமே அவள்தான். நாளைக்குக் கிழவிக்கு ஒன்று நடந்துவிட்டால் முழுப்பொறுப்பும் அவள் தலையில் தானே! இதை நினைத்து மருமகள் என்னதான் பிழைசெய்தாலும் கிழவி மௌனமாக அடங்கிப் போய்விடுவாள். மருமகள். தூக்க முடியாத குடும்பச் சுமையை ஏற்றுத் தவிப்பது கிழவிக்கு புரியும். என்னதான் இருந்தாலும் என் மருமகள் போலாகுமா? என்று பெருமிதப் பட்டுக் கொள்வாள்.

அடுத்த வீட்டு அலமேலுவிடம், சிரட்டையில் தீக்கங்குகளை வாங்கிவந்து அடுப்பை மூட்டிக் குளிர்காயத் தொடங்கினாள். கேத்தலில் தண்ணீர் கொதிக்கத் தொடங்கியது.

வேலை முடிந்து வீடு திரும்பிய கிழவியின் மருமகள் தேனீர் தயாரித்து வழங்கிவிட்டு இரவுச் சாப்பாட்டிற்காகச் சமையலை ஆரம்பித்தாள்.

கிழவிக்கு உடுத்துக்கொள்வதற்கு மாற்றுச்சேலை கிடையாது. கட்டியிருக்கும் சேலை மட்டும்தான். அதுவும் கடந்த தீபாவளிப் பண்டிகைக்கு மருமகள் வாங்கிக்கொடுத்ததுதான். கிடைக்கும் சொற்ப வருமானத்தில் நான்கு உயிர்களின் வயிற்றைக் கழுவிக் கொண்டு கிழவிக்கென ஒரு சேலையை மருமகள் வாங்கியது பெரிய சாதனை!

கிழவிக்காவது ஒரு சேலை இருக்கின்றது. பாலாயிக் கிழவி ஒரு கந்தலை இடுப்பில் சுற்றிக்கொண்டு தோட்டத்தைச் சுற்றிவருவதும். அனாதையான சன்னாசிக் கிழவன் தொங்கல் காம்பிராவில் செத்துப்போயிக்கிடந்த கோலம்!

அந்த ஒரேயொரு சேலையுடன் கிழவி காலந்தள்ளுவதே ஓர் அதிசம்தான். பூப்போல அதைப் பாவித்து வந்தாள். என்றாலும் அதுவும் நூல்தானே! நைந்து நைந்து நைலோன் துணியாக உடலைக்காட்டத் தொடங்கிவிட்டது.

சேலையின் ஒரு பாதியை இடுப்பில் சுற்றிக்கொண்டு மறுபாதியையும் தோய்ப்பாள். குளித்துமுடிந்து கரையேறிய பின்னர் உலர்த்துவதும் இப்படியேதான். ரவிக்கைபோடாது அந்தச் சேலையை மட்டுமே அவள் அணிந்திருப்பதே ஒரு தனிக்கலையாகும்.

இரவில் குளிருக்காகப் போர்த்துக்கொள்ளவும் இதே சேலைதான். பகலில் கொந்தரப்புக் காட்டிற்குச் செல்லும் போது இடுப்பில் ஒரு படங்குத் துண்டைக் கட்டிக்கொள்வாள்.

கிழவி இப்படி எத்தனை பவ்வியமாகப் பாவித்த போதிலும் அது கண்சிமிட்டி விளையாடத் தொடங்கிவிட்டது.

அன்றொருநாள் தன் இளைய பேரப்பிள்ளையை மடியில் வைத்து தாலாட்டிக் கொண்டிருந்தாள் கிழவி. கிழவியின் ரா....ரா... ராராடில் களிகொண்ட குழந்தை துள்ளிக்குதித்து தன் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டது. பயன் கிழவியின் சேலை இரண்டாகக் கிழிந்ததுதான். பின்னர் ஊசியால் உருட்டித் தைத்துவிட்டாள் மருமகள்.

சேலை காய்ந்தவுடன் கிழவி அடுப்படியைவிட்டு நகர, மருமகள் இரவுச் சாப்பாட்டிற்காக ரொட்டி சுடத்தொடங்கினாள்.

கிழவிக்கு ஓய்வு கொடுக்கக்கூடாது என்பது போலத் தொட்டியில் உறங்கிய 'உங்காப்பயல்" வீரீட்டுக் கத்தினான். அவனைத் தூக்கி அணைத்தபடியே திண்ணைக்குச் சென்று தாலாட்டுப்பாடித் தட்டிக்கொடுத்துத் தூங்க வைத்தாள் கிழவி.

"அம்பி வந்தானா?" மருமகள் கோபத்துடன் கேட்டாள்.

"இல்ல. நான்தான் வந்து அடுப்பு மூட்டினேன். கிழவி கூறினாள்.

“இன்றைக்கு அவன் வரட்டும். தோலை உரிக்கிறேன்” மருமகள் கறுவியபடியே வேலையில் மூழ்கினாள். கிழவி மௌனமானாள்.

கிழவி பகல் கொந்தரப்பில் புல் வெட்டிக் கொண்டிருக்கும் போது திடீரென்று குளிர் காற்றுச் சுழன்று அடித்தது. நினைத்துப் பார்ப்பதற்கு முன் மேற்காவுகை மழை ஒரு பாட்டம்பாடி ஓய்ந்தது. எதிர்பாராத விதமாக ஆலங்காய் அளவில் பெரிய மழைத்துளிகள் விழுந்தன. கிழவி வசமாகச் சிக்கிக் கொண்டாள். குன்றுகளை மெழுகி விட்டாற் போன்று மரகதப்பச்சைத் தேயிலைச் செடிகள். ஓடி ஒதுங்கவும் முடியாது.

சிறிது நேரத்தில் மழை ஓய்ந்து மஞ்சள் வெயில் சுரீரென்று அடித்தது. எனினும் கிழவி தெப்பமாக நனைந்து விட்டாள். செம்மண் தூசிபடிந்த உடம்பை மழைநீர் சேறு பூசியது போலாக்கி விட்டது.

அதற்கு மேல் கிழவியால் வேலை செய்ய முடியவில்லை. பீலிக்கரைக்குச் சென்று உடலைக் கழுவிக்கொண்டு வீடு திரும்பினாள். அலசிப் பிழிந்து இடுப்பில் சுற்றிய ஈரச்சேலை உடம்பில் சொத... சொதப்பை ஏற்படுத்தியது.

“கண்டக்டர்” வீட்ல அந்த அம்மா இன்னைக்கு உன்னை கட்டாயம் வர சொன்னிச்சே... போகலியா.... ரொட்டியை மறுபக்கம் திருப்பிப்போட்டபடியே கேட்டாள் மருமகள்.

“அந்திக்கே போகத்தான் நெனைச்சிருந்தேன். மழையில சேலை நனைஞ்சி ஈரமாகி போயிடுச்சி.... வீட்டுக்கு வந்தா.... அம்பியையும் காணல்ல.... இதோ இப்பபோயிட்டு வந்திடுறேன்.

“கந்தையா கண்டக்டர் வேலைத் தளத்தில் மிகவும் கண்டிப்பான பேர்வழி எனினும் தங்கமான மனிதர்” என்று பெயரெடுத்தவர். அவருடைய மனைவி சென்றமாதம் பிரசவித்தாள். இது ஐந்தாவது குழந்தை அந்த அம்மாவுக்கு ஆஸ்துமா வேறு! காமாட்சிப் பாட்டிக்கு அங்கு ‘கழுவ வைக்க’ என்று ஏகப்பட்ட ஓய்வு ஒழிச்சலற்ற வேலை. பாட்டி இப்பொழுதும் ‘ஊடமாட’ அங்கு போய்வருகிறாள்.

“நான் ஐயா வீட்டிற்குப் போய் வருகின்றேன். அம்பி வந்தா அடிக்க வேண்டாம்” – கொள்ளிக்கட்டையை வீசிக்கொண்டு இறங்கி நடந்தாள் கிழவி. அம்பிப்பயல் குறும்பு செய்தாலும் அவன் மீது தனிவாஞ்சை கிழவிக்கு! தன் மகளையே உரித்துவைத்துப் பிறந்திருக்கின்றான் என்பது கிழவியின் கணிப்பு!

இரவு மணி எட்டைத் தாண்டியிருக்கும் அம்பிப்பயல் மெதுவாக வீட்டுக்குள் நுழைந்தாள். உடம்பெல்லாம் ஒரே அழுக்கு. வியர்வை வேறு மணத்தது. சட்டையின் ஜேபி கிழிந்து தொங்கியது. மாலையில்

சிறுவர்களுடன் சண்டை பிடித்திருக்கவேண்டும். முகத்தில் நகக்கீறல்களில் இரத்தம் கசிந்து செங்கோடுகள் ஓடிக்கிடக்கின்றன. தலைமயிர் படியாது, குத்துக் குத்தாக சிலுப்பிக் கிடக்கின்றது.

"இவ்வளவு நேரம் எங்க போயிருந்த" தாய் அதட்டினாள். பதில் பேசாது மூலையில் போய் அமர்ந்தான் அம்பி.

"எங்கடா போன.... இவ்வளவு நேரமா விளையாடுறது? அடுப்ப பற்ற வைச்சி தண்ணி சுடவைச்சா என்ன? உனக்கு விளையாட்டுப் பெருசாபோச்சி... அப்பாயி ஈரச்சேலையுடன் நடுக்கிக் கிட்டு இருந்ததைப் பார்த்தியா....?

"எனக்கு நீ ஏன் புதுவருஷத்திற்கு புதுச்சட்டை வாங்கிக் கொடுக்கல்ல... ராசு, கோபாலன் எல்லோருக்கும் அவங்க அம்மா புது உடுப்பு வாங்கிக் கொடுத்திருக்காங்க அழுகையை சுமந்து நிற்கும் குரல் அவன் நியாயம் அவனுக்கு!"

தன் இயலாமையை நினைக்கத் தாயின் கோபம் தணிந்தது! "புதுச்சட்டை தைக்க காசுக்கு எங்க போறதாம்? இந்த மாதம் மேலதிக அரிசி, மாவுக்கே சம்பளம் போதாது. அடுத்த மாத சம்பளத்திற்கு கட்டாயம் வாங்கித் தருவேன். இந்தா நீ.... பகலும் சாப்பிடல்ல.... சோறு சாப்பிடு...."

அம்பி முறைத்துக்கொண்டு நின்றான். "இந்தா சாப்பிடு ராசா.... என் கண்ணு இல்ல... ...

"ம்...... ம்..... எனக்கு சோறு வேண்டாம். புதுவருஷத்திற்கு போட்டுக்கிற சட்டை வாங்கிக் கொடுத்தாத்தான் சாப்பிடுவேன். இல்லாபடி எங்கேயாவது, ஓடிப் போயிடுவேன்" சாப்பிடமறுத்து அடம்பிடித்தான் அம்பிப்பயல்.

"சரி நாளைக்கு வாங்கித் தாரேன். இப்ப நீ... இதை சாப்பிடு" தாய் சோற்றுப் பீங்கானை நீட்டினாள்.

"எனக்கு வேண்டாம்" – நாளை மறுநாள் புத்தாண்டுத் திருநாள். இத்தனை நாளும் இல்லாமல் ஒருபகலில் எப்படி புது உடுப்பு வாங்கி அளிக்கப் போகின்றாள்? – அம்பிப்பயலுக்கு நம்பிக்கை வரவில்லை.

"ம்.... சாப்பிடு" கோபத்தோடு ஒரு உதை விட்டான். சற்று தூரத்திற்கப்பால் விழுந்து நொறுங்கியது பீங்கான். தாய்க்கு முகம் சிவந்து கோபம் கொப்பளித்தது.

"அன்னத்தை கொட்டிட்டியே பாவி; இதுக்குத்தானே இந்த பாடுபடுகிறோம்" அம்பிப்பயல் எழுந்து லாவகமாக ஓடப் பார்த்தான். தாய் விடவில்லை. தலைமயிரைப் பற்றிப் பிடித்துக் கொண்டாள்.

“ஐயோ அம்மா நான் செத்தேனே” – அம்பி அலறினான். தாய் காளியாக மாறினாள்.

“ஐயோ அம்மா... அடிக்காதீங்க..... அடிக்காதீங்க... ஏன் இப்படி பச்ச பாலகன அடிக்கிற” பக்கத்து வீட்டு பார்வதி உள்ளிருந்தே குரல் எழுப்பினாள்

கண்டக்கடர் வீட்டிலிருந்து திரும்பிய காமாட்சிப்பாட்டி ஓடி வந்து தடுத்தாள். “விடு... விடு பச்சபுள்ளளையை இப்படியா அடிக்கிறது?” அவளிடம் இருந்து விடுவித்துத் திண்ணைக்குக் கூட்டிவந்தாள்.

“வலிக்குதா” ஆதரவோடு முதுகைத்தடவிக் கொடுத்தாள். அம்பிப்பயல் தேம்பித்தேம்பி அழுதான். மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கியது, அவனுக்கு!

“ஏன் வீட்டு வேலைகளை ஒழுங்காக செய்யல? இனிமே இப்படிச் செய்யாத; ஒழுங்காக நட”

“வருஷப்பிறப்பிற்கு ராசு, கோபாலன் எல்லோரும் சட்டைபோடுவாங்க. எனக்கு மட்டும் இல்ல. எனக்கும் புது உடுப்பு வேண்டும்” வார்த்தைகள் கோர்வையாக வரவில்லை. தேம்பித் தேம்பி அழுதபடியே கூறினாள்.

கிழவி ஒருகணம் மௌனமாக யோசித்தாள். பின் அமைதியான குரலில் “ நீ அழுவாத இந்தா உனக்கும் சட்டைதைக்க புதுத்துணி” மடியிலிருந்து பார்சாலை எடுத்தாள். இளஞ்சிவப்பு நிறத்தில் ஒரு புடவை.

அம்பிப்பயலின் அழுகை நின்றது. கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன. அழுகை போன திக்குத் தெரியவில்லை.

என்ன அதிசயம் புதுப்புடவை “கமுசும் சாரமும் தைச்சிக்கிட்டு மீதிக்கு உங்காப்பயலுக்கு ஒரு ஜங்கி தைச்சு கொடு”.... புடவையை விரித்து மேலும் கீழுமாகப் பார்த்தான் அம்பிப்பயல் ‘அச்சா பாட்டி. நான் இப்பவே போய் தைக்க கொடுக்கட்டா?” புடவையை கன்னத்தில் அழுத்தி முத்தம் கொடுத்தான்.

“ம்... உன்விருப்பப்படியே செய்” – “எங்க அச்சா பாட்டி” என்று கூறிய படியே சீத்தைப் புடவையுடன் தொங்கவீட்டு இராமு டெயிலரிடம் ஓடினான். அம்பிப்பயல் “இருட்டு பார்த்துப்போ... விழுந்திராத” என்று கூறவிட்டு சேலையின் முந்தானையை இழுத்துச் சொறுகியபடியே கிழவி உள்ளே போனாள்.

“உனக்கு ஏது புதுப் புடவை” – மருமகள் கிழவியை விசனத்துடன் கேட்டாள்.

“கண்டக்டர் வீட்டு அம்மா கொடுத்தாங்க. பிரசவம் பார்த்ததற்கு சந்தோஷமா புதுவருஷத்திற்கு மூட்டிக்கட்டிக்கணுசொன்னாங்க”

உனக்கு கட்டிக்க இல்லாம நைஞ்சி போன ஒட்டுத்துண்டை சுத்திக்கிட்டு இருக்கியே. அவனுக்கு என்ன இப்ப அவசரம் புது உடுப்பு கட்டாட்டி வருஷம் போகாமலா இருந்திடப் போவுது'' அவளுக்கு துக்கம் தொண்டையை அடைத்தது. கண்கள் பனித்தன.

கிழவி பதில் கூறாது பலாக்கட்டையை இழுத்துப்போட்டு அமர்ந்து ரொட்டியை சிறியதாக பிய்த்து பிய்த்து நடுங்கும் விரல்களில் நசுக்கி நசுக்கி கறியில் தோய்த்து அழுத்தி ஊறவைத்து பொக்கை வாயில் குதப்பத் தொடங்கினாள். வறுமையையும் துன்பத்தையும் நிரந்தரமாக அணிந்துள்ள அவளுக்கு புத்தாண்டு புதிதல்ல....

தான் சாப்பிடுவதற்காக கருகிப்போன ரொட்டியை எடுத்த மருமகள் சிறுபிள்ளையைப் போல் ரொட்டியை குதப்பும் கிழவியைப் பார்த்த படியே சுவரில் சாய்ந்திருந்தாள்.

இச்சிறுகதையினை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து ''ஒயிஸ் ஒப் த ஒயிஸ் லெஸ்'' சஞ்சிகை மலையக ஆங்கில சிறுகதை தொகுப்பில் வெளியிட்டுள்ளது. தமிழகத்தில், தினமணி கதிர் மறு பிரசுரம் செய்துள்ளது.

**(சிந்தாமணி 1978)**



# வெட்டுமரங்கள்

**மா**லையில் இருந்து தொடர்ந்து இரவு முழுவதும் பாட்டம் பாட்டமாகப் பெய்து அடம்பிடித்த பெருமழை கிழக்கு வெளுக்க முன்னரே அடங்கியிருந்த போதும் வானம் வெளுக்கவில்லை. மழை இருட்டு அப்பிக்கிடக்கின்றது. பிரகாசமற்ற வானத்தில் மழை மேகம் கறையாய்ப் படிந்து கவிழ்ந்துள்ளது.

விடிந்து வெகு நேரமாகிவிட்டது! இலை உதிர்ந்து கள்ளிக்கம்பாய் நீட்டிக்கொண்டிருக்கும் றப்பர் மரங்கள் யாவும் ஈரம் சொட்டிக்கொண்டிருக் கின்றன. கான்கள், குட்டைகள் யாவும் நிரம்பிப் புதுவெள்ளம் பாய்கின்றது. கலங்கிப் பாயும் புதுவெள்ளத்தில் தென்னை மட்டை முதற்கொண்டு தகரப்பேணி வரை துடுப்பில்லாமல் இனாமாக நீந்திக்களித்துக் கொண்டிருக்கின்றன.

இராமையா புரண்டு படுத்தான். குளிர், உடம்பை ஊசியாய்த் துளைத்து எடுத்தது. உடம்பு முழுவதையும் மறைக்க அந்தத் துண்டுக்கம்பளியால் முடியவில்லை. தலைப்பாகத்தை மறைத்தால் கால்பகுதி அடங்காது சில்லிட்டது. கால்களுக்கு ஆதரவாக கொஞ்சம் இழுத்துவிட்டால் நெஞ்சுக்கு மேலே .... கழுத்தோடு .... காதுகள் குடையச் சில்லிட்டுத் தொண்டை கம்ம... காதுகளில் கம்பிகளைச் செருகுவதுபோல ... ம்...ம்.... சிவ...சிவா... பற்கள் கிட்டித்து வெடவெடத்து நடுங்குகின்றன. கீழே விரித்திருந்த படங்குத் துண்டுவேறு ஈரம் பொசிந்த தரையில் ஊறி உடலில் நமைச்சலை ஏற்படுத்துகின்றது. "இனியும் படுக்க முடியாது. எழுந்திக்க வேண்டியதுதான். எழுந்து என்ன செய்வது.... அடுப்படியில் குந்திக் குளிர் காய்வதற்கும் "....வேலை..."

சிகப்பியைப் பார்த்தான். அவள் எவ்வித சிரத்தையுமே இல்லாது படுத்துக்கிடந்தாள். முதிர்ந்து தளர்ந்த உடம்பு சுரணையற்றுக்கிடந்தது.

முன்பெல்லாம் குளிர் என்றால் இப்படியா...? அப்படியே சிகப்பியை அணைத்து .... அணைத்து .... எத்தனை இன்பமாக அவள் இப்பொழுது அவனுடைய சிகப்பி மட்டுமல்ல தொங்கவீட்டு பாட்டி ... அவனும் தொங்கவீட்டு பாட்டாவாகிவிட்டான். காலம்தான் எப்படி ஓடிவிட்டது.

அவன் நாட்டிய ஒட்டுமரங்கள் யாவும் தண்ணீர் ஊற்றாக வாளிவாளியாகப் பாலைத் தருகின்றன.

அது பங்குனி மாதம். இலையுதிர் காலம். பங்குனி மாதங்களில் றப்பர் தோட்டத்தில் வேலை கம்மியாகிவிடும். இலையுதிர்ந்து தளிர்கொழுந்து ; விடுகின்ற காலமாதலால் கற்பகத்தருவாகப் பாலைச்சுரந்து நிற்கும் பட்டைகள் ஊமைகளாகிவிடுகின்றன. எனவே பால்வெட்டுக்கு ஓய்வு கொடுத்து விடுவார்கள்.

இந்த மாதம்தான் சீக்கில்லாமல் வேலை செய்தவர்களுக்கு 'போனஸ்சோடு' கூடிய வருட விடுமுறை கிடைக்கும். மற்றவர்களுக்கு ஏதோ இல்லையென்று சொல்லாமல் இரண்டொரு நாள் வேலை கிடைக்கும். இது அரிசி ரேசனுக்குத்தான் சரியாக இருக்கும்.

இந்த வருடம் நல்ல மழை! பால்வெட்டுகாரர்களுக்கு சோதனைக்கு மேல் சோதனையாகப் போய்விட்டது. இரண்டு மாதங்களாக ஒழுங்காக வேலை கிடைக்கவில்லை. கான்கட்ட, மருந்தடிக்க .... மைபூச... என்று இருந்த சில்லறை வேலைகளையெல்லாம் தேடி... தேடிக்கொடுத்தும் தலைக்கு மூன்று நாட்களுக்குமேல் கிடைக்கவில்லை.

என்ன செய்வது?

நாலைந்து பேர் இரகசியமாக நாட்டுக்கு வேலைக்குப்போய் வந்தார்கள். என்ன வேலை – எங்கு வேலை என்பதெல்லாம் அவர்களுக்குள்ளேயே பரமரகசியமாக இருந்தது. இன்னும் நாலு பேருக்குத் தெரிந்தால் வேலை நாள்கள் குறைந்துபோய் விடும் என்பது மட்டுமல்ல! " எங்களுக்கும் வேலை கொடுங்க" என்று இவர்கள் கேட்டுக்கொண்டு நின்று குழையும் அழகிலேயே நாட்கூலி குறைந்துவிடும். பின்னர் நாளொன்றுக்கு ஆறு ரூபாயும் பகல் சாப்பாட்டுக்கு சாப்பாடும் என்றிருக்கும் வேலை, ஐந்து ரூபாதான். சாப்பாடு கிடையாது என்றாகிவிடும்.

அப்படியொரு போட்டிச்சந்தை நாட்டுக்கூலி வேலை!

தோட்டத்தில் செக்ரோலில் பதிவு உள்ளவர்களுக்கே வேலையில்லை. ராமையா போன்ற பென்சன் எடுத்த கிழடுகளை எங்கே கவனிக்கப்போகின்றார்கள்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் தோட்டத்து இளைஞர்களுக்கு ஒரு யோகம் அடித்தது. தொடர்ந்து பெய்கின்ற மழை தோட்டத்தை ஊடறுத்து நாட்டிற் செல்லும் தார்ப்பாதையை அடித்துக்கொண்டு போய்விட்டது.

றோட்டுப் பிள்ளையார் கோவிலுக்கு மேல் இருக்கும் வளைவு சற்றுப் பயங்கரமானது. கவனமில்லாமல் வந்துவிட்டால் வாகனங்கள் பிள்ளையார் கோயிலுக்குக் கீழே, பள்ளத்திற் தலைகுப்புறத் தோப்புக்கரணம் போட்டு நிற்கவேண்டியதுதான். இப்படி வருடத்தில் நாலோ ஐந்தோ நடந்து தோட்டத்து வாண்டுகளுக்குக் காட்சி கொடுக்கத் தவறவில்லை!

முடக்கில் அமைந்திருக்கும் பாலம்தான் இப்படியென்றால் பாலத்திற்கடியில் ஓடும் சிற்றாறு எப்பொழுதுமே வஞ்சகம் செய்தது கிடையாது. நிதானமாக நடந்துகொள்ளும். வருடம் முழுவதும் அதன் கருணையினால்தான் தோட்டத்தில் நீர் விநியோகம் சீராக நடந்து கொண்டிருக்கின்றது.

கோடையின் கொடுமை அகோரமாகத் தாண்டவமாடினாலும் கண்ணாடிபோன்று தெளிந்த நீர் ஸ்படிகமாக ஓடிக்கொண்டிருக்கும். வேலை முடிந்து வீடு திரும்பும் ஆயாசத்தில் அப்படியே இரண்டு தடவை உடம்பை நனைத்துவிட்டால் போதும் உடம்பில் புதுத்தெம்பு புகுந்துவிடும். களைப்பு ...ம் .... போன இடம் தெரியாது.

தோட்டத்தில் வளர்க்கப்படும் ஆடுமாடுகள் மட்டுமல்ல பால் ஸ்டோரே இதன் தயவில்தான் குளிர்ந்துபோய் ஓடிக்கொண்டிருக்கிறது.

கொட்டும் மழையா? நாலு டிவிசன் அழுக்கையும் சுமந்துகொண்டுபோய் பள்ளத்தில் ஆற்றில் சேர்த்துவிட்டு இரண்டே நாட்களில் கட்டுக்கடங்கி நிதானமாக ஓடிக்கொண்டிருக்கும்.

அப்படிப்பட்ட குணம் கொண்டதுதான். ஆனால் இம்முறை பெய்த பெருமழைப் போக்கை மாற்றிவிட்டது. மேற்கிலிருந்து வந்த வெள்ளம் கரை புரண்டு ... ஓடி... பெருக்கெடுக்க மண் சரிந்து ... அப்படியே வாரிச்சுருட்டி... விடியற்காலையில் பார்த்தபோது றோட்டுப் பிள்ளையார் கோயில் முடக்குப் பாலத்தைக் காணவில்லை. இரண்டு கரைகளிலும் ஒன்றையொன்று பார்த்தபடி பஸ்கள் நின்றுவிட்டன. கிராமசபை உறுப்பினர் எம்.பி. வீட்டிற்கு ஓடினார். எம்.பி. வீட்டில் இருந்து டெலிபோன் ஓடியது!

மறுநாளே பாதை புனரமைப்பு வேலை ஆரம்பமாகியது. மண் நிரப்ப, கல் உடைக்க இப்படிப் பல வேலைகள் சுறுசுறுப்பாக நடந்தன.

இராமையா கிழவன் தலைப்பாகையைக் கட்டிக்கொண்டு அங்கேபோய் நின்றான். ஓவசியர் ஆட்களை வாட்டசாட்டம் பார்த்துப்

பொறுக்கி எடுத்தார். " இந்த றோட்டெல்லாம் இராஜா கூனி அடித்து நான் வெட்டியதுதானுங்க". இராமையா கிழவன் முதலில் திறமையைக்கூறி நின்றான். " காலையில் வெறும் சாயத் தண்ணிதாங்க... பின்னர் வறுமையைக்கூறிக் கெஞ்சி நின்றான். ஹூம்... வேலை கிடைக்கவில்லை.

நான்கு நாட்களின் பின்னர் பொறுக்கி எடுத்த ஆட்களுக்கே மண்விழுந்தது. வேலை செய்யாது விட்டாலும் சம்பளப்பட்டியலில் இடம்பிடிக்க நற்சாட்சிக் கடிதங்களுடன் வந்தவர்களைச் சேர்க்க இவர்களில் பத்துப்பேரை நீக்கவேண்டியதாயிற்று.

இடுப்பில் கம்பாயத்துடன் மண்சுமந்து பாவையர் 'சுப்பவை சருக்கு' அழகு காட்ட... செக்ரோலில் பேர் விழுந்தது.

தோட்டத்தில் ஒய்வு மாதம். மழை வேறு!

இரவு பகலாக சிங்கு... சிங்குன்னு ஓடிக்கொண்டிருக்கும் றப்பர் ஸ்டோர் வேறு அடங்கிப்போய்க் கிடக்கின்றது. மழை விட்டபாடாக இல்லை. ஒட்டுப் பாலாக நீண்டுகொண்டிருக்கின்றது.

"என்ன இந்த வருஷம் இப்படி மழை, வானம் பொத்துக்கிட்ட மாதிரி".

"ஆமா ஒரு ஊரு அழிஞ்சாத்தான் நிற்கும்போல! மாரிமுத்துவும் இராமையாவும் நேற்று ஒத்த கடையிலிருந்து திரும்பும்போது கதைத்துக்கொண்டு வந்தார்கள்.

இருவரும் வயது ஐம்பத்தி ஐந்தைத் தாண்டிவிட்டபடியால் பென்சன் எடுத்துவிட்டார்கள். இராமையாவுக்கு உறவு என்று சொல்லிக்கொள்ள மனைவி சிகப்பி மட்டுமே இருக்கிறாள். ஆனால் மாரிமுத்துவிற்கு அப்படி அல்ல! மகள் என்றும் மருமகன் என்றும் பேரன் பேத்தி என்றும் பலர் உள்ளனர். ஆனால் கவனிப்பதுதான் கிடையாது.

இன்னமும் இவன் கையைப் பார்ப்பவர்களும் உண்டு. வருகிற பென்சன் கால்வயிற்றுக் கஞ்சிக்கே போதாது! எனவே கிடைத்த சில்லறை வேலைகளைச் செய்து காலத்தை ஓட்டிவருகின்றனர்.

தோட்டத்தில் பதிவு பெற்றவர்களுக்கே வேலையில்லை. புதிதாக வேறு ஐம்பது ஏக்கர் காணி இல்லாத கிராமத்தவர்களுக்கு பிரித்து வழங்கப் போகின்றார்கள் என்ற செய்தி உலாவி வயிற்றில் புளியைக் கரைத்தது.

வேலை இருந்தாலும் இல்லாவிட்டாலும் வயிறு இருக்கின்றதே!

இராமையாவும் மாரிமுத்துவும் நாலு மைல்கள் நடந்து டவுனுக்குப் போனார்கள். புதிதாக மில்கட்டும் இடத்திற்குப்போய் எடுபிடிவேலை கிடைக்குமா என்று கேட்டுப் பார்த்தார்கள். முதலாளி கண் டாக்டரைப் பார்க்கச் சொன்னார். கண்ராக்டர் கையை விரித்தார்.

பவுடர் பூச்சுக் கலையாத பெண்கள் அலுங்காமல், குலுங்காமல் வேலை செய்தனர். இருவரும் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

வரும்போது மழைவேறு பிடித்துக்கொண்டது. தெப்பமாக நனைந்து விட்டார்கள்.

"என்னண்ணே காலையில் கழுவிவிட்ட மாதிரி வானம் கெடந்திச்சி. இப்ப... சனியன் இப்படி ஒரேயடியாக பெய்யுது".

"சுள்ளுன்னு வெயில் அடிக்கிற நேரமே நினைச்சேன். எப்பதான் மழைவிடப் போவுது...?"

குன்றுகளையும் மேடுகளையும் மறைத்து நிரை நிரையாக அணிவகுத்து வளர்ந்து நிற்கும் பால் மரக் காட்டினூடே அமைந்த ஒற்றையடிப்பாதை வழியாக வீடு திரும்பினர்.

" ஈன ஜென்மம் எடுத்தேனே ஐயனே என்னைய ஏன் படைத்தாய்" நாட்டில் லப்பா வீட்டில் போட்ட 'கள்' தலைக்கேற தட்டுத்தடுமாறியபடி பிச்சைக் கிழவன் பாடிக் கொண்டு போவதைக் கண்டு இருளில் பேச்சை அடக்கினர்.

காலைப்பால் அந்தி வெட்டு என்று நாளொன்றுக்கு இரண்டு பேர் போட்ட தோட்டம்தான் இன்று இப்படியாகிவிட்டது. மழைவேறு கொட்டிக்கொண்டு சோதனைப்படுத்துகின்றது.

அன்று மாலை தலைவர் வீட்டில் ஒரு கூட்டம் நடந்தது. குடைகள் திண்ணைவரை உள்ளே போய்விட தலைபொத்த மட்டைகளும் றப்பர் சீட்டுகளும் வெளியே திண்ணைச் சுவற்றில் சாய்ந்து அழுதுகொண்டிருக்க, தலைவர் ஆலோசனைக்கூட்டத்தை நடத்திக்கொண்டிருந்தார். " இதுக்குத்தான் மாச சம்பளம் வேணும்னு கேட்டுப் போராடினோம். காட்டிக்கொடுத்துப் புட்டானுக..." தொண்டர் தலைவன் முத்து ஆத்திரமாகக் கூறினான்.

"இப்ப அதெல்லாம் பேசிப் பயனில்லை. நடக்கவேண்டிய காரியத்தைப் பாருங்க" சிவனு காரியத்தில் கண்ணாக இருந்தான். எல்லோரும் ஆமாம் போட்டனர்.

கூட்டத்தில் எடுத்த முடிவோடு தலைவர் கணக்குப்புள்ளையைச் சந்தித்தார். அந்த வருட – எஸ்டிமேட்டில் புத்தாகச் சில்லறை வேலை ஒன்றும் இல்லாதபோதும் றப்பர் மரங்களுக்கிடையில் கொக்கோ நட, வாரத்தில் பெண்களுக்கு இரண்டு நாள் ஆண்களுக்கு மூன்று நாள் கொடுப்பது என்று முடிவாகியது.

இந்த முடிவைத் தலைவர் பெருமையோடு கூறினார். மாத இறுதியில் மாவட்டக் கமிட்டித் தேர்தல்வேறு நடைபெறவிருக்கின்றது. தலைவர்

அதற்கு நிற்கிறார். எனவேதான் விட்டுக்கொடுக்காமல் பேசிவந்தார்.

"எங்களுக்கு ஒண்ணும் இல்லியா...?" இராமையா, மாரிமுத்து இன்னும் பென்சன் எடுத்தவர்கள் கேட்டார்கள்.

உங்களுக்கு வழி பொறந்திருக்கு. நம்ம எட்டாம் நம்பர் பழைய மரம் இருக்கல்லியா; அதை அடுப்புக்கு வெட்டப்போறாங்களாம். யார் விறகிற்கு ஐம்பது சதம் கைகாசுக்கு வெட்டுவீங்களாம்..."

"ஐயோ இது அநியாயம்! முன்பு யாருக்கு ஒரு ரூபாய்க்கு வெட்ட முடியாதுன்ன மரமாச்சே... அதுவும் வரக்கட்டு... அங்கு லொறி கறுத்த வண்டிகூடப் போக முடியாதே!" முத்து மீண்டும் நியாயம் பேசினான்.

"இந்தா முத்து தொரை சொன்னதைத்தான் நான் வந்து சொல்றேன்... எனக்குமட்டும் தெரியாதா?.... தலைவர் தன் நியாயத்தைக் கூறினார்.

"தலைவர் சொல்றது நியாயம்"– யாரோ கூட்டத்தில் ஒத்துப்பாடினார்.

"மண்ணாங்கட்டி ஞாயமம். மொக்குப்பத்தி முடிச்சி விழுந்துபோன நார்மரம்... இந்த கிழடுகளால ஒரு மரத்தைக்கூடத் துண்டுபோட முடியுமா? இன்னொரு இளைஞன் எடுத்துக்கூறினான்.

"இந்தாப்பா... விருப்பம்னா செய்ய வேண்டியதுதான். இதுல ஒன்னும் வற்புறுத்தல் கிடையாது". தலைவர் ஒருபடி மேலே போனார்.

ஏன் இந்த கல்லுகட்ட, மண்பால் எடுக்க இப்டி ஏதாவது சில்லறை வேலை கேட்டுப்பாக்கிறதுதானே" இளைஞன் விடவில்லை.

"சரி... சரி... எங்க தலைவிதி இப்ப... நீங்க ஏன் சண்டை போடுறீங்க..." மாரிமுத்துக் கிழவன்தான் அமைதிப்படுத்தினான்.

கிழவர்களுக்கு ஏதோ வேலை கிடைத்த திருப்தி. இதுவும் நழுவிப் போய் விட்டில் என்ன செய்வது?

"எங்களால் முடியாது. நாளொன்றுக்கு ரெண்டு இளந்தாரி சேர்ந்தாலும் ஐஞ்சி ரூபாவுக்கு வெறகுவெட்ட முடியாது". இளைஞர்கள் பின்வாங்கி விட்டனர். வேறு வேலை கிடைக்கும் என்ற தெம்பு அவர்களுக்கு!

நாலு டிவிசனுக்கும் கடைசித் தொங்கலில் அமைந்திருப்பதுதான் எட்டாம் நம்பர் பழையமலை. கல்லுக்காடு இடைஇடையே பெரிய பெரிய பழைய மரங்கள். எத்தனையோ மலைகளில் பழைய மரங்கள் அழிக்கட்டுப் புல்லுமலைகள் கொழுத்தப்பட்டு, புதிய ஒட்டுமரங்களை உண்டாக்கி விட்டார்கள். ஆனால் இது என்றும் பழைய மலையாகவே உள்ளது!

புதிதாக வெட்டுப்பழகும் அத்தனைபேரும் இங்கேதான்! பெரிய மரங்கள். எட்டிய மட்டும் 'கங்கு வெட்டில்' பட்டை சீவிப் பால் உறியப்பட்ட மரங்கள்! இன்று பட்டையே இல்லாது நெஞ்சைக் காட்டிக்கொண்டிருக்கின்றன. விலா எலும்புகளின் தோற்றம்.

தன் பாலை வாளி வாளியாக வழங்கிவிட்டு இன்று ஸ்டோர் அடுப்பு விறகிற்குத் தயாராக நின்று கண்ணீர் வடிக்கும் பால்மரக்காடு அது.

ஆம் எட்டாம் நம்பர் பழைய மலை! இராமையாக் கிழவன் நீண்ட நாட்களாக அங்கே பால் வெட்டியுள்ளான். தனக்குத் தொழில் கொடுக்கும் ஒவ்வொரு மரங்களையும் தனது இதயத்தில் இருத்தி நேசித்துள்ளான்.

சிலுசிலுவென்றிருக்கும் அந்த எட்டாம் நம்பர் மலையில் அவன் சிகப்பியை சந்தித்த நாள்கள் இப்பொழுதும் நெஞ்சில் பாலாக ஊறுகின்றதே.

சிரட்டை நிறைந்து வழியும் பாலைச் சேகரிக்கும் பொழுது அவை வெறும் மரங்கள் மட்டுமல்ல!! அவனை வளர்க்கும் தாய்!! அவனை வாழ்விக்கும் தெய்வம். இந்த உணர்வு இன்றும் அவனை விட்டு நீங்கவில்லை!

இப்பொழுது அவைகளை வெட்டிச்சாய்த்து அறுத்து அறுத்து நெஞ்சுமுட்டும் ஏற்றத்தில் உருட்டித் தள்ளிக்கொண்டு வந்து அடுக்க வேண்டும்.

ஒரு யார் விறகிற்கு கூலி ஐம்பது சதம். அதற்காக அறுக்கவேண்டும்.

சிகப்பி எழுந்து தேநீர் தயாரித்துக் கொடுக்கிறாள். இராமையாக் கிழவன் படுக்கையில் அமர்ந்தபடியே தேநீரைப் பருகிறான். பின்னர் சிறிதுநேரம் அடுப்படியில் இருந்து குளிர் காய்ந்துகொண்டிருக்கிறான்.

"ராமையா அண்ணண் புறப்படலியா...?" அழைத்தபடியே வந்தான் மாரிமுத்துக்கிழவன். தோளில் கோடரி இருந்தது.

" இதோ வந்திட்டேன் மாரி அரம் வச்சிருக்கியா?"

ஹூம், கிடையாது. தண்ணிக்கல்லு இருக்கு... தீட்டிக்குவோம்".

வானம் பிரகாசமாக இல்லை. மழைக்குறி.

முதுமை அவர்கள் உடம்பில் கனிந்திருந்த போதும் உழைப்பு என்ற உறுதி. நம்பிக்கையைக் கொலுவேற்ற தீரத்துடன் அவர்கள் நடந்துகொண்டிருக்கின்றனர். மழை பொசிந்துகொண்டு வந்தது.

இலையை உதிர்த்துக் குச்சி குச்சியாக நீட்டிக்கொண்டு இளமைபோய் முதுமையில் சோர்ந்து நிற்கும் தங்களை வாழ்வித்த அந்தப் பால் மரக்காட்டினை அழிக்க அவர்களுக்கு மனம் இல்லை. இருந்தாலும் வேறுவழி...?

மரங்களுக்கு மட்டுமா அந்நிலை... இத்தனை காலமும் உழைத்து.... உழைத்து இன்று உடலில் வலுவற்ற நிலையிலும்... தங்கள் நிலைமை அவர்களுக்கு நன்கு புரிந்தது.

அவர்கள் வேகமாக நடக்கின்றனர்.

**(சமர்)**



# கறிவேப்பிலைகள்

இராமையா கிழவனுக்கு நித்திரை வரவில்லை. புரண்டு படுத்தான். கிழவனுக்கு உடம்பெல்லாம் அடித்தது போன்ற வலி. மூட்டுக்கள் கழன்றுவிட்டதைப் போன்று கால்கள் கடுத்தன. இடது முழங்கலாலுக்குக் கீழே கொப்புளமாகத்தோன்றி, பின்னர் வெடித்ததுத் தற்பொழுது ரூபாய்நாணயங்களின் அளவில் நாற்புறமும் படர்ந்திருக்கும் புண்கள் 'விண்விண்ணென்று' தெறிக்கின்றது.

இன்று வெள்ளிக்கிழமை. எல்லாக்கடைகளிலுமே சதம் ஒன்று பிச்சைபோடுவார்கள். மொத்தமாக ஒரு நாலைந்து ரூபாய் தேறும். இதைக் கொண்டு அடுத்துக் கம்மியாகும் இரண்டு மூன்று நாள்களுக்குமாக இரண்டு உயிர்களைக் கூட்டில் தங்கவைப்பதற்கு இரைபோட்டுவிடலாம். எனவேதான் மந்தண்டாவளைச் சந்தியிலிருந்து அரசாங்க வைத்தியசாலை வரை இரண்டுகல் தொலைவில் நீண்டுகிடக்கும் கடைகளில் ஒன்றுவிடாமல் ஏறிஇறங்கினான்.

ஒரு காலத்தில் பெருநாள் சாமான்கள் என்றும், புடவைகள் என்றும் மிடுக்காக இக்கடைகளில் ஏறிஇறங்கியவன்தான். ஆனால் இன்று

....அது ஒருகாலம்...

வெள்ளிக்கிழமையைத் தவிர பிறநாள்களில் கடைகள் பக்கம் தலைகாட்டவே முடியாது. வீடுகளில் கிடைப்பதுதான். அதுவும் நிச்சியமாகச் சொல்லமுடியாது. பாதசாரிகள் மிகுந்த கச்சேரி ரோட்டிற்குச் சென்றாலும் ஊனங்களை முதலாகவைத்துப் பிழைத்துக் கொண்டிருக்கும் ஆயுள் பிச்சைக்காரர்கள் இவர்கள் போட்டிக்கு வந்துவிட்டதை உணர்ந்து ஏசத்தொடங்கி விடுவார்கள்.

பகல் யாரோ ஒரு புண்ணியவதி மீன்குழம்புடன் சோறு போட்டாள். அதை அப்படியே கோப்பையில் ஏந்திக்கிழவிக்கு வைத்துக்கொண்டு தகரப்பேணியில் 'வெறும் காட்ட' ஒன்றினை வாங்கிக் கால் றாத்தல் பாணை அதில் தொட்டு நனைத்துச் சாப்பிட்டான். கிழவன் கொடுத்த சோற்றைக் கிழவி மிகவும் ருசித்துச் சாப்பிட்டாள். இடையில் கிழவனுக்கும் இரண்டு கவளம்கொடுத்தாள். சோற்றைச் சாப்பிடும்போது கிழவி கண்கலங்கி விட்டாள். அன்றொருநாள் இரண்டுநாட்கள் தொடர்ந்துவந்த பட்டினி விரதத்தை முடித்துக்கொள்ளும் முகமாக ஹோட்டலுக்கு முன்னாலுள்ள எச்சில் தொட்டில் இலையில் ஒட்டிக்கொண்டிருக்கும் பொருக்குகளைச் சாப்பிடவேண்டி வந்துவிட்டது. அதுவும் சரிவர முடியவில்லை. நாகர்கவான்கள் கலைத்துவிட்டார்கள். சாப்பிடும் பொழுது பழைய நினைவுகளில் கண்கலங்கிய கிழவியைக் கிழவன் தேற்றினான்.

பாதையோர வாழ்வு. பாதைக்கு வந்துவிட்ட வாழ்வு வீதிக்கு தள்ளிவிடப்பட்ட முதியோர்கள் சமுதாயத்தில் எத்தனை மேடுபள்ளங்கள் – வளைவு நெழிவுகள் – உயர்வு தாழ்வுகள் உண்டோ, அத்தனையும் சூக்குமமாகக் காட்டும் காட்சியாக அவ்வீதி காட்சியளித்தது.

பகலில் எந்நேரமும் ஆரவாரம் மிகுந்தே காணப்படும். லொறிகளும் மாட்டு வண்டிகளும் இன்னும் தள்ளு வண்டிகளும் பொருட்களை ஏற்றுவதிலும், இறக்குவதிலும் மும்முரமாக ஈடுபட்டிருக்கும்.

'இந்தக் கடையிலா இவ்வளவு பொருட்களும் அடைந்து கிடந்தன' என்று யோசித்து மூக்கின்மேல் விரலை வைக்கும்படியாகிவிடும். கொழும்பு மார்க்கட் நிலைவரம் பார்த்து 'லோட் அடித்து' நிற்கும் லொறிகள். கடைக்குக்கடை இதே கதைதான். மிளகு என்றால் மிளகு. இலவம் பஞ்சு என்றால் பஞ்சு.... கொக்கோ... என்றால் கொக்கோதான். இத்தனைக்கும் சாதுவாகத் தோன்றும் கடையைப் பார்க்கும் போது பூதம் அடைபட்டிருந்த புட்டிதான் நினைவிற்கு வரும்.

தலைக்கு அணையாக வைத்திருந்த குட்டிச் சாக்கினுள் அடைபட்டுக்கிடந்த தகரப்பேணி தலையை அழுத்துகின்றது. ஒருவாறு சரித்து வைத்துக் கொண்டான். இப்பொழுது தகரப்பேணி அகப்பட்டு நெளிகின்றது.

இரவு முதிர்ந்துவிட்ட போதிலும் நகரம் ஒளிவெள்ளத்தில் மிதக்கின்றது. வீதியின் அருகில் நிற்கும் மரங்களின் காகங்கள் கொட்ட.....கொட்ட விழித்திருக்கின்றன.... மாநகர சபை விளக்குகளுடன் கொஞ்சி விளையாடிய ஈசல்கள் சிறகிழந்து அப்பிக் கிடக்கின்றன. அழகுமலைப் பக்கத்திலிருந்து வேட்கையுடன் பறந்து வந்த வெளவால் ஒன்று மின்சாரக்கம்பியில் மோதி நிரந்தமாகத் தொங்கிக் கொள்ளுகிறது.

தனக்கு நேர் கிழக்காக "பேமண்டின்" மறுகோடியில் உறங்கும் கிழவியைப் பார்த்தான். கிழவி அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கிறாள். கிழவியை நினைக்கும் போது அவனுக்கு துக்கம் மேலிடுகின்றது. கிழவிக்கு ஒரே 'ஊர் பைத்தியம். அவளுடைய உறவினர்கள் அங்கேதான் இருக்கின்றார்கள். கிழவியின் பேச்சைக் கேட்டு உடலில் தெம்பு இருக்கும் போதே ஊருக்கு போயிருந்தால் தனக்கு இக்கதி ஏற்பட்டிருக்குமா என்று நினைத்து நினைத்து கவலைப்பட்டான்.

கிழவியை கல்யாணம் முடித்த தினம் அவனுக்கு நினைவுக்கு வருகின்றது. மாரியம்மன் கோவிலிருந்து 'தப்புத்துமுறுடன் வீடுவரை......' ஜே...ஜே என்று ஊர்வலமாக அழைத்துச் சென்றார்கள். காமாட்சி என்றால் முழுத் தோட்டத்திலுமே பிரசித்தம், கொழுந்து எடுப்பதில் மகாகெட்டிக்காரி. இவனும் வேலையில் இப்படித்தான். தவறணை இராமையா என்றால் ஒரு தனி மதிப்புத்தான். பிள்ளையை வளர்ப்பதுபோல் தேயிலைக் கண்டுகளை வளர்த்தான். 'பூமா தேவிக்கு மட்டும் வஞ்சகம் செய்யக்கூடாது' என்ற நன்றாக பாடுபட்டான்.

இப்பொழுது தோட்டத்து வாழ்க்கையை நினைக்கும் போது பெரும் ஏக்கம் ஏற்படுகின்றது. இவ்வாறு துன்பப்படவேண்டுமென்று அவன் கனவிலும் நினைக்கவில்லை. தோட்டத்தில் சிறுவனாக இருந்தபொழுது 'செட்டு' சேர்த்துக்கொண்டு ஒன்றாகப் படுத்துறங்குவது, மிலாறு பொறுக்கச்செல்வது, மலைக்குத் தேநீர்கொண்டு செல்வது, போன்றவைகளெல்லாம் நினைக்கும் தோறும் இனிக்கும் நினைவுகளாகும்.

அதற்குப் பின்னரும் அவனுடைய வாழ்க்கை சந்தோஷமானதாகத்தான் இருந்தது. காமாட்சியைக் கல்யாணம் முடித்து தனிக்குடித்தனம் வந்தான். தோட்டத்தில் உள்ளவர்களோடு வருடம்தோறும் காமாட்சி சகிதம் கதிர்காமம் சென்றுவருவான். மாசிமகத்தில் அம்மனுக்குத் தேர் எடுப்பார்கள். கார்த்திகை கழிந்ததும் காமன்கூத்து ஆரம்பமாகிவிடும். காமன் தகனம் என்றால், தோட்டமே விழாக்கோலம் பூண்டுவிடும். 'அறம் காத்த வாணியே குலம்காத்த வாணியே' என்ற சரஸ்வதி துதியுடன் இரவு எட்டுமணிக்கு ஆரம்பமாகும். சின்னையா வாத்தியாரின் வள்ளித் திருமண நாடகம் முடிந்து 'ரகுபதி ராகவ' கீதம் ஆர்மோனியத்தில் இசைக்கும் போது, விடிய கோழி கூவி விடும்.

மேட்டு லயத்துப் பெண்கள் துள்ளுமாவுடன் குலவை கொட்டியபடி புறப்பட, ஒத்த ரோட்டு வரையில் ஒத்ததப்புடன் செந்தூதன் ஓலைகொண்டு பந்தங்கள் எரிய ஆடிவந்து காமன் பொட்டலைச்

சேரும்போது பொழுது "பளார்" என்று விடிந்துவிடும். முழுநாளும் ஒரே குதூகலம்தான். இன்னும் கரகம் பாலிப்பு, பங்குனி உத்தரம் என்று எத்தனை விழாக்கள் சந்தோஷத்திற்குக் குறைவில்லை.

தீபாவளி, சித்திரை போன்ற பெருநாள்கள் வந்தால் டவுனிலிருந்து கார் ஒன்றும் குடும்பம் ஒன்றமாகத்தான் திரும்புவார்கள். இப்படியே இராமையா கிழவனின் வாழ்க்கையில் நாற்பது வருடங்கள் இன்பமாக ஓடியபின்னர் அது நடந்தது. தோட்டத்தை நிர்வகித்து வந்த கம்பனி நட்டம் என்று காரணம்காட்டி பல பிரிவுகளாக தோட்டத்தை பிரித்தது. புது நிர்வாகங்கள் வந்தன. புது ஆபிஸ்கள், முதலாளிகள், உத்தியோகஸ்தர்கள் வந்தார்கள். பிரிந்த தோட்டங்களில் வெவ்வேறு சங்கங்கள் தோன்றின. தண்ணிச் சண்டைகள் முளைத்துத் தகரங்கள் கல்லடிபட்டன. இப்படிப் பல பிரச்சினைகள் புதிதாக முளைத்தன.

இவ்வேளையில்தான் பிரஜா உரிமை ஒப்பந்தம் மீண்டும் நிறைவேற்றப்பட்டு மனுக்கள் கோரப்பட்டன. கிழவி... ஊருக்குப் போவோம்" என நச்சரித்தாள். ஆனால், ரெங்கையா ஏதோ நப்பாசையால் மறுத்துவிட்டான். இலங்கைப் பிரஜா உரிமை கோரி அவன் மனுப்போட்டான். காணிச் சீர்திருத்தச் சட்டம் தோட்ட மக்கள் வாழ்க்கையில் பிரளயத்தையே ஏற்படுத்தி விட்டது.

பழைய கௌரவம் போய் புதிய கிராமியத் தோட்டச் சூழலில் ஒருவாறு காலம் ஓடிக்கொண்டிருக்கையில், தொடர்ந்துவந்த துன்பங்களுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போன்று தோட்டம், காணியில்லாதவர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டு தோட்டத்தில் வேலை செய்த சகலரும் வேலையிழந்தார்கள்.

முதலாளி .... புத்திசாலி. எப்படியெல்லாமோ... காரியம் பார்த்து லயத்தைக்கூட விற்றுவிட்டார். கூப்பன் அரிசி தொட்டு உண்டாக்கிய காய்கறிச் சேனைவரை சகலதும் பறிபோயிற்று. நாட்டான் தலையில் பழியைப்போட்டுவிட்டு கோழிக்கூடுகள் மாயமாய் மறைந்தன. பக்கத்துத் தோட்டங்களிலிருந்து கிடைத்த ஆதாரமற்ற செய்திகள்கூடக் 'குமர்கள் வைத்திருப்பவர்களை குலைநடுங்கச் செய்தன'. சில பகுதிகளிலிருந்து வந்த செய்திகள் மகிழவைத்தன.

தெம்புள்ள குடும்பங்கள் வவுனியாவிற்கு நடந்தன. பிற தோட்டங்களிலும் ' உள்ளவர்களுக்கே வேலையில்லையென்று' கையை லிரித்துவிட்டார்கள்.

தங்க நகைகளில் தொடங்கி செம்பு ... கோடரி , கத்தி என்பனவெல்லாம்

ஒரு கொத்து அரிசிக்காக விலைபோயின... உணவுப்பஞ்சத்தில் மரவள்ளி, வற்றாளை என்று தொடங்கி அரிசியையே மாதக்கணக்கில் காணாது குறுனை, தவிடு, கோரக்கிழங்கு , அமலப்புல் என்பவற்றில் போய்நின்றது.

பசி தாங்காது காட்டு மரவள்ளிக்கிழங்கைத் தின்று யார் யார் யாரோ இறந்துபோனார்கள்.

லயத்துத் தகரங்களையும் இரும்புக் கேடர்களையும் ஒரு கோஷ்டி சண்டித்தனம் செய்து கழற்றிச் சென்றது. ஆயா என்றும் 'சேவண்ட் கேர்ள்' என்றும் பட்டினத்து பங்களாக்களில் வேலை செய்து கொண்டிருந்தவர்கள் கூட திருப்பி அனுப்பப்பட்டுக்கொண்டிருந்தார்கள்.

இனியும் தாக்குப் பிடிக்க முடியாது என்பதை உணர்ந்தவர்கள் டவுனுக்கு நடக்கத் எதாடங்கிவிட்டார்கள். எந்த நகரத்திற்கு முன்பு பெருமையுடன் வந்து போனார்களோ அதே நகரில் இன்று பிச்சை எடுக்கிறார்கள்.

ஒருநாள் ஒரு கோஷ்டி பலரைப் பிடித்துத் தெரு நாய்களை வண்டியில் பலாத்காரமாக அடைப்பதுபோன்று அடைத்துச் சென்றது. மூன்றாம் நாள் களைத்து வாடிச்சோர்ந்து திரும்பிவந்த சிலர், அவர்கள் தங்களை இனம்தெரியாத காட்டுப்பகுதியில் இறக்கி விரட்டி, இம்சைப்படுத்தியதாகக் கூறி அழுதார்கள்.

கிழவனுக்கு நித்திரை வரவில்லை. வெற்றிலைப்பையைத் துழாவி ஒரு புகையிலைத் தட்டையை எடுத்துச் சப்பினான். அந்த வீதியின் பேமண்டில் அநேகர் அலங்கோலமாகப்படுத்து உறங்கினார்கள். தெருநாய்கள் கூடவே படுத்துக்கிடக்கின்றன.

ஐயோ... கிழவனைத் தனிக்க வச்சிட்டு என்னையக் கொண்டு போறானுக...' கிழவி தூக்கத்தில் வாய்புலம்புகிறாள். கிழவிக்கு கடந்த பத்து நாட்களுக்கு மேலாகக் கடுமையான வருத்தம். இன்னநோய் என்றில்லாத துன்பத்தில் வாடுகிறாள். உடல் ஈர்க்கிலாக இளைத்துப்போயிருக்கின்றது.

இன்பத்திலும் துன்பத்திலும் இணைபிரியாத அவளை நினைக்கும்போது கிழவனுக்குப் பெருமையாக இருக்கின்றது. மெதுவாக நகர்ந்து அவள் முகத்தைத் தடவிப்பார்த்தான். புஸ்... புஸ்... என்று மூச்சு ... இழுத்து வந்தது. விலகிக் கிடந்த சேலைத் தலைப்பைச் சரியாக இழுத்துவிட்டான்.

வாழ்க்கையின் சுமையேபோன்று இணைந்து தொடரும் பெட்டிகளை இழுத்துவந்த ஆசுவாசத்தில் ஸ்டேசன் வந்து சேர்ந்த குட்ஸ் ரெயின் மேல்மூச்சு, கீழ்மூச்சு வாங்கி பின் .... ஊ.... என்று அவலக்குரல் எழுப்பியபடியே ஓடுவது நிசப்தமான இரவுவேளையில் தெளிவாகக் கேட்கிறது.

இவர்களுக்கு முன்னதாக கடைக்காரன் எழுந்துவிட்டால் மாடியிலிருந்து நீரைக்கொட்டி இலவசமாக ஸ்நானம் செய்து வைப்பார்கள். தெருவின் மேற்கு மூலையில் சாக்கடைக்கு அருகில் படுத்திருக்கும் குடும்பம் குப்பையில் நெருப்புமூட்டிக் குளிர்காய்ந்து கொண்டிருக்கின்றது.

சிக்னல் கம்பங்கள்தரும் சமிக்ஞைகளைப் பொருட்படுத்தாது வாகனங்கள் பறக்கின்றன.

பொழுது விடிந்துவிட்டது. கிழவியை எழுப்பி 'சைவக்கடை'யில் சூடா ஒரு காட்ட வாங்கிக்கொடுத்துவிட்டு, 'இடத்தைக் காலி செய்து ஆலமரத்துப் பக்கம்போய் குந்துவோம்' என்று நினைத்தவன், 'ஏய் ... புள்ள... ஏய் ... காமு... எந்திரி... எந்திரி... நல்லா விடிஞ்சிரிச்சு' என்று அவளை எழுப்பினான். பதில் இல்லை.

பனிகொட்டி நனைந்திருக்கும் அவள் போர்த்திருந்த சேலையை விலக்கி , 'ஏய் ... காமு... காமு' என்றவன் முகத்தைத் தடவிக் கையைப் பிடித்துப் பார்த்தான்.

கிழவனுக்குக் குடுமியைப் பிய்த்துக்கொண்டு ஓவென்று பெரிதாக குரல் எடுத்துக் கத்தவேண்டும் போலிருந்தது. அவளுடைய முகம் வீங்கி உடம்பு விறைத்துப்போயிருந்தது. இலையான்கள் குந்திக்குந்தி மொய்த்துப் பறந்தன.

கடை திறந்தவுடன் விடயத்தை அறிந்த முதலாளி, ருத்ரதாண்டவத்தில் நின்றார். ' ச்... சீ...' தொல்லையாகப் போய்விட்டது. சனியன்களைப் படுக்கவிடுறதால வாற தொல்லைகள் இதெல்லாம் .... இருக்கட்டும்.... இருக்கட்டும்... இதுகளுக்கு ஒரு நல்ல முடிவெடுக்கிறன்...' ஆத்திரத்தில் ஏதேதோ பொரிந்து தள்ளினார். கிழவனுக்கு முதலாளியின் முகத்தைப் பார்க்கப் பயமாக இருக்கின்றது.

முனிசிபல் லொறி வந்து பிணத்தை ஏற்றிச்சென்றது. பிச்சைக்காரர் கூட்டத்தைச் சேர்ந்த சிலர் வந்து அனுதாபம் தெரிவித்தார்கள். இதனைத் தொடர்ந்து முனிசிபல் முனிபுங்கவர்களால் தொடுக்கப்பட்ட ஆக்கினைகள் முழுப் பிச்சைக்காரக் கூட்டத்தையுமே வெலவெலத்து நடுங்கச்செய்தன. கிழவன் நீண்டு வளர்ந்திருக்கும் தாடியை உருவியபடியே சற்று நேரம் அந்த பேமண்டில் உட்கார்ந்திருந்தான். இப்பொழுது அவன் சிந்திக்கவில்லை. தன்மீது துர்நெடி வீசுவது அவனுக்கே தெளிவாகப் புரிந்தது.

பின்னர் மெதுவாக எழுந்தான். ' கிழவி போய்விட்டாள் புண்ணியவதி. நான்தான் பாவி... பாவி இன்னும் உசிரோட இருக்கேன்' என்று அரற்றியபடியே கால்கள் போனபடியே நடந்தான். ' காண்குட்டைகளில் பாய்ந்து உயிரைப் போக்கிக்கொள்ளுவோமா? என்றுகூட நினைத்தான்.

அன்றிரவு வழமையாகப் படுக்கும் வீதிக்கு வரவில்லை. புகையிரத நிலையத்திற்கு முன்பாக அலரி மரத்தடியில் படுத்தான்.

நடுச்சாமத்திற்கு மேல் இருக்கும் டவுண் சுற்றிக்காவல் செய்யும் 'சிக்குரிட்டி காட்மார்கள்' இருவர் கிழவனை எழுப்பி ஏதோ தமாஷ் செய்துவிட்டு நடந்தார்கள். விடியவிடியப் பனி கொட்டியது. தூக்கமே வரவில்லை. சிவராத்திரிதான். இப்படிப் பொழுதைக் கழிப்பது அவனுக்கு ஒன்றும் புதிய அனுபவமல்ல...

மறுநாள் பகல் வழமையாக ஓடிவிட்டது. தூக்கம் கண்களைத் தாலாட்ட இரவு பேமண்டிற்குத் திரும்பினான். சற்றுத் தூரத்திலிருந்தே கடையை நோட்டம் விட்டு கடை பூட்டியாகிவிட்டது என்பதை உறுதிப்படுத்திக்கொண்டு மெதுவாக நடந்து சென்று குட்டிச் சாக்கை வைத்தான்.

கையில் ஏதோ அரும்புவது போன்ற உணர்வு ஏற்பட்டது. சடக்கென்று கையை எடுத்துக்கொண்டவன், மீண்டும் ஒரு அடி முன் தள்ளி சீமெந்து தரையை ஒரு குருடனைப் போல இரு கைகளாலும் தடவிப் பார்த்தான்.

அவனுக்கு பாதக் குறட்டில் ஏறியது போன்று இருந்தது. கடைக்கு வந்துபோகும் நடை பாதையைத் தவிர்த்து பிற்பகுதிகள் யாவும் சீமெந்துக்கு மேலே அரையங்குல உயரத்திற்கு கூரான முனைப்பான முக்கோண சிறிய கூளாங்கற்கள் பதிக்கப்பட்டிருந்தன. தரை இன்னமும் உலரவில்லை.

மெதுவாக எழுந்து வீதிக்கு வந்தான். நடுரோட்டில் நின்றபடியே வீதியின் இருபகுதிகளையும் வெறிக்க நோட்டம் விட்டான். ஒளி வெள்ளத்தில் மிதக்கும் அவ்வீதியில் தான் ஒரு குருடனாக்கப்பட்டுக் கிடப்பதாக அவனுக்குப்பட்டது. தெளிவான வானத்தில் விண்மீன்கள் பளபளத்துக்கொண்டிருக்கின்றன. எட்டிய உயரத்திற்கு சிறிய விளக்குகளால் கோலம்போட்டபடி மின்மினிகள் பறக்கின்றன.

இராமையா கிழவன் இருமியபடி தோளில் குட்டிச் சாக்குத் தொங்க நடந்து செல்லும்போது நடுங்கியபடியே ஊன்றிச் செல்லும் தடி எழுப்பும் ... டொக்... டொக் என்ற ஓசை தெளிவாகக் கேட்கின்றது.

அந்த நாலுமாடிக் கட்டிடத்தின் உச்சியில் கம்பனியின் பெயர்ப் பலகையை அலங்கரித்துக்கொண்டு 'டால் அடிக்கும் ஆட்டோமாடிக் பல்ப்புகள் ஒளிவர்ணங்களில் ஜாலம்காட்டி கண்களை கூசச்செய்கின்றன.

**(வீரகேசரி-1978)**



# வல்லமை தாராயோ...

**கொ**ழுந்து மடுவத்திலிருந்து லயத்திற்குச் செல்லும் குறுக்குப் பாதையில் இறங்கிக் கொண்டிருந்தான்; கறுப்பையா. அந்திக் கொழுந்தும் நிறுக்கப்பட்டு; சாக்குகளில் நிரப்பி; ஆள் தலையில் ஸ்டோருக்கு அனுப்பியாகிவிட்டது.

சற்று நேரத்தின் முன்னர், மாலை அங்காடியாக விளங்கிய கொழுந்து மடுவம் இப்பொழுது வெறிச்சோடிப் போய்க்கிடக்கிறது. வானம் அளந்து நிற்கும் மலைக்கு மேற்கே சூரியன் இறங்கிவிட, சில்லென்று வீசும் குளிர் காற்றும், வெண்தேவதை என பவனி வரும்பனிப்புகாரும் கண்ணாமூச்சு விளையாட இருளை துணைக்கழைக்கின்றன. கருமையைப் பூசிக்கொண்ட வானம் இரவை அரங்கேற்ற மெல்ல மெல்ல கவிந்து கொள்கின்றது.

கொழுந்து தராசு, தட்டு என்பனவற்றைத் தூக்கிச் செல்லும் "சாக்குக்காரன்' ஸ்டோருக்குச் செல்லும் பாதையில் வாகை ரோட்டு முடக்கில் மறைய, "இனிப் போகலாம்" என்று திருப்தியடைந்த கொழுந்து கணக்குப் பிள்ளையும், 'சுப்வைசரும்' தத்தம் பாதையில் விரைகின்றனர்.

"என்னங்க தலைவரே... அவசரமாய் போறாய் போல... இருக்கு" கறுப்பையா திரும்பிப் பார்த்தான். அந்த ஒற்றையடிப் பாதையில் சீரில்லாமல் கிடக்கும் கற்களில் காலைப்பதித்து தாவித்தாவி; வேகமாக இறங்கிக் கொண்டிருந்தான் சின்னையா கிழவன்.

"பெரியவரே பார்த்துவாங்க கல்லு மானனட்டியா கிடக்கு"

சின்னையாக் கிழவன் அதிக உயரமில்லை. தொக்கையான உடம்பு. சிவந்த நிறம், வேகமாக நடக்கும் கறுப்பையாவை பிடித்து விட வேண்டும் என்ற நினைப்பில் கிழவன் மலைச்சரிவில், தேயிலை இடுக்கில், அந்த செம்மண் பாதையில் தன் தளர்ந்து போன கால்களை ஊன்றி, ஊன்றி வரும்

போது கொழுந்துக் கம்பியில் நிறை சாக்கு ஆடி ஆடி இறங்குவதைப் போலிருந்தது.

"பெரியவரே அவசரமில்லை... ஆறுதலாக வாங்க" களைப்பில் மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க தவழ்ந்து கொண்டிருக்கும் கிழவனை நோக்கி மீண்டும் குரல் கொடுத்தான் கறுப்பையா.

"தம்பி தலைவரே இந்த கன்டக்டரை மாத்துறதுக்கு ஒரு வழி செய்யமாட்டீங்களா....? இரணியன் மாதிரி வந்து கொண்டுமைப் படுத்துறானே...." இரண்டு மைல் தொலைவிற்கு அப்பால் உள்ள தேயிலைத் தொழிற்சாலைக்கு கொழுந்துச் சாக்கைத் தூக்கிச் சுமந்து சேர்த்துவிட்டு, வந்த களைப்பில் பொரிந்து கொட்டினார் கிழவர்.

கிழவனின் முகத்தை உற்று நோக்கினான் கறுப்பையா. கழுத்து நரம்புகள் ஜிவ்வென புடைந்து நிற்க நரைத்த தலைமயிர்கள் படிந்து கிடக்கின்றன. தலைப்பாரத்தின் சுமை கிழவனின் உடலை மட்டுமன்றி உள்ளத்தையும் அழுத்திவிட்டிருந்தது. "பெரியவரே மாவட்ட பிரதிநிதி மூலமா நடவடிக்கை எடுத்துக்கிட்டுத்தான் இருக்கோம் கூடிய விரைவில் ஒரு நல்ல முடிவு கிடைக்குமின்று நினைக்றோம் ஒரு சின்ன விசயத்தை சாதிக்கிறதுன்னா கூட ரொம்ப கஸ்டமா இருக்கு கருங்கல்லுல நார்உரிக்கிற மாதிரி" கிழவனின் படபடப்பு தலைவருக்கு பெரும் அதிர்ச்சியினைத்தந்தது. எதற்கெடுத்தாலும் தெய்வத்தின் மீது பாரத்தைப் போடும் பெரியவரா இப்படி ஆத்திரப்பட்டு பேசுகிறார் என கறுப்பையா தலைவரை வியக்கவைத்து விட்டது.

பொறுமைக்கு ஓர் எல்லை உண்டு. தானே! முதுமையும், வறுமையும், கொடுமையும் வாட்ட, சின்னையா கிழவனின் மனசாட்சி "இந்த அநியாயமா என ஏங்கி" சத்தியாவேசம் கொண்டு துடிக்கின்றது.

"ஆமா தம்பி எப்படியோ சாதிச்சிருங்க... நெஞ்சிலே கொஞ்சம் கூட ஈவ இரக்கமில்லாத பயலுக கொழுந்து மடுவத்தில் இருந்து ஸ்டோருக்கு கொழுந்து சாக்கை தூக்கிக்கிட்டு போய் கொட்டிட்டு வர்றதுக்குள்ள உயிர் போயிறுது. "என்ன செய்யிறது பெரியவரே இது தொடர்பா நாங்களும் பல தடவை பேசிட்டோம் அவனுக ஒன்றுக்கும் மசியிறாப்புல இல்ல கொழுந்து மடுவத்தில இருந்து ஸ்டோருக்கு கொழுந்து சாக்கை தூக்கிட்டு வரமுடியாது மலைகளுக்கு லொறிய அனுப்பி ஏத்தி போங்கன்னு கேட்காத கொன்புரன்ஸ் இல்லை ஒவ்வொரு கூட்டத்திலேயும் அதுதான் வற்புறுத்திக்கிட்டு வாறோம். ஒவ்வொரு தடவையும் ஏதாவது ஒரு சாக்கு போக்கு கூறி தட்டிக் கழிச்சிக்கிட்டே வர்றானுக

"ஆமா தம்பி கிட்டத்து மலையினா பரவாயில்லை. இப்ப கொழுந்து மடுவத்திலிருந்து ரெண்டு மையில் தூரம் ஸ்டோருக்கு கொழுந்து தூக்கிட்டு நடக்க வேண்டியிருக்கு. இனி போய் இந்த தண்ணி இல்லாத காலத்தில சமையலை தொடங்கிறக்குள்ள இரவு மணி ஏழாகிறது கண்ணு சரியா

தெரியாத இந்த வயசில நான் சமைச்சி முடிஞ்சி சாப்பிடுறதற்குள்ள சிவனறிஞ்சிப் போகுது எல்லாம் அவன் செயல்'' கிழவன் அலுத்துக் கொண்டான்.

"என்ன தாத்தா செய்யிறது நம்ம காலம் அப்படியாகிறிச்சி சாண்ஏறுணா முழம் சறுக்குது" கசக்கும் அனுபவங்களை புரட்டியபடியே இருவரும் நடந்தனர். "தலைவரே இந்த புல்லுக்கட்டை ஒரு கை தூக்கி விட்டுட்டு போங்க" இருவரும்குரல் வந்த திக்கை நோக்கினர். அங்கே கான் வங்கிச் சரிவில் புல்லுக் கட்டுடன் நின்று கொண்டிருந்தான் மாணிக்கம்.

"என்ன மாணிக்கம், ஆளையே காணல்ல.... வவுனியாவுக்குப் போயிருந்தீங்களாமே...." தலைவர் கறுப்பையா விசாரித்தபடியே தேயிலை நிறையில் இறங்கினான்.

"அடிக்கடி வந்து உங்களுக்கு தொல்லதர விரும்பல தொழில் கோட்ல வழக்கிற்கு தேதி வந்திச்சிங்களா..."

"ஆமா மாணிக்கம் இந்த மாதம் இருபதாம் தேதி கண்டியில விசாரணை நடக்க இருக்கு உன் வீட்டுக்காரிக்கிட்ட இன்னானக்கி மலையில் வச்சி சொல்லி அனுப்பினேன் இப்ப உன்னய நேரில் கண்டது நல்லாத போச்சி"

"என்னமோ தலைவரே முயற்சி பண்ணுங்க இப்பவும் எனக்கு வேலை நிப்பாட்டி மாசம் ஆறாகப் போகுது".

"பேச்சுவாத்தையிலும் ஒரு முடிவையுங் காணல்ல... வீட்டு நெலமையை நான் உங்களுக்கு சொல்லத் தேவை இல்லை. இருந்த ஒன்னு ரெண்டையும் கொள்ளையிலப் போவானுக தீயை வச்சிகொளுத்திப் புட்டானுக" இந்த மாடு கன்னு இருக்கிறதுனால, பாலதண்ணியை ஊத்திக் கிட்டு, எப்படியோ என் காலம் ஒடுது"

"கவலைப்படாத மாணிக்கம், வானத்துக்கு கீழே இருந்து கிட்டு மழைக்குப் பயந்தா ஆகுமா? எல்லாம் மனுசனுக்குத்தான் தொழில் கோட்ல வழக்கிற்கு தேதிவந்திரிச்சி இனிகவலை படாத நம்ம மாவட்ட தொழில் உறவு அதிகாரி இராமநாதன் ஐயா இருக்கிராரு இல்ல... ரொம்ப நல்ல மனுசர் நீ பார்த்துக்கிட்டு இருவே தொழில் கோட்ல தொரைய என்னா வாங்கு வாங்கப் போறார்ற"

"என்னமோ தலைவரே எல்லாம் நல்லபடியா முடிஞ்சா சரி வழக்கில் ஒரு நல்ல முடிவு கிடைக்கலனா நான் தேறிஎழுந்து மனுசனா வாழ முடியாது. நம்பிக்கையின் பேர்ல பெரிய புள்ள சடங்கிற்கு ஈட்டுக்கடையில ஐஞ்சி பவுண் நகையை கொடுத்திட்டு கொஞ்சம் பணம் வாங்கி இருந்தேன். இப்ப போய் கேட்டா கலவரத்தோட எல்லாம் சரின்னு கையை விரிச்சிட்டு மனுசன் இந்தியாவிற்கு போயிட்டார். நம்ம கெதியை யாருகிட்ட சொல்லுவோம் வழக்கு முடிஞ்சி திரும்பவும் வேலை கிடைச்சாத்தான் கொஞ்சமாவது நிம்மதி கிடைக்கும் போல இருக்கு"

“மாணிக்கம் அப்படி உன்னைய நாங்கள் எல்லாம் கைவிட்டிடுவமா? இன்றைக்கு உனக்கு நடந்தது நாளைக்கு எனக்கு நடக்காலம் தானேநீ பார்த்துக்கிட்டே இருவே வழக்கு நல்லபடியா முடிஞ்சி வேலை நிறுத்திய காலத்திற்கும் சேர்த்து சம்பளத்தோட மீண்டும் உனக்கு வேலை கிடைக்கத்தான் போவுது தலைப்பாகை சரியா கட்டிக்க.... ம்... தூக்கு தூக்கு அப்பாடா என்னம்மா கனக்குது. இந்தா அறுவாள்பத்திரமா போய் சேர்”

தலைவரின் பேச்சில் தைரியமும் உற்சாகமும் அடைந்த மாணிக்கம் மனச்சுமை குறைய தன் லயத்தை நோக்கி நடக்கின்றான்.

ஆறு மாதங்களுக்கு முன்னர் ஒருநாள் காவத்து மலையில் தன்னுடைய நிறையை முடித்து விட்டு, பக்கத்து நிறையில் பிந்தி நிற்கும் சந்தனத்தில் நிறையை மறித்து வெட்டிக் கொண்டிருந்தான் மாணிக்கம். எதிரும் புதிருமாக விழும்வெட்டும் வீச்சில் “மளமளவென்று வாதுகள் சரிய” நிறைய முடிந்தசுருக்கு தெரியவில்லை. இருவரும் நிறைக்கு மேலே மண்றோடு ஓரமாக இருக்கும் குத்துக்கல்லில் அமர்ந்தபடி எஞ்சியிருந்த துண்டு பீடியில் ஆளுக்கொரு “தம்” இழுந்தனர்.

அப்பொழுது அங்கு பூனை போல் பதுங்கி வந்த கன்டக்டர், மாணிக்கம் தனக்கு “மரியாதை வைக்காது புகைப்பிடித்ததுடன் நிறைவிட்டு நிறை வந்து ஒழுங்கு தவறி நடந்த வேலைத் தலத்தைப் குளப்பினான்” என்று தாறுமாறாக ஏசவே இதில் வந்த வாக்கு வாதத்தில் மாணிக்கத்திற்கு வேலை நிறுத்தி விட்டார்கள். மாணிக்கம் இப்போது ஆறு மாதங்களாக வேலை இல்லை. தொழில் நீதிமன்றத்தின்முடிவை எதிர்பார்த்தபடி காலத்தைஓட்டிக் கொண்டிருக்கிறான்.

“என்னங்க பெரியவரே இன்னைக்காவது மழை வருமா...” தன்னைத் தொடர்ந்து குறுக்குப் பாதையில் வந்து கொண்டிருக்கும் சின்னய்யா கிழவனுடன் பேச்சுக் கொடுத்தான் கறுப்பையா.... “ம்....? சொல்ல முடியாது காத்து புளுக்கமா இருக்கு....” கிழவனின் அனுபவ முத்திரை வானிலையில் பதிந்தது.

இருவரும் லயத்தை நெருங்கினர்.

“என்னங்க பெரியவரே தொங்க வீட்டில ஒரே சத்தமா இருக்கு....” காதைத் தீட்டிக் கொண்ட தலைவர் நடையை துரிதமாக்கினார்.

“ஆமா தம்பி என்னமோ தெரியல்லை. மாரி மகமாரி எங்கள சோதிக்காத தாயே” கிழவனும் விழுந்து, எழுந்து கூடவே ஓடினான்

குறுக்கில் விரைந்த இருவரும் தொங்க லயத்துக் கோடியில் குதித்தனர்.

“கொச்சிக்காய் புகைபிடிங்க...ம் நெருப்பு அள்ளிக்கிட்டு வாங்க... சுருக்கா.... சுருக்கா...” ஒரு கிழடு நெருப்பாய் பறந்தது

“ஐயோ.... தெய்வானை என்னை ஏமாத்திப்புட்டு போட்டியே” “பொன்னான மேனியிலே ஒரு பொல்லாத நோய்வந்ததென்ன” பரிதவிப்போடு ஒப்பாரிவரி மாத்திரை நீண்டு நீண்டு விசும்பியது. ஐயோ அம்மா.... அம்மா சிறுசுகள் குய்யோ முறையேவென குரலெடுத்துக் கத்தின.

“.....அட காத்துவர வழி விடுங்க..... ஆளுகளா இப்பதான் ஒரேடியாக வேடிக்கைப்பார்த்துகிட்டு ஐயோ பாவம் நிறைமாதக் கர்ப்பிணிக்கு இப்படி ஆச்சே... வாயும் வயிறுமா இருக்க நேரம் குரல்கள் கதம்பமாக ஒலித்தன.

“இந்தா தலைவரும் வந்திட்டாரு அவருக்கு வழி விடுங்க” ஒருகுரல் அதட்டியது. என்ன நடந்தது இப்ப ஏன் இப்படி பொறுப்பில்லாமல் ஆள் ஆளுக்கு சத்தம் போடுறீங்க... தலைவர் கூட்டத்தை விலக்கிக் கொண்டு முன்னுக்கு வந்தார்.

அங்கே சாக்குக் கட்டிலில் சுயநினைவற்றுக் கிடக்கும் நிறைமாதக் கர்ப்பிணியைக் கிடத்தியிருந்தார்கள்.

அப்பா தலைவரே இந்த அநியாயத்தைப் பாரு தெய்வானை கொழுந்து மடுவத்தில் அந்திக் கொழுந்த தூக்கிட்டு ஸ்டோருக்குபோயி இருக்கு பாவம் புள்ளத்தாச்சி இந்த வரக்கட்டுல வயித்து சுமையோட தலைப்பாரத்தையும் தூக்கிக்கிட்டு எப்படி போவா? இடையில மயங்கி விழுந்து பேச்சி மூச்சில்லாம கிடக்கா. வயித்தில் பலமான அடிபட்டிருக்கும் போல

“லொறிக்கு சொல்லி அனுப்பினீர்களா?” தலைவர்

“ஆமா இடையில் ஸ்டோருக்கு ஆள் போயி கேட்க”, முடியாது உங்க சங்கத்தில்போய் வாங்கிக்கன்னு சொல்லிட்டானுக. நாங்க கைத்தாங்கலா தூக்கிட்டு வந்தோம்” இளைஞனின் குரல் கனன்று ஒலித்தது.

“சரி பிறகு அதைப்பத்தி பேசுவோம். இப்ப நாலு இளந்தாரிக இப்படி வாங்க. இப்படியே இந்த படங்கு கட்டிலோட மெயின் ரோட்டிற்கு தூக்குங்க ஒரு ஆள் சைக்கிளை எடுத்துக்கிட்டு போய் கந்தநுவர சந்தியில் “பேக்கரி வேன்” இருக்கும். உடனே கொண்டுவாங்க அதற்கிடையில் காரோ, பஸ்சோ வசதியா கிடைச்சா நாங்க ஆஸ்பத்திரிக்கு போறோம்” சைக்கிலில் விரைந்தவன் பேக்கரி வேனுடன் வந்துசேரும் போது தோட்டம் உறங்கிவிட்டது.

தெய்வானையை வைத்தியசாலையில் அனுமதித்து விட்டு தலைவர் மறுநாளே வீடு திரும்பக் கூடியதாக இருந்தது. அன்று மலையே அவர் தோட்டத்திலுள்ள சக முக்கிய தொழிலார்களை அழைத்து கலந்துரையாடினர். அதன்படி பின்னவரும் முடிவுகள் எடுக்கப்பட்டன. ஸ்டோருக்கு மலைகளிலிருந்து கொழுந்தைக் கொண்டு செல்ல வாகனத்தை ஏற்பாடு செய்ய நிர்வாகத்தை வற்புறுத்துவது அதுவரை கர்ப்பணிகளதும் முதியர்வகளினதும் கொழுந்துச் சாக்கை வசதியினைப்போல் சகதொழிலாளர்கள்

அல்லது அவர்கள் சார்பில் வீட்டில் எவரேனும் கொண்டு செல்வது என்பனவாகும்.

தோட்டம் கம்பெனியாக இயங்கிய காலத்தில் இந்தப் பிரச்சனைக்கு இடமே இருக்கவில்லை. தோட்டத்துக்கு ஒரு ஸ்டோர்; கொழுந்து இழுக்க லொறி; பெட்டி பூட்டிய டிரக்டர் என சீராக இயங்கியது. தோட்டங்களில் பெரும்பகுதி பக்கத்திலுள்ள கிராம வாசிகளுக்கு பிரித்துக் கொடுக்கப்பட்ட பின்னர் எஞ்சிய பகுதியைத் தனித்தோட்டமாக இயங்கச் செய்ய முடியாமல் அடுத்தடுத்த தோட்டங்களுடன் இணைத்து நாலைந்து தோட்டங்களுக்கு ஒரு தொழிற்சாலைக்கு கொழுந்தை தொழிலாளரை சுமக்கச் செய்து கொண்டு வந்து சேர்ப்பது சிரமாமதாகிவிட்டது.

தோட்டத்திற்கு இரண்டு வாகனமென பெற்றோல் தண்ணீராய் செலவாகின்றது. இப்படி பல பெருச்சாளி ஓட்டைகளில் நட்டமாகும் தோட்டத்தின் வருமானத்தை நிர்வாகம் தொழிலாளியின் தலையில் சுமத்தி இவ்வாறு அடைக்கப்பார்க்கின்றது.

மறுநாள் பத்தாம் நம்பர் மலை. ஸ்டோருக்கும் மலைக்கு இரண்டு மைல்களுக்கு குறையாத தூரம் கொழுந்து மடுவத்தில் நிறுத்தமுடிந்த கொழுந்தை இளவட்டங்கள் முதியோர்களுக்குமாக சுமந்து செல்கின்றனர்.

சிலர் பெயர் பதிய முடியாத நிலையில் இருக்கும் தமக்கு உதவி செய்யும் பிள்ளைகளிடம் கொடுத்துவிட்டு வீட்டிற்குச் செல்கின்றனர்.

கொழுந்துசாக்குடன் அவர்கள் மலைகளை சுற்றிகிடக்கும் பாதையில் வரிசை வரிசையாக நடந்து ஸ்டோர்படிகளில் ஏறி வாட்டம் போடும் மெத்தைக்கு வரிசையில் விரைகின்றனர். ‘‘ஸ்டோர் மெத்தைக்கு செல்கிறோம்’’ என்ற களிப்பில் பிள்ளைகள் தலைச்சுமையினை மறந்து துள்ளும் நடையுடன் படியில் மிதக்கின்றனர்.

குளுகுளுவென வீசும் அந்திக் காற்றின் குளுமையோடு; தேயிலை அடுப்பிலிருந்துசுழலும் காற்றாடி கொண்டு வரும் தேயிலை பதமாகும் மணமும் சேர்ந்து சூழலுக்கு ரம்மியமூட்டுகிறது.

சிறுவர்கள் கொழுந்து சாக்குடன் படியேறுவதை நோட்டம் விட்ட கன்டக்டர் சில்வா புகையும் கண்களுடன் அவர்களை அழைத்து விசாரித்து பின்னர் கன்னத்தில் அறைந்து? உதைத்து ஓடும்படி விரட்டுகின்றான்.

தனக்கு சவால்விட இந்த தோட்டத்தில் யார் இருக்கின்றார்கள்? ஆவேசமாக செயல்படுகின்றான் கன்டக்டர்.

‘‘தோட்டத்தில் பேர்பதிந்தும் செக்றோல்வைத்து லேபர்ஸ் வைத்திருப்பது என்னத்திற்கு வரவர டிசிபிலினே இல்லாமல் போச்சி’’ திட்டியபடியே பின்னர் மோட்டார் சைக்கிளில் துரையின் பங்களாவிற்கு விரைகின்றான்; கன்டக்டர். உற்சாகம்மேலிட விரைந்து வந்த சிறுவர்கள்வெலவெலத்துச் சிதறி

ஓடுகின்றனர். முழுத்தோட்டமும் ஆத்திரத்தில் பொங்கி குமுறுகிறது. அடுத்த நாள் தலைவர் மாவட்டத் தலைவரை கண்டு பேசுகிறார்.

நியாயம் கேட்டு வேலை நிறுத்தம் செய்வதென முடிவு செய்து வேலை நிறுத்தத்தில் குதிக்கின்றனர். பேச்சு வார்த்தைகள் தொடருகின்றன. நீதி கிடைக்கவில்லை வேலை நிறுத்தம் தொடருகின்றது.

வேலை நிறுத்தம் மூன்று வாரங்களாக! வேலை நிறுத்தக் காரர்களுக்கு பங்கீட்டு உணவுப் பொருட்களை வழங்க மறுக்கின்றது நிர்வாகம். முதல் வாரம் எப்படியோ "ஒப்பேத்தி விட்டார்கள்" மறுவாரம் பசிபசியென சின்னஞ் சிறுசுகள் ஆளாய்ப் பறக்க தோட்டமே பஞ்சடைந்த கண்களில் கிறங்குகின்றது.

தலைவர், துரையை சந்தித்து உணவுப் பொருட்களை வழங்கும்படி வேண்டுகோள் விடுக்கின்றார். அரிசிக் காம்பிராவின் நீண்ட இரும்புக்கதவினைப் போன்று; துரையின் இதயம் கருணையின்றி மூடிக் கொள்கின்றது.

குறுக்கு வழிகளைக் கையாண்டு நப்பாசை காட்டி போராட்டத்தை முறியடிக்க நிர்வாகம் முயலுகின்றது. அவை உணர்வு பெற்ற தொழிலாளர் மத்தியில் எடுபடாமல்போக, சூழ்ச்சி செய்து வஞ்சகம் புரிகின்றது நிர்வாகம்.

அன்றிரவு...!

தோட்டம் உறங்கி விட்ட அகால வேளையில்; அரிசிக் காம்பிராவை கபளீகரம் செய்த லொறி ஒன்று அனர்த்திக் கொண்டு கிளம்ப; அதன் முன்னே மாத்தளை வீதி விரிகின்றது. எப்பொழுதும் போல லயங்கள் பசியுடன் விழிக்க பொழுது புலருகின்றது. அரிசிக் காம்பிரா உடைக்கப்பட்டு....

அதிலுள்ள உணவும் பொருள்கள் கொள்ளையிடப் பட்டுள்ளன! துரையின் டெலிபோன் அழைப்பிற்கு பொலீஸ் ஜீப்வண்டி தோட்டத்தினுள் புகையைக் கக்கிக் கொண்டு விரைந்து வருகின்றது. தேயிலை மலை எரிமலையாகின்றது.

நேற்று மாலை தமக்கு அரிசி மாவு ஆகிய உணவுப் பொருட்களை வழங்கும்படி பலாத்காரம் செய்த தலைவர் கறுப்பையா, மாணிக்கம் உட்பட தொழிலாளர்களின் வேலையாகத்தான் இது இருக்குமென்ற துரையின் கூற்றை ஏற்றுக்கொண்ட பொலிசார் அவர்களை சந்தேகத்தின்பேரில் கைதுசெய்து விலங்கிட்டு ஜீப்பில் ஏற்றிச் செல்கின்றனர்.

முழுத் தோட்டமும் தேற்றுவாரின்றி ஒப்பாரி வைத்து அழுது புலம்புகின்றது "ஐயோ.... ஐயோ"... என்ற அவலக்குரலே சுப்பரபாதமாக எங்கும் ஒலிக்க...

பொழுது புலர்ந்து; கீழ்வானம் சிவந்து; கதிரவனின் ஒளிபரவ; புலரிக் காலத்து மென் இருட்டும் தலைகவிழ்ந்து ஓட, பூபாளம் ஒலிக்கும் அந்தக் காலைப் பொழுதில் உண்மைமட்டும் உறங்கி விட்டது.

துயிலெழுப்புவது யார்?....



# ஆங்கோர் ஏழைக்கு....

இரவும் கண்ணயர்ந்து விட்ட நடுநிசி வேளை. உறக்கமற்ற சீதளக்காற்று மனக்குமைச்சலுடன் மலைகளைச் சுற்றிச்சுற்றி கால்கள் கடுத்துப் போக அசதியுடன் மலைவெளியில் கூரம் கோர்த்து நிற்கும் பனிப்புகாரில் தலையைச் சாய்த்துக் கொள்கின்றது.

அந்தக் காற்றின் தழுவலில் மெய்மறந்து பனிமலர்கள் புல்லின் நுனிகளில் பூத்துவிட அடியெடுத்துத் தவழ்ந்தபோது; மலைச்சரிவினில் தொல் பொருளா கிவிட்ட அந்த எட்டுக்காம்பிரா லயத்தின் ஓட்டைத் தகரங்களின் இந்திரக் கண்கள் பனிக்கின்றன.

மூன்று வருடங்களுக்கு முன்னர் ஏற்பட்ட அனர்த்தத்தில் அக்கினிப் பிரவேசம் செய்தும், இரண்டு தலைமுறையாய் தன்னோடு ஒன்றுவிட்ட, அந்த காம்பிரா வாசிகளுக்காக "லயன் உடைந்தால் பழைய இரும்புக்கடை" என்ற சாபவிமோசனமின்றிருக்கும் லயத்தின் தொங்கல் காம்பிராவின் மூலையில் அணையாத மனச்சாட்சியே போன்று குப்பிலாம்பு எரிந்து கொண்டிருக்கின்றது. ஏனைய காம்பிராக்கள் நாளைபொழுது எப்படி விடியும் என்ற வினாவைப் போன்று நிச்சயிக்க முடியாத எதிர்காலத்தைப் போலவே இருண்டு போய்க்கிடக்கின்றன.

தனியொரு மின்மினியென கும்பிலாம்பு கண்சிமிட்டும் தொங்கல் காம்பிராவில் உறக்கமின்றி தவித்துக்கொண்டிருக்கும் இராமலிங்கம் "கும்பிலாம்பை நூர்த்து விடுவோமா? என்று ஒரு கணம் யோசித்தான். பின்னர் பிள்ளைகுட்டி உள்ள வீடு லாம்பெண்ணெய்ச் செலவைப் பார்த்தால் முடியாது. பூச்சிபட்ட ஏதும் வந்தால் என்ன செய்யிறது? எனப் பயந்து

“எரியட்டும்” என்று அப்படியே விட்டுவிட்டான். நினைவுச் சக்கரம் சுழன்றது. எப்போது பொழுது விடியும்? இன்னும் கொஞ்சநேரத்தில் கோழி கூவிடும்... காலையிலேயே கிட்டுவைக்கூட்டிக்கிட்டு போகணும்... பெரிய சேரைக்கண்டு புள்ளையை ஆறாம் வகுப்பில் சேர்த்துக்கிட்டு தான் மத்த சோலியெல்லாம்... ஒரு நாள் பொழைப்பு போனாலும் பரவாயில்லை. புள்ளவுட்டு படிப்பு பெருசா, வேல பெருசா? என்னா வேலை கல்லுடைக்கிறகசுமால வேலை. என் பிள்ளைய படிக்க வச்சிட்டா போதும்...”

மனம் கற்பனைக்குச் சிறகுகட்டிக்கொண்டு இருந்தது. தனது குடும்பத் துக்கும் லயத்தில் உள்ளோருக்கும் இனி ‘நல் வாழ்வே இல்லையென நினைத்துக் கலங்கிக் கொண்டிருந்த போதும், இப்படி ஒரு திருப்பு முனை ஏற்படுமென அவன் நினைத்துக் கூட பார்க்கவில்லை.

“அவனுக்கு அவன் வணங்கும் இஷ்ட தெய்வமான ஸ்ரீ முத்துமாரியம்மன் மீது பூரண நம்பிக்கை இருந்தது. எப்படியும் அந்த மாரிகாப்பாற்றுவாள். தன்னைக் கைவிடமாட்டாள்!” என்று நிச்சயமாக நம்பினான்.

அந்த நம்பிக்கை மீண்டும் துளிர்விட்டு... அவன் மனதில் நர்த்தனமாட, அவன் உறக்கமின்றி சிந்தனைகளில் விழித்துக் கொண்டு புலரும் பொழுதைத் தேடிக் கொண்டிருந்தான்.

துள்ளித் திரியும் பதினொரு வயதிலேயே உதிர்ந்த பிஞ்சாகத் துவண்டு கிடக்கும், அவனது நம்பிக்கை நட்சத்திரமான கடைசி மகன் கிட்டு மூட்டைக் கடிக்குப் பயந்து சுவற்றிலிருந்து பயந்து, ஒதுங்கி, கிழிந்த ஒரு படங்குத் துண்டைப் போர்த்திய படி உறங்கிக் கொண்டிருந்தான். இராமலிங்கத்தின் மனைவி அழகம்மா, பழந் துணியின் மேல் துயரங்களையே தலை அணையாக வைத்து தூங்கிக் கொண்டிருந்தாள்.

இராமலிங்கம் உறக்கத்திலிருக்கும் மகன் கிட்டுவைப் பார்க்கிறான். “மூணு மடிப்பிச்சை போட்ட தெய்வம் இரண்டை எடுத்துக்கிட்டாலும், பேரு சொல்ல ஆசைக்கொரு ஆண் பிள்ளையை என்னோடவிட்டு வச்சிருக்கே அது போதும் கொள்ளி வைக்க” என்ற ஆறுதல் மனதில் ஏற்படும் போது கவலை போய் தெம்பு ஏற்படுகின்றது.

அவனுக்கும் அழகம்மாவுக்கும் திருமணம் நடந்து இருபது வருடங்களா கின்றன. இருந்த போதும் அந்த வைபவம் அன்றைய தினத்தில் நடந்த சடங்குகள், சம்பிரதாயங்கள் அனைத்துமே நேற்று நடந்தது போல அவன் மனதில் பசுமையாக உள்ளன.

திருமணத்துக்குப் பின்னர் மூன்று ஆண்பிள்ளைகளுக்கு அவன் தந்தையாகி மகிழ்ந்து உலாவிய போது, அவர்களது சாம்ராஜ்யமான அந்த

தோட்டம் சுவீகரிக்கப்பட்டு, அயலவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டபோது, அந்த தோட்டத்தில் இருந்தவர்கள் நிராதரவானார்கள். மூடிய அந்த வட்டம் எல்லோருக்குமே திறந்து விடப்பட்டபோது இவர்களுக்கு மட்டும் மூடப்பட்டு விட்டது.

தோட்டம் என்ற ஒன்றில் வாழ்ந்த போது தொல்லைகள், துன்பங்கள் என்பன உடன்பிறந்த நோயாக; நித்திய; நிரந்தர சோகத்தை அளித்த போதிலும்; அசையாத சுழலும் சக்கரத்தைப் போன்று அன்றாட வாழ்க்கைக்கு ஏதோ ஓர் உத்தரவாதம் இருந்தது.

சிறுபிரச்சனையென்றாலும், “எங்கே விடியுது?... ஜில்லாவில் விடியுது என்று தலைவர் மாவட்டப் பிரதிநிதியிடம் போய் நின்று விடுவார். மாவட்டப் பிரதிநிதி கொஞ்சம் அசந்துவிட்டால் போதும்; மறுபயணம் மத்திய கமிட்டிவரை நடக்கும். நீதிகிடைத்த பின்னர் தான் ஓய்வார்கள். அதுவும் சங்கபேப்பரில் கோரிக்கை வெற்றி என்ற செய்தி வந்த பின்னரே “விட்டேனா பார்” என்ற திருப்தி ஏற்படும்.

அப்படி ஒரு வேகம். உழைப்பு தரும் உத்வேகம். பாடுபடும் தொழிலாளர் என்ற உணர்வு தரும் ஆவேசம். மொத்தத்தில் ஒரு சத்திய வேட்கை.

ஆனால். அது அன்று! இராமலிங்கத்தைப் பொறுத்தவரை அவையாவுமே முடிந்து போன சங்கதி. கம்பனியாக இயங்கிய தோட்டம் இன்று சிறகறுந்த சடாயுவாக கூறுபட்டு, சிறுசிறு தோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, பின்னர் தோட்டம் என்ற பெயரும் மறைந்துவிட ஒரு கிராமமாகி; மலையெங்கும் வண்ண வண்ண வீடுகள் முளைத்து வெசாக் கூடுகள் தொங்கும் மரத்தைப் போன்று ரம்மியமாக காட்சியளிக்கின்றது.

மலையகத்தின் தாழ் நிலத்திலுள்ள தோட்டங்கள் கை நழுவதைப் போல; காலம் நழுவிக் கொண்டிருக்கின்றது. தோட்டம் கைநழுவிப்போக, குடியிருந்த லயத்தைச் சிக்கெனப் பிடித்துக்கொண்டாகி விட்டது. லயம் சோறு போடுமா? தொழில்? முன்பு செய்த போதே பற்றாக்குறை தான். உடை, பண்டிகை, திருமணம் என்பன வந்து குறுக்கிட்டு விட்டால் துண்டு விழுந்து விடும் இப்போது?

சேவைக் காலப் பணம் முதல் ஊழியர் சேமலாபநிதிவரை கிடைக்க வேண்டிய சகல கொடுப்பனவுகளை எல்லாம் பெற்று, ஆறு மாதங்களை ஒட்டிய பின்னர், இனியும் தாக்குப் பிடிக்க முடியாத சில குடும்பங்கள் வவுனியாவுக்கு நடையைக் கட்டி விட்டன. மீதியானவை நம்பிக்கைத் துணையாகக் கொண்டு இரு மைல்களுக்குள்ளிருக்கும் நகருக்கு நடந்து அன்றாடம் பொழுதை ஒட்ட, கிடைக்கும் தினக் கூலித்தொழில்களை தேடிக் கொண்டுவிட்டன.

நகரத்தின் பக்கத்தில் அமைந்ததில் ஏற்பட்ட நன்மை இது! இராமலிங்கமும் அவன் மனைவி அழகம்மாவும் களுதாவளை கல்முதலாளி சிவாவின் கற்குழியில் கல்லுடைக்கும் தொழிலில் சேர்ந்தனர்.

தோட்டத்தொழில் போய், கல்லுடைத்து காலத்தை ஓட்டிக் கொண்டிருந் தவர்களை கலகம் வந்து ஓடவைத்து விட்டது. சேர்ந்து நின்று வழிபாடு செய்தவர்கள்; பிரிந்து நின்று வணங்கிய தெய்வத்தையே எரித்த போது "என்ன நடந்தது ஏன் இப்படி" என்று செய்வதறியாது திகைத்துப் போனார்கள். மானத்தை ஈனமாகப் பறித்த கயவர்களின் செயலை நினைத்து, வெதும்பி ஊனுமே! உருகி நின்றார்கள்.

கொள்ளை... தீவைப்பு... நினைத்துப் பார்க்க முடியாத அனர்த்தங்கள் அன்பில் கனிந்த இதயங்கள் அம்பு எய்த ரணமாய் மாறி வாட்ட, சீ... மிருகங்களே என்று மனம் வெறுப்பினைக் கொட்ட, சே... கொடுமை... கொடியவர்கள்... இனி இவர்கள் முகத்தில் விழிக்கக்கூடாது என, தன்மானம் உலுப்ப, வெந்த உள்ளங்கள் வீறாப்புடன் புறப்பட்டன.

பிறந்து வளர்ந்த தோட்டங்களைத் தவிர வேறு உலகத்தையே காணாதவர்கள் ஊர்விட்டு ஊர்; பரதேசியாக போனார்கள். ஆலயங்களும், அகதிமுகாம்களும் அடைக்கலம் கொடுக்க துணிவுடன் புதிய ஏட்டைப் புரட்டினார்கள்.

திடங் கொண்ட உள்ளங்கள் சோர்ந்து விடாமல் வடக்கு சென்றது வரள் நில வளரிகளில் புகுந்து, வைரம் பாய்ந்த பாலைகளை வெட்டி வீழ்த்தி, மண்ணை வணங்கிக் கொத்திப் புரட்டி புதுத்தெம்புடன் வானத்தை நிமிர்ந்து பார்த்த போது....

மண்ணில் தெரிந்தது பூத்துக்குலுங்கும் புதிய பூக்கள்; பூத்து நிற்கும் புதிய அலைகள்... எகிறிக் குத்திட..

போர் மேகங்கள் திரண்டு சூழ... ஆகாயத்தை துளைத்து, சல்லடையாக்கி இரத்தம் கசிய, விண்மீன்கள் நொருங்கி விழ... வெள்ளிப் பறவைகள் இட்ட முட்டைகள் குடிசைகளைத் தழுவ, இராமலிங்கத்தின் இரு புத்திரர்களையும் தீ நாக்கு சுவைத்து விட்டது. துப்பாக்கி ரவைகள் இட்ட முத்தத்தில் அந்தப் பிரதேசம் ரணக்களமான போது.... நம்பிக்கையின் கடைசித் தந்தியும் அறுபட, மிஞ்சிய கடைசிப் பையனையேனும் காப்பாற்றினால் போதுமென மனவைராக்கியத்தை ஒரு பக்கம் மூட்டை கட்டிவிட்டு பிள்ளைப் பாசத்தையே உருக்கொண்டவனாக பழைய இடத்துக்கே திரும்பி வந்து சேர்ந்த போது குற்றுயிராகக் கிடக்கும் அந்த லயம் மட்டும் எவ்வித பேதமும் இன்றி ஒரு தாயின் வாஞ்சையுடன் அவர்களை அரவணைத்துக் கொண்டது.

கல்லுடைக்க இராமலிங்கத்தின் குடும்பம் திரும்பி வந்து சேர்ந்தால் சிவா முதலாளிக்கு பூரண திருப்தி. திருமலைக்குக் குடிபெயந்தவர்களும் தன்னிடம் வந்து சேர்ந்துவிட வேண்டுமென இறைவனிடம் வேண்டிக் கொண்டார்.

இராமலிங்கம் கைப்பொருளை இழந்து துன்பத்தோடு, புத்திரசோகமும் சேர்ந்து வாட்ட விரக்தியுடன் இருந்த போதிலும் அயலில் உள்ளோர் அஞ்சி ஓடிய மனநிலை மாறி, உறுதிகொண்ட நெஞ்சுடன் வாழ்வதைக் காண ஆச்சரியமும் நம்பிக்கையும் ஏற்பட்டது. நாளடைவில் அவனும் மனம் தேறினான். சாம்பலிலிருந்து உயிர்த்தெழும் சக்கரவாகப்பட்சியென சமுதாயமே வீறுகொண்டு நின்றது.

சோர்வுற்ற சமூகத்திற்குப் புதிய இரத்தம் பாய்ச்சும் பணியில் இளைய தலைமுறையினர் முன்னின்று உழைத்தனர். காமன் தகனத்தையும், கூத்து களையுமே கண்டிருந்த தோட்டம் கல்விக்கருத்தரங்குகளையும், கலை நிகழ்ச்சி களையும் நடத்திக் கொண்டிருந்தது. பக்கத்திலுள்ள பாடசாலையில் இளைஞர் நடத்திய கருத்தரங்கில் பங்கு பற்றி அவனையும் அழைத்திருந்தார்கள். அந்த கருத்தரங்கில் தொழிலாளர் கல்வி பற்றி இளைஞர் வேலாயுதம் ஆற்றிய உரை அவன் மனதில் சிலையில் எழுத்தெனப் பதிந்தது.

'நாம் உழைக்கவும் இறக்கவுமே பிறந்தவர்கள் என்ற மனநிலை மாற வேண்டும். வீழ்ச்சியுற்ற ஒரு சமுதாயத்தைக் கல்வியினால்தான் எழுச்சியுறச் செய்ய முடியும். மலையகத்தின் இளைய தலைமுறை அறிவு பூர்வமாக, ஆக்க பூர்வமாக வளர வேண்டும். உங்கள் குழந்தை தோட்டப் பாடசாலையில் கிடைக்கும் ஐந்தாம் வகுப்பு ஆரம்பக்கல்வியுடன் நின்று விடக்கூடாது. நகர்ப்புறங் களுக்குச் சென்று உயர் கல்வியினைப் பெறவேண்டும்.

"கல்வி மாத்திரமல்ல, வெளிப்பழக்கம் நல்ல மனோநிலையினையும், நம்பிக்கையினையும் ஏற்படுத்தும் – தாழ்வு மனப்பான்மையினை நீக்கும்.

"அன்ன சத்திரங்கள், ஆலயங்கள் ஆயிரம் அமைப்பதை விட ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்து உயர்வடையச் செய்வதே மேல்!" என உணர்வு பூர்வமாக அவர் ஆற்றிய உரை அவனைச் சிந்திக்க மட்டுமன்றி செயல் படவும் தூண்டிவிட்டது.

கூட்டம் முடிய, அவரைக் கண்டு வணங்கினான் இராமலிங்கம், அவர் தன்னை ஒரு தோட்டத்தொழிலாளியின் பிள்ளையென பெருமையுடன் கூறியதைக் கேட்க அவனுக்கு வியப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. மேலும் நம்பிக்கை வளர்ந்தது.

அந்த இளைஞனைப் போலவே தன் மகனையும் வளர்த்து ஆளாக்க வேண்டுமென உறுதி பூண்டான். உடன் செயலிலும் இறங்கினான்.

விடியலில் சேவல்கள் சுப்ரபாதம், திருப்பள்ளியெழுச்சி இசைக்க. இராமலிங்கத்தின் கனவுகள் ''திரி–டி'' திரைப்படமாக மலர்ந்தன, ''கிட்டு என்னைப் போல கல்லுடைத்து, கை நொந்து சாகமாட்டான். நேற்று மேடையில் முழங்கிய அந்த இளைஞனைப் போல், தான் வசித்து தோட்டத்தின் துரையைப் போல் கிட்டு அழகாக நடந்து வருவதைப் போன்று உருவகித்து மகிழ்ந்தான்.

பொழுது புலரும் முன்பே; மகள் கிரிஸ்ணசாமிங்க கிட்டு சகிதம் அந்த கல்லூரி ''கேற்'' வாசலில் துவார பாலகராய் நின்றிருந்த இராமலிங்கம், அதிபரின் காரியாலயத்துக்குள் அடியெடுத்து வைக்கும் போது காலை மணி பத்திற்கும் மேலாகிவிட்டது.

பல்வேறு அவசர வேலைகளில் ஈடுபட்டிருந்த அதிபர்; உதவி அதிபரைப் பார்த்து பேசும்படி பணிக்கின்றார். இராமலிங்கம் உதவி அதிபரைக் கண்டு உதவி கேட்க, அந்தப் பணிமனையின் வாசலில் நந்தியாய் அமர்ந்திருக்கும் கிளார்க்கிற்கு வழிகாட்டுகின்றார். வரவு இடாப்பிலுள்ள வட்டங்களை எண்ணிக் கொண்டிருந்த கிளார்க்கிடம் தன்னுடைய சோகக் கதையை ஆதியோடந்தமாக எடுத்துக்கூறி ''என் பிள்ளையை சேருங்க சாமி'' என்று சேவித்து நின்றான்

''கிளார்க்'' இராமலிங்கத்தை ஒரு பாவியைப் பார்ப்பது போல பார்க்கின்றார். கேள்விக்குறி எழுப்பி நிற்கும் அவருடைய அந்த முகம் பாடசாலை அட்மிஷனில் உள்ள ஆயிரம் அர்த்தங்களுக்கு கட்டியம் கூறி நிற்கின்றது.

''அப்ளிகேஷன் போட்டியா''

''என்னங்க ஐயா சொல்லுறீங்க... விளங்கல்லையே கொஞ்சம் வெளக்கமா சொல்லுங்க...''

கிளார்க் தலையில அடித்துக் கொள்ளாத குறையா, ''காலையிலேயே அறுவை கேஸ்'' என்று முணுமுணுத்தபடி ''பாடசாலையிலே சேர போனவருஷமே விண்ணப்பம் செய்தியா?''

''இல்லங்க கலவரத்துக்குப் பிறகு இங்க இருந்துட்டு போயிட்டு, பிறகு அங்கேயும் இருக்க முடியாம வந்திட்டேங்க... மூணு பிள்ளைங்க... கறிவேப்பிலை கொத்தாட்டம், மூத்தது ரெண்டையும் பலி கொடுத்திட்டேங்க. இவன் கடைசி புள்ளைங்க. தோட்டத்து பள்ளியிலே அஞ்சாம் வகுப்பு படிச்சிட்டு.... வீட்டுலத்தாங்க சும்மா இருந்தான். கடைசிப் புள்ளைய சரி படிக்க வைக்கலாமுனுதாங்க... சாமி யோசிச்சு வந்தேன்... ஒங்க மாதிரி ஒரு படிச்சவருதாங்க நேற்று கூட்டத்துல பேசி என் கண்ணை திறந்து வைச்சாரு''

''அவங்களுக்கென்ன மேடையில பேசுவாங்க. இங்க எங்களுக்கு இருக்கிற புரபளம் அவுங்களுக்குத் தெரியுமா? சரி டொனேஷன் எவ்வளவு கொடுப்பா?'' வார்த்தை நறுக்கென விழுந்தது.

“டொனேஷன் இல்லையங்க... பையன் பேரு கிட்ணசாமீங்க.... வீட்டுல கிட்டுன்னு கூப்பிடுவாங்க இராமலிங்கம் திகிலுடன் பதில்கூறினான்.

கிளார்க்கின் முகம் சிவந்தது. அட்மிஷனுக்குப் பொறுப்பான உதவி அதிபர் கழன்று கொண்டு தன்னிடம் அனுப்பி வைக்கும் போதே இது உருப்படி இல்லாத கேசு என்று நினைத்தார். அது இப்போது ருசுவாகி விட்டது. நல்ல கேசா இருந்தா இப்படி தன்னிடம் வரும்?” என்று அலுத்துக் கொண்டு,

“இந்தா ஐயா எனக்கு நெறைய வேலை இருக்கு.... உன்னோட அக்கப்போர் அடிக்க முடியாது. பாடசாலையில இடம் எடுக்க டொனேஷன் அதாவது பணம் கொடுக்கணும் பணம் கொடுக்க முடியாதுன்னா பையன் இருந்து படிக்க ஒரு வாங்கு மேசையும் ஒரு கதிரையும் வாங்கிவாங்க... இல்லாட்டி இங்க சேர்க்க முடியாது.”

“ஐயா சாமி நான் ஏழைங்க இந்த ரெண்டு கைகளையும் பாருங்க.... கல் உடைச்சி தான் எங்க குடும்பம் கஞ்சி குடிக்குது. பெரிய மனசு வைச்சு என்புள்ளையை ஸ்கூல்ல சேர்த்திடுங்க.... நான் அகதிங்க...”

“உங்களுக்கு மத்த வேலைகளுக்கெல்லாம் பணம் இருக்கும் படிப்பு, பாடசாலைன்னு வந்தா மட்டும்தான் பணம் இருக்காது. உன் பிள்ளைய மட்டும் “ப்ரியா” சேர்த்தா நாளைக்கு பி.டி.ஏ.யில கேள்விகேட்டா யார் பதில் சொல்லுறதாம்.... இங்க இடமில்லை. வேறுஸ்கூல்ல பாரு...”

கிளார்க் எழுந்துவிட்டார்.

அவர் தலைக்குமேலே வேலைப்பாடுகள் அமைத்து பிரேம் போடப்பட்ட ஒரு பெரியவர் படம். அதற்குக் கீழே இலவசக் கல்வியின் தந்தை என்று எழுதப்பட்டிருந்தது.

‘ஐயா இங்க டவுனுல ஆம்புள புள்ளைங்களுக்கு வேறு பாடசாலை இல்லைகளே’

இராமலிங்கத்தின் குரல் கிளார்க்கின் செவியில ஏறவில்லை. அதிபரின் முகத்தைப் பார்த்து மீண்டும் தன் நிலையை சொன்னால் தனது பிள்ளைக்கு வழி பிறக்குமென இராமலிங்கத்தின் உள்உணர்வு உணர்த்திய போதும் அந்த இடத்தில் தான் ஒர் அந்நியனைப்போல் அவமானப்பட்டு நிற்பதாகக் துணுக்குற்று நடந்து விட்டான்.

கல்லூரி ஆபிசில் அதிபர் தான் சரஸ்வதி பூஜையின் போது, “பேசிய பேச்சு கொட்டை எழுத்தில்,” மலையக மாணவர்கள் டாக்டர்களாகவும், எஞ்சினியர்களாகவும் வரவேண்டும், இதுவே என்வாழ்க்கையின் இலட்சியம்” – என்று பத்திரிகையில் நாலுகளத்தில் வெளியாகி இருப்பதை திருப்பி திருப்பி வாசித்து மகிழ்ந்து கொண்டிருந்தார்.

பத்திரிகை நிருபர், பாடசாலையில் தான் உதவி ஆசிரியர். அவருக்கு நேர சூசி கிடையாது. வரும் நேரம், போகும் நேரம் என்ற கட்டுப்பாடு கிடையாது.

“அரசாங்க பாடசாலைகளில் டொனேசன் கேட்க்க கூடாது.” சுற்றறிக்கை முதல் அறிவுரைகள் எல்லாம் ஏட்டுச் சுரக்காய் தம்பட்டங்களே “டொனேசன் கேட்கத்தானே கூடாது. தாரளமாக வாங்கலாம் –இது நடமுறை.”

இராமலிங்கத்தின் நொருங்கிய மனதுடன் பாடசாலையிலிருந்து திரும்பி வரும் போது கிட்டு தனக்கு தேநீர் வாங்கித்தருமாறு அவனிடம் கேட்டான்.

இவருவரும் பஸ் நிலையத்துக்கு எதிர்ப்புறமாக இருக்கும் அந்த ஒட்டலில் தேநீர் அருந்திவிட்டு காசைச் செலுத்த; கல்லாவிருக்கும் முதலாளியிடம் சென்ற போது, இராமலிங்கத்தின் முகத்தை வாஞ்சையுடன் பார்த்தார் முதலாளி. அந்த குளிர்ந்த பார்வை ஆயிரம் அர்த்தங்களை பேசி நின்றது.

‘என்ன பையன் உங்க பிள்ளையா... எங்க வேலை செய்யிறான்’ ‘என் மகன் தாங்க... அஞ்சாம் வகுப்பு சோதனையில பாஸ் ஆகிவிட்டான். ஆறாம் வகுப்புல சேர்க்க அழைச்சிட்டு வந்தேன். ஸ்கூல்ல சேர பணம் கட்டணுமாம். இல்லாட்டி மேசை நாற்காலி வாங்கிக் கொடுக்கணுமாம். ஏங்கிட்ட அவ்வளவு ஏதுங்க. ஒரு நாள் பொழுது ஓட்டுறதே சிவனறிஞ்சுப் போவுது. இராமலிங்கத்துக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது.

“ஹி....ஹி....ஹி... முதலாளி சிரித்தார். சிரித்துவிட்டு, “இந்தாப்பா உனக்கு என்னாத்துக்குப் பெரிய ஆசையெல்லாம் வெரலுக்குத் தகுந்த வீக்கம்னு பெரியவுங்க சொல்லி இருக்காங்க இல்லியா? என் பிள்ளைகள் ரெண்டுக்கும் பத்து பத்தாயிரம் கட்டித்தான் பாடசாலையில் அட்மிசன் எடுத்தேன். நீ மேசை நாற்காலி வாங்கிக் கொடுத்து... பையன் படிச்சி உத்தியோகம் பார்த்து... இதெல்லாம் நடக்கக் கூடிய காரியமா? உனக்கு சம்மதமுன்னா சொல்லு நான் பையன் என் கடையில மேசை தொடைக்க வச்சிக்கிறேன்.... சாப்பாடு போக மாசம் இருபது போட்டு தாரேன். யோசிக்காத...”

இராமலிங்கம் ஏதேதோ யோசித்து கலங்கி திகைத்த போதும் கடை முதலாளியின் பேச்சுக்குப் பச்சைக் கொடி காட்டுவது போல தலையசைத்தான்.

மேசை நாற்காலி வாங்கிக் கொடுக்க முடியாதபடியால், மேசை துடைக்க வேண்டியுள்ளதே என்பதை உணராத கிட்டு கண்ணாடி அலுமாரியினுள் வகைவகையாக நிறைந்து கிடக்கும் இனிப்புக்களையும், தின்பண்டங் களையும் கண்களால் அளந்து. மனதில் சுவைத்துக் கொண்டிருந்தான். பாடசாலையில் சேருவதற்கு வாங்கு மேசை நாற்காலி வாங்க முடியாத அவனை சைவக்கடை மேசையுமா “தன்னை துடைக்க வேண்டாமென” விரட்டியடித்து துரத்தி விடவா போகின்றது.

**(வீரகேசரி 1986)**



# பிஞ்சு உலகம்

"எனக்கு பள்ளிக்கூடம் போக விருப்பந்தான். அப்ப ஏன் போகலையாமுன்னு கேட்கிறீங்களா? விருப்பம் மட்டும் இருந்தா பள்ளிக்கூடம் போக முடியுமா? நான் பள்ளிக்கூடம் போயிட்டா அம்பிப் பயலை யாரு பாத்துக்கிறதாம்?.. மலைக்குத் தேத்தண்ணி கொண்டு போறது யாராம், கேக்கிறேன்!"

"நாலெழுத்துக் கத்துக்கிட்டா தேவலை ஆம்பளபுள்ள நாளைக்குப் பின்ன ஒருத்தன் முன்னுக்கு வெரல நீட்டிக்கிட்டு நின்டா நல்லாவா இருக்கும் எப்ப பார்த்தாலும் அம்மா இப்படியேதான். சொல்லுது எந்த நேரமும் இதே கதைதான் பாட்டாபாடுது, நான் ஒன்னும் அப்படி மக்கு இல்ல. இந்த அம்மாதான் மக்கு. எனக்கு நல்லா பேர் எழுத தெரியும். என் பேரு அம்மா பேரு அம்பி பய பேரெல்லாம் கூட எழுதியிருவேனே? லயத்துக் கோடியில 'பந்தம் பிடிக்காதே'ன்னு பெருசா எழுதி சாணியால அழிச்சி மறைச்சிருக்கு இல்லையா.... அதற்கு கீழே ஒரு ஒரத்தில்ல 'கோழி(ள்) சொல்லாதேன்னு' சிறுசா கரிக்கட்டயால எழுதிவச்சிருக்கிறது யாராம்... ஓ... அது நான்தான்!

எழுதமட்டுமா! வாசிக்கவும் தெரியும். தமிழ்மலர் கடைசிப் பக்கத்தில உள்ள ஆத்திசூடி, கொன்றைவேந்தன் எல்லாம்கூட தண்ணிப் பாடம் இப்ப கேட்டாலும் கூட கடகடன்னு சொல்லுவேன்.

மேட்டு லயத்திலிருந்து ராசு வந்தான். சிகப்பு வார் கட்டின கெற்றப் போல் வச்சி இருந்தான். 'வாடா சுப்பு, குருவி அடிக்கப்போவோம்னு கூப்பிட்டான். போ.... நான் வரமாட்டேன்னு சொல்லிப்புட்டேன். 'இன்னைக்கு மட்டும் வாடா ... வாடா'ன்னு கூப்பிட்டான்.

ஐயோ! நான் போகவே மாட்டேன். அம்மா கண்டால் தோலை உரிச்சுப் போடும்.

ச்சீ... இந்த ராசு பெரிய மோசம், பள்ளிக்கூடத்திற்குப் போகாம ஒழிஞ்சு திரியுறான். ஆனால் கெற்றப்போல் மட்டும் நல்லா லெக்கு வச்சு அடிப்பான். பெரிய ஆளாக வந்தோடன தோக்க எடுத்துக்கிட்டு ஸ்டோருக்கு காவல் பார்க்கப் போவானாம்! பெருசா.... கறுப்பா மீசை இல்லாம எப்படி காவல் வேலை பார்க்கிறதாம்! இவன் இப்படித்தான் எப்ப பார்த்தாலும் பொய் பொய்யாகச் சொல்வான்.

ராசுவுக்கு அம்மா... அப்பா... அண்ணா.. அக்கா, தம்பி, தங்கச்சி எல்லோரும் இருக்காங்க. என்கூடப்பிறந்தவன் தம்பி மட்டுந்தான். அவன்பேரு தம்பிப்பிள்ளை. நான் அவனை அம்பியன்னுதான் கூப்பிடுவேன். ராசுவைப் போல எனக்கும் வீட்டு வேலைக்கு ஆள் இருந்தா நான் தினமும் பள்ளிக்கூடம் போவேன்.

ஒழுங்கா பள்ளிக்கூடம் போயிருந்தால் இந்த வருஷம் நாலாம்கிளாசுக்குப் பாஸ் பண்ணிஇருப்பேன். கோபால் இப்ப டவுண் இஸ்கூல்ல நாலாம் கிளாஸ்தான் படிக்கிறான். போனவருஷம் நானும் அவனும் மூணாம் கிளாஸ்தான் படிச்சோம்.

கோபாலுவுங்க அப்பா கங்காணி வேல பாக்குது. நானும் அம்மா கிட்ட கோபாலுக்கு மாதிரி எனக்கும் தொப்பி, சாப்பாத்தெல்லாம் வாங்கித்தாம்மான்னு கேட்டேன். 'இப்ப சல்லி இல்ல சம்பளத்திற்கு வாங்கித் தாரேன்னு சொல்லிச்சி சம்பளத்திற்கு கேட்டா அடுத்தமாசம் பாப்போம்னு சொல்லும்.

எனக்கு அப்பா இல்ல. இஸ்டோருக்கு அடுப்புக்கு சவுக்கு மரம் வெட்டுகிற போது, "வாதுஅடிச்சி" அப்பா செத்துப்போச்சு. அப்பா இருந்தால் எனக்கும் சப்பாத்து வாங்கித்தாப்பான்னு கேப்பேன்.

"டவுண் பள்ளிக்கூடத்தில் புள்ளைகளுக்கு பால், இசுக்கோத்து எல்லாம் கொடுக்கிறாங்களாம். கோபாலுதான் சொன்னான். எங்க தோட்டத்து பள்ளிக் கூடத்திலேயும் கொடுத்தா என்னவாம். எங்களுக்கும் கொடுத்தால் நான் பாலைக் குடிச்சிட்டு இசுக்கோத்த அம்பிபயலுக்கு கொண்டாந்து கொடுத்திடுவேன்."

அம்பிப்பய தொட்டியில இருந்துகிட்டு அழறான். நான் போய் அவனுக்கு மல்லித்தண்ணிய பருக்கிவிட்டுட்டு தூங்க வைக்கணும். இல்லாட்டி அம்மா வந்து 'ஏன்டா தம்பி அழுது இருக்கான் தம்பியை பார்த்துகிட்டு இருக்காம லயஞ்சுத்தப் போனியா..' இனிமே போவியா...? போவியான்னு அடிக்கும். மெதுவாத்தான் அடிக்கும். அப்புறம் தேத்தண்ணி ஊத்தி கொடுக்கும். கருப்பட்டியும் கொடுக்கும். நான் கடிச்சிக்கிட்டே குடிப்பேன். அம்மாவுக்கு தெரியாம கருப்பட்டி எடுத்துத் தின்னா அடிக்கும்.

*ஆராரோ ஆரிரரோ.....*
*ஆராரோ ஆரிரரோ.....*
*ஆரடிச்சி நீயழுர.....*

இந்த அம்பிப்பய ரொம்ப மோசம். எப்ப பார்த்தாலும் வீல்... வீல்ன்னு கத்துறான். அதுதான் அம்மா கிட்ட, தகப்பன் தின்னிப்பயலே எந்த நேரமும் கரையாதடா'ன்னு நல்லா ஏச்சு வாங்குறான். இரு... இரு... ஒனக்கு ஒரு நல்ல பாட்டா படிக்கிறேன். தோட்டத்தில போட்ட 'ஏழையின் வெற்றி அல்லது நீதி வெல்லும் நாடகத்தில் வீரமுத்து பாடுன பாட்டு இது.

*விவசாயி... விவசாயி*

*விவசாயி...*

*கடவுள் என்னும்*

*முதலாளி....*

தொட்டியை ஆட்டி விடறபோது மேலே முகட்டில இருந்து ஒட்டரை ஒட்டரையா கொட்டுது. வீட்டு உள்ளுக்கு தொட்டியை மாத்திக் கட்டுறதுக்கு வேற இடம் இல்ல. அந்தப்பக்கம் அடுப்பு, விறகு அட்டலெல்லாம் இருக்கும். அங்க இருந்து புகை வரும்.

அப்பா... ஒரு மாதிரியா அம்பிபய தூங்கிட்டான் அவன் முழிச்சி எழும்புறதுக்கு முந்தி ஓடி ஒரு வாளி தண்ணி கொண்டாந்து வச்சிடனும். அப்புறம் மலைக்கு சோறு கட்டி கொடுத்திட்டு மிலாறுக்குப் போற பொடியன்களோட போயிட்டு ஒரு கட்டு மிலாறு கொண்டாந்து வச்சிட்டா, என் வேலை எல்லாம் முடிஞ்சிடும்... ஓல்ரைட்.

வெள்ளிக்கிழமை அந்திக்கு ஸ்டோர்ல மணி அடிச்சாங்க. நான் ராமு, ராசு எல்லோரும் அரிசி புடிக்கப்போனோம். 'நீ இனிமே பள்ளிக்கூடத்துக்கு வர மாட்டியா'ன்னு ராமு கேட்டான். நாம் அப்பிப்பய பெரிய ஆளாக வந்தோடன வருவேன்னு சொன்னேன்.

ராமு சொன்னான், 'உங்களுக்கெல்லாம் சேரு நல்ல வேலை செய்யப் போறாராம்? 'என்ன செய்யப் போறாரு...?

"அது என்னமோ... எனக்குத் தெரியாது அடுத்த வாரம் சோதனை இருக்காம். நாளைக்கு கட்டாயம் வராத புள்ளைகளையெல்லாம் பள்ளிக்கூடத்திற்கு கூட்டிக்கிட்டு வரச்சொன்னாரு"

"வேற ஒன்னும் சொல்லலியா...?

"வேற ஒன்னும் எங்க கிட்டச் சொல்லல்ல. டீச்சர் கிட்டதான் மெதுவாச் சொன்னாரு"

"என்னா?"

"மகள்! வரவு ரொம்ப விழுந்துப்போச்சி. இன்ஸ்பெக்டர் வேறு அடுத்த வாரம் சோதனைக்கு வாராராம். இதை இப்படியே விட்டு வைச்ச மென்றால் ஒரு ஆள் வீட்டதான் போகவேண்டிவரும். புதுக்க வந்து சேர்க்குலரை பார்த்தாபயமா இருக்கு"

அரிசிக் காம்பராவை சுத்தி புள்ளைகளெல்லாம் கூடைப் பெட்டி, குட்டிச்சாகு எல்லாத்தையும் வச்சிக்கிட்டு நிற்குதுக, ஐயா பேரு வாசிக்க வாசிக்க ஒரு ஆளு அளந்து போடுவான். அரிசி மூட்டை மாவு மூட்டையெல்லாம் சுவத்தோரமா அடுக்கி இருக்கும் திண்ணையில் பள்ளிக்கூடத்தில் உள்ள போட்பலகை மாதிரி ஒருபலகை சுவத்தில் தொங்க வச்சியிருக்காங்க. அதுல அரிசி மாசியின்னு எல்லாம் எழுதியிருக்கு.

ராசு கூடைப்பெட்டியை என்கிட்ட கொடுத்திட்டு பங்களா மரத்திற்கு மாங்காய் பொறக்க போயிட்டான். நானும் ராமுவும் ஜன்னல் கண்ணாடியில எட்டிப்பார்த்தோம். உள்ளுக்கு ஐயாவுக்கு பக்கத்தில சேரும் உக்கார்ந்து கிட்டு, கையை ஆட்டி ஆட்டி என்னமோவெல்லாம் சொல்லிக்கிட்டு இருக்கிறாரு. ஒரே... பயம் ஜன்னலை விட்டு மெதுவா நகர்ந்திட்டேன்.

அரிசி புடிச்சி கிட்டு வீட்டுக்குப்போற புள்ளைகளெல்லாம் கண்ண துடைச்சிக் கிட்டு போவுதுக, வழமையா அரிசி போடற பிச்சைக் காரங்களுக்குகூட அரிசி போடல்ல. என்னா? என்னான்னு கையால சாட கேட்டா ஒன்னும் பதில் சொல்லுதுக இல்ல. அரிசி போடற இடத்தில சத்தம் போட்டு கதைக்க ஏலாது. சத்தம் போட்டா வெறட்டுவாங்க.

செங்கான் நல்லமுத்து எட்டுக்கொத்து கிச்சான் அளந்து போட்ட அரிசியை வாங்கிக்கிட்டு போறான்.

‘‘ரெண்டாவது மாரியாய் நாலு கொத்து’’

அம்மா பேரு வாசிச்சோடன நான் கூடைப் பெட்டியை எடுத்துக்கிட்டு உள்ளுக்குப் போறேன். ஐயா என்னமோ கேக்கிற மாதிரி சேர் முகத்தை பார்க்கிறாரு. சேர்க்கையில வச்சியிருந்த காகிதத்துண்டை வாசிச்சுப் பார்த்துப்புட்டு பையன் ‘எப்சண்டு’ன்னு சொல்றாரு.

ஐயா கால் சட்டை சேப்புல கையவிட்டு கைலேஞ்ச எடுத்து கண்ணாடியையும் முகத்தையும் தொடச்சிக்கிட்டே ‘உங்களுக்கெல்லாம் ஒழுங்கா ஸ்கூலுக்கு போய் படிக்க ஏலாதா? தெரியாமலா வெள்ளக்காரன் இஸ்கூல் கட்டிப் போட்டிருக்கிறான். நாளைக்கு பேர் பதிஞ்சி வேலைக்குப் போகியின்னா எப்புடிடா கொழுந்து றாத்தல் கணக்கு வச்சிக்கிற போற? அட... இத்தனை நாள் வேல செஞ்சிருக்கோமுன்னு பேரு கணக்கு சரி ஞாபகம் வச்சிக்கிற வேண்டாமா?’’

எனக்குப் பயமா... இருக்கு ஒன்னுமே பதில் பேசல்ல. தலையை குனிஞ்சு கிட்டு கால் பெருவிரல் நகத்தால் சிமிந்தியை தேச்சிக்கிட்டு இருக்கிறேன்.

‘‘பாருங்கோ ஐயா இதிலிருக்கின்ற வில்லங்கத்தை, ஆசிரிய தொழில் என்றால் மகத்தானது அல்லோ! நான் சேவை செய்யவேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காகத்தான். இந்த துறையை தெரிஞ்சன் பாருங்கோ! என்னிலும்

படிப்புக் குறைஞ்ச என்ர ஒன்றுவிட்ட தமையன் பிஸ்னஸ்ல இறங்கி இன்றைக்கு லட்ச லட்சமாய் சம்பாதிச்சுப் போட்டான். எனக்கும் அப்படி செய்திருக்க இயலாதோ. இப்பவும் பாருங்கோ எவன்படிச்சாலென்ன படிக்காவிட்டாலென்ன என்று சம்பளத்தை வாங்கிக் கொண்டு மற்ற வாத்திமாரைப் போல லாத்தி திரிய ஏலாதே...'

"நீங்க கவலைப்படாதீங்க மாஸ்டர்" இப்ப அடிச்சியிருக்கிற துரும்பு அருமையானது. நாளைக்குப் பள்ளிக்கூடத்திற்கு போய் பாருங்களே, நீங்கள் மலைலச்சு போவீங்க. சரி கருப்பையா கூடப் பெட்டிக்கு ரெண்டு போடு"

ஐயா சொன்னோடன அரிசி போடுற ஆளு ரெண்டு கொத்து அளந்து போட்டிட்டு சொல்றான். "இஸ்கூலுக்குப் போவாத புள்ளைகளுக்கெல்லாம் அசிரி நிற்பாட்டி இருக்கு. இனி இஸ்கூலுக்கு போனாதான் அரிசி கெடைக்கும்.

நான் வீட்டுக்குப் போய் அம்மா கிட்ட சொன்னேன். அம்மா அழுதிச்சு. இந்த அம்மா பெரிய மோசம், எப்ப பார்த்தாலும் அழுகைதான்.

"பாவிப்பயலுக ஒரு புள்ள காம்பிரா கட்ட மாட்டேங்கிறானுகளே... தொரை தலைவர் மாருக்கு ஒதவி செஞ்சி கைக்குள போட்டிட்டாள்" அம்மா. என்ன சொல்லுதோ தெரியல எனக்கு விளங்கல.........

"அப்ப ஒன்னுமே சொல்லல்ல. அடுத்த நாள் வேலை விட்டு வருகிற நேரம். அஞ்சாறு வாகைக்கம்பை பலகை மாதிரி சீவி எடுத்துக்கிட்டு வந்திச்சி, அப்புறம் இஸ்தோப்புல நாலு கட்ட கம்ப, நட்டு பலகை மாதிரி சீவிக்கிட்டு வந்த வாகைக்கம்ப சுத்திவரவச்சி அடிச்சிருச்சி இப்ப பாத்தா, கூடுமாதிரி இருக்கு. ரெண்டாம் புத்தகத்தில் புலியும் பிராமணனும் பாடத்தில புலியின் சொல்லை நம்பி பிராமணன் திறந்து விட்டானே கூடு; அந்தப்படம் மாதிரியே இருக்கு.

நான் மெதுவாக கூட்டு உள்ளுக்குப் போனேன். கால் லேசா தட்டுப்பட்டு "படக்கின்னு" சத்தம் கேட்டிருச்சி.

நீ அதுல வெளையாடி ஒடைச்சுப்புடாத. அது ஒனக்கு இல்ல. அம்பிப்பயலுக் குத்தான். காலையில் தம்பியை உள்ளுக்கு விட்டுட்டு பள்ளிக் கூடத்திற்குப் போ.

அம்மா சொன்னோடன்ன நான் மெதுவா தாண்டி வந்துட்டேன். ஆனால் தம்பி பயலுக்குத் தாண்டிவர ஏலாது. நுழைஞ்சும் வர ஏலாது.

காலையில கூட்டுள்ளுக்கு சாக்கைவிரிச்சி அம்பிப்பயல படுக்க வச்சிட்டு, பள்ளிக்கூடத்திற்குப் போனேன். மேகணக்கு, டொப்டிவிசனிலிருந்தெல்லாம் புள்ளைகள் வந்திருந்தாங்க. எங்களையெல்லாம் கண்டோடன சேரும் டீச்சரும் பெருசா சிரிச்சாங்க.

“தெரியாமலா சொன்னான். எல்லா பிரச்சினைகளும் பொருளாதார பிரச்சினைதான்னு பொருளாதாரம்னா என்னா வயிறுதான்! வயிற்றில் கைவக்க.... இங்கபள்ளிக்கூடம் இடம் காணல்ல... ஹா... ஹ...”

சேரு சிரிக்கிறாரு. அவருக்கென்ன சிரிப்பாரு. நாங்கள் எல்லாம் அழுவுறோம்.

புள்ளைகளெல்லாம் ஒரெண்டு ரெண்டு படிக்குதுக.

“மகள் இங்க ஒருக்கா வாங்கோ” சேரு டீச்சரைக் கூப்பிட்டாரு

“என்னப்பா கூப்பிட்டனீங்களே” “கையோட அந்த ஸ்கூல் இன்ஸ்பெக்டருடை பைலை எடுங்கோ. ரெண்டு பேருக்கென்ன மூன்று பேருக்கென்டாலும் எவரேஜ் இருக்கு. குறித்தபடி அடுத்த வாரமே சோதனைக்கு வரலாம் என்று கடிதம் போட்டிடவேணும்”

“இந்தச் சனியன் பிடிச்சதுகளெல்லாம் கடைசி நேரத்தில வந்து நிற்குதுகளே, அடுத்த வாரம் இன்ஸ்பெக்டர் வந்தாப்போல என்னென்று பதில் சொல்லப் போவுதுகள்...!”

அதைப்பற்றி நமக்கென்ன கவலை. எவரேஜ் சரியா இருந்து கிராண்ட் குறையாமல் ஒழுங்கா வந்தால் போதும். இவன் இன்ஸ்பெக்டர் இல்லை. எந்தக் கொம்பன் வந்தாலும் பயப்படுகிற நானே.? அந்தக் கம் போத்திலை ஒருக்காக இப்புடி தாங்கோ கையோட கடிதத்தை அனுப்பிடுவோம்”

“மகள் நம்மட விக்னேஸ்வரனுக்கு இந்த ஊர் சுவாத்தியம் ஒத்து வருமா...?”

“விக்னேஸ்வரனா.... யார் அது....”

என்ன பிள்ளை தெரியாது போல கேட்கிற நீ. அவன்தான் உன்ர மாமியின்ர மகன். சோதனை பாஸ் பண்ணிப்போட்டு அங்கை கொடிகாமத்தலை சுருட்டுக் கடையில் நின்டவன்....?

“ஓம்... ஓம்... புக்கரசி மாமியின்ர மோனை சொல்லுற னீங்களா...? அதுக்கென்ன இப்ப...?”

“அதில்ல புள்ளை, ஆளைகடித மெழுதி ஒருக்காக வரச்சொன்னால் நல்லம். அடுத்த வருடம்தான் நான் பென்சன்னால போறேன். எண்டாலும் ஆளை இப்ப இருந்தே இங்க எக்டிங்ல போட்டு வந்தால் தான் சரிவரும். இங்கையும் தோட்டத்தில சோதனை பாஸ் பண்ணின பொடியள் இரண்டொருத்தர் இதுல கண்வச்சி இருக்கினமாக்கும் சரி.... சரி.... பாக்கிறன்”

சேரும் டீச்சரும் கதைச்சிக்கிட்டே இருக்காங்க. நான் வெளிய எட்டிப் பார்த்தேன். துவராத்தில மலைகளெல்லாம் ஒட்டகம் மாதிரி வளைஞ்சி வளைஞ்சி இருக்கு. மேகமெல்லாம் ஓடிப்பிடிச்சு விளையாடுதுகள்.

வெள்ளை மேகம் தோத்து தோத்து ஓடுது. கறுப்பு மேகம் அதைஅப்படியே போட்டு அமுக்கி மறைக்கிறது... இப்ப எங்கே பார்த்தாலும் கறுப்பு மேகமாத்தான் தெரியுது. மழையும் வரும் போல இருக்கு.

எனக்கு படிக்கவே நினைவுவரல்ல. தம்பிபய திண்ணையில கூட்டுல கிடந்துக்கிட்டு அழுவானே ஒன்டுக்கு ரெண்டுக்கு இருந்திட்டா யாரு மாத்திப் போடுறது. மழை பெய்தால் சாரல் அடிச்சி மேலெல்லாம் நனைஞ்சிறுமே... கூட்டுல இருக்கிற ரொட்டித் துண்டு திங்கிறேன்னு அடுத்தவீட்டு ஜிம்மி நாய் கடிச்சாலும் கடிச்சிறும்.

நான் உடனே ஓடிப் போய் அவனைப் பார்க்கனும். அப்படியே தூக்கி வச்சிக்கிட்டு கொஞ்சனும் போல இருக்கு.....

[வீரகேசரியும் மலையக எழுத்தாளர் மன்றமும் நடத்திய நான்காவது சிறுகதைப் போட்டியில் முதற்பரிசு பெற்ற சிறுகதை]

**(1971 வீரகேசரி )**



# மேகம் மூடிய மலைகளில் ...

மூலையில் கிடந்த சாக்கை நான்காக மடித்து கமக்கட்டில் இடுக்கிக் கொண்டவன், ஓசைப்படாமல் கதவைத் திறந்து, ஓட்டுக்குள் இருந்து தலையை நீட்டும் ஆமையாய் எட்டிப் பார்க்கின்றான்.

பத்துக் "காம்பரா" திண்ணை நெடுகிலும் இராமாயணம் படித்தவர்களும் இன்னும் "டோலக்" சகிதம் "பைலா" போட்டவர்களும் தடம் புரண்ட புகையிரதத்திலிருந்து, சிதறுண்டவர்களைப் போல் ஒரு ஒழுங்கில்லாமல் தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

அந்தப் பத்துக் "காம்பரா" வாசிகளின் புண்ணியத்தில் உயிர் வாழும் சொறிநாய் கூட, குளிரின் "கொடுகிற்காக" குப்பை மேட்டைத் தேடி போய் விட்டிருந்தது.

கதவை இழுத்து சாத்தி விட்டு அடிமேல் அடிவைத்து முற்றத்திற்கு வந்தான் இராசையா.

நாற்புறமும் சுவர் வைத்தாற்போன்று எழுந்து நிற்கும் கருநீல மலைகளின் சுவடே தெரியாமல் வெண்பனிக் கூட்டம் அப்பிக் கிடக்கின்றது என்றாலும் ஒரு பருந்து இறக்கையை விரித்தாற் போன்ற தோற்றத்தையுடைய குன்றின் மீதிருக்கும் தேயிலை "ஸ்டோரின்" வெள்ளித் தகரம் பளிச்சென்று தெரிகின்றது.

இருளின் அந்த காரத்தில் முழு உலகமே மூழ்கி விட்டது போன்ற பிரமை அவனுக்கு.... மனசு என்னவோ நினைத்து நிலை புரண்டது!

லயத்திற்கும் ஸ்டோருக்கும் ஒரு கூப்பிடு தூரம் தான் இருக்கும். குறுக்குப் பாதையில் நடந்தால் நாலே எட்டில் போய் விடலாம். மண் ரோட்டில்

சென்றால் சற்று தூரம். காலையும் மாலையும் கொழுந்து லொறி மட்டும். இரண்டு தடவை அந்த செம்மண் தரையில் தடம் புதைத்துக் கொண்டு ஓடும். மற்றபடி எல்லாம் குறுக்குப் பாதையில் தான் நடைபெறும். ஐயா கூட "மஸ்டர்" எடுத்துவிட்டு அம்மா தயாராக வைத்திருக்கும் தேநீரை ஒரு வாய் கொட்டிக் கொண்டு "விசுக்" கென்று குறுக்குப் பாதையில் தான் ஏறிவிடுவார்.

குறுக்குப் பாதையில் சென்றால், அரிசி காம்பராவிற்கு முன்னால் கோழித் தூக்கம் போட்டுக்கொண்டிருக்கும் காவற்காரனுக்கு எவ்விதத்திலும் ஆள் வருவது தெரிந்து விடும். எனவே தான் மண்ரோடு வழியாக செல்வது புத்திசாலித்தனமானது, பாதுகாப்பானது என்பதை உணர்ந்தவன் லயத்துக் கோடியைச் சுற்றிக் கொண்டு மண் ரோட்டில் இறங்கினான்.

இருளில் கால்கள் பின்னின... "டோர்ச் லைட்டை எடுத்து வந்திருக்கலாம் என்று நினைத்தவன் வானத்தை அண்ணார்ந்துப் பார்த்தான்.

விரிவானம் அம்மலாகக் கிடக்கிறது.

நெஞ்சில் ஏற்பட்ட ஆக்ரோசத்தினால் "நினைத்ததை எப்படியும் நிறைவேற்றியே தீர வேண்டும்" என்ற வேட்கையோடு அவன் புறப்பட்டிருந்த போதிலும் குளிரில் நடுங்கும் தசையை விட, மனமும் நடுங்கிக்கொண்டு தான் இருந்தது.

"திருப்பிப்போய் படுத்துக் கொள்ளலாமா?.... என்று கூட ஒரு கணம் நினைத்தான். "சே..... சே...." என்ன கோழைத்தனம் நானும் "ஆம்பளத் தானே" என்று தனக்குத் தானே உணர்வேற்றிக் கொண்டான். கூடவே முனியாண்டியின் தோற்றமும் மனத்திரையில் படம் விரித்து நின்றது.

"கறுப்புப் போத்தல் கொடுத்தாடா காய்கறி சேனைப்போட நெனச்சிங்க" அந்தக் காலமெல்லாம் மலையேறிப் போச்சுடா!" என்று சுப்பையாவின் தோளில் கையைப் போட்டுக் கொண்டு தன்னைப் பார்த்து ஏளனமாக சிரித்தவாறு "சாடை" பேசினானே. அந்த முகம் ஏளனமாக சிரிக்கின்றது.

தேயிலைச் சாயமாய் காவி ஏறி நிற்கும் அந்தப் பற்களில் நெளிந்த இளிப்பு நெஞ்சில் பாய்ந்து ரம்பமாய் அறுக்கின்றது.

"முனியாண்டி நாளைக்கு பாருடா..... ம்" அவன் முணு முணுத்தபடியே மெதுவாக நடக்கின்றான்.

"ஆரம்பத்திலிருந்தே முனியாண்டி போட்டியாகத்தான் நின்றான். இராசையாவிற்கு அன்னாசித் துண்டு சேனைபோட கிடைத்து விட்டது" என்று அறிந்தபோது, இரண்டு "வெள்ளைப் போத்தல்" களோடு ஐயாவை சந்திக்கவும் செய்தான்.

இரண்டு போத்தல்களைக் கண்ட ஐயா வாயூறிப் போனார். இருந்தாலும் இப்பொழுது இவனுக்கு மாற்றிக் கொடுத்தால் "விஷயம் அம்பலாகி விடும்

என்பதை நன்கறிந்தவர்'' அட பாவி மகனே முன்னுக்கே வரக்கூடாதாடா? இப்ப..... எப்படி அழிச்சு பேசுறது அடுத்த தடவை பார்ப்போம் என்று அனுப்பி வைத்தார்.

''எல்லாத்திலேயும் பய முந்திக் கொள்கிறானே.... !'' எதில் மடக்கலாமென்று கறுவிக் கொண்டு ''வாரேங்க ஐயா ...'' என்று படியிறங்கி நடந்தான் முனியாண்டி. சற்று நேரத்திற்கு முன்னார் கனத்துக் கொண்டிருந்த ''அந்தப் பை'' இப்போது வெறுமையாய் அவன் தோளில் தொங்கிக் கொண்டிருந்தது.

தேயிலை தொழிற்சாலைக்குப் பின்புறமாக இருக்கும் சாம்பல் மேட்டிற்கு கிழக்கில் அன்னாசிச் செடி செய்கை பண்ணப் பட்டிருக்கும் இடத்தில் பாதி சோளப்புல் தோப்பாய் மண்டிக் கிடந்தது.

தளிரையெல்லாம் சருகாக்கும் ஆடிமாத வெயில். வாரத்திற்கு ஆறு நாட்கள் என்றிருந்த வேலை நாட்களில் இரண்டு நாள் ஒரு நாள் கிடைப்பதே அரிதாகிக் கொண்டு வந்தது.

சுழன்றடிக்கும் காற்று வேறு தளிரையெல்லாம் கொழுந்து கிள்ளும் பெண்களின் விரல்களிலுள்ள வெடிப்புகளைப் போல கிழித்தெறிந்து கொண்டிருந்தது.

காலத்தை வீணே ஓட்டக் கூடாதென்று நினைத்தவர்கள் எல்லாம் காய்கறித் தோட்டம் போடுவதில் இறங்கி விட்டார்கள்.

மானா புல் மலைகூட காய்கறி சேனையாகி விட்டது. கான் வங்கிகள், காட்டோர பவுன்டரிகளெல்லாம் கொடி போஞ்சுகளும், செடி போஞ்சுகளும் தலை தூக்கிக் கொண்டு நின்றன.

''சோளப்புல் காட்டையழிச்சா சோக்கான சேன போடலாம்'' என்று ஒவ்வொருவரும் வாயூறிக் கொண்டார்களே தவிர ஒருவரும் முன்வரவில்லை ''ஸ்டோருக்கு'' அருகில் இருப்பதால் நாளைக்கு ஏதொன்றும் நடந்து விட்டால் நாமும் கை கட்டிக் கொண்டு நிற்க வேண்டி வரும் என்ற பயமும் இருந்தது.

''என்னா...? தலையா....? போயிறும் ஒருக்கா கேட்டுத்தான் பார்ப்போமே''என்று நினைத்த இராசையா நாலு சவுக்குக் கட்டைகளைக் கொத்திய கையோடு மெதுவாக ஐயாவின் காதைக் கடித்தான்.

தலையைச் சொறிந்து கொண்டு நின்றவனிடம் ''ஏதும் மரம் செடி நட்டு தரா ..... கொடி வகையாக போடு'' என்று பெரிய ஐயா பெரிய மனசுடன் சொன்னாலும், பின்னால் கறிபாட்டிற்கும் உதவாமலா போகும்? என்ற நப்பாசையும் இருக்கத்தான் செய்தது.

தான் நினைத்தை விட காரியம் இலேசில் முடிந்ததையிட்டு பூரித்துப் போனான் இராசையா.

பள்ளத்தில் சிலிர்த்தோடும் அருவியாய் குதித்தோடியவன் அடுத்த நிமிஷமே மண்வெட்டியுடன் சோளப்புல் காட்டில் இறங்கி விட்டான்

அது ஒன்றும் பெரிய சேனை போடக்கூடிய இடமல்ல... நாளைந்து பாத்திகள் போடலம் அவ்வளவுதான்.

காலையில் மஸ்டர் களத்துக்குச் செல்வான். வேலை இல்லையென்று தெரிந்தவுடன் அப்படியே சேனைக்கு நடையைக் கட்டுவான் பகல் சாப்பாடு கூட சேனையில் தான் நடக்கும். மாலையில் நன்றாக இருட்டிய பின்னரே வீடு திரும்புவான்.

நான்கு நாளில் சாம்பல் தரையில் சுரை, வட்டக்காய், புடோல் என வகைக்கு, வகையாக நட்டு விட்டான்.

சேனைக்காரர்களில் இராசையாவிற்கே எல்லா தேவைக்கும் மிக வாய்ப்பாக போய்விட்டது. மற்றவர்களெல்லாம் தண்ணீர் கொண்டுவர குறைந்தது அரைமைல் தூரமாவது செல்ல வேண்டியிருந்தது. தேயிலை ஸ்டோரை சுற்றிக் கொண்டு செல்லும் அந்த சிற்றருவியிலிருந்து திருப்பப்பட்ட ஒரு கான் இவனுடைய சேனையை அரவணைத்துக் கொண்டு சென்றது.

சேனையிலிருந்து திரும்பியதும் ஒவ்வொரு நாளும் தவறாமல் அவனுடைய மனைவி சேனையைப்பற்றி அக்கறையோடு விசாரித்துக் கொள்வாள்.

அன்று அவன் சற்று நேரத்துடனேயே வீடு திரும்பவேண்டி இருந்தது. மாலையில் கட்சியின் கூட்டம் இருப்பதாக தலைவர் சொல்லி அனுப்பியிருந்தார். மாரியம்மன் கோயிலக்கு முன்பாக இருக்கும் மைதானத்தில் தான் கூட்டம் நடைபெறும். இராசையா அங்கு சென்ற போது ஆண்களும் பெண்களும் பிள்ளைகளுமாக அநேகர் குழுமியிருந்தனர்.

கூட்டம் தொடங்குவதற்கு அறிகுறியாக கோயில் மணி இரண்டு முறை கணீர் கணீர் என்று ஒலித்து அடங்கியது.

தலைவர் முழுதாக கூட்டத்தை ஒரு முறை நோட்டம் விட்ட பின்னர் "இப்ப நம்ம தோட்டத்தில் இருக்க நெலமய நான் உங்களுக்கு சொல்ல தேவயில்ல நல்லாத் தெரியும்" என்று பீடிகையோடு தொடங்கினார்.

"இல்ல நீங்களே சொல்லுங்க" ...... "கூட்டத்தின் மூலையில் இருந்து ஒரு குரல் கேட்டது. தொடர்ந்து இரண்டு மூன்று வாலிபர்கள் கச முச வென்று ஏதோ ரகசியமாக பேசிக் கொண்டார்கள்.

"நீங்க எல்லாம் என்ன நினைக்கிறீங்க......? எல்லாம் எனக்கு நல்லா தெரியுது நானும் கூடிய மட்டும் முயற்சி செய்து கொண்டு தான் இருக்கேன். நம்ம சங்கத்திலேயும் நடவடிக்கை எடுப்பதாக சொல்லியிருக்காங்க இதுக்கு மேல நம்ம வேல கேக்கிற துன்னா துரையை கேட்கிற மாதிரித்தான் கேட்கணும்" என்று நிறுத்தி விட்டு ஒரு முறை தொண்டையை சரிப்படுத்திக் கொண்டார்.

“அப்படித்தான் வேல கெடைக்கனுமினா அதுக்கும் தயார்” கூட்டத்தின் அமைதியைக் கிழித்துக் கொண்டு ஒரு குரல் ஒலித்தது. அனைவரும் ஏக காலத்தில் ஆச்சரியத்தோடு குரல் வந்த திசையை நோக்கினர். அங்கு இராசையா நின்று கொண்டிருந்தான்.

“மத்த டிவிசன்களிலெல்லாம் நாலு நாள் வேல கொடுக்கமுடியுமுன்னா இங்க மட்டும் ஏன் முடியாது? எங்களுக்கு மட்டும் வாயி வயிறு இல்லியா? அவன் குரல் ஆத்திரமாக ஒலித்தது. அவன் நின்ற தோற்றமே ஒரு வினாக் குறியைப் போலிருந்தது.

இந்தச் செய்தி காற்றோடு கலந்து மறைந்துவிட வில்லை. தக்கபடி கால் தலையெல்லாம் முளைத்து “இராசையாவும் புதிதாக ஆரம்பித்த சிவப்பு சங்க கட்சிக்காரர்களும் துரையைத் தாக்க கூட்டம் போட்டு திட்டம் தீட்டுகின்றனர்”. என்ற ரூபத்தில் துரையின் காதுக்கும் எட்டி விட்டது.

இராசையாவினதும் இன்னும் நான்கைந்து இளைஞர்களதும் முயற்சியினால் தோட்டத்திலுள்ள தொழிலாளிகள் சிலர்; புதிதாக ஆரம்பித்த இடது சாரி தொழிற் சங்கத்தில் சேர்ந்திருந்தனர். இது துரைக்கு கட்டோடு பிடிக்கவில்லை. புதிதாக ஆரம்பித்த சங்கம் தொழிலாளருக்கு சேவை புரிகிறது என்பதை எல்லா தொழிலாளர்களுமே உணர்ந்து கொள்ளாத போதும் துரை நன்கு புரிந்து கொண்டார். அதை சிதைத்து விட பல தந்திரோபாயங்களையும் மேற்கொண்டார்.

கூட்டத்தில் நடந்த நிகழ்ச்சியைக் கூட முனியாண்டிதான் துரையிடம் “கோள்” சொல்லியிருந்தான். அவன் சேர்ந்திருந்த கட்சியும் தோட்டத்து நிர்வாகத்துக்கு சார்பாகவே நடந்து கொண்டது அத்தனைக்கும் சிகரம் வைத்தாற்போன்று அமைந்தது போயா அன்று நடந்த சம்பவம்.

துரை பத்துமைல்களுக்கு அப்பால் இருக்கும் நகரிலுள்ள பிரபல கிளப்பிற்குச் சென்று தோட்டம் திரும்பிக் கொண்டிருந்த போது; பீலி வளைவில் தேயிலைப் புதரில் இருந்து பாய்ந்து வந்த கல் காரின் கண்ணாடியை உடைத்துக் கொண்டு துரைச்சாணியின் செவ்விளநீர் முகத்தைப் பதம் பார்த்து விட்டது.

இச்சம்பவத்தினை அடுத்து சந்தேகத்தின் பேரில் இராசையா கைது செய்யப்பட்டு, அடி உதையோடு வீடு திரும்பினான்.

வீடு திரும்பியவனை “காய் கறி சேனையில் யாரும் கை வைக்கக் கூடாதாம் எல்லாம் தோட்டத்துக்கு சொந்தமாம்” என்ற துரையின் புதிய சட்டத்தை கூறி வரவேற்றாள் அவன் மனைவி. அவனுக்கு வயிறு பற்றிக் கொண்டு வந்தது. சேனையை நம்பித்தான் மனைவியின் முக்குத்தியை அடகு வைத்து விதை உரம், சாராயம் எல்லாம் கூட வாங்கியிருந்தான்.

அடகு கடையில் வைத்த மூக்குத்தி மின்னவா இனி போகின்றது? கவலையோடு தலைவரை சந்திப்போம் என்று அடுத்த லயத்தை நோக்கி நடையை விட்டான். லயத்து கோடியில் முனியாண்டியும், சுப்பையாவும் நின்று கொண்டிருந்தார்கள். "கறுப்பு போத்தலை கொடுத்தாடா சேனை போட நெனச்சீங்க...... அந்தக் காலமெல்லாம் மலையேறிப் போச்சுடா" என்றான் முனியாண்டி,சுப்பையாவும் ஏதோ சொன்னான். இருவரும் நகைத்தபடி ஏதோ பேசிக் கொண்டார்கள்.

அவர்கள் தன்னைத்தான் "குத்திக்காட்டி" சாடை பேசுகிறார்கள் என்பதை அறிய இராசையாவிற்கு அதிக நேரம் பிடிக்கவில்லை. திரும்பி வந்த வழியே வீட்டிற்கு நடந்து விட்டான். தன்னுடைய முயற்சிகளை எல்லாம் முறியடித்தவர்களுக்கு தக்க பாடம் படிப்பிக்க வேண்டும் என நினைத்து ஒரு முடிவுக்கும் வந்தான்.

"பழிக்குப் பழி தீர்க்கின்றேன்" என்று கறுவிக் கொண்டவன் இடையை தடவிப் பார்க்கின்றான். அரையடி நீளமுடைய கத்தி தட்டுப்பட்டது. முன்னால் இருக்கும் தண்ணீர் தொட்டியைக் கடந்து ஐம்பது அடி தூரம் சென்றால்; காய்கறித் தோட்டத்தில் கால் வைத்து விடலாம். அதை நினைக்கும் போது அவன் நெஞ்சு பூரிப்படைகின்றது. யார் கண்ணிலும் தட்டுப்படாமல் சேனைக்குள் புகுந்து காய்கறிகளை எல்லாம் வெட்டிக் கொண்டு சென்றுவிட வேண்டும். காலையில் பிரட்டுக் களத்தில் "விஷயம்" அம்பலமாகி விடும். கூடவே இராசையா தான் வட்டக்காய்களையும், சுரக்காய்களையும் இரவோடிரவாக வெட்டிக்கொண்டு போய் விட்டான் என்பது எல்லோருக்கும் தெரிந்தாலும் அதை நிரூபித்து குற்றத்தை சுமத்திவிட முடியாது. "அடேய் முனியாண்டி என் சேனையாடா ஏட்டுச் சுரக்காயா போச்சி, நாளைக்கு காலையில் பாருடா உன் முகத்தில் கரி பூசுறேன்" தனது திட்டத்தையும், நெஞ்சுக்கு சுகமான நினைவுகளையும் அசை போட்டுக்கொண்டவன் அடி மேல் அடி வைத்து ஊர்ந்தான்.

"இனி மேல் தான் தனது திட்டத்தை கச்சிதமாக முடிக்க வேண்டும்." இதயம் உரமேற்றிக் கொண்டது.

பழகிப்போன அந்த செம்மன் பாதையில் கால்கள் லாவகமாக ஓசைப்படாமல் நகர்ந்தன. சில நிமிடங்கள்.. சேனையில் கால் பதித்தான்.

அவனது சேனை, அவன் பாடுபட்டு உண்டாக்கிய சேனை காய்த்து நிறைந்திருக்கும் காய் கறிகளை நொடிப் பொழுதில் வெட்டி எடுத்து, இரண்டு சாக்குகளில் நிறைத்து ஆசுவாசத்துடன் தூக்கிக் கொண்டு விரைந்தான். யாரும் காணவில்லை. தலைச்சுமையை மனச்சுமை குறைத்தது.

காவற்காரனுக்கு என்ன தூக்கம், கடமைதானே முக்கியம் கோழித்தூக்கம் போட்டுக் கொண்டிருந்த காவற் காரனின் காலில் எங்கோ

இருந்து வந்த ஒரு கட்டெறும்பு கடித்திருக்க வேண்டும். "சுண்டி விட்ட நாணயமாக குதித்து" எழுந்து நின்றான். அந்த சிறு பிராணி தனக்கு உதவி புரிந்ததாகவே நினைத்தான். கூடவே இரவு இரண்டு மணிக்கு பின்னர்; மணிக்கொரு தடவை அடிக்க வேண்டிய மணியையும் அடிக்கவில்லை என உணர்ந்த போது, மாலையில் துரையோடு "ஸ்டோரை சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்த வேளை அடுப்புக்கு வெளியே தாழ் வாரத்தில் கொட்டியிருக்கும் மட்ட ரக "டஸ்ட் தேயிலை குறைந்து போயிருப்பதைக் கண்ட துரை, "என்னா மேன் தேயிலை இவ்வளவு குறைந்து போயிருக்கு, ஏதும் பிளக் மார்க்கட் பிஸ்னஸ் செய்றீங்களா? லாஸ்ட் வோனிங்" எதுக்கும் சாமான் மூட்டை எல்லாம் கட்டி வை" என்ற வார்த்தை செவிப்பறையைக் குடைகின்றது.

துப்பாக்கியை எடுத்துக் கொண்டு ஒரு ரவுன் சுற்றி வருவோமே என்று கிளம்பினான் காவற்காரன். அடுப்பை சுற்றிக் கொண்டு வந்து தண்ணீர் தொட்டியில் ஏறி 'டோச்' லைட்டை வீசியடித்தபோது, தரை வரை படர்ந்திருந்த மேகத்தையும், புலரிக் காலத்து மென் இருட்டையும் கிழித்துக் கொண்டு பாயும் ஒளி வெள்ளத்தில் ஒரு உருவம் தலையில் நிறைசாக்குடன் செல்வது நிழலுருவில் தெரிகிறது. "பதட்டம்..." "காண்பது உண்மையா?"

தாழ்வாரத்தில் கொட்டியிருக்கும் மட்ட ரக "டஸ்ற்" தேயிலை குறைந்து போய் இருப்பதின் காரணம் பூடகமாக அவன் நெஞ்சில் மின்னலடிக்கின்றது. துப்பாக்கியை பிடித்த அவனது இடக்கை அவனையும் அறியாமலே முன்னால்.... நீளுகின்றது.......

"டுமில்"....ல்ல்ல்......ல்... என்ற ஓசை அவர்களுக்கு எட்டாத வாழ்க்கையாக உயர்ந்து; சீனப்பெருஞ் சுவராய் நீண்டு கிடக்கும் அந்த மலைகளிலும் எதிரொலித்துக் தேய்கின்றது. வேட்டினைத் தொடர்ந்து................

"ஐயோ....." என்ற அலறல். முக்கலும் முனகளும் ஈனஸ்வரத்தில் கேட்கின்றன.

வேட்டு வைத்தவன் வேகமாகப் பாய்ந்தான்.

வேகமாகப் பாய்ந்தவன்கண்டகாட்சி! ஒரு கணம் திகைத்து நின்றான் குண்டடிபட்டவன் ஒரு புறம் அகோரமாய்க் கிடக்க, மறுபுறத்தில் அவன் சுமந்து வந்த சாக்கு மூட்டை பிதுங்கியபடி கிடந்தது. அதிலிருந்து வட்டக்காய்களும், சுரக்காய்களும் வெளியில் என்ன நடக்கின்றது என்பதை முழி பிதிங்கி ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தன. தேயிலை தூள் எங்கே.... எங்கே....?

காவற்காரன் திகைத்து நின்றான். "கொடுகும் குளிரிலும் அவன் உடல் வியர்வையால் தெப்பமாக நனைந்து விட்டது.

மனம் கொழுந்துச் சாக்காய் கனத்தது. கால்கள் தள்ளாடின.

திகைத்து நின்றாவன் ஒரு கணத்தில் தன்னை சுதாகரித்துக் கொண்டு செயலில் இறங்கினான்.

சுற்றும் முற்றும் பார்த்தான். சாக்கிலிருந்த வட்டக் காய்களும், சுரக்காய்களும் "தொப் தொப்" பென்று நீர் வீழ்ச்சியில் குதித்து விட்டன. பூசனிக்காய் கங்கா ஸ்னானம் செய்து திருஷ்டி கழித்தது இராசையாவிற்காகவா......?

நடந்து முடிந்த பாதகச் செயலுக்கு காரணமாகவும் பிரத்தியட்ச உண்மைக்கு நிலைக்களனாகவும் இருந்த அவைகளை எவருக்குமே காட்டிக் கொடுப்பதில்லை என்று முடிவு கட்டியது போல் சுளித்து; சுளித்து ஓடும் சிற்றாறு; தன் அலைகளால் அணைத்து; வெகுதூரம் அடித்துச் சென்று விட்டது. வேறு சாட்சி எது? இல்லையே

வெற்றுச் சாக்கை தாழ்வாரத்தில் கொட்டிக் கிடந்த "டஸ்ட்" தேயிலை இடம் பிடித்துக் கொண்டது.

எல்லாமே ஒரு நொடிப் பொழுதில்.. .

காவற்காரன் நிம்மதிப் பெருமூச்சு விட்டான். ...

"அப்பாடா.."

மறுகணம், அவசர அவசரமாக துரையின் பங்களாவை நோக்கி ஓடுகினறான். தண்ணீ தண்ணீ. .. இராசையாவின் உயிர், தண்ணீர்ப் பிச்சைக் கேட்டு முனங்க....

இருளும் கரைந்து பயந்து ஓட; கிழக்கு சிவந்து கொண்டிருக்கிறது.

**நன்றி - வீரகேசரி - 1972**



# உரிமை வேண்டும்.

தேவநாயகம் ஆசிரியர் பாடசாயைிலிருந்து வீட்டுக்கு செல்லும் பாதையில் மலைச் சரிவில் அமைந்துள்ள குறுகிய படிக்கட்டுகளில் ஏறிக் கொண்டிருக்கின்றார். நாலைந்து படிகளை கடக்கும் போதே களைப்பு: வழமைக்கு மாறாக சோர்வு கால்க்ள் வெட வெடத்து தள்ளாடுகின்றன. முழங்கால்களைப் பிடித்தபடி 'அப்பாடா.........' என்று பெரு மூச்சு விட்டவாறு நின்று திரும்பி பார்க்கின்றார்.

பள்ளத்தில் பதுளை நகரை வலப்புறமாகச் சுற்றி அணைத்தவாறு வளைந்து வளைந்து ஓடும் மகாவலி நதியும், ஆற்றுக்கு சமாந்திரமாக குன்றில் அமைந்துள்ள பாடசாலைக் கட்டிடமும், கட்டத்தின் முகப்பில் முகிலில் தவழும் சம்மன சென பட்டொளி வீசி பறந்து கொண்டிருக்கும் கொடியும்; அக்கரையில் கலைத்த தேன் கூட்டில் தேனீர்கள் மொய்ப்பது போல் நகரில் உலாவும் மக்களும் மாலை ஒளியில் புகைக்குப் பின்னால் துலங்கும் ஓவியமாகத் தெரிய......

சின்ன சின்ன மேகங்கள் கீழே இறங்கி வாடி இட இடம் தேடி அலைகின்றன.

இன்று நேற்றா? கடந்த பதினைந்து வருடங்களாக துள்ளி குதித்து கட்டுக்கடங்காமல் கொட்டும் அருவியாக; எதுவித சோர்வோ கலக்கமோ இன்றி உற்சாகத்துடன் தினமும் ஏறி இறங்கிய படித் கட்டுகள் தான். ஆனால் இன்று....

நான்கு படிகட்டுகளைத் தாண்டும் போதே கால்கள் சோர்ந்து தள்ளாட...... உடல் மட்டுமா? உள்ளமும்......... இனம் புரியாத கலக்கம். தேயிலைத் தளிரில்

சிந்தியிருக்கும் பனி முத்துக்களென கண்கள் பனிக்க...இமைக் கோடியில் திரளும் கண்ணீரை புறங்கையால் துடைத்துக் கொள்கிறார்.

எத்தனையோ வருடங்களாக அவர் எதிர்பார்த்து ஏங்கிய கனவு மலர்ந்து; இன்று நனவாகியபோது........

காலங்காலமாக கட்டிய மனக்கோட்டை மாயமாகி விடாது; கண் முன்னே கை கூடி நிதர்சனமாகிய வேளை; அவர் உள்ளம் சிலிர்த்து கொள்கிறது.

மலையும்; நதியும்; தழுவும் மேகக் கூட்டங்களும் மயன் பட்டினமாக விளங்கும் நகரும் நாளெல்லாம் பார்த்தாலும் சலிக்காத காட்சி. கண் கொள்ளக் காட்சி. குளிர்கால மேகங்கள் மலையில் இறங்குவதைப் போல வாத்ஸல்யத் தோடு பதியும் பார்வையை பெயர்த் தெடுத்து; மீண்டும் படியேற முனையும் போது; பாடசாலைக் கட்டிடம் கண்ணில் விரிகின்றது.

தேவ நாயகம் வாலிபத்திற்கு கட்டியம் கூறி கரு கரு வென வளர்ந்து நிற்கும் அரும்பு மீசையோடு; இந்தப் பகுதிக்கு வேலைக் கென வந்த போது அவருக்குப் பாடசாலை ஒன்றினை ஆரம்பிக்கும் எண்ணம் துளி கூட இருந்த தில்லை.

கண்டியில் உள்ள பிரபல கல்லூரியென்றில் படிப்பினை முடித்த பின்னர்; கம்பெனி தோட்டம் ஒன்றில் சேர்ந்து இரண்டு வருட பயிற்சியினைப் பெற்றுக் கொண்டு; நேரடியாக இந்தப் பகுதியிலுள்ள தோட்டமொன்றிற்கு உத்தியோகத் தராகத்தான் வந்து சேர்ந்தார். கை நிறைய சம்பளம், கூப்பிட்ட குரலுக்கு ஓடி வர ஆள்; இட்ட வேலைக்கு எடுபிடிகள் என்று அதிகாரம் குறைவில்லாத உத்தி யோகம்தான். ஆனால் தொழிலாளரைக் கசக்கி பிழியும் அந்தத் தொழிலில் தொடர்ந்தும் ஒட்டிக்கொண்டிருக்க அவர் மனசாட்சி கொஞ்சமும் இடந் தரவில்லை. துரை த்தனத்தையும் தொழிலாளரை கூலி அடிமைகளாக நடத்தும் போக்கையினையும் அடியோடு வெறுத்தார்.

ஓர் அதிகாரியாக இல்லாது; தொழிலாளர்களின் உணர்வுகளோடு இணைந்து அவர்களின் சுக துக்கங்களில் கொண்டுழைக்கும் அவரது இயற்கையான இனிய சுபாவம் எல்லாம் ஒன்று சேர்ந்து இறுதியில் அவருடைய உத்தியோகத்திற்கே "உலை" வைப்பதாக அமைந்து விட்டது.

"லேபர்ஸ்களோடு அதிகமாக 'மூவ்' பண்ணுகிறார் 'கண்ட்ரோல்' கிடையாது. டிசிப்பிலின் கெட்டுப்போகும். நிர்வாகத்தின் பங்கில் எழுந்த நியாயம் இவை. முதலில் அறிவுறுத்தல் பின்னர் எச்சரிக்கை – விளக்கம் கேட்டு கடிதக் கணைகள் இறுதியில் விசாரணையோடு டிவிசன் மாற்றம். இவை தொடர் கதை யெனத் தொடர........

ப்....... பூ விட்டது சனியன்! என்று உத்தியோகத்தை உதறித் தள்ளி; இறங்கி விட்டார் தோட்டத்தைவிட்டு.

"ஆள் நல்ல மனுசன். ஆனால் பிழைக்கத் தெரியாதவன்" என்று சக உத்தியோகத்தர்கள் ஒரு பாட்டம் அழுது வைத்தார்கள் "வாலிப முறுக்கு இப்போ தெரியாது. போகப் போகத் தெரியும்." அனுபவசாலியான சீப் கிளார்க் சமாதானம் சொல்லிக் கொண்டார். உத்தியோகத்தை தூக்கி எறிந்தாகி விட்டது. அடுத்து "தன்மானத்தோடு சுய மரியாதையுடன் ஒரு தொழில் செய்ய வேண்டும்" இது உணர்வு தரும் உந்தல். தன் இனம் உழைத்து, உழைத்து உடலும் நொந்து வருந்துவது அறியாமை இருளில் மூழ்கி அல்லல்பட்டு; சுய நலக் காரர்களினதும், வஞ்சகர்களினதும் வலையில் வீழ்ந்து சுய சிந்தனையின்றி நாளும் பொழுதும் நலிவுற்று வாடுவதற்கு கல்வி இன்மையே; மூல காரணமாகும். இது அனுபவம் தந்த முனைப்பு.... முத்திரை

"நமது சமூகம் உயர்வு பெற கல்வி வளர்ச்சி அவசியம் இதற்கு நமது பங்கிளிப்பு..? வெறுமனே விமர்சனங்களும் வியாக்கியானங்களும் பிரயோசனமற்றவை சமுதாய உணர்வில்லாத படிப்பாளிகளால் நன்மை இல்லை. ஆக்கப்பூர்வமான பங்களிப்பு தேவை. சிக்கலற்ற சிந்தனை செயல்படவும் தூண்டியது.

தேவநாயகம் ஆசிரியரானால்.....? எண்ணங்கள் விரிந்தன. " நாமே ஒரு வழிகாட்டியானால்........" மனதுக்குள் மத்தாப்பு சிதறியது. "தோட்டம் தோறும் பாடசாலை நடக்கின்றது எதை காட்டிக் கொள்ள மாட்டுத் தொழுவத்தைப் போன்று ஓர் ஆரம்ப பாடசாலை அதன் உள்நோக்கம் சிறார்கள் தன்னிச்சையாக தோட்டத்தில் அலைந்து திரிந்து பயிர்களை நாசம் செய்து விடாமல் காப்பது. அதில் தானே; "சர்வ சகல கலா வல்லவனாக விளங்கி" "வன் மேன்" ஷோ நடத்தக் கூடிய ஒரு தமிழ் வாத்தியார். இது தான் ஆதி ஆரம்ப தோட்ட பாடசாலையின் சராசரி வரைவிலக்கணம்.

ஆசிரியர் தோட்டத்திற்கு வெளியே இருந்து "வந்து போறவர்" என்றால் பாடசாலை எப்போது ஆரம்பிக்கும் எப்போது மூடும் என்பதெல்லாம் அறிய முடியாத ரகசியம்தான் கல்வி வளர்ச்சி எப்படி ஏற்படும். நகரில் பெரிய கல்லூரிகள் உள்ளன. உயர்கல்வி போதிக்கப் படுகின்றது. அங்கு தோட்ட தொழிலாளியின் குழந்தைக்கு இடம் கிடைக்குமா? துரை, உத்தியோகத்தர் எனத் தொடங்கி பெரிய கங்காணியின் பிள்ளை வரையில் சிபாரிசு முடிந்து விடும். இதற்கும் கீழே சிபாரிசு பட்டியல் இறங்காது. நகரில் கல்லூரிகளில் சேர்ந்து படிப்பிக்கப் பெரும் பணம் வேண்டும்....

அடுத்த மாதமே நகரில் ஆற்றோரமாக புறம் போக்கில் கிடந்த இந்த நிலத்தில் ஒரு பாடசாலையை ஆரம்பித்து விட்டார்.

ஒரு தகரக் கொட்டிலில் நாலைந்து பெஞ்சுகள்; ஐந்தாறு வாங்குகள், பழுப்பு நிறத்தில் ஒரு கரும்பலகை, ஒரு ஆசிரியர் மேசை, ஒரு முக்காலி

இதுதான் சரசுவதி வித்தியாலயத்தின் அட்சரம். ஆனால் தோட்ட தொழிலாளரின் பிள்ளைகள் உயர்கல்வி பெற வேண்டும் என்ற இலட்சியத்திற்கு சூக்குமமாக வியூகம் வகுத்தது. அவர் மனதில் வரித்து நின்ற கல்விக் கூடம் பூசலார் கட்டிய ஆலயமாக பிள்ளையார் சுழி போட்டு விட்டது.

காலை, மாலை, இரவு என்று பாராமல் வேதனத்தை முதன்மை படுத்தாது சேவை மனப்பான்மையில் பாடம் நடத்திக் கொண்டிருக்கும் தேவ நாயகம் ஆசிரியரின் நல்ல நோக்கத்தை நகரிலுள்ள பலர் இனங் கண்டு தாமாகவே முன்வந்து உதவினர். இந்த நற்பணிகளுக்கு துரை விஸ்வநாதன் தலைமை தாங்கினார். தகர கொட்டிலுக்குப் பக்கத்திலுள்ள வங்கிச் சரிவை இடித்து பள்ளத்தை நிரப்பி தளம் வெட்டப்பட்டது. ஞாயிறு, போயா தினங்களில் போட்டி போட்டுக் கொண்டு சிரமதானம் நடைபெற்றது.

பரிசுக் குலுக்கல் இடம் பெற்றது வெட்டிய தளத்தில் அத்திவாரத்தைப் போட நாடகங்களை அரங்கேற்றி கூரையை அமைத்தனர். வேலை நடைபெறும் விறு விறுப்பையும் தேவ நாயகத்தின் சுறு சுறுப்பையும் கண்ட அபிமானிகள் கொடுத்த நன் கொடைகள் சுவர்களுக்கு சாந்து பூசி வெள்ளையிட்டு கொள்ளை அழகு காட்டின. பழைய தார் பீப்பா தகரக் கொட்டில் மண்டபமாக மாற; பாடசாலை குறிஞ்சிப் பூவாக மலர்ந்து.

ஒரு புறம் கட்டிடங்கள் எழுந்து கொண்டிருக்க, மறு புறம் ஐந்தாம் வகுப்பு ஆரம்பக் கல்வியோடு படிப்பினை இடை நிறுத்தி விட்டு உயர் கல்வி பெற முடியாது. கல்லூரி வளவில் மழைக்கு ஒதுங்கவும் முடியாது; தவித்தவர்கள், அதிகரித்துவிட்ட விட்ட வயதினையும் பொருட் படுத்தாது; சந்தர்ப்பம் கொடுத்து வகுப்பில் சேர்க்கப்பட்டு; கல்வியினைத் தொடர்ந்தார்கள்.

தேவநாயகம் ஆசிரியருக்கு உதவியாக ஆசிரியர் பலர் சேர்க்கப்பட்ட போதிலும் சலிப்பின்றி, களைப் பின்றி, தேவநாயகம்; தலைமை ஆசிரியராக, நிர்வாகியாக, உதவி ஆசிரியராக, குமாஸ்தாவாக பியோனாக தானே சுறுசுறுப்பாக இயங்கினார்.

''பாடசாலையாவது நடக்கிற காரியமாவது'' என்று ஆரம்பத்தில் எடுத் தெறிந்து பேசிய வாய்கள் கூட இன்று வருடந்தோறும் நடைபெறும் கலைமகள் விழா, கலை விழா, விளையாட்டுப் போட்டி, பரிசளிப்பு விழா, என்பவற்றைப் பார்த்து சுருதியை மாற்றிக் கொண்டு வியந்து புகழ்ந்து பேசுகின்றனர். பரீட்சைகளிலும்; போட்டிகளிலும், மாகாணத்திலே முன்னணியில் நிற்கும் மாணவர்கள் வேறு உரம் சேர்க்க.

ஒழுக்கம் கட்டுபாடு என்பவற்றிலும் மற்றவர்கள் முன்மாதிரியாகக் கொள்ள வேண்டிய நிலையில்...... தேவ நாயகம் ஆசிரியர் பணி, புகழ்

மேலோங்கியதில் ஆச்சரியப்படுவதற்கில்லை தேவ நாயகம் ஆசிரியரை தேவ நாயகம் பிள்ளை என அழைத்து கண்ணியப் படுத்தினர். மதிப்பில் மட்டுமல்ல, மரியாதை, பணிவுடன் வழங்கும் கௌரவம்.

கல்வி வளர்ச்சியும்; காலமும் நீண்டு தொடர காலச் சக்கரம் நீண்டு சுழல்கின்றது.

தேர்தல் வந்தது.! இது பொதுத்தேர்தல் கட்சிக்கு கட்சி, ஆளுக்கு ஆள் பம்பரமாய் சுழல்கின்றனர். ஜனநாயகத்தின் திருவிழாவான தேர்தல் "கலை" கட்டிய போது ஸ்ரீமான் பொது ஜனத்தின் இதுவரை கண்டு கொள்ளாத குறைகள்; தேவைகள் எல்லாம் அலசி ஆராயப்பட்டன.

பொதுத்தனி கோரிக்கைகளை போட்டா போட்டி போட்டு கொண்டு நிறைவேற்ற; துடியாய்த் துடித்தனர். நடந்து முடிந்த தேர்தல்களில்..... ஒரு பொருட்டாக இல்லாத' இப் பாடசாலையினை இப்போது "கண்டு கொண்டு" விட்டார்கள்.

"மைக்குகளில்" பிரசார மேடைகளில்; வேட்பாளர்கள், மண்ணின் மைந்தர்களின் குரலை செவிமடுத்து; எல்லோரும் இந்நாட்டு மன்னர்களான வாக்காளர்களின் சிந்தையை நிறைத்த செய்தி "நாம் வெற்றி பெற்றால்" இப் பாடசாலையை அரசுடயையாக்கி; வசதிகளை செய்து கொடுப்போம்." என்பதேயாகும். ஒருவர் மேடையில் முழங்க, மற்றவர் துண்டுப் பிரசுரத்தில் வெளியிட, அடுத்தவர் தனது பரிவாரங்களிடம் சொல்லி ஊரெங்கும் இதனை பறை சாற்ற.....,

தொகுதி தேர்தல் பிரசாரத்தில் பாடசாலைக்கு முக்கிய இடத்தினைக் கொடுத்து .வேரில் பழுத்த பலாவாக இருந்ததை; தேர்தல் சந்தைக்கே கொடு வந்து விட்டது. கிடைத்த சொற்ப வருமானத்தில் வாழ்க்கையினை ஓடடிக் கொண்டிருந்த ஆசிரியர்கள்; அரசாங்க நியமனம் என்றவுடன் கிறங்கிப் போனார்கள் "கவர்மென்ட் சேவன்" கை நிறைய சம்பளம் கெசுவல் மெடிக்கள் லீவு, சலுகைகள், புகையிரத ஆணைச்சீட்டு.... மகிழ்ச்சி கரைபுரண்டது.

தேர்தல் முடிந்த கையோடு கொடுத்த வாக்குறுதியைக் காற்றில் பறக்க விடாமல் வெற்றி பெற்றவரை பாடசாலைக்கு அழைத்துத் வரவேற்பு வைபவத் தினையும் நடத்தி பாடசாலையை பொறுப்பேற்கவும் வழி செய்து விட்டார் தேவநாயகம். பதினைந்து வருடங்களாக பட்ட வேதனைக்கு விடிவு காண வழி பிறந்தது. கிடைத்த சொற்ப வருமானத்தில் ஆசிரியர்களுக்கு சம்பளமும் வழங்கி, தானும் உண்டு; உடுத்து; இத்தனை காலமும் வாழ்க்கையினை ஓடடியதே சாதனைதான்.

மாணவர்கள் அனைவரும் ஏழை தொழிலாளரின் பிள்ளைகள் தோட்டங்களில் வேறு, வரட்சி, காணி சுவீகரிப்பால் வேலை இழப்பு, இப்படி

பாதிக்கப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தோரே அதிகம். என்ன செய்வது, கட்டணம் கிரமமாக வசூலிக்க முடியாது. போதாததற்கு வறுமையில் வாடும் மாணவர்கள். இடையில் படிப்பினை நிறுத்திக் கொள்ளாமல் இருக்க உடை, உணவு, புத்தகங்கள், பஸ்சுக்கான பருவச்சீட்டு என்பனவற்றையும் பெற்றுக் கொடுத்து உதவினார். சுமைதான்! என்ன செய்வது?

பாடசாலையினை பொறுப்பேற்கும் பணி சுறுசுறுப்பாக நடந்தது அதிகாரிகள் வந்தார்கள். நிலம், கட்டிடங்கள் என்பனவைகளை அளந்து படிவடிவங்களை நிரப்பினார்கள். பின்னர் ஆசிரியர்களை அழைத்தனர். வயது, கல்வித் தகைமை, சமயம், தேசிய இனம் என்பவற்றையெல்லாம் விசாரித்து அவர்களுக்கான தஸ்தா வேஜீகளை அவர்களிடம் பெற்று தனி தனி "பைல்" களில் வைத்தார்கள். இறுதியில் தேவ நாயகம் பிள்ளையுடனான சம்பாஷனை தொடங்கியது அதிகாரி அவரின் சேவையினைப் பாராட்டி மிகுந்த மரியாதையோடு விசாரித்தார். பாடசாலையின் வரலாறு அவரின் கல்வித் தகைமை என்பவற்றையெல்லாம். கேட்டு குறிப்பெடுத்து கொண்ட அவர் "பாடசாலையினை பொறுப்பேற்பதுடன் உங்களையும் சேவையில் சேர்த்துக் கொள்ள விருக்கின்றோம்."

யாவும் சரி நீங்கள் வம்சாவளி பிரஜையா? அல்லது பதிவுப் பிரஜையா? உங்களின் பிரஜா உரிமையினை நிரூபிப்பதற்கான படிவங்களைச் சமர்ப்பிக்க முடியுமா என்று கேட்டார்? தேவ நாயகம் ஐம்பத்தி இரண்டாம் ஆண்டு மனு கோரப்பட்ட வேளையில் தன்னுடைய குடும்பத்தினரோடு மனு கொடுத்திருந்தார் "இந்தியாவில் நிலபுலம் உண்டா? பணம் எப்போதாவது அனுப்பினீர்களா? எத்தனை தடவைகள் போய் வந்தீர்கள்" என்றெல்லாம் குறுக்குக் கேள்விகளை கேட்டு விசாரித்து விட்டு பின்னர், மனுவை நிராகரித்து விட்டனர்.

மீண்டும் அறுபத்து நான்கில் ஒப்பந்தம் நிறைவேறி மனு கோரப்பட்ட போது "இந்த மண்ணிலே தான் வாழ வேண்டும்" என முடிவு செய்து தனது முயற்சியில் மீண்டும் தளராத விக்கிரமாதித்தனாக விண்ணப்பம் செய்தார். மனு கிடைத்தது என்ற அட்டையைத் தவிர வேறு எது வித தகவலுமே இது வரை கிடையாது. இவருடைய மனு கடலில் போட்ட கல்லாக இன்னமும் "பைசல்" செய்யப்படாமல் கிடக்கின்றது. ஒப்பந்தம் நிறைவேறிய போது நம்பிக்கை விளக்காக நெஞ்சில் நிழலாடிய சுடர்; இப்போது நெஞ்சில் தீப்பந்தமாக புகைய; மனவேதனையோடு காலத்தை கழித்துக் கொண்டிருக்கின்றார்.

தேவநாயகம் ஆசிரியர் அதிகாரியிடம் பவ்வியமாக கூறினார் "எனக்கு இன்னமும் பிரஜா உரிமை கிடைக்கவில்லை" அதிகாரி அதிர்ச்சி அடைந்தார்.

அவர் இந்த பதிலினை எதிர்பார்க்கவில்லை கவலை தோய்ந்த முகத்துடன் நடுங்கும் குரலில் "மிஸ்டர் தேவநாயகம் உங்கள் நிலைக்கு வருந்துகிறேன். நீங்கள் செய்த சேவை மகத்தானது. எனினும் சட்ட திட்டங்களுக்குட்பட்டுத்தான் நாம் என் கடமையினைச் செய்ய முடியும். பிரசா உரிமை இல்லாத ஒருவரை நாம் அரசாங்க சேவையில் சேர்த்துக் கொள்ள முடியாது."

"நான் எனது றிப்போட்டை அனுப்பி வைக்கிறேன் நீங்கள் முயற்சி செய்து விரையில் உங்கள் பிரஜா உரிமையினை நிரூபிக்கப் பாருங்கள்.... உங்களை போன்ற நல்லவர்களை இறைவன் ஒரு போதும் கை விட மாட்டான்" கருணை உள்ளம். அதிகாரி கலக்கத்துடன் விடைபெற்றறுக் கொண்டார்.

பாடசாலை அரசாங்க பாடசாலையாக மாறிவிட்டது. குதூகலம் அனைவரும் புத்துணர்வில் மிதந்தனர்.

தேவநாயகம் பிள்ளை பல இடங்களுக்கும் ஓடினார். "இவரைக் கண்டு பேசினால் சரி" "அவரைக் கண்டு ஒரு வார்த்தை சொன்னால் போதும்" என்று சொல்லப்பட்ட மேதா விலாசங்க்ளைப் தேடிப் போய் கால் கடுக்க நின்று தன்னுடைய நிலைமையினை எடுத்துரைத்தார். ஒரு சில பிரமுகர்கள் தன்னை பாடசாலை விழாக்களுக்கு அழைத்து மரியாதை செய்யவில்லையென இந்த வேளையிலும் சலித்துக் கொண்டனர். இரவு, பகல், உணவு, உறக்கம் என்பனவற்றையெல்லாம் மறந்து நாளும், பொழுதும்; அலுவலகங்களில் ஏறி; இறங்கினார் நம்பிக்கை பகீரத முயற்சியாக பரிணமித்தது.

பலன்; பணம் தண்ணீராக கரைந்ததேயொழிய காரியம் நடப்பதாக இல்லை. கடன்பட்டார்; அலைச்சல் மனம் சோர்ந்தார் "இந்தா, அந்த" என்று போக்கு காட்டி இழுத்தடித்தவர்கள் கடைசியில் கையை விரித்து வேறு முக்கிய அலுவல்களில் "பிசியாக" இவரை சந்திப்பதையே தவிர்த்து கண்ணாடிக் கூண்டு அறைக்குள் ஆமையாக புலன்களை அடக்கிக் கொண்டனர். தொட்ட தெற்கெல்லாம் அறிக்கைவிடும்; ஓர் அரசியல் வாதி மட்டும் இதனைச் சாட்டாக வைத்து தமிழ் தினசரியில் மாத்திரம் அறிக்கை விட்டு தன்னுடைய இன உணர்வினை வெளிகாட்டி "பிளஸ்" பாயிண்ட் தேடிக் கொண்டார்.

தேவநாயகம் பிள்ளை தன்னுடைய பிரஜா உரிமையினை நிரூபிக்காதப் படியால் அவருக்கு நியமனம் கிடைக்கவில்லை. பதினைந்து, வருடங்களுக்கு முன்பு தோட்ட தொழிலாளரின் பிள்ளைகளுக்காக ஒரு பாடசாலை ஆரம்பித்து; அதனைக் கட்டி எழுப்பி, இன்று கலாசாலையாக உயர்த்தி விட்ட அவருக்கு; இனி அப்பாடசாலையில் இடமில்லை.

இனி அவருக்கு அங்கு தன் கடமையினைச் செய்ய முடியாது. அதற்கு உரிமை இல்லை.

பாடசாலை பொறுப் பேற்கப் பட்டதை யொட்டி இன்று பாடசாலையில் ஒரு வைபவம் நடை பெற்றது. இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு விட்டுத்தான் வேத நாயகம் பிள்ளை வீடு திரும்பி கொண்டிருக்கின்றார். வைபவத்தில் பலர் அவருடைய சேவையினைப் பாராட்டி புகழ்ந்தார்கள்.

தேவநாயகம் பிள்ளைக்கு பாடசாலையில் சேவையாற்ற சந்தர்ப்பம் கிடைக்காமல் போன விவகாரம் இப்போது பழைய கதையாகி விட்டது. புதிய அதிபர் கடமை ஏற்று விட்டார். மறக்காமல் பழைய வரிடம் ஆசிர்வாதமும் பெற்றுக் கொண்டார்.

வைபவத்தில் மனம் நிறைந்த பாராட்டுக்கள்; வாழ்த்துக்கள்; மனம் குளிரும் வார்த்தைகள். இவற்றால் நேரந்தவராமல் பற்றி எரியும் வயிற்றைத் தணிக்க முடியுமா? அடுப்பு எரிய வேண்டுமே........

பிரஜா உரிமை என்ற ஒன்று மட்டும் இருந்திருந்தால் அவருக்கு வேலை கிடைத்திருக்கும். இப்போது அவர் வேலை தேடியாகவேண்டும்.

முதுமைக் கனிந்து கொண்டு வரும் பருவம். இத்தனை காலமும் செய்த சேவை மனிதன் சுதந்திரமாகப் பிறக்கின்றான். ஆனால் எங்கும் அடிமைத் தனங்களில் மூழ்கிச் சிக்குண்டு தவிக்கின்றான். கற்ற வாசகம் நெஞ்சில் நினைவு இழைகளை நூற்க...; அவர் உருவாக்கியப் பாடசாலையின் முகப்பில் தேசியக் கொடி கம்பீரமாக பறந்து கொண்டிருக்க..... வானிலிருந்து தவழ்ந்து இறங்கிய, சின்னச் சின்ன மேகங்கள் வாடியிட இடம் தேடிக் கொண்டிருக்க....... நாளெல்லாம் பார்த்தாலும் சலிக்காத அந்த மலைச்சரிவில்; பள்ளத்தில் வளைந்து வளைந்து ஓடும் நதியின் தீரத்தில், அவர் உருவாக்கிய பாடசாலையில் வாத்ஸல்யத்தோடு பதியும் பார்வையை பெயர்த்தெடுத்து மீண்டும் தள்ளாடி நடுங்கும் கால்களுடன் படியேறுகின்றார்.

அவர்கண்கள் கொட்டும் மழையாக.....

அது ஏழை அழுத, வெறும் கண்ணீர் மட்டுமல்ல.

**'தினகரன்'**



# ஊமையன் கோயில்

தலைவாரி உச்சிவகிடெடுத்து நெற்றிப் பொட்டிட்டாற் போன்று ; சிரசாய் நிமிர்ந்து ; மார்பென உயர்ந்து ; புஜங்களாகப் பரந்த மலைகளிலும் குன்றுகளிலும் சரிவுகளிலும் இறக்கங்களிலும்; சாய்வுகளிலும் இராட்சதமாய் பாய் விரித்துக் கிடக்கும் தோட்டத்திற்கு நடுவே அமைந்துள்ள தேயிலை ஸ்டோர்; இறப்பர் ஸ்டோர்; கொக்கோ ஸ்டோர்; பிள்ளை மடுவம் அரிசிக் காம்பரா, இன்னும் தோட்டத்து உத்தியோகஸ்தர்களின் பங்களாக்கள்; இருண்ட வாழ்க்கையின் பிரதியமைப்பாக விளங்கும் கரிய லயங்கள்; என்பனவற்றுக்கிடையே மாரியம்மன் கோயிலொன்று; மீனாட்சியம்மன் மூக்குத்தியென மின்னிக் கொண்டிருக்கின்றது.

ஒரு தோட்டத்து 'இராஜ்ய' மெனத்திகழும் அந்த பாரிய பிரதேசத்தின் நடுவில் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில் இது. தோட்டத்திலுள்ள அனைத்து மக்களுக்குமே பொதுவான கோயிலும் இதுவாகும்.

இந்த தோட்டத்தில்தான் எத்தனை? எத்தனை கோயில்கள்...?

தோட்டத்திற்கு ' ஆள் கட்டிவந்த' பெரிய கங்காணிமார்கள் தங்கள் தங்கள் " பெரட்டில்" உள்ளோர் வழிபாடு செய்ய ஏற்படுத்திய கோயில்கள்...

தோட்டத்தின் வடக்கு எல்லையில்; மூன்றாம் நம்பர் மலைக்கும் எட்டாம் நம்பர் மலைக்கும் இடையே மலைத்தொடரில் மேகத்தைத் தழுவி நிற்கும் சிகரத்தின் உச்சியில் சிந்தாகட்டி கோயில்!

' சிந்தாகட்டி முனி' சிந்தாகட்டி மலையிலிருந்து பூரணை தினத்தன்று ஆற்றுக்கு அப்பாலிருக்கும் நாகலவத்தை மலைக்கு பறந்து செல்வதாக இன்றும் தோட்டத்தில் எஞ்சியிருக்கும் "கம்பளிப் பெரியவர்கள்" கூறக் கேட்கலாம்.

"சிந்தாகட்டி முனி" நட்ட நடுச்சாமத்தில் பறந்து போகும் போது அதற்கு துணையாக ' வால்ராசா முனியும் பறந்து போகுமாம்." வால் "முனிக்கு வால்ராசா கோயில்" ஏலமலையில் இருக்கின்றது.

இன்னும் தனுஸ்கோடியில் பாய்மரக்கப்பலேறி; இராமர் அணையை கையெடுத்துக்கும்பிட்டு தட்டப் பாறையில் நடந்து ; கால் பொசுங்கி; முன்பின் அறியாத மன்னார் மணற்கடலில் கால் பதித்து; அடர்ந்த காட்டுவழியே காட்டுச்சுரம் வாட்ட; விலங்குகளின் கொடுமைகளை சகித்துக் கொண்டு; கால்நடையாக நடந்து வந்தபோது கூடவே துணைவந்த குலதெய்வத்தை மறந்துவிடாமல் தோட்டத்தில் குடியமர்த்தி வைத்த கோயில்கள் .....

கனவில் தோன்றி காட்சி கொடுத்து; " இன்ன இடத்தில் என்னை எழுந்தருளச் செய்" என்று சாமி கனவில் கேட்டுக் கொண்டதற்கமைய சாமி பேச்சைத்தட்டாது குறிப்பறிந்து கல்நாட்டி சூலம், வேல், தண்டு நட்டு வழிபடும் கோயில்கள்...

"குலக்கறுப்பு" குறிப்பிட்ட இடத்தில் அமைத்த கோயில்கள் வேலைக்காட்டில் முள்ளுக்குத்தும் போதோ, கான் வெட்டும் போதோ உருக்கொண்டு அருள்வந்து ' சாமி ஆடி', 'அடே என்னைய மறந்திட்டியா' நான் தாண்டா பரம்பரை பரம்பரையா உன் குடும்பத்தை காப்பாற்றி வருகிறேன் "என்னை மறந்திடாம பூசை போடு" என்று கேட்டுக் கொண்ட சாமியை 'மன்டு வைத்து உடுக்கடித்து சாமி பார்த்து மடைக்கு வரவழைத்து கேள்வி கேட்டு 'எங்க குடிவைக்கனும்' என்று மரத்திலோ கல்லிலோ எழுந்தருளச் செய்து பூசலார் கோயிலாக வழிபடும் இடங்கள்...

பெரியதுரை பங்களாவிற்கு கீழே " தேர்க்கல்லு" தேர்க்கல்லின் கீழ்ப்பாக பாறைப் பிதிர்வில் வருடத்திற்கு ஒரு பொங்கல் பூசையோடு சயனித்திருக்கும் வெட்டரிவாள் சாமி.

சொந்த ஊரிலிருந்து பிழைக்க வந்த ஊருக்கு "பிடிமண்" கொண்டுவந்து ஆகமவிதிப்படி அமைத்த கோயில்கள்...

'நக்கில்ஸ்' தொடர்களின் குஞ்சுகளென தோட்டத்தைச் சுற்றி அரணமைத்துள்ள மலைகளின் கனவுகளில் வாழும் ஏழு கன்னியம்மன்கள் கோயில்கள்....

"பாவம் செய்யாதே என்று பயமுறுத்தி நிற்கும் சித்திரபுத்திரர் கோயில்." அதில் நடக்கும் சித்திரைக்கஞ்சி. நாடகத் திருவிழா அம்மாடி..........

தோட்டத்து "பாடமாதிக்கு"ம் இடுகாட்டிற்கும் இடையே கொக்கோ மலையில் அமைந்துள்ள முனியாண்டி, வேட்டைக்கறுப்பன், மின்னடையான் இடும்பன், வைரவர் கோயில்கள்...

வருடந்தோறும் கூத்தாடும் காமன் கோயில்

எட்டாம் நம்பர் மலையின் இறக்கத்தில் எழுத்துகற்பாறைக்கு மேலே அமைந்துள்ள தொட்டிச்சியம்மன் கோயில்....

எழுத்துக்கற்பாறையின் வரலாறும்; புராணமும்; மேதா விலாசமும் தனியானது!

தொட்டிச்சியம்மன் கோயில், மலை உச்சியில் குட்டையாகப் படர்ந்து நிற்கும் ஆலமரமொன்றின் அடியில் உள்ளது. அதிகம் உயரமில்லா அந்த ஆலமரத்தை இடதுபுறமாக வலம் வந்து சுனையொன்று; தொட்டிச்சியம்மன் காலடியில் தெண்டனிட்டுக் கிடக்கின்றது.

"இந்த சுனையில் நீராடி எழுத்துக் கற்பாறையில் காணப்படும் மூன்று எழுத்துகளையும் சரியாக வாசித்துப் படித்து விட்டால் கற்பாறை பிளக்க அதிலிருந்து புதையல் வெளிப்படும்" என்பது இன்றளவும் தோட்டத்தில் நிலைபெற்றுள்ள கதையாகும்.

ஆனால், எழுத்துக்களை சரியாக வாசித்து பாறையினைப் பிளக்கச் செய்து புதையலை வெளிப்படுத்தும் ஒருவர், தான் அந்தப் புதையலைப் பெற்று பயனடைய முடியாது.

குகை போல் அமைந்து தலைக்கு மேலே படர்ந்து விரிந்துள்ள அந்த பாரிய பாறையில் சமாந்திரமாக நீண்டுள்ள பகுதியிலேயே இம்மூன்று எழுத்துக்களும் காணப்படுகின்றன.

ஒருவர் மூன்று எழுத்துக்களையும் சரியாக வாசிக்கும் பட்சத்தில் பாறை பிளக்குமேயானால், அவர் தலை நசுங்கிச் சாக நல்ல வாய்ப்புண்டு.

அவரோடு செல்பவர்களுக்குத்தான் அந்தப் புதையல் அதிர்ஷ்டம்.

நல்லவேளை இதுவரை கற்பாறை எவரையுமே பலிகொள்ளவில்லை. புதையலும் புதைந்து கிடக்கின்றது. நம்பலாமா?

பிராமி எழுத்துக்களைப்போல் சிலந்துப் பூச்சியின் வடிவில் "கோடி" காட்டும் எழுத்துக் கற்பாறையின் எழுதப்படாத கதை இதுதான்.!

பலர் எழுத்துப் பாறையிலுள்ள முதலிரு எழுத்துகளையும் படித்து விட்டார்களாம். மூன்றாவது எழுத்தைத்தான் சரியாக வாசிக்க முடியவில்லையாம். மலையக மக்களின் எதிர்காலத்தைப் போல! புரியாத எழுத்து.

புதையலை எடுக்க வேண்டுமென்ற ஆசையேதுமில்லாது; எழுத்துக்கற் பாறையைப் பார்த்து அந்தச் சூழலை ரசித்துச் சென்ற தற்காலத்து தோட்டத்திலுள்ள படித்த இளைஞர்கள் சிலர், "காடுகளை அழித்துத் தோட்டங்களை உருவாக்கி கான்களை நிரப்பி கற்பாறைகளைக் குடைந்து பாதை அமைத்த நம் முன்னோர்களில் எவரோ ஒருவர் தன் வேதனையையும் மன உளைச்சலையும் கொட்டி வைத்த குறியீடுதான் இதுவென"– அபிப்பிராயம் கூறியபடி வந்தனர்.

பாறைக்குள்ளே புதையல் உண்டோ இல்லையோ ... அது உளியினால் பொழியப்பட்ட எழுத்தானால்; அந்த எழுத்தை செதுக்கிய உளி; இந்த நாட்டிற்கு தோட்டங்கள் என்ற புதையலை வழங்கிய இந்திய வம்சாவழி தமிழ் மகனுடைய கைகளில் தவழ்ந்ததாகத்தான் இருக்கவேண்டும்.

தொட்டிச்சியம்மன் கோயிலுக்கு மிகச் சமீபமாகவே அடர்ந்த மூங்கில் புதர்கள் காணப்படுகின்றன. மூங்கில் காடுகளின் தொடர்ச்சியாக பிரம்புக் காடுகள் வளர்ந்து பின்னிக்கிடக்கின்றன.

மூன்றாம் நம்பர் மலையிலிருந்து எட்டாம் நம்பர் மலைக்கு கொட்டகல பீலி வழியே செல்லும் மண்ரோடில் நடந்தால் கொஞ்ச தூரத்தில் மலையிடுக்கில் ஒரு திடீர் வளைவு. அந்த இடத்திற்கு போகும் வரையில் இந்த முடக்கு கண்ணுக்குத் தெரியாது. உணரவும் முடியாது.

மலையும் மலையும் நூலிடையில் ஒட்டிக் கொண்டிருக்கின்றன.

கீழே அதள பாதாளம்! அதில் எருக்கம்புதர் மண்டிப்போய் கிடக்கின்றது. எருக்கம் பூக்களின் மணம் பரவி நிற்கும்.

இந்த வழியே வருவோர்; சற்று நிதானமில்லாமல் வந்துவிட்டால் விபரீதம் தான்...!

ஆபத்து வலை விரித்து நிற்கும் அந்தப்பகுதியில் நடமாட்டம் மிகக் குறைவு.

இந்த மலை இடுக்கில்தான் " ஓசைக்கல்" உள்ளது. "ஓசைக்கல்" சொன்னதைத் திரும்பிச் சொல்லும்.

"ஓசைக்கல்லோ..." என்று உரத்துச் சத்தமிட்டால் "ஓசைக்கல்...லோ லோ..."என்று மலைகளும் திக்குகளும் அதிரும் படியாக எதிரொலி கேட்கும்.

"ஓசைக்கல்" என்றால் "ஓசைக்கல்" "தோசைக்கல்" என்றால் "தோசைக்கல்" "வாடா" என்றால் "வாடா" "போடா" என்றால் அதுவும் "போடா" தான்!

கத்திப் பேசினால் ; கத்தும். சிரித்தால் சிரிக்கும். அழுதால் அழும். சுயநல வாதிகளின் பிடியில் மயங்கிக் கிடக்கும் அப்பாவி மலையக மக்களைப் போல!

அந்த வழியாக மலைகளுக்குத் தேத்தண்ணியும் சுட்ட ரொட்டியும் கொண்டு செல்லும் சிறுவர்கள் எவ்வளவு தான் நேரம் தாமதித்துச் சென்றாலும் கொஞ்ச நேரமாவது இந்த ஓசைக் கல்லோடு உறவாடி; விளையாடாமல் செல்வது கிடையாது.

ஓசைக்கல்லோடு 'கத்திக் கத்திப் பேசி' விட்டு இறுதியாக "கெட்ட வார்த்தைகளால் " ஏசிவிட்டு ஓடுவார்கள் சிறுவர்கள்.

ஓசைக்கல் மட்டும் அவர்களை சும்மா விட்டு விடுமா...? "போனால் போகட்டும்" அவர்கள் "சிறுவர்கள் தானே" என்று பெரிய மனசுடன்

இருக்காது. தனக்கு துதிபாடாத அப்பாவி ஆசிரியரை துரத்திப் பழிவாங்கும் அரசியல்வாதியைப் போல துரத்தி வந்து ஏசும்.

இந்த ஏச்சை வாங்கிய சிறுவர்கள் துள்ளிக்குதித்து நகைத்து ஓடும் போது குட்டிச்சாக்கிலுள்ள தேனீர் போத்தல்கள் "ணங்... ணங் ங்..." கென்று தாளம் போட்டுக் கொள்ளும்.

சிறுவர்கள் .... பிஞ்சுகள் இப்படித்தான் ஆடிப்பாடித் திரிவார்கள். கால நேரத்தைப்பற்றி அக்கறை இல்லை என்று பெருமனசு வைக்காமல் தேங்காய் இல்லாமல். சுட்ட ரொட்டியும் கானுகொச்சிக்காய் சம்பலும் மனம் சலிச்சுப்போகும்.

மலைக்கு தேத்தண்ணி கொண்டு போகும் சிறுவர்களுக்கு இது ஒரு குஷியான விளையாட்டு.

ஓசைக்கல் பள்ளத்திற்கு கிழக்கேயுள்ள நாலாம் நம்பர் மலை "பட்றப்பர் மலை". நாலாம் நம்பர் மலையின் தொங்கலில் தான் ஊமையன் கோயில் இருக்கின்றது.

மூன்றாம் நம்பர் முடக்கில் கிடக்கும் எருக்கம் பூ காடுகள் ஊமையன் கோயில் வரை வியாபித்துக் கிடக்கின்றன.

ஊமையன் கோயில்... இது என்ன விசித்திரமான கோயில்! இப்படி ஒரு தெய்வமா? இப்படியும் ஒரு கோயிலா...?

முதன் முதலாக கேள்விப்படும் எவரும் எழுப்பும் ; மனதில் எழும்; நியாயமான கேள்வி.... இது!

ஆனால் பரம்பரை பரம்பரையாக இத் தோட்டத்தில் வாழும் மக்களில் எவரும் இதனைப்பற்றி மெய்யியல் விசாரணை செய்து கொண்டதில்லை.

இப்படி ஒரு கோயில் வேறு எங்காவது உண்டா? என்று அறிய முற்பட்டதும் இல்லை.

கேள்விகள் கேட்டு உண்மையை அறிந்து நடந்தால் நம்மவர்களின் நிலை இப்படியா இருக்கும்!

காட்டுத் தொங்கலில் அமைந்துள்ள ஊமையன் கோயிலின் நடைமுறையே தனியானது. தோட்டத்திலுள்ள மற்றைய ஆலயங்களைப் போன்று வெள்ளி, செவ்வாய் பூசை. வருடத்திற்கொருமுறை வருடாபிஷேக உற்சவம்...ம் இப்படி ஒன்றும் ஆகம விதிப்படி கிடையாது.

ஆனால் வருடத்திற்கு ஒரு தடவை ஊமையன் கோயிலில் அண்டாவில் பொங்கல் வைப்பார்கள். வீட்டுக்கு ஒரு பிடியாக சேர்த்த அரிசியும் சர்க்கரையும் மட்டும்தான். அதுவும் இந்தப் பூசையில் பெண்கள் பங்கு கொள்வது இல்லை.

பெண்கள் 'சும்மா கூட' ஊமையன் கோயிலுக்கு போவதில்லை.

ஸ்டோருக்கு பக்கத்தில் ரோதமுனி. ரோதமுனிக்கு வருடந்தோறும் 'கடாவெட்டி' பூசை செய்யப்படுகின்றது. இதுபோல கவாத்து சாமிபேரால் உயிர்பலி கொடுக்கப்பட்டாலும்; கள்ளும் இறைச்சியும் படைப்பவர்களுக்குத்தான். பலி கொடுக்கப்பட்ட மிருகத்தின் ஈரலை நெருப்பில் சுட்டு முக்கிளை கொண்ட குச்சியில் குத்தி படைப்பர்.

மதுரைவீரன் திருவிழா ; கோயிலிலிருந்து லயத்திற்கே வந்து கலகலப்பாக விளங்கும்.

இவையெல்லாம் பிரிவு பிரிவாக; பகுதி, பகுதியாக நடக்கும் போது மாரியம்மன் திருவிழா மட்டும் பொதுவானதாக விளங்கும். தோட்டத்தில் பிள்ளையார், முருகன் ஆகியோர் கோயில் கொண்டிருந்த போதும் அம்மனே அருள் தெய்வம். தோட்டத்திலுள்ள கோயில்களில் ஊமையன் கோயில் மட்டும் ஒதுங்கியே இருக்கின்றது. இந்த ஊமையன் கோயிலுக்கு மட்டும் எவரும் சொந்தம் கொண்டாட வருவதில்லை. தினமும் உண்டியல் நிறையும் கோயிலா அது? எவரும் சொந்தம் கொண்டாடி வழக்காட...?

அதுவும் தூரத்து மலையிலுள்ள கோயில், காளாஞ்சி; பொன்னாடை என்ற பேச்சுக்கும் இடம் இல்லை.

வருடந்தோறும் ஊமையன் கோயிலில் நடைபெறும் பொங்கல் பூசைக்கு மட்டும் தோட்டத்திலுள்ள அனைவரும் பங்களிப்பு செய்து ஒத்துழைக்கின்றனர்.

ஆனால் பூசை செய்யும் கடமையை மட்டும் தோட்டத்திலுள்ள முனியாண்டி குடும்பத்தினர் மட்டுமே செய்து வருகின்றனர்.

முனியாண்டிக்கு முன்னர் அவனது தகப்பன் பிச்சாண்டி அதற்கு முன் அவனது அப்பன் பாட்டன். முனியாண்டிக்குப் பின் அவன் மகன் முத்து. அதற்குப் பின்னர் அவனது மகன். இது ஊமையன் கோயில் பூசை விதி.

ஊமையன் கோயிலில் மார்கழி மாதம் வைகுண்ட ஏகாதசியன்று பொங்கல் வைக்கப்படுகின்றது.

ஊமையன் கோயில் பெயருக்குத்தான் கோயிலே அன்றி அங்கு எந்த ஒரு கட்டிடத்தையும் காணமுடியாது. ஒரு கல்லுத் திண்டின் மேலே முக்கோண வடிவில் நடப்பட்ட கல். சுற்றி வர மாமரங்களும் மலை வேம்பு, மரங்களும் பயங்கர அனுபவத்தையூட்டும் வகையில் செறிந்து வளைந்து வளைந்து முளைத்துள்ளன.

பூசை நடைபெறும்போது இக் கல்லுச் சிலைக்கு அரளிப் பூமாலையைச் சுற்றி சிலையின் வாயாக கணிக்கும் பகுதியை சிவப்புத் துணியால் கட்டி பொங்கலை படைத்து தூபம் கட்டுகின்றார்கள்.

சாமி சிலை அமைந்துள்ள இடத்திலிருந்து மேலே அண்ணார்ந்து பார்த்தால் மூன்றாம் நம்பர் மலைக்கும் எட்டாம் நம்பர் மலைக்குமிடையிலான பள்ளத்தாக்கின் இடைவெளி பயங்கரமாகத் தெரியும்.

மேலே இருந்து உருட்டி விட்டால் நேரே இங்கு வந்து விழலாம்.

பூசை முடிய மண்ணைத் தொட்டுப் பூசிக்கொள்வர். எத்தனை சிரமமென்றாலும் தோட்டத்திலுள்ள முதியோர்கள் முழங்காலைப் பிடித்தபடி பூசைக்கு வந்து போவர். ஒத்ததப்பு முழங்க பூசை கலகலப்பாக நடைபெறும்.

ஊமையன் கோயிலின் கடந்த வருட பூசையின் போது முனியாண்டி மிகவும் தளர்ச்சியடைந்திருந்தான். இந்த வருடம் பாரிச வாதத்தில் அவன் படுத்த படுக்கையில் கிடக்கின்றான்.

அவனால் பூசை செய்ய முடியாது விட்டால் அடுத்து அவன் மகன் முத்துதான் வாரிசு.

ஆனால் அவனோ இதில் நாட்டமின்றி தோட்டத்திலுள்ள தொழிற்சங்கத் தலைவரோடு சேர்ந்து கூட்டம் என்றும் ஊர்வலம் என்றும் ஓடியாடிக் கொண்டிருக்கிறான்.

பூசைக்கு நாள்கள் நெருங்க; நெருங்க முனியாண்டி அனலில் தகிக்கின்றான். கம்பனிக்கு " தோட்டத்தை குத்தகைக்கு கொடுக்கப் போகின்றார்கள்" என்பதைக் கேள்விப்பட்ட தோட்டத்து மக்கள் நெஞ்சில் தீ...., தீ மிதிப்பாய் தகிக்கின்றனர்.

" தலைவர்களைக் கண்டு மகஜர் கொடுத்து இந்த ஏற்பாட்டை நிறுத்த வேண்டும்". முத்துவும் தோட்டத்திலுள்ள சிலரும் முஸ்தீபாக ஓடிக்கொண்டிருக்கிறார்கள்.

இது முக்கியமான வேலை; ஊமையன் கோயிலில் பூசையை போடாது; விட்டால் என்ன? தோட்டம் குத்தகைக்கு கைம்மாறி விடுமா... மீண்டும் அடிமை மேல் அடிமை வாழ்வா...? யார் யாரிடமெல்லாம் ஓட முடியுமோ அங்கெல்லாம் ஓடி அபிப்பிராயம் கேட்டு நிற்கின்றான் முத்து.

நாளை விடிந்தால் ஊமையன் கோயிலில் பூசை. தோட்டத்து லயங்களில் பிடி அரிசியும் எடுத்தாகிவிட்டது. தோட்டத்து சிறுவர்கள் காட்டுத் தொங்கலில் ஊமையன் கோயிலில் நடக்கும் அந்தப் பூசையில் கலந்து கொண்டு மகிழ எப்போது விடியும் என்று தூங்காமல் விழித்துக் கிடக்கின்றனர்.

"அப்பா நாளைக்கு நான் கொழும்பிற்கு போய் நம்ம தோட்டத்தை தனியாருக்கு குத்தகைக்கு கொடுக்கவா போறாங்கன்னு அறிந்து வரப்போறேன்". கட்டிலில் அசைவற்றுக் கிடக்கும் முனியாண்டியிடம் முத்து மெதுவாகக் கூறினான்.

"அப்ப... ஊமையன் கோயில் பூசை?" போன வருடம் எப்படியோ போய் ஒப்பேத்திட்டேன். இந்த வருடம் என்னையால எழுந்து ஒரு அடிகூட எடுத்து வைக்க முடியாது. நீ கட்டாயம் இந்தப் பூசைய செய்யத்தான் வேணும்". முனியாண்டியின் குரல் சோகமாக ஒலித்தது.

" நம்மதான் இப்ப தோட்டத்தில எத்தனையோ திருவிழாக்களை செய்யுறோம் தானே....? இந்த கோயிலுக்கு பூசை செய்யாட்டி சாமி ஒன்னும் கோவிச்சுக்கிறாது". முத்துவின் குரல் கோபமாக வெளிப்பட்டது.

"ஆத்திரப்படாதே தம்பி. நீ இப்ப தோட்டத்தைப் பத்தியும் நம்ம ஆளுகளுட நன்மையைப் பத்தியும் பேசப் போறேன்னு சொல்லுறியே. அதுபோலத்தான் இதுவும். இந்த ஊமையன் கோயில் வரலாறு இருக்கே அதுவும் நம்ம இரத்தத்தோட கலந்தது..."

கோபம் தணிந்த முத்து, தந்தையின் காலடியில் வந்து நின்று கொண்டான்.

இருமியபடியே முனியாண்டி ஆவேசம் வந்தவனைப்போல பேசத் தொடங்கினான். " நம்ம தோட்டத்தைப்பத்தி காலத்திற்கு காலம் பிரட்டி பிரட்டி பேசுறதே இப்ப பொழப்பா போச்சி; நமக்கு நல்ல வாழ்வு வாங்கித் தாரோம்னு சொல்லியே பலபேர் நல்லா பொழைச்சிக்கிட்டு முன்னுக்கு வந்துட்டானுக. நானும் எத்தனை காலமா இப்படி எத்தனையோ பேர பார்த்துகிட்டு இருக்கேன்". முனியாண்டிக்கு மூச்சு இரைத்தது. நெஞ்சை அழுத்திப் பிடிக்க முயன்றான். கைகள் இயங்கவில்லை.

"அப்பா தூங்கு அப்பா காலையில் பேசிக்கலாம்". முத்துவின் கைகள் தந்தையின் நெஞ்சைத் தடவிக் கொடுத்தன.

" இந்த ஊமையன் கோயில் பற்றிய இரகசியத்தை என் உயிரு போறதுக்கு முந்தி உனக்கு சொல்லிறனும்... கேட்டுக்க... இந்தக் காலம் மாதிரி இல்ல அது வெள்ளக்காரன் காலம். நம்மல கொண்டுவந்த பெரியாணிமார்கள் நம்மல அடிமையாகத் தான் நடத்தனாங்க... யட்டவத்தை தோட்டத்தில ஒரு வெள்ளைக் காரன் நம்ம சொந்தக்காரர் ஒருத்தரை ஒழுங்கா குதிரை பார்க்கல்லன்னு சவுக்காலேயே அடிச்சி அடிச்சி கொன்னு இருக்கான்".

முந்தி நம்ம பாட்டா காலத்தில் இந்த தோட்டத்தில முத்துசாமின்னு ஒரு பெரியாணி இருந்திருக்காரு. அவரு 'பெரட்டில' ஆயிரக்கணக்கான தொழிலாளி இருந்திருக்காங்க. பெரியாணி வச்சதுதான் சட்டம். வெள்ளக்கார துரை பெரியாணி சொன்னபடி தான் கேட்பான்.

'முத்துசாமி கங்காணியுடைய 'பெரட்டில' கறுப்பன்னு தொழிலாளி ஒருத்தன். மானா மதுரைக்காரன் இருந்திருக்கான். கறுப்பண்ணனுடைய

பெஞ்சாதி பெருமாயி நல்ல அழகி. முத்துசாமி கங்காணிக்கு பெருமாயி மேல ஒரு கண். எப்படியும் அவளை அடையனும்னு முடிவு கட்டிட்டான்.

திடீர்னு ஒருநாள் கப்பல் டிக்கட்ட கொடுத்து "ஊருக்குப் போயி, தோட்டத்திற்கு புதுசா வர இருக்கிற ஐம்பது குடும்பத்தையும் கூட்டிக்கிட்டு வா உனக்கு சின்ன கங்காணி வேலை தாரேன்னு" சொல்லிட்டான்.

"அப்ப என் சம்சாரம்?" திகைத்து நின்றான் கறுப்பண்ணன்.

"அட போயி ஒரு மாசத்தில வந்திரலாம். அது வரைக்கும் உன் சம்சாரம் என் வீட்டுல இருக்கட்டும்..." கையைப் பிசைந்து நின்றவனை கப்பலேற்றிவிட்டான் முத்துசாமி கங்காணி.

"கறுப்பண்ணன் ஊருக்குப் புறப்பட; பெருமாயி இந்த உலகத்தை விட்டே போய்விட்டாள். தன் வீட்டுக்கு பெருமாயியை அழைச்சிகிட்டு வந்த கங்காணி அவளோட தகாத முறையில நடந்திருக்கான். இத பொறுக்க முடியாத அந்த அபல தூக்குப் போட்டுக்கிட்டு செத்திட்டா... கங்காணி இந்தப் பழியை தன் வீட்டுல எடுபிடி வேலை செஞ்சிக்கிட்டு இருந்த மலையப்பன் மேல சுமத்தி, வெள்ளக்கார துரை கிட்ட சொல்லி மலையப்பனை கட்டிவச்சி சவுக்கால அடிச்சி அவமானப்படுத்தி ஆக்கினை செய்திட்டான்".

"மலையப்பனுக்கு பெருமாயி தூக்குப் போட்டு செத்த இரகசியம் எதுன்னு தெரியும். ஆனா வெளியே சொன்னா தன் குடும்பத்திற்கு ஆபத்தின்னு சொல்லல்ல..."

மலையப்பனை வெள்ளக்கார துரை " உண்மையைச் சொல்லு, சொல்லுன்னு மரத்தில கட்டி வச்சி அடிச்சிருக்கான் பாவி... மயங்கி விழுந்த போதும் வாயியே தொரக்கல, ஊமையாகவே இருந்திருக்கான்".

மலையப்பன் மீது பெருமாயியைக் கொன்ற வீண்பழி.... உண்மையை சொல்ல முடியுமா... குடும்பத்தையே பெரியாணி அழிச்சிடுவானே.

பழிச்சொல் .... பரிகசிப்பு. பிறகு அவமானம் தாங்காமமூனாம் நம்பர் முடக்கு பள்ளத்தில பாஞ்சி உசிர விட்டுட்டான். பின்னர் அவன் குடும்பத்தினரும் ஊருக்கு திரும்பி போயிட்டாங்க..."

"மலையப்பனை அடிச்ச துரை தந்தி வந்து; சீமைக்கு போயி மறு மாசமே யுத்தத்தில செத்திட்டான்".

முத்துசாமி பெரிய கங்காணிக்கும் மூன்று மாசத்திலே உடம்பெல்லாம் கட்டி கட்டியா நோய் வந்து அழுகிப் போக தொடங்கிரிச்சி...." வாயும் கொண்ணி.... பேச முடியாத நிலை.

"உடுக்கடிச்சி சாமி பார்த்த போது சாமி உண்மைக் கதையெல்லாம் சொல்லிரிச்சி... கங்காணியும் மலையப்பனுக்கு செஞ்ச கொடுமையை

ஒத்துக்கிட்டு மன்னிப்பு கேட்டு மலையப்பனுக்கு இந்தக் கோயில அமைச்சி இருக்கான்".

அதற்குப் பிறகு அவன் நோய் தீர்ந்து ஊருக்கு திரும்பிட்டானாம். அதிலிருந்து இந்த தோட்டத்தில இந்த ஊமையன் கோயிலுக்கு பூசை நடக்கிறது". நீண்ட கதையைக் கூறி முடித்த முனியாண்டி மீண்டும் தொடர்ந்தான்.

" மலையப்பன் வேறு யாருமல்ல; நம்ம பாட்டன் பூட்டன் வழிதான். நம்மதான் ஊமையன் கோயிலுக்கு வாரிசுகள்". மதுரை வீரன் சாமியைப் போலதான் நம்ம மலையப்பனும் சாமிதான்"

முத்துவின் கண்களில் கண்ணீர் துளிர்த்தது. "காலம் காலமாக தொடர்ந்தும் சுயநலக்காரர்களால் பல்வேறு விதமாக வஞ்சிக்கப்பட்டும் கொடுமைப்படுத்தப்பட்டும் வந்துள்ளோம்". நெஞ்சில் பெரு மூச்சாக கிளம்பும் வார்த்தைகள்.

காலமும் மனிதர்களும் தான் வேறு வேறு ! துன்பமும் துயரமும் வஞ்சனையும் ஒன்றேதான்!

அடுத்த நாள் தான் அந்த ஊமையன் கோயிலில் பூசை செய்வதில் அர்த்தம் இருப்பதாக முத்துவிற்கு புலப்பட்டது.

**(தினகரன்)**



# அக்கினி

அறைக்கததவை இழுத்துச் சாத்திவிட்டு வெளியே வந்த ரெங்கையாக் கிழவன் பெருமூச்சு விட்டான். இனம்புரியாத சோகம் அவனை வாட்டி எடுத்தது. என்ன செய்வது என்று புரியாது மெளனமாக நின்றான். லயத்திற்கு ஏதிரே நீண்டு கிடக்கும் மலைகள் அவனது துயரத்தை அங்கீகரிப்பன போன்று "உம்" மென்று இருந்தன.

தினமும் பார்த்துப் பார்த்து அலுத்துப் போனவைகள் தான். இன்று எல்லாமே தன்னைப் பார்த்து அனுதாபப்படுவனபோலக் கிழவனுக்குத் தெரிந்தது.

லயத்துக் காம்பிராவிற்குமுன் நிறைமாதக் கர்ப்பிணியாக நிற்கும் ஈரப்பலா மரம் காற்றுக்குச் சலசலத்துக் கொள்கின்றது. வாசலுக்கு இறங்கி, பூவும் பிஞ்சுமாய் பூரண கும்பமாகத் திகழும் மரத்தை ஏக்கத்துடன் அண்ணாந்து பார்த்தான். தான் பெற்ற பிள்ளையைக் கனிவுடன் நோக்கும் குளுமையில் அவனது உள்ளம் நெகிழ்ந்தது. இது அவன் நட்டமரம், எத்தனையோ பஞ்சங்களில் அவனுக்கு மட்டுமல்லாது முழுத் தோட்டத்திற்குமே கைகொடுத்து உதவிய மரம். இனி அதை அவன் நிரந்தரமாகப் பிரிந்தாக வேண்டும்.

கிழவனுக்கு அதற்குமேல் அவ்விடத்தில் நிற்க முடியவில்லை. படி இறங்கி மெதுவாக நடந்தான் பின் ஏதோ நினைத்தவனாக நின்று திரும்பிப் பார்த்தான். கதவில் கொளுவியிருக்கும் பூட்டில் கண்கள் தரித்தன. சுவரை நோட்டமிட்டான். புகையாலும் தூசியாலும் அழுக்கேறிக் கறுத்துப்போன அந்தச் சுவரில் கதவுக்கு மேலே ஒரு அடிச் சதுரம் வெள்ளை வெளேரென்று வெண்திரையாகப் பளிச்சிட்டது.

“அரி... ராமா....ராமா” என்று முணுமுணுத்துக் கொண்ட கிழவனின் கண்கள் பனித்தன. நேற்றுவரை அந்த இடத்தை அலங்கரித்துக் கொண்டிருந்த ஆஞ்சநேய சகித சீதாராமர் படம் இப்பொழுது அவனுடைய பிரயாண மூட்டையில் அடைக்கலம் புகுந்துவிட்டது.

ரெங்கையாக் கிழவன் நாளை இந்தியாவுக்குச் செல்கின்றான். புதராய் மண்டிக்கிடக்கும் தேயிலைச் செடிகளுக்கிடையில் நெளியிட்டுக் கிடக்கும் செம்மண் பாதையில் இறங்கி டவுணை நோக்கி நடந்தவனின் மனதில் பல எண்ணங்கள் ஊற்றெடுத்தன.

“தவறணைக்காரர்’ என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படும் ரெங்கையாக் கிழவன் கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக இத்தோட்டத்தில் தொழில் புரிந்தான். இளம் வயதிலேயே, தன்னுடைய மனைவி காமாட்சியை நெருப்புக் காய்ச்சலுக்குப் பலி கொடுத்த பின்னர் மீதி நாட்களைக் குடும்பப் பற்றில்லாது தன்னந்தனியனாகவே ஓட்டிவிட்டான்.

உழைப்பே நிரந்தர உறவாகிவிட்டது. குன்றுகளிலும், சரிவுகளிலும் “பம்” என்று மண்டிக்கிடக்கும் தேயிலைச் செடிகள் யாவும் அவன் கைப்பட தவறணையில் வளர்ந்தவைகள் தாம். ஐம்பத்தைந்து வயதில் ஓய்வு பெற முடிந்ததும் தவறணை ரெங்கன் இல்லாத ‘நர்சரி’ ஒன்றினைக் கற்பனை செய்து பார்க்க முடியாத துரை, மேலும் ஒரு ஐந்து வருட வாய்ப்பினை “அனுபவசாலி” “கைராசிக்காரன்” என்ற நற்சாட்சிப்பத்திரங்களுடன் அவனுக்குக் கொடுத்தார்.

கிழவனுக்கு நெருங்கிய உறவினன் என்று ஒருவரும் இல்லை. ஆனால், அந்த நாலு டிவிசன் ஆட்களும் கிழவன் மீது உரிமை கொண்டாடினர்.

கிழவன் எல்லோருக்குமே பொதுவானவன்.

வயசுப் பெண்களுக்கு ‘தவறணை அப்பா.’ லயத்துப் பெண்களுக்கு ‘தவறணைத் தாத்தா’ தோட்டத்திலுள்ள வளர்ந்தவர்கள் ‘பெரியவர்’ என மதிப்புக் கொடுப்பார்கள். ஸ்டோருக்குக் கொழுந்து நிறுக்கச் செல்லும் வயசுப் பெண்கள் அந்த அவசரத்திலும், தவறணைக்குள் புகுந்து பூவாளியுடன் போராடிக்கொண்டிருக்கும் கிழவனின் வெற்றிலைப்பையைக் காலி செய்துவிட்டே செல்வார்கள். கிழவனும் பகிடிசெய்வான்.

மாலையில் கிழவன் சிறுவர்களுக்குக் கதை சொல்வான். சம்பள நாளன்று சிறுவர்களுக்கு தாத்தாவின் மிட்டாய் கிடைக்கும். ஏழு நாட்களுக்கென்று வழங்கப்பட்ட கூப்பன் அரிசி மூன்று நாட்களில் தீர்ந்துபோக மீதி நான்கு நாட்களுக்கும் எப்படிப் பொழுதை ஓட்டுவது என்று கையைப் பிசைந்து கொண்டு வந்து நிற்கும் குடும்பப்பாரம் மிக்க பெண்களுக்கு “ஏண்டி அம்மா, உன் புருஷன் இன்னும் அந்தக் குடிப்பழக்கத்தை விடலியா? சரிதான் போ” என்று சலித்துக் கொண்ட படியே ஐந்தோ, பத்தோ கொடுப்பது வழக்கம்.

இப்படியாகத் தோட்டத்தில் கிழவன் எல்லோருக்குமே பொதுவானவன். சகலரதும் அன்பிற்கும் பொதுவானவன்.

தோட்டத்தில் உத்தியோகத்தரிடையேயும் கிழவனுக்கு நல்ல மதிப்பு. பாத்திகளுக்கு மத்தியில் பவ்வியமாகக் கன்றுகளுக்கு நீவி நீவி தண்ணீர் போட்டுக் கொண்டிருந்த கிழவனிடம் கட்டைக் காற்சட்டை போட்டுக்கொண்டு, 'அது என்ன? இது எப்படி?' என்று கேட்டுப் படித்தவர்கள் எல்லாம் இன்று பெரிய துரையாக வேறு தோட்டங்களில் வேலை செய்தாலும், இங்கு வரும் போது, 'சலாமுங்க தொரைங்களே' என்று தலைப்பாகையை உதறிக் கமக்கட்டில் இடுக்கிக் கொண்டு முரசு தெரியச் சிரிக்கும் கிழவனை ஆதரவோடு தட்டிக் கொடுப்பதுடன், ஒரு பத்தோ, இருபதோ கொடுப்பது உண்டு.

குட்டைக் கவுணில் சின்னப் பெண்ணாகக் காட்சி தரும் துரையின் "நோனா" தனக்குப் புரியாத மொழியில் ஏதேதோ கூறிச் சிரித்தாலும், அதனையும் கிழவன் ஒரு அடக்கமான சிரிப்பில் அங்கீகரித்துக் கொள்வான். அப்படி ஒரு பணிவு.

இப்படிக் கிழவன் எல்லோருக்குமே பொதுவானவன். ஆனால், இந்தத் தொடர்புகளுக்கெல்லாம் முற்றுப்புள்ளி வைப்பதுபோன்று, வானவெளியில் நீந்திக்கொண்டிருந்த பட்டம் கயிறறுந்து தவிப்பது போன்று கிழவனது இந்தியப் பயணம் அமைந்துவிட்டது.

யார் யாரெல்லாமோ தடுத்தும் கேளாது. இந்த ஆத்மா அந்த மண்ணின்தான் அடங்கும் என்று இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் படி மனுச்செய்யகோரிய போது தாய்நாட்டிற்கே மனுப் போட்டுவிட்டான். நாலைந்து குடும்பங்கள் குடிபெயந்தவுடன் கிழவன் வேட்கையுடன் தீவிரமாகச் செயலாற்றினான்.

கிழவனை 'இன்று, நாளை, கையொப்பம் பிழைச்சுப் போச்சு' என்றெல்லாம் இழுத்தடிக்காது சின்னக் கிளார்க்கர் சேவைக் காலப் பணம், ஊழியர் சேமலாபநிதி என்பவற்றையெல்லாம் முடித்துக் கொடுத்துவிட்டார். நூற்றுக்கு இருபது என்ற அவரின் கமிஷன் கூட கிழவன் விடயத்தில் புறநடையாகப் போய்விட்டது. சந்தோஷம் என்று நீட்டிய இரண்டு பச்சைத்தாள்களையும் பெருந்தன்மையாக வாங்க மறுத்துவிட்டார்.

காதில் கடுக்கன் ஒளி வீச தன் புகைப்படம் ஒட்டிய பாஸ்போட்டை தலைவர் கொடுத்த பொழுது, கிழவனுக்கு எப்பொழுதோ நினைவிலிருந்து மறைந்துபோன ஆலமரத்துக் கல்லுக்கட்டில் அமர்ந்த பிள்ளையாரும், வயல் வெளியும், தென்னை மரங்களும் நிறைந்த ஆத்தூர்க் கிராமத்திற்குப் பறப்பது போன்ற உணர்வு ஏற்பட்டது!

பிரிந்து போக இருக்கும் கிழவனைக் கடந்த இரு வாரங்களாக விருந்துபசாரங்களில் திளைக்கச் செய்துவிட்டார்கள். தோட்டத்தவர்கள். நாள் நெருங்க நெருங்க, சோகம் கொடிகட்டிப் பறக்கத் தொடங்கிவிட்டது. அழுகையும், கண்ணீரும்தான். பிரியமானவர்களுக்குக் கிழவன் கொடுத்தது போக மீதிப் பொருட்கள் கட்டப்பட்டுப் பயணத்திற்குத் தயாராகிவிட்டன.

புதன்கிழமைதான் கப்பற்பயணம், தலைவர் கறுப்பையாவும் தொண்டர் தலைவர் சிவனும் தலைமன்னார்வரை கூட வருகின்றார்கள். 'இனிக்காணவா போகின்றோம்', என்ற நினைப்பில் இறுதியாக தோட்டத்தவர் எல்லோருக்கும் இரவில் ஒரு தேநீர் விருந்தளிக்க வேண்டும் என்ற முடிவில் சாப்பாட்டுப் பொருட்களும், பழங்களும் வாங்குவதற்காகக் கிழவன் நகருக்குச் சென்று கொண்டிருக்கின்றான்.

வட்டிக்கடை செ. மு. பிள்ளையின் கடையைப் பார்த்தவனுக்கு பத்து வருடங்களுக்கு முன்னர் தேயிலை ஸ்டோர் பற்றி எரிந்த சம்பவம் நினைவிற்கு வந்தது. அவனது கால்கள் இயங்க மறுத்தன.

யாரோ ஒருவர், 'ஏய் தாத்தா, என்ன வேடிக்கையா பார்த்துகிட்டு இருக்க? சுருக்காக வீட்டுக்குப் போ' என்று விரட்டியது கேட்டது.

தோளில் கிடந்த சால்வையை உதறி காதை மறைத்துத் தலைப்பாகையாக்கிக் கொண்டவன் 'சரி வந்தது வரட்டும்' என்று சந்தைக்குள் இறங்கினான்.

சந்தையில் வாழைப்பழங்களை வாங்கிக் கொண்டிருக்கும் போது பெரும் இரைச்சல் கேட்டுக் கிழவன் பயந்துபோனான். கம்பு தடிகள் சகிதம் இன்னும் பயங்கரமான ஆயுதங்களையும் ஏந்தியபடி, லொறிகளில் தொற்றிக்கொண்டு ஏதேதோ கோஷித்தபடி, தியேட்டர்ச் சந்தியில் பிரிந்து தோட்டத்திற்குச் செல்லும் பாதையில் சிலர் விரைந்து கொண்டிருந்தார்கள்.

என்னவாய் இருக்கும் என்று தன்னைத்தானே வினவி, பல பயங்கரமான பதில்களைக் கற்பனை செய்து அதிர்ந்து போனான். எனினும் 'எல்லாம் அந்த முருகன் செயல்' என்று சமாதானமானான்.

இரண்டு நாள்களுக்கு முன் பக்கத்துத்தோட்டத்தில் நிகழ்ந்த சம்பவம்!... அதை நினைக்கும் போதே பகீரென்றது. தலை வாழைக் குருத்தை வெட்டிச் சரித்த மாதிரி... வாழவேண்டிய வயதில்...

என்ன நடந்தாலும் லயத்தில் ஒருவரும் இல்லை. எல்லோரும் தூரத்து மலைகளில் வேலை.

ஆளும் பேருமாக இருந்தாலும் எதைத்தான் பெரிதாகச் சாதித்துவிட முடியும். பாக்குவெட்டியில் வைத்த பாக்கின் அவலநிலை. தாங்க வேண்டிய தரையே குழியாக கவிழும்போது.

வேகமாக நடந்தான் தோட்டத்தை நோக்கி வளைவில் டெல்டா சங்குவாரித் தோட்டம் என்ற பலகை அடிபட்டு வீழ்ந்து கிடந்தது.

நடைபாதையில் கடைவைத்திருந்த சிறுவர்கள் வாழைப் பழத்தோலை வீசி எறிந்து துவேஷமான வார்த்தைகளைக் கொட்டினார்கள். கிழவன் ஒன்றையும் பொருட்படுத்தவில்லை.

இறக்கமுடியாத மனச்சுமையுடன், தோட்டத்தவர்களை உபசரிக்க வாங்கிய பொருட்களுக்கு கனக்க, தோட்டத்தை நோக்கி விரைவாக ... விரைவாக... மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்க..

நகரைவிட்டு நீங்கித் தார்றோட்டில் நடந்து, தோட்டத்துச் செம்மண் பாதையில் ஏறி, லயத்தைச் சமீபிக்கும் முன்னரே நடந்துவிட்ட படுபாதகச் செயலை ஊகிக்க முடிந்தது.

லயம் அக்கின் வெள்ளத்தில் குதித்துக்கொண்டிருந்தது! ஆடு, மாடுகளை அடைத்த பட்டிகள் அக்கினியில் முழுகிக் கொண்டிருந்தன.

*தீ நாக்குகளிற் சிக்கிய மிருகங்களின் ஓலம்....!*
*அவலக்குரல் எழுப்பி அழுவோரும், சிதறிஓடுவோரும்...!*
*பொருட்களை இழந்தோரின் பரிதவிப்பு...!*
*செய்வதறியாத பிஞ்சுக் குழந்தைகள்....!*
*எல்லாமே வெறியாட்டத்தின் விளைவுகள்....!*
*எங்கும் மனத்தைக் குமட்டும் நெடியும் புகையும்....!*
*நேரம் நிதானமாகக் கடந்து கொண்டிருக்கின்றது*
*அக்கினி தேவனின் வெறி தணிந்து கொண்டபோது,*
*லயத்தின் தகரங்கள் கூட உருகிக் கிடந்தன!*
*விக்கினங்கள் செய்தவர்கள் விரைவாக மறைந்துவிட்டார்கள்.*

அசாத்தியத் துணிவில் ஏதேதோ பொருட்களைக் காப்பாற்ற முனைந்த இளைஞர்கள் தீக்காயங்களுடன் எரிந்த வீடுளிலிருந்து வெளியேறினார்கள்.

காலையில் கிழவன் நம்பிக்கையுடன் பூட்டிச் சென்ற வீடு கோரமாகக் காட்சியளிக்கின்றது!

“தாத்தா நான் முதல்ல உங்க வீட்டுப் பொருட்களைத் தான் காப்பாத்த பார்த்தேன். நாங்கள் என்றாலும் பரவாயில்லை நீங்க ஊருக்குப் பயணமாச்சே. என்ன செய்யப் போறீங்க? அடுக்கிக் கட்டிவைச்ச உங்க பொருட்களெல்லாம் ஒரேடியாக எரிஞ்சிபோச்சி! உடுதுணிகள் கூட எடுக்க முடியல. உங்க பாஸ்போர்ட், பணம் எல்லாம் வெந்து சாம்பலாப் போச்சி”, கூறியபடியே மயங்கி விழுந்தான் இலட்சுமணன்.

தீக் காயங்களில் அவனது முகம் கருகிப் போயிருந்தது

ரெங்கையாக் கிழவனுக்கு உலகம் தலைகுப்புற புரண்டு, வானம் இடிந்து தன் தலையில் வீழ்ந்ததுபோல் இருந்தது!

“முருகா! முருகா!.... என்ன அநியாயம்! அடுக்குமா...? நான் என்ன குற்றம் செய்தேன்?” என்று முகத்தில் அறைந்து கொண்டான். யாரோ ஒரு பெண், “தாத்தா!..” என்று கட்டிப்பித்துக் கதறினாள்

தானும் அந்த அக்கினியில் மூழ்கிச் சங்கமமாகி விடலாம் போலிருந்தது கிழவனுக்கு.

இந்த நாட்டிற்கு என்ன நடந்து விட்டது. இங்கு ஏன் மனிதர்கள் வெறிபிடித்த மிருகங்களாகிவிட்டனர்

“நாங்கள் நன்றி மறக்க வில்லை” என்பது போல; தவறணையில் நீவி, நீவி தண்ணீர் விட்டு வளர்த்தானே, அந்த தேயிலைக் கன்றுகள் லயத்தைச் சுற்றி கருகிக் கிடக்கின்றன.

**(சிரித்திரன்)**

*சிரித்திரனில் வெளியான இச்சிறுகதையை “தகவம் அவ்வருடத்தின் சிறந்த சிறுகதையென தெரிவு செய்து பரிசளித்தது.*



# வதைப்படலம்

**கா**ட்டுக்கோட்டை! தன் பெருமைக்கு 'பேரிலே' கட்டியம் சொல்லும் ஊர், பாரம்பரியமிக்க கிராமம்.ஆனால் இன்று, இவ் ஊரில் காடும் இல்லை! கோட்டையும் கிடையாது!!!

ஒரு காலத்தில் இவை இருந்திருக்கலாம். சாதகப்பட்சியைப் போல் ஒரு துளி மழைக்காக வானத்தைப் பார்த்து... பார்த்து ஏங்கி ஆண்டியாகி விட்ட ஊர்வாசிகளுக்கு இந்த காட்டுக்கோட்டை வீரப் பிரதாபங்களெல்லாம் அர்த்தமற்ற, வேண்டாத கதையாகிப் போய்விட்ட காலம்!

பொய்த்த வானத்தை நம்பிக்கையோடு பார்த்து ஏமாந்து, நெஞ்சில் சரளைக்கற்களை வடுவாக்கிக் கொண்ட வானம் பார்த்த பூமியாகி... "வெளைஞ்சா காட்டுக்கோட்டை இல்லாட்டி வெறும் கோட்டை" இதுதான் இப்போது காட்டுக்கோட்டை கிராமத்தின் எழுத்தில் வரையாத சிலாசாசனமும் செப்பேடும்.

காட்டுக்கோட்டையை ஏழ்மையின் கோட்டையாக்கி விட்ட பஞ்சம், கோவனத்தையும் பிடுங்கிக்கொள்ள நோய்களையும் துணைக்கழைத்துக் கொண்டு உலா வருகின்றது.

எல்லா ஊர்களிலுமே காணப்படும் சிறு மலையினைப் பற்றிய பொதுக் கதையான "அனுமார் சஞ்சீவி மலையைக் கொண்டு வரும் போது அதிலிருந்து உடைந்து விழுந்த துண்டு தான் இந்த மலையாகும்" என்று கூறப்படும் குரு மலையினை மேற்கு திசையில் அரணாகக் கொண்டு காட்டுக்கோட்டைக் கிராமம் தெற்கு வடக்கில் கிடத்திய பிணமாகக் கிடக்கிறது.

வானம் பொழிந்தால் கூட, நஞ்சை பயிருக்குமே கிணற்றுப் பாய்ச்சல் மட்டும் போதாது. கம்மாங்கரையில் இருந்த பாசனம் கிடைத்தாலே 'மகசூல் தேறும்' இப்பொழுது வானம் பொய்த்துப் போய் மேகம் சாப்பல் தட்டி வருடக்கணக்கில் அலையும்போது புஞ்சைப் பயிரைப்பற்றியெல்லாம் பேசவும் வேண்டுமா?... மேட்டு நிலங்களிலெல்லாம் வேலிக்கருவேலச் செடிகள் வளர்ந்து எஞ்சியுள்ள கால்நடைகளின் நாவிலும் 'செடில்பூட்டி' விடுகின்றன. நாக்கு அழகி, தலை உதறலெடுத்து நிற்கும் எலும்புக்கூட்டு உருப்படிகளை யார் வாங்குவார்கள்?

உப்புக்கண்டத்தில் சாப்பிட மாமிசம் வயிற்றில் பொருமி... ஊதிக்கிடக்கின்றது.

சேரத்தண்ணி காணாத மேனிகள் அரிப்பெடுத்து மொச்சைக் கொட்டை.. மொச்சைக்கொட்டையாய சொரி... சிறங்கு போட்டு தடிக்க, இரத்தம்... சீழ்.. வடிய..

பசி.... பசி... பஞ்சாய் பறந்தவர்களை வெம்மை தகித்து அம்மை 'வெளையாண்டு வர' குடும்பம், குடும்பமாக படுக்கையில் வீழ்கின்றனர்.

"கொடை எடுத்து அம்மனுக்கு குளிரவார்த்து, சக்திக்கரகம் பாளித்து வேப்பிலை தேர்கட்டி இழுத்தால் அம்மா கோபம் தணிவாள்" அபிப்பிராயம் தெரிவித்ததோடு தனது கஞ்சிக்கும் சேர்த்தே மடிப்பிச்சை எடுக்கப் புறப்பட்ட சிவனாண்டிக் கிழவனை, அடுத்த கிழமையே ஊரின் சனத்தொகையை பாதியாகக் குறைப்பதற்கு சபதமெடுத்துந்வியூகம் அமைத்த வாந்திபேதி வரவேற்று கம்பங் கஞ்சை மறக்கச் செய்கின்றது.

வாந்தி.. வயிற்றோட்டம் மள.. மளவெனச் சரியும் பிணங்களை இடுகாட்டிற்கு தூக்கிச் சென்றவர்களில் சிலர் திரும்பி வரும் வழியிலேயே வாந்தி இரத்த வயிறோட்டம் கண்டு வீடு வந்து சேராமலேயே அவர்களும் போக வேண்டியதாகி விட்டது.

கொள்ளைநோய்...காலரா.. ஊரே பிணவாடை வீசிக்கிடக்கின்றது.

இழவு வீடுகளிலெல்லாம் மாரடித்து ஒப்பாரி வைத்து களைகட்டச் செய்யும் 'கறுப்பாயிக் கிழவி' தனக்கு ஒரு ஒப்பாரி வைக்கக்கூட ஆள் இல்லாமல் வண்ணாரத் தெருவின் தொங்கலில், ஊர்மனையைக் காத்து நிற்கும் சங்கிலிக் கறுப்பன் கோயிலுக்குப் பக்கத்திலுள்ள குடிசையில் செத்து நாதியின்றி அழுகிப்போய் வீச்சம் வரவே குடிசையோடு எரிக்க வேண்டியதாகி விட்டது.

"ஜே.. ஜே.. என்றிருந்த ஊர் இப்பொழுது இப்படி சீ..சீ.. என்று சின்னப்படுகிறது.

வெள்ளிக்கிழமை காலையில வயித்தில என்னமோ செய்யுது?என்று ஆரம்பித்த ரெங்கையா கிழவனை அன்று மாலையிலேயே ரத்தமும் சீழுமாக

அடக்கம் செய்துவிட்டு வீட்டுத் திண்ணையில் அமர்ந்து குமுறிக் குமுறி அழுது கொண்டிருக்கின்றான் பேரன் கணபதி.

'டென்டனுக்கு.. டென்டனுக்கு...' அவன் அழுகைக்கு சுருதி சேர்ப்பது போல் ஒத்த தப்புவின் ஓசை ஓட்டைக் குடிசையைப் பிய்த்துக் கொண்டு கோடியில் தாளம் போட்டது. சாவுத்தப்பா இல்லியே.. தப்படிச்சி.. கேதம் சொல்லி, ஒப்பாரி வைச்சி.. நீர்மாலை எடுத்து கோடி போட்டு சவம் அடக்கிற நேரமா இது..? ஊரே கொள்ளை நோயில கொல நடுங்கிக் கிடக்குதே.. இல்ல... இல்ல... தமுக்கடிச்சி தண்டரா போடுறாங்க...." காதைத் தீட்டிக் கொண்ட கணபதி தப்புக்காரனை தொடர்ந்தான்.

"டென்டனுக்கு... னக்கு.. னக்கு" என்று அடித்துக் கொண்டு தப்புக்கார காத்தான் "டன்..டன்..டன்" என அடித்து நிறுத்தினான்.

தப்புச் சத்தத்தைக் கேட்டு பள்ளர் தெரு, பறையன் தெரு, சங்கிலியர் தெரு, குடியானவன் தெரு என்றெல்லாம் பிரியும் அந்த ஊர் சந்தியில் பலர் கூடினர். சிறிது நேரத்தில் காத்தானைச் சுற்றி ஒரு கூட்டமே கூடிவிட்டது.

இதனால் ஊர் சனங்களுக்கு தெரிவிப்பது என்னவென்றால் இப்பவும் நம்ம ஊர்லேயும், பக்கத்து ஊர்களிலேயும் பஞ்சம் பசியோட கொள்ள நோயும் வந்து பெருவாரியான சனங்க செத்துப் போனாங்க. நம்ம கஷ்டமெல்லாம் எப்போது தீருமின்னு தெரியல. அதனால ஊர்விட்டு ஊர்போய் தேசம் விட்டு தேசம் போய் புத்தியுள்ள ஜனங்க பஞ்சம் பொளைக்கிறாங்க. அதனால ஆத்தூர் தாலுக ஆனையம் பட்டியில் இருக்கும் கருக்குவேல் கங்காணி கண்டிச் சீமையில உள்ள, காப்பித்தோட்டம், தேயிலைத்தோட்டம், கோச்சிரோடு போடுகிற வேலைகளுக்கு ஆள் கூட்டுராரு... அந்தக் கண்டிச் சீமையிலேயும் இந்த வெள்ளைக்காரன் கொடிதான் பறக்குது. கண்டிச்சீமையில தாயில்லாத புள்ளையும் பொளச்சிக்கிறாளாம். தேயிலைத் தூர்ல தேங்கா மாசியெல்லாம் கூடகெடைக்கிதாம். தலைக்கு கெழமைக்கு காப்பொச பர்மா அரிசி.. வெள்ளிப்பணம்..." தப்புக்கார காத்தான் கட்டியக்காரனாக விவரித்து நின்றான். இப்போது ஊரில் முக்கால் வாசிக்கும் அதிகமானோர் அங்கு கூடி, கசமுசவென பேசிக் கொண்டனர்.

காத்தான் மீண்டும் ஒரு தடவை தப்பை அடித்துவிட்ட, 'ஆதலால் சனங்களே, ஆனையம்பட்டி பெரியாணிக்கு உதவிய நாம், ஊர்ல இருக்கும் சின்னக்கங்காணி முனுசாமி ஐயாக்கிட்ட பெயரைப் பதிந்து கொள்ளுங்கள்... டென்டனுக்கு... டென்டனுக்கு..." தண்டரா போட்டகாத்தான் இருளில் தலைமறைந்து போனாலும், பசியால் கூட்டைவிட்டு பறந்துவிடத்துடிக்கும் உயிரை தடுத்துவிடும் சஞ்சீவியென ஒத்தை தப்புவின் ஓசை கேட்டுக் கொண்டே இருந்தது.

காத்தானின் அலங்கார ஆவர்த்தனத்திற்கு ஊர் சனம் தாளம் போட்டு பஞ்சநடை நடந்தது. ஆகதமான தப்பு ஒலி அனாகத நாதமாக ஒலிக்கும் போது....

"வேறு கதி...."

மேட்டுத்தெரு முனுசாமி சின்னக்கங்காணியாகி, செல்லமாக சின்னாணியாக விஸ்வரூபமெடுத்து நிற்க ஆள்திரட்டும் தர்பார் அமர்க்களமாக நடக்கின்றது.

உறவைப் பிரிந்து; உணர்வைத்துறந்து, ஊரைப்பிரிந்து ஊரைப் பிரிக்கும் கடலையும் தாண்டி ஒன்றாகவே சாவோம் என்ற முடிவோடு பயணப் படுவோரை சடங்கு முதல் சாதிவரை பார்த்து பிரிவு பிரிவாக பட்டியல் போட்டுக் கொண்டு ஆனையம் பட்டிக்கு புறப்படத்தயாரானான் சின்னாணி.

பசி... பஞ்சம், பட்டினி எல்லோருக்கும்.. பசி.. பசிக்கும் வயிறும் ஒன்றுதான் குலம், கோத்திரம், வர்ணாசலம் என்ற பாகுபாடு மட்டும் வேறுவேறாக...

"கும்பிடுறேங்க சாமி"... பிந்தி வந்த ஆராயி கைகூப்பியபடி நின்று கொண்டிருந்தாள். நாலு பிள்ளைகளின் தாயாக இருந்த போதிலும் கட்டு குலையாமல் இருந்த அவள் உடம்பு தற்போது தளர்ந்துபோய் இருக்கின்றது. 'கும்பிடுறேங்க சாமி' ஆராயியின் குரல் மீண்டும் இழைக்கின்றது. கூப்பிய கையிடன் நாலு பிள்ளைகளின் தாய்.

அந்த இருட்டிலும் சின்னக்கங்காணியின் கழுகுப்பார்வை ஆராயியை அலசுகின்றது.

"என்ன... ஆராயி...? கங்காணியின் குரல் சாரங்கமாக ஒலிக்கின்றது. சாமி என் மகன் கணபதியையும், கண்டிச்சீமைக்கு கூட்டிப்போங்க.." சின்னக்கங்காணியார் பதில் கூறவில்லை. பதிலுக்குச் சிரித்தார். தொடர்ந்தும் சிரித்துக் கொண்டே பக்கத்திலிருக்கும் மாயாண்டியைப் பார்த்தார். மாயாண்டி கோரஸாக சிரித்தான்.

சின்னக்கங்காணி சிரித்தால், மாயாண்டியும் சிரிக்க வேண்டும். முறைத்தால் முறைக்க வேண்டும்.

பதில் கூறாது சிரித்துக்கொண்டே இருக்கும் கங்காணியின் காலில் தானும் விழுந்து கும்பிட்டதோடு மகன் கணபதியையும் அப்படி செய்யும்படி கூறினாள். பதினாறு வயது பூர்த்தியடைந்ததும் ஒரு சிறுவனைப் போன்ற தோற்றத்தையுடைய கணபதி, கங்காணியின் காலில் மிகவும் பவ்வியத்துடன் சாஸ்டாங்கமாக விழுந்தான்.

"என்ன புள்ள வெளயாடுறியா.." குரலில் விநோதமான சீற்றம்..." இந்த சின்னப் பயலை கூடிப்போய் நான் என்ன செய்ய? உன் புருஷன் சன்னாசி அந்த குப்பமேட்டு சிவளாயியை கூட்டிக்கிட்டு சிலோனுக்கு ஓடிப் போயிட்டான்னு ஊர்ல.. டொம்மு... டொம்முன்னு கெடக்கு"

“ஐயையோ என் தலபுள்ள சத்தியமா சொல்றேன்.. நான் வேணும்னா எந்த கோயில்லேயும் சத்தியம் செய்யுறேன். என் புருஷன் ஒரு நாளும் அப்படி செய்யாது. அந்த குப்பத்து சிறுக்கி செவளாயி எவனோட போனாளோ.. கொள்ளயில போவா... என் புருஷனோட போனதிற்கு என்ன சாட்சி இருக்கு..? ஐயன் வீட்டுமாடு கன்ன மேச்சிக்கிட்டு இருந்த என் புருஷன் மாட்டேன்னு ஒதுங்கிக்கிறவும் ஐயனுடைய தென்னந்தோப்பில யாரோ தேங்காயை புடுங்க இவருதான் புடுங்கினார்ன்னு பொய்குத்தம் சாட்டி கட்டி வைச்சி அடிச்சபடியால; அவமானம் தாங்காம போயிட்டாரு.

இவுங்க பாட்டனும் கண்ண மூடிட்டாரு. நான் இந்த நாலு புள்ளகளையும் வச்சிக்கிட்டு என்னா பண்ணுறது... சாமி எப்படி சரி எம்புள்ளயள கூட்டி போங்க...” இப்போது விசித்து விசித்து அழும் அவளது குரல். ஓ... என்ற அழுகையாக பெரிதாகக் கேட்டது.

“இது நல்ல கதை, உன் புருஷனை தேடவா வெள்ளைக்காரன் எங்களுக்கு பணம் கொடுக்கிறான்? சரி... சரி... என் கையை கடிச்சாலும் பரவாயில்லை. ஏதோ புண்ணியமா போவுது. ஆனா சொல்பேச்சி தட்டக்கூடாது. கண்டிச் சீமையில கெப்டன் பான்ஸ்துரை கோச்சுரோடு போடுறான். அங்க தனி ஆள் ‘ஒண்டி’களுக்கு வேலை இருக்கு... இப்ப தோட்டங்கள்ல வேலைக்கு குடும்பமாத்தான் கேட்கிறாங்க... கோச்சிரோடு போடுற இடத்தில கல்லுடைக்க, மண்தூக்க இப்படிப்பட்ட வேலைகள் இருக்கு பரிதாபப்பட்டு இவன் பேரையும் பதிஞ்சிக்கிறேன். மாயாண்டி சன்னாசி மகன் கணபதின்னு காட்டுக்கோட்ட பெரட்டில போட்டுக்க. ஞாயிற்றுக்கிழமை காலையில நாலு பெரட்டு ஆளு புறப்படுறாங்க. அதுல இவளையும் சேர்த்துக்கச் சொல்லு.. சனிக்கிழமை சாயந்திரமா வந்து செலவுக்கு பணம் வாங்கிக்க. எல்லாம் கடன் தான். என்ன மாயாண்டி புறப்படுவோமா...” சின்னக் கங்காணியின் சில்லரைக்கங்காணி மாயாண்டி, அரிக்கன் விளக்குடன் தலையசைக்க இருவரும் நடக்கின்றனர்.

கணபதி தன் தாயை பின் தொடர்ந்து குப்பத்திற்கு நடந்தான்.

“நீ கண்டிச் சீமைக்குப் போய் எப்படியும் உங்க அப்பாவை தேடி கண்டு பிடிச்சு அப்பாவை உடனே இங்க அனுப்பி வைச்சிரு... நான் பிறகு தம்பி தங்கச்சிமார்களையும் கூட்டிகிட்டு கண்டிக்கு வந்திடுறேன்... பார்த்தியா கங்காணியார்க்கு எப்படி எளகின மனசு. அவரு பேச்சை தட்டாம நடந்துக்கப்பா..” ஆராயி புதுத்தெம்புடன் கூறினாள்.

“நீ பயப்படாத அம்மா நான் எப்படியும் நம்ம அப்பாவை தேடிக்கிட்டு வந்திடுறேன். தம்பி தங்கச்சிமார்களை கவனமாக பார்த்துக்க. நான் அங்க இருந்து உங்களுக்கு பணம் அனுப்பி வைக்கிறேன்” கணபதி நம்பிக்கை ஊட்டினான்.

அன்று இரவு அவர்கள் குடிசையில் ஒரு கவளம் சோறு பெரும் விருந்தாக அமைந்தது.

ஞாயிற்றுக்கிழமை ஊர்கள் பலவற்றிலும் இருந்து கண்டிச்சீமையைப் பற்றி பூத்துக்குலுங்கும் கனவுகளுடன் நீ முந்தி.. நான் முந்தி.. என்று வந்த வந்தவர்கள் ஒன்றாகக் கூடி நடந்தார்கள். ஒரு "புழுதிப்பட்டாளம்" கடலை நோக்கி விரைந்தது. தன் நெருங்கிய உறவுக்கார வீரமுத்துவிடம் கணபதியை ஒப்படைத்த ஆராயி கண்கலங்கி நின்றாள். கண் கலங்கி நிற்கும் ஆராயியை 'நீ பயப்படாததங்கச்சி... நான் என் மகனா நெனச்சி பாதுகாத்து இருப்பேன்" என்று தைரியம் கூறிதேற்றி வீரமுத்து கணபதியை தன்னோடு சேர்த்துக் கொண்டு நடந்தான். வீரமுத்து ஆராயிக்கு சகோதர முறையானவன்.

நடை...நடை...நடை கால்கள் தேய்ந்து விடுமோ என்று அஞ்சும்படியான நடைமுள்குத்தி... புண்பட்டு... கால்கள் கெஞ்சி புலம்பினாலும் தொடர்ந்து நடை நீண்ட நெடும் பயணநடை. "எவ்வளவு நேரம் தான் கண்டி கதிர்காமக் கந்தனை நினைத்துப் பாடுவது.." பெரியோர்கள் இடையில் தங்கும் இரவுகளில் இராமாயணக் கதையைக் கூறிக்களைப்பபைப் போக்கினார்கள்.

இடைக்கிடை குக்கிராமங்களின் சந்திகளில் சாலையோரத்தில் மரநிழலில் கஞ்சித் தொட்டில்கள் "நடை பட்டாளத்தின் களைப்புத்தீர, கம்பனிகாரர் ஏற்பாட்டில்;" பரிதாபி வருஷம் பரதேசம் போறோம் என்று கஞ்சி குடித்தாறிய ஒருவன் பஞ்சகும்மி பாடினான். "பஞ்ச கும்மியும் தெம்மாங்கும்" கஞ்சி சுவைபடாத இன்னுமொருவன் சலித்துக்கொண்டான்.

இராமாயணக் கதையில் கடல் தாண்டும் படலம் வரும் முன்னரே நடைப்பட்டாளத்தினர் தனுஷ்கோடியை வந்து சேர்ந்து விட்டனர். அத்தனை உத்வேகமான நடை, கடலையே காணாத பலர் முதலில் கடலைக் கண்டனர். கடலை மட்டுமா கப்பலையும் பார்த்தனர். கப்பலை தொட்டுப்பார்த்தனர். தோணியில் ஏறி கப்பலில் அமர்ந்து பயணத்தைத் தொடர்ந்தனர்.

தண்ணீரில் தள்ளாடும் பாய்க்கப்பலில் பயணம் தொடர... பாய்க்கப்பல் மெதுவாக ஓடியது.. தூரத்தே தெரியும் இராமேசுவரம் கோயில்.. சுகமான கடற்காற்று அரவணைக்க நடை பயணத்தில் களைத்துப்போன அனைவருமே நித்திரையில் ஆழ்ந்தனர்.

பொழுது புலரும் முன்னர் மறுகரையினை அடைந்து விடலாம் என்ற நம்பிக்கையுடன் பாய்கப்பலில் ஏறியவர்கள் 'வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு கலங்க' சிறிதுசிறிதாக ஆரம்பித்த மழை பெருமழையாக.. பேய்மழையாக அடம்பிடித்துக் கொண்டு பெய்ய...

வெறிகொண்டு ஆடும் அலைகள், நீர்ச் சுழிகள் தண்ணீர் காட்டில் திசையும் தடுமாறிப்போக இடையிடையே கடலே பிளவுறும்படியாக இடியோசை வானத்தை பிளந்து காட்டும் மின்னல்கள். ஆட்டம் போடும் படகிற்கருகில் ஒரு

மின்னல்வெட்டு ''சாட்டையை சொடுக்குவது போல' சொடுக்குகின்றது. அரண்டு போய்க்கிடக்கும் கணபதி வீரமுத்துவை கட்டி அணைத்துக் கொள்கின்றான். 'எல்லாருமே, அருச்சுனா.... அருச்சுனா சொல்லுங்க'' 'அருச்சுனா.. அருச்சுனா' கப்பலே அதிரும் படியாக அருச்சுனா கோஷம் கேட்கின்றது.

தலைசுற்றி வாந்தி எடுத்தபலர், இப்போது அதிலேயே வீழ்ந்துவிட்டனர். மயக்கமடையாதோர் தெய்வங்களை துணைக்கழைத்து உயிர்ப்பிச்சை வேண்டி நின்றனர். பாய்க்கப்பலுக்கு எந்த நேரத்திலும் ஆபத்து ஏற்படலாம்.

கப்பலோட்டி கட்டளையிட்டான். கப்பலின் நடுமரத்தில் அம்புபோல் விரைந்தேறிய ஒருவர் 'பாயை' அறுத்துவிட்டு 'விர்' ரென்று இறங்கினார். சற்று நேரத்திற்கெல்லாம் தறிகெட்டு ஓடிக் கொண்டிருந்த அந்த பாய்க்கப்பல் வேகம் தணிந்து கட்டுக்கடங்கியது. காற்றின் வேகமும் தணிய, அலைகளும் அடங்கி ஓய்ந்தன.

பாய்க்கப்பல் நிதானமாக மிதந்து கொண்டிருந்தது. கிழக்கும் வெளுத்துக்கொண்டுவர துவண்டுகிடந்த அனைவரும் எழுந்து நின்றனர். அமைதி பிறந்து நிற்கும் போது... அந்த அமைதி நிலவியது. சிறிது நேரம் தான்; பாய் இழந்து நிற்கும் கப்பலை ஒரு பாரிய மலை ஒட்டி உரசி சேர்த்து இழுப்பது போல மெது மெதுவாக இடதுபக்கமாக சரிய... என்ன இது புதிதா.. 'தெரியாமல் விளங்காமல் 'ஐயோ... ஐயோ'' கப்பல் மூழ்கப் போகுதா...? அவலமாக கத்துகின்றனர்.

''கூனிப்பொடி மீன்கள் கூட்டம் கூட்டமாக வந்து.. மலை மலையாக குவிந்து கப்பலை ஒட்டுது... உடனே அந்த மூலையில் அடுக்கி வச்சிருக்கும்... தவிட்டு மூட்டைகளை கடலில் கொட்டுங்கள்.. தவிட்ட கடலில் போடுங்க...' கப்பலோட்டி அவசரப்படுத்தினான்.

அந்த அவசரக் குரலைவிட அவசர அவசரமாக ஒரு மூலையில் தயாராக அடுக்கி வைக்கப்பட்டிருந்த தவிட்டு மூடைகளை எடுத்து அவிழ்த்து கடலில் கொட்டினார்கள்... தவிட்டு மூடைகளை கொட்டிக் கொண்டே இருந்தார்கள். தவிடு கடலில் மிதந்தது. கடற்பரப்பில் தவிட்டுக்கோலம்.. பாய்க்கப்பலில் மலையென படிந்த கூனிப்பொடிகள் கலைந்து கடலில் மிதக்கும் தவிட்டை உண்ண விரைந்தன.. அலைகளில் தவழும் தவிட்டை உண்டு... உண்டு...

கப்பல் ஒரு குலுங்கு... குலுங்கி திசை திரும்பி ஒடியது.. சிறிது நேர ஓட்டத்திற்குப பின்னர் கரைதெரிந்தது. கரையைக் கண்ட கப்பல் பயணிகள் கையெடுத்துக் கும்பிட்டனர்.

அன்று நண்பகலுக்கு முன்னேயே தட்டப்பாறையில் முட்டிவைத்துப் பொங்கியவர்கள். மறுநாள் காலையிலேயே மலைநாட்டை நோக்கி நடந்தனர். கப்பல் பயணத்தில் இறுதிப்பயணம் சென்றுவிட்ட சிலர் மன்னார் மணலில் அடங்கி விட நோய்வாய்ப்பட்டோர் பின் தங்கி நடந்து வந்தனர்.

மீண்டும் "ஒரு நடை பாரதம்" தொடங்கியது. அடர்ந்த காடுகளுக்கு மத்தியில் புழுக்கள் நெளியும் மனித சடலங்களையும், எலும்புக்கூடுகளையும் வழித்தடமாகக் கொண்டு நடந்தனர்.

உயிர் காடுகளைக் கடந்து, ஈரவலயக் காடுகளில் புகுந்த போது அட்டை போன்ற ஜந்துக்கள் தொற்றி இரத்தம் குடித்தன.

ஆங்காங்கே 'முட்டி வைத்து' ஆக்கிய போது மிஞ்சிய பழைய சோற்றை அடுத்த நேரச் சாப்பாட்டிற்கே வைத்துக்கொண்டனர். நடை பயணத்தில் களைத்தோர் பிந்தி வந்த கூட்டத்தில் சேர்க்கப்பட்டு 'தொத்த பயலுகள்' என்று கேலி செய்யப்பட்டனர்.

பத்து தினங்கள் இரவு பகல்.. நடை பயணத்தில் கழித்த பின்னர் குழுக்கள் பன்னாமத்தை அடைந்தனர். மலைநாட்டின் வாசலென விளங்கிய பன்னாமம் அழகிய சிறு கிராமம். நாற்புறமும் சுற்றிலும் முடிச்சு விழுந்த மலைகள் 'கறுத்தை ரோடு' ஒன்று அங்கிருந்த புறப்பட்டுச் சென்றது.

வெள்ளைக்கல் தொட்டகமம் ஆட்டுப்பட்டி, தாம்பர வள்ளி பன்னாமம் தமிழ்மணம் அடுத்தடுத்து தமிழ் குடிகள் வாழ்ந்தனர். பன்னாமத்தில் மாரி குடியிருந்தாள்.

மதுரை மீனாட்சியை 'கையெடுத்து' துதித்தவர்களுக்கு பன்னாமத்து முத்துமாரி அடைக்கலம் கொடுத்தாள்.

பன்னாமம் வந்து சேர்ந்தோரை மீண்டும் நாலு குழுக்களாகப் பிரித்தனர். முதல் மூன்று குழுக்களும் குடும்பத்தவர்களாக விளங்க, நாலாவது குழு "தனிக்கட்டைகளைக்" கொண்டதாக அமைந்தது. நாலாவது குழு "கோச்சு றோட்டு" வேலைக்கென தெரிவு செய்யப்பட்டதாகும்.

குழுக்களைப் பிரித்த கங்காணி மனம் குமுறி நிற்கின்றார். "இந்த பயணத்தில் 'சேதாரம்' பெரிதாக அமைந்துவிட்டது. ஆளை திரட்டுவதை விட உயிரோடு கொண்டு வந்து சேர்ப்பதே மலையாக அமைகிறது. எப்படி சரிக்கட்டுவது? ...தலை சுற்றுகிறது!" கங்காணியார் தலையைச் சுற்றி தலைப்பாகையைக் கட்டுகிறார்.

முதற்குழு வாட்டசாட்டமாக அமையவே பதுளைக்கு அனுப்பப்பட்டது. ஏனையவை பன்னாமத்திற்கு பக்கத்தில் உள்ள தோட்டக்களுக்கு அனுப்பப்பட்டது. இதனால் ஒன்றாக சேர்ந்து வந்த பலர் பலவாறு பிரிந்து போய்விட்டனர்.

மாயாண்டி கணபதியை தனது கையடக்கத்தில் வைத்திருந்தது; நாலாவது குழுவிலேயே அமர்த்திக் கொண்டான்.

"ஏன்டா... இந்த ஊரை பன்னாமம்னு சொல்லுறாங்க. ஆனா இந்த ஊர்ல ஆளுகள மாத்தி மாத்தி தலையே அனுப்புறாங்க" சகாக்களை பிரிந்த ஒருவன் மன உளைச்சலில் கூறினான்.

"ஆமா நாம்மா ஒன்னா வந்தவங்களை மாத்தி அனுப்பின ஊர்... மாத்தளை. பன்னாமம் இல்ல..." பகிடியாகக் கூறினான்.

'மத்தளை' 'நல்ல பெயர்' எல்லோருமே சிரித்தனர். அவர்கள் துயரத்திலும் சிரிப்பை மறக்கவில்லை.

ரயில் ரோட்டுக்கு தெரிவு செய்யப்பட்ட குழு தனியாக நடையைக் கட்டியது. கணபதி வீரமுத்துவை நிழல் போலத் தொடர்ந்தான். வழி நெடுக சேறும் சகதியும் குன்றும் குழியுமாக ஏறி இறங்க வேண்டியிருந்தது. பனிமூட்டத்தை துளாவிக் கொண்டு வழி தேடிச் செல்வோரை தூவானம் வரவேற்றது.

இருபுறமும் படரும் தோட்டங்கள் கண்ணுக்கெட்டிய தூரம் வானளாவி நிற்கும் ஈரவலயக் காடுகள் அழிய கோப்பி, தேயிலை, றப்பர் தோட்டங்கள் உருவாகிக் கொண்டிருந்தன. தோட்டங்களுக்கு நடுவே ரயில்ரோடு உருவெடுத்துக் கொண்டிருந்தது. ரயில் பாதைக்கிடையில் 'கேம்ப்' அடித்து தொழிலாளர் தங்குவதற்கு வசதி செய்திருந்தார்கள். ஒவ்வொரு 'கேம்பிலும்' இருநூறு பேருக்கும் குறையாமல் இருந்தனர்.

சல்லிக்கற்கள் உடைத்தல், பாதை வெட்டுதல்.... மண் நிரப்பல் மலைகளைக் குடைந்து சுரங்கப் பாதைகளை அமைத்தல், பாலம் கட்டுதல், தொங்கு பாலம் அமைத்தல் முதலான வேலைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன.

கொத்தனார்கள், 'ஆண்கல்', 'பெண்கல்', 'அலிக்கல்' பார்த்து பச்சிலை மூலிகைக் கொண்டு பாரிய கற்பாறைகளை பிளந்து கொண்டிருந்தனர். மலைகளையே சிலைகளாக்கிக் கொண்டிருந்த சிற்பிகளின் உளிச்சத்தம் தேனிசையாக அருவிகளின் ஆலாபனையில் கேட்டுக் கொண்டிருந்தது. இடைக்கிடை கல்லு வெடிச்சத்தம் பயமுறுத்தியது.

கணபதியும் வீரமுத்துவும் சிங்கமலை சுரங்கத்திற்கு அடுத்ததாக கட்டப்படும் பாலத்தில் வேலைசெய்வதற்காக அனுப்பப்பட்டனர். இடையில் தங்கிய கேம்புகளிலும் சந்தித்த ஆட்களிடமும் சன்னாசினை விசாரித்தபடியே இருவரும் சென்றனர்.

இரவு... தூக்கத்தில் ஆழ்ந்து கிடக்கின்றது.... தூங்காமல்... சின்னகங்காணி முனுசாமியும், மாயாண்டியும், கேம்புகளுக்கு மத்தியிலுள்ள "வாடியில்" வாடிப்போய் மந்திராலோசனை நடத்திக் கொண்டிருக்கின்றனர். நாட்டிலிருந்து கொண்டுவரப்பட்ட ஒரு குடம் கித்துள் கள்ளில் இன்னும் சிரட்டைக் கள்ளே எஞ்சியிருக்கின்றது.

யோசனை... யோசனை.... எப்படி இடிந்த பள்ளத்தை நிரப்புவது...? 'எப்படி இந்த பள்ளத்தை நிரப்புவது....?' உருப்படியாக ஒன்றும் தட்டுப்படவில்லை. முட்டிக்கள்ளு முடிந்ததே ஒழிய 'போதையோ' பாதையோ தெரியவில்லை.

வெள்ளைக்கார பான்ஸ் துரையின் முகத்தை நினைக்கும் போது தலைக்கேறிய போதை இறங்கி போகின்றது. கைநீட்டி வாங்கிய வெள்ளிப்பணம் கொஞ்ச நஞ்சமா...?

குறித்த காலத்தில் பாலத்தை எப்படி கட்டி முடிப்பது....? யோசனையில் மூழ்கி துயரப்பட்டு மௌனத்தில் ஆழ்ந்துபோன கங்காணியின் மௌனத்தளைகளை உதறுவது போல, மாயாண்டி.. 'ஐயோ கங்காணியாரே.. கங்காணியாரே குரலில் உற்சாகம் ததும்பியது.

முனுசாமி நம்பிக்கையோடு, கங்காணியாரே! ம்...சொல்லு'

கங்காணியாரே நாம்ம கட்டாத பாலம் இல்ல... மறிக்காத ஆறு இல்ல... நிரப்பாத பள்ளம் கெடங்கு இல்ல... பள்ளம் மட்டும்தான் இப்படிசோதனையா போச்சி... மண்நிரப்ப... நிரப்ப... இடிஞ்சி போவுது... இப்படி ஒரேயடியா இடியறதுக்கு ஒரு காரணம் இருக்கு.. இப்பதான் எனக்கும் அது மனசில படுது. இந்த இடத்தில் ஒரு முனி பாய்ச்சல் இருக்கு... அதுதான் இப்படி... இங்க இருந்து பாருங்க... ஏழு மலைகள் ஒரே தொடர்ச்சியா தெரியுதே அது எழு கன்னிமார் இருக்கிற மலையா இருக்கும்... இங்க இருந்து ஒரு முனி பாய்ச்சல் அங்க போவுது. முனிப்பாய்ச்சலின் வழி சரியா இந்த இடத்திலதான் அமையுது. ரெண்டொரு தடவ என் கனவிலேயும் இது தட்டுப்பட்டிச்சி.. அதலாதான் பாலத்தை கட்ட விடாம தடுக்குது... அதுதான் இந்த சோதனை எல்லாம்... முனியை நம்ம வழியில வராமதடுக்க ஒரு வழி இருக்கு.... முனியை திருப்திப் படுத்த ஒரு வழி இருக்கு... ஒன்னு செய்யனும்.

"என்னா செய்யனும்... உடனே சொல்லு..." கங்காணியின் குரலில் பதற்றம்... எனினும் தெம்பு இழைந்தது. சோர்ந்து கிடந்தவர் துள்ளி எழுந்து நிற்கிறார்.

நாற்புறமும் நோட்டம் விட்ட பின்னர். மாயாண்டி, கங்காணியின் காதில் கிசுகிசுக்கிறான். கங்காணியின் முகம் வியப்பால் விரிகின்றது. 'செஞ்சா சரி வருமா?.. அப்படி செஞ்சா சரியா? மாயாண்டி.. மாயாண்டி..' குரல் இழைகின்றது.

"ஆமா.. ஆமா எங்க பாட்டா முந்தி ஒரு கதை சொன்னிச்சி... ஏழு அண்டா புதையல் எடுக்க செஞ்சாங்களாம்... சரி வந்திச்சாம்..."

மீண்டும் இருவரும் கிசுகிசுகின்றனர். கங்காணி மாயாண்டியிடம் கேள்வி மேல் கேள்வி கேட்டு திட்டம் போடுகிறார். இப்போது தலைக்கேறுவது போதையா புத்தியா தெரியவில்லை.. தெளிவில்லை. இருவருக்குமே தெரியவில்லை. வெள்ளைக்காரனிடம் வாங்கிய வெள்ளிப்பணத்திற்கு வகை சொல்ல வழிகிடைத்து விட்டது... பாலத்தைக் கட்டி விடலாம்.

அடுத்த நாள் சின்ன கங்காணி அவசர வேலையாக வீரமுத்துவை 'உதுமான் கந்த' சுரங்ககேம்புக்கு அனுப்ப, வீரமுத்து தான் திரும்பி வரும்வரை கணபதியை பத்திரமாக இருக்கும்படி கூறிவிட்டுச் செல்கின்றனர்.

வீரமுத்து அங்கேயும் தன் தகப்பனைத்தேடி வருவான் என்ற நம்பிக்கை கணபதிக்கு வளர்ந்தது. வீரமுத்து உதுமான் கந்தைக்கேம்பிற்கு புறப்பட்டுப் போனான். அங்கேயும் கணபதியின் தகப்பனைப் பற்றி விசாரித்தபடியே சென்றான்... சன்னாசியை தேடியவன், கறுத்த வாட்டசாட்டமான கறுப்பரும் அங்கே ரயில்ரோடு போடும் வேலைகளில் ஈடுபட்டிருப்பதை கண்டு வியந்து போனான்.

'யார் இவுங்க...? என்றான். "காபிரியன்".... கடிச்சிடு வான்கள்" என்று ஒருவன் பயம் காட்டினான். அன்றுமாலை சில்லறைக்கங்காணி மாயாண்டி, கணபதிற்கு தெரிவித்த செய்தி, அவனை ஆடுபாலத்தில் வைத்து தாலாட்டியது. 'ஆயா... அப்பா இருக்கிறாராம். நாளைக்கு அவரை பார்க்கப் போறேன். உங்களையும் தங்கச்சிமார்களையும் கூட்டிவர அப்பாவை அனுப்பி வைக்கிறேன். நாளைக்கு அப்பாவை பார்ப்பேன். நான் கடல் கடந்து தேடி வந்ததைக் கண்டு சந்தோஷப் பட போறார்" கணபதி களிப்பில் மிதந்தான். நாளை காலை கொட்டகல கேம்பில் இருக்கும் அவன் அப்பா சன்னாசியைப் பார்க்கப் போக வேண்டும். அதிகாலையிலேயே...

"இந்த மாயாண்டி சின்ன கங்காணிக்குத்தான் எவ்வளவு நல்ல மனசு... அப்பாவைத் தேடி கண்டு பிடிச்சிட்டாரே...."

மகிழ்ச்சி கிச்சு கிச்சு மூட்ட, தூக்கம் வரவில்லை. கண்ணா மூச்சு வௌையாடுகின்றது. கணபதி எப்போது விடியும்.. ஆவலோடு விழித்தபடியே.. விடியல்.. கணபதி விடியலின் கதிராக எழுந்து... புறப்பட...

ஞாயிற்றுக்கிழமை விடியற்பொழுது; சூரியப்பந்து மேகத்திரையில் ஒளிந்து கிடக்கின்றது. கேம்புகளிலுள்ளோர் எழுந்திருக்க மனமன்றி எலும்பைக் குத்தும் குளிரில் சுருண்டு கிடக்கின்றனர். மாயாண்டி கூறிபடி கணபதி குளிரையும் பொருட்படுத்தாது, குளித்துவிட்டு கொட்டகலகேம்பிற்கு புறப்பட தயாராக நிற்கின்றான்.

திட்டு திட்டாக இருட்டு மேகம் திரை; போட்டு நிற்கின்றது.

"கணபதி..." மாயாண்டியின் பாசக்குரல்

"வந்துவிட்டீங்களா... இதோ புறப்பட்டுட்டேன்... கங்காணியாரே..கணபதி பணிந்து பவ்வியமாகக் கூறினார்.

"கணபதி பொழுது விடியறத்திற்குள்ள நாம இங்கிருந்து புறப்படத்தான் காச்ச மலையைத் தாண்டி கொட்டகல கேம்பிற்குள் பகல் சாப்பாட்டிற்கு முந்தி போயிறலாம். அங்க முதல்ல உங்க அப்பாவை கண்டு பேசுவோம். பிறகு, பெரிய கங்காணியார் கிட்ட சொல்லி ரெண்டு பேரையும் ஒரே கேம்பில சேர்ந்திருயறேன்... நீ காலையிலே குளிச்சியா ஒரு பூஜை நேர்த்திக்கடன் இருக்கும்...."

“ஆமா... நீங்க சொன்னபடி குளிச்சிட்டேன்...” கணபதியின் குரலிலும் தூய்மை மெல்லிய இருளுக்கு மெருகேற்றிபடி இருவரும் நடந்தனர். ஒரு காதம் நடந்திருப்பார்கள். அவர்கள் பாதையில் ஒரு முடக்கு, அங்கே இருவர் இருளோடு இருளாக நின்றனர். அந்த இருவரும் இவர்களைத் தொடந்து நடந்தனர். பின்பு நாலெட்டு தூரம் தான் நடந்திருப்பர். ‘கணபதி இந்த புது வேட்டியைக் கட்டிக்க உங்க அப்பாவை புதிசா பார்க்கப் போற இல்ல.... புது வேட்டி கட்டிக்க... அப்பதான் மதிப்பா இருக்கும்...” முதல்ல இந்த இடத்தில சாமி கும்பிட்டுட்டு போவோம்” வாஞ்சையோடு தரும் வேட்டியை வாங்கிக் கட்டிக் கொண்டான். “இந்தா விபூதியைப் பூசு” கூட வந்த இருவரும் இப்போது அவன் நெற்றியில் விபூதியைப் பூசி, சந்தனத்தை அப்பி, குங்குமப்பொட்டை வைத்தனர்.

கணபதிக்கு புதிராக இருந்தது. அப்பாவைப் பார்க்க சாமி கும்பிட... நல்லது எத்தனை உபசரணை, அப்பாவை நேரில் பார்த்துவிட்டது போல மகிழ்ச்சியில் தோப்புக்கரணம் போட்டு விழுந்து கும்பிட்டான்.

“இந்த தேசிக்காயை கையில் வைச்சிக்க...” வணக்கம் முடிய மாயாண்டி கணபதியின் கையில் கொடுத்து ‘இதுவரை காணாமல் இந்த ஆள, முதல் தடவையா காணப் போறோம் இல்லியா... அதுதான்.... இதெல்லாம்.... நான் முந்தியே வச்ச நேர்த்திக்கடன்.... நேர்த்தி வச்சா மறக்காம செஞ்சிடனும்...........”

கணபதி எலுமிச்சம் பழத்தை வாங்கி கையில் வைத்துக் கொண்டான். கூட வந்தவன் செம்பிலிருந்த தண்ணீரை சிறுவனின் தலையில் தெளித்து கொட்டினான். கணபதி தலையைச் சிலிர்த்தான். தண்ணீர் விசிறி தெறித்தது. எதற்கும் சம்மதமாக சிலிர்த்தான். தலையை ஆட்டினான். அது சம்மதம் தான் என்ற சாடையைக் காட்டியது.

“இப்பபோவோம்....”

மாயாண்டி முன்னே நடக்க, நால்வரும் பள்ளத்தில் இறங்கி நடக்கின்றனர். “இந்த குறுக்குப் பாதை, இதுலபோனா சுருக்கா போயிறலாம்” குறுக்குப் பாதையோ என்னவோ... அப்பா கிட்ட போனா சரி” கணபதி வாய் திறக்கவில்லை.

சிலிர்த்தோடும் அருவியின் ஓரத்தில், இறங்கி புதிதாக பாலம் கட்ட ஆழமாக குழி தோண்டி இருக்கும் பகுதிக்குள் இப்போது நடந்து கொண்டிருந்தனர். பாதாளக்குழியின் ஓரமாக இருளைத் தடவியபடி நால்வரும் நடக்கும்போது....”

முன்னால் சென்று கொண்டிருந்த மாயாண்டி நின்று திரும்பிப்பார்த்து, கணபதி இப்படி நில்லு...” குரலில் நடுக்கம் எனினும் அதட்டி வந்தது.

“நம்ம எங்க அப்பாவைத்தானே பார்க்கப் போறோம்...?” கேள்வியா... நடுக்கமா....

“ஆமா...நீ உன் தாய்க்கு தலைமகன் தானே... இந்தப் பக்கம் பாரு... திரும்பு... ஆமா... திரும்பு...” மாயாண்டி ஒரே பாய்ச்சலாக பாய்ந்து அசுரனாகமாறி ஆழக்கிடங்கினுள் கணபதியைத்தள்ளி விட,

ஒரு கணம் நடந்தது என்ன என்பதை நிதானிக்க முடியாத கணபதி நிலைகுலைந்து கால்கள் இடறி தலைகுப்புற சரிந்து “ஐயோ அம்மா... அப்பா... அப்பா” கணபதியின் அபயக்குரல் பாழுங்கிடங்கிலிருந்து வெளியே வரவில்லை.

இடிந்து கிடக்கும் பாழுங்கிடங்கினுள்... ஆழக்குழியில் பள்ளத்தில் தலைக்குப்புற அப்பாவைத்தேடி... தேடி கணபதி,

இருட்டிலிருந்து வெளிப்பட்ட கங்காணி முனுசாமி பதறும் குரலி “போடு சம்பிராணியை போடு சாம்பிராணியை’ துரிதப்படுத்தினான்.

மாயாண்டி எலுமிச்சம்பழத்தை வெட்டி நான்கு திசையிலும் வீசிக் கொண்டிருந்தான். தணல் சட்டியில சாம்பிராணியைத் தூவி, பள்ளத்திற்கும், மேட்டிற்குமாக ஆட்டி காட்டிவிட்டு குழியினுள் வீசி எறிந்தனர் கூட வந்ததோர்.

‘வால் முனியே உனக்கு நரபலி. தாய்க்கு தலைமகனை காவு கொடுத்திட்டேன். இரத்தப்பலி கொடுத்திட்டேன். இந்த பலிலை ஏத்துக்கிட்டு இனி பாலத்தைக் கட்டவிடு... குழியை இடிய விடாதே... பாலத்தைக்கட்டவிடு...” வெற்றிலையில சூடத்தைக் கொளுத்தி சுடரை நாலா திசைகளிலும் காட்டிய முனுசாமியின் நா.. முணுமுணுக்கின்றது கைகள் நடுங்குகின்றன.

அப்போது மற்றவர்கள் அதள பாதாளத்தில் தலை சிதறி குற்றுயிரும் குலை உயிருமாக கிடக்கும்; கணபதியின் மீது பெரிய பெரிய பாறாங்கற்களை தம் தலைக்கு மேலே தூக்கி தூக்கி... “முனியே பலியை ஏத்துக்க... ஏத்துக்க” என்று சரமாரியாகப் போட்டுக் கொண்டே இருந்தனர்.

**(மல்லிகை - மாத்தளை மாவட்ட சிறப்பிதழ்)**



# குருக்ஷேத்திரம்

இதற்கு முன் பலதடவைகள் நான் இந்தக்தோட்டத்திற்கு வந்திருக்கின்றேன். இப்படியொரு அவலச் சூழ்நிலையில்தான் மறுபடியும் இங்கு வரவேண்டியிருக்கும் என்று அப்பொழுது நினைத்தது கிடையாது.

அப்பொழுது ''இந்த மலைகளையே அதற்றிடும் முயற்சியில் எத்தனை உற்சாகத்துடன் இரகசியமாக நாங்கள்'' எதிரும் புதிரும் புதிருமாக அமைந்துள்ள நான்கு வயன்களுக்கு மேற்கே மேகத்தைக் கடையும் மத்தாக ''வீசுக்கென்று நிமிர்ந்து நிற்கும் மலையின் அடிவயிற்றை வெட்டிச்சரித்து, நிரவிய ஒரு திடல்........ அதுதான் காமன் பொட்டல்.

காமன் கூத்து ஓய்ந்துவிட, கிளிதட்டு, கிட்டிப் புள்ளு என்ற விளையாட்டுகள் முதல் ''தலைவருக்கு... ஜே! ஜே!'' என்று சந்தியில் ஊர் வலத்துடன் தொடங்கும் தொழிற்சங்கக் கூட்டம் வரை எல்லாமே இங்கு தான் நடக்கும். காமன் பொட்டலுக்கு மேலே குடைவிரித்து நிற்கும் ஆலமரத்து நிழலில் அம்மன் கோயில். ஆலமரத்தின் விழுதுகள் கோயில் தகரத்தில் படிந்து, தழுவி , சரசரத்து சாமரை வீசிக் கொண்டிருக்கும். பறவைகளின் சங்கீதத்திற்கும் குறைவேயில்லை. கோயிலுக்கு முன் வங்கிச் சரிவை அணைத்தப்படி பெரிய கல்லுத்திண்டு, கல்லுத்திண்டில் அமர்ந்து, ஆலமர நிழலின் குளுமையில் சுருட்டைப் புகைத்தபடியே கிழடுகள் ஊர்க்கதை பேசிக் கொண்டிருப்பார்கள். ஊர்ப் பஞ்சாயத்து மேடை என்ற நினைப்பு போலும்.

இடது புறமாக சற்றுத்தூரம் தள்ளி மென்சாய்வின் வளைவில்; கோரமாக நாவினை தீட்டிக் கொண்டிருக்கும்; தீப்பாறையில் உச்சிமலையிலிருந்து

கசிந்து; நசிந்து; ஊறும் நிறைந்து ஒழுகிக் கொண்டே இருக்கும். கோயில் உற்சவ காலத்தில் இது தீர்த்தம். அதற்கப்பால், கண்ணுக்கு எட்டிய தூரம் வரை, மலைகளை பசிய இலைகளால் மெழுகிக் கொண்டிருக்கும் தேயிலைச் செடிகள் இடையிடையே; உயரமாகவும்; குட்டையாகவும் கடும் பச்சை நிறத்திலும் சோர்ந்துப்போய் நிற்கும் கருப்பந்தைல மரங்கள்.

கோயில் உற்சவத்தை முன்னிட்டு “பூலோக ரம்பை” அல்லது ‘ரம்பையின் காதல்’ என்ற நாடகத்தை மேயேற்றினார்கள். அப்பொழுது தான் முதற்தடவையாக இங்கு வந்தேன் அதற்கு பின்னர் பல தடவைகள் இங்கு வந்திருக்கின்றோம். “ஏழையின் வெற்றி.. “கொடுமை தீராதா” ஆகிய நாடகங்கள் அரங்கேற்றப்பட்ட பொழுது வந்துள்ளோம். காலமாற்றத்தில் மேடை யேற்றப்பட்ட நாடகங்கள் அவை.

இது நிகழ்ந்து பல வருடங்களாகிவிட்டன. அப்பொழுது அந்த இளைஞன் இலட்சுமமணன் தோட்டத்தில் இளைஞர்களின் தலைவனாக விளங்கினான்.

உழைப்பால் உரமேறிய உடல், உறுதிவாய்ந்த உள்ளம், பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு அவற்றைத் தீர்த்து வைக்கத் துடிக்கும் உணர்வு.... சேவைக்கு முதலிடம். அப்பாடா.......!! “தொண்டர், தோழர்” என்றெல்லாம் முழுத் தோட்டமுமே தலைமேல் தூக்கிவைத்துக் கொண்டாடியது. அத்தனை மதிப்பு!!

எதிர்பாராமல் கிடைத்த இடமாற்றத்தினால்தான் இப்பகுதியுடனே தொடர்பு அற்றுப் போய்விட்டது என்று கூற முடியாவிட்டாலும்; தொடர்பு அற்று தான் போற்றிவிட்டது. இடமாற்றம். அறுபது மைல்களுக்கு அப்பால்!! அதுவும் தோட்டப் பகுதிதான் தோட்டப்பகுதி என்றால் வாழ்க்கையே பிரச்சினைதான். குழந்தைகளைப் பேணும் பிள்ளைப் மடுவத்திலிருந்து, பிணத்தைப் புதைக்க; சுடுகாட்டிலும் கூடப் போராட்டம் தான்.

வஞ்சிக்கப்பட்ட வயிற்றுடனும்; நிராசையான நம்பிக்கைகளுடனும் வாழ்வின் பிடிப்பே அற்று; உழைப்பதற்காகவே உயிர் பிழைத்திருக்கும் அவர்கள் மீது பல்வேறு விளைவுகளும் வந்து விழ.... நாதியற்று நடுத்தெருவில் இறங்க நேர்ந்தபோது.....

உடனடிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு; எப்படியெல்லாமோ செயல்பட வேண்டியதாகி விட்டது. அது தவிர்க்க முடியாத நிலை....

ஓர் இனத்தைச் சேர்ந்த தொழிலாள வர்க்கத்தினரை திட்டமிட்டு நசுக்கும் போது, ஏற்படும் பிரச்சினைகளை இரண்டொரு இதயத் துடிப்புகளால் போக்கி விட முடியுமா? உழைக்கும் நிலத்திலிருந்து பிரித்தெடுத்து குடியிருந்த, குச்சியிலிருந்து துரத்தி, ஒரு வேளை சோற்றுக்கே வழியின்றி, பஞ்சப் பராரிகளாக பாதைகளில் தவிக்க விட்ட போது......

பிணம் தின்னும் சாத்திரங்களுக்குமத்தியில், ஜீவ மரணப் போராட்டம் நடத்துகையில் எல்லாத் தொடர்புகளுமே அறுப்பட்டுத் தான் போய் விட்டன. கடந்த வாரம் இங்கு நிகழ்ந்த அனர்த்தத்தை கேள்விப்பட்டவுடனயே ஓடி வரவேண்டும் போலிருந்து..... பழைய நினைவுகள் மனதில் எழுந்து நெஞ்சை ரணகளமாக்கி விட்டன.

குறுக்கு பாதையால் இறங்கி, லயத்தைப் பார்த்து விட்டு, திரும்பி நடக்கின்றேன். "ஓவென்று குரலெடுத்து கத்த வேண்டும்" போலிருந்தது.

நான்கு லயன்களும் அடித்து நொறுக்கப் பட்டு எரிக்கப்பட்டுள்ளன. எப்பொழுதும் கல கலப்பாக விளங்கிய, இடமா இது? இந்த நாட்டிற்கு என்ன நடந்து விட்டது! இங்கு ஏன் மனிதர்கள் அரக்கர்களாக மாறிவிட்டனர்! கால் நடைகளின் பட்டிகள் கூட எரிக்கப்பட்டு தீய்ந்து போய் கிடக்கின்றன. ஒரு பிரளயமே ஊற்றெடுத்தது போல கொடுமை..... ஒன்றுமே அறியாத அப்பாவி மக்கள் மீது.... அநியாயம்... அநியாயம்.

இடிபாடுகளுக் கிடையே சிக்கி, எஞ்சிக் கிடப்பவற்றை நாலைந்து பேர் கிண்டி மீட்டெடுத்துக் கொண்டிருக்கிறார்கள். வயிற்றுப் பசியை தீர்ப்பதற்கே போதாத வருவாயில் மிச்சம் பிடித்து சிறுகச் சேமித்த பொருட்கள் உருக்குலைந்து கிடக்கின்றன.

அது இலட்சுமணனின் காம்பிரா....... தொங்கற் தாம்பிரா.....! இன்று தரை மட்டமாகக் கிடக்கும் இந்த காம்பிராவில் அமர்ந்து எத்தனையோ திட்டங்களைத் தீட்டியிருக்கிறோம்.

இடிபாடுகளுக் கிடையே புத்தகங்கள் எரிந்து கருகிப் போய்க் கிடக்கின்றன. இலட்சுமணனின் நினைவாக எதையாவது கொண்டு செல்ல வேண்டும். கிண்டிப் பார்க்கின்றேன் ஒன்றும் உருப்படியாக இல்லை. பாதி எரிந்து போன நிலையில் ஒரு நாட்குறிப்பேடு ஆம்..... அது இலட்சுமணனின் "டயறி" தான் நடுங்கும். கரங்களில் அதனை எடுத்துக் கொள்கின்றேன். இருட்டுவதற்குள் நகருக்கு சென்று கடைசி பஸ்வண்டியைப் பிடித்தாக வேண்டும்.

பச்சை நிற அழகிய சிறிய நாட் குறிப்பு புத்தகம், கீழ்ப் பாதி எரிந்து போய் விட்டது! முன் பக்கமும் கடைசிப் பக்கமும் தீயில் தீய்ந்து கருகிப் போய் விட நடுப்பாகம் எஞ்சியுள்ளது. தார் ரோட்டை நோக்கி நடையை விட்டபடியே மெதுவாகப் புறட்டுகிறேன். சில பக்கங்களில் ஒன்றுமே விளங்க வில்லை. தீ அரக்கனின் கொடிய நாக்குகள் அவற்றை வாசித்து சுவைத்து விட்டன போலும்.....

டயரியில் கரிக்கோலங்கள் தொடர்கின்றன. ஆர்வத்துடன் தொடர்கிறேன். உள்ளே செல்லச் செல்ல எழுத்துக்கள் புரியத் தொடங்குகின்றன.

**197' மார்ச் 1 ஆம் திகதி.**

இன்று வேலை முடிந்து ஸ்டோரிலிருந்து வீடு திரும்பும் போது லெட்சுமியைக் கண்டேன். அந்திக் கொழுந்தை நிறுப்பதற்காக வரிசையில் கூடையுடன் நின்றாள். நான் அவளைக் கடந்து செல்கையில் ஓரக்கண்ணால் பார்த்தாள். அவள் பார்வை..... என் மீது குற்றம் சுமத்துவது போலிருந்தது. அவளை சந்தித்து எத்தனை நாள்களாகி விட்டன. நாளை கட்டாயம் அவள் வீட்டுக்குப் போக வேண்டும்.........! இம்மாதம் முடிய திருமணத்தை....... அதற்கு மேலே வாசிக்க முடிய வில்லை. ஏடு எரிந்து, தீய்ந்து, போய் உள்ளது. மறு ஏட்டைப் புரட்டுகிறேன்.

**மார்ச் 2 ஆம் திகதி**

"இன்று மாலை லெட்சுமியின் வீட்டுக்குப் போனேன். மாமாவும் வீட்டிலிருந்தார். "ஊர் போற போக்கு நல்லதா தெரியல"... கூடிய விரைவில் இந்தியாவுக்கு போயிடலாமுன்னு நெனைக்கிறேன் தம்பி" என்று கூறினார். எனக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. தலை சுற்றி மயக்கம் வந்து விடும் போலிருந்தது. லெட்சுமி உள்ளே சமையலில் ஈடுபட்டிருந்த படியே எட்டிப் பார்த்தாள். கண்களில் ஈரம் பளபளத்தது. லெட்சுமி உன்னை எப்படி பிரிவது"... நான் ..... அதற்கு கீழே படிக்க முடியாத படி நாட் குறிப்பு புத்தகத்தின் ஏடு எரிந்துள்ளது! அடுத்தப் பக்கம் மார்ச் 3ம் திகதி.

**மார்ச் 3 ஆம் திகதி**

இன்று ஞாயிற்றுக் கிழமை, ஓய்வு நாள், டவுனுக்குப் போய் வந்தோம். நகரில் ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகளில் காணப்பட்ட வாசகங்கள் எங்களை கலங்கச் செய்தன. அப்பப்பா எத்தனை கொடூரமான எண்ணங்கள்.... நாங்களும் மனிதர்கள்தானே..... உழைக்கின்றோம் உழைப்பதைத் தவிர இந்த நாட்டில் வேறு என்ன சுகத்தைக் கண்டோம். எங்கள் தோட்டத்தைப் பகிர்ந்தளித்து விட்டால் நாங்கள் எங்கே போவது.....? ஏதோ வேலை உண்டு; குடியிருக்க லயன், உண்டென்றிருக்கும் போதே இத்தனை கஷ்டங்கள் ...... வேறு தோட்டங்களிலும் அங்குள்ளவர்களுக்கே வேலை இல்லாத நிலைமை. கதை தொடர வில்லை. ஏடு எரிந்து போய் விட்டது. அடுத்தப் பக்கத்தைப் புரட்டுகிறேன்.

**மார்ச் 4 ஆம் திகதி.**

இன்று எமது தொழிற் சங்கத்தின் மாவட்டக் கூட்டம் நடைபெற்றது. தோட்டத் தலைவர்கள் தங்கள் தோட்டங்களில் நடைபெறும் அட்டூழியங்களை எடுத்துக்கூறி கவலை தெரிவித்தார்கள். தோட்டங்களைப் பகிர்ந்தளிப்பதால்; நாங்கள் வேலையிழப்பதுடன்; வாழ வழியற்று நிர்கதிக்குள்ளாவதை எடுத்துக் கூறினோம். எங்களுக்கும் நிலம் கேட்பதென்ற பிரேரணையும் முன்வைக்

கப்பட்டது. மாவட்ட தலைவர் மேலிடத்தில் தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பதாகக் கூறினார். டவுனிலிருந்து திரும்புகையில் லெட்சுமிக்கு மல்லிகை பூச்சரம் வாங்கி...... ஏடு சரிந்து போய் அந்த இரகசியத்தை மறைத்துக் கொள்கிறது.

**மார்ச் 5ஆம் திகதி.**

"இன்று லெட்சுமியை சந்தித்தேன். ம்...... அவள் தான் எத்தனை அழகாக இருக்கின்றாள். அம்மன் கோயிலைச் சுற்றி நிறைகுடத்து நீரை ஊற்றி விட்டு வந்தாள். ஈரச்சேலை உடம்போடு ஒட்டிக்கொள்ள மார்பகம் பிதுங்கி கண் சிமிட்டுகிறது..... என்ன நேர்த்திக் கடனா? என்று கேலி செய்தேன். "ம் ....... எல்லாம் உங்களுக்காகத்தான்." என்று பக்கென்று பதில் கூறிவிட்டு ஓடி விட்டாள். குறும்புக் காரி. இருக்கட்டும்..... உனக்கு .... நல்ல பாடம் ... லெட்சுமி" குறிப்பு தொடர்கிறது. என்னால் தொடர்ந்து படிக்க முடியாதபடி ஏடு எரிந்து போயிருக்கின்றது. ஆவலுடன் மறுபக்கத்தைப் புரட்டுகிறேன்.

**மார்ச் 6ஆம் திகதி.**

"இன்று எங்களுக்கு வேலை வழங்கப்படவில்லை. தோட்டத்தை மூடிவிட்டோம். என்று கூறுகிறார்கள். தோட்டத்தை பங்கிட்டு வழங்கப் போகிறார்களாம். எங்களுக்கும் நிலம் கேட்டோம்.... ம் .... மூச்சு விடக் கூடாது. என்று கூறுகிறார்கள். முழுத் தோட்டமுமே சொல்ல முடியாத விசனத்தில் மூழ்கியுள்ளது. என்ன செய்வதன்றே தெரியவில்லை. முருகா எங்களுக்கு வழி காட்ட மாட்டாயா......? "நானூறு குடும்பங்களும் நடுத்தெருவில் நிற்க வேண்டியது தானா?" குறிப்பேடு தொடரவில்லை. ஏடு தீயினால் கரிந்துள்ளது.

**மார்ச் 7 ஆம் திகதி.**

"இவ்வாரத்திற்கான ரேசன் அரிசி இன்னும் வழங்கப்பட வில்லை... எப்படியோ சமாளிக்க வேண்டியுள்ளது. குழந்தைகளெல்லாம் வாடிச் சோர்ந்து விட்டார்கள். எங்கள் நிலைமையை விளங்கிப்பல இடங்களுக்கும் தந்தி கொடுத்துள்ளோம். உணவுப் பொருள்கள் வாங்க நகைகள் அடவுக்கடையை நோக்கிப் போகின்றன". அன்றைய குறிப்பு இவ்வளவு தான். மனதில் உற்சாகம் இல்லை போலும்.

**மார்ச் 8ஆம் திகதி.**

நேற்றிரவு விஷமிகள் லயத்திற்கு கல்லெறிந்து கலகம் விளைவித்தார்கள். நள்ளிரவில் விழித்துக் கொண்டு ஆளும் பேரும் கம்பும் தடியுமாக ஓடியபோது; இரண்டு லொறிகள் நகரை நோக்கி ஓடி மறைந்து விட்டன. அகால வேளையில் பெண்கள் குழந்தைகள் யாவரும் ஒப்பாரிவைத்து பயந்து ஓலமிட்டு அழுதார்கள். பயங்கரம்.... என்ன நடக்குமோ... ? உழைத்துக் களைத்தவர்கள் இரவில் நிம்மதியாக தூங்கவும் முடியவில்லை. இளைஞர்கள் விழித்திருந்து

பாதுகாப்பை பலப்படுத்துவது என்று முடிவு செய்தோம். இருவர் இருவராக லயத்தைச் சுற்றி மணிக்கொரு தடவை அம்மன் கோயில் மணியை அடிப்பது என்று முடிவு செய்தோம்...'' ஏடு பாதியில் எரிந்துள்ளது.

**மார்ச் 9 ஆம் திகதி**

இன்று லெட்சுமியை சந்தித்தேன். அவள் ஏன் இப்படி வாடிப் போய்விட்டால். சிட்டாகப் பறக்கும் என் லெட்சுமியா இவள்? பயம் அவளை குடைந்து உலுப்பி விட்டது...! என் கைகளைப் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு கேவிக்கேவி அழுதாள். அப் பொழுது தான் பணிய டிவிசனிலிருந்து செய்தி வந்தது. பலாத்காரமாக தோட்டத்தில் புகுந்த காடையாளர்கள் தாக்குகின்றார்களாம் அம்மன் கோயில் மணி தொடர்ந்து ஒலித்தது! இது எங்கள் ஏற்பாடு: நாங்கள் ஒன்று கூடி தயாராகி நின்றோம். பனிய டிவிசனில் கேட்ட அவலக் குரல்கள் சற்று நேரத்தில் அடங்கிப் போய் விட்டன. எங்களால் உதவ முடியாத நிலை இந்த நான்கு லயங்களும் ரோட்டோரத்தில், எட்டிப் பிடித்து விடலாம். இங்கேயும் குமர்களும் பெண்டு பிள்ளைகளும். பனிய டிவிசனில் புகுந்த கோஷ்டி அகப்பட்டதை சுருட்டிக் கொண்டு ஓடி விட்டதாம். ஏடு எரிந்துள்ளது.....

**மார்ச் 10 ஆம் திகதி.**

இரண்டு வாரங்களுக்கு மேலாக ரேஷன் அரிசியும் உப உணவுப் பொருட்களும் கிடைக்கவில்லை. நிலைமை எதிர்பார்த்ததை விட மோசமாகி விட்டது. முழுத் தோட்டமுமே செய்வதறியாது. கலங்கிப் போய் நிற்கின்றது. மேலிடத்திலிருந்து எதுவித பதிலுமே கிடையாது. நிமிஷத்திற்கு ஒரு வதந்தி வந்து விஸ்வரூபமெடுத்து அலைக் கழிக்கின்றது. பெண்களை எப்படி காப்பாற்ற போகின்றோமோ.... நாங்கள் உடனடியாக தோட்டத்தை விட்டு வெளியேற வேண்டுமாம். காணி தேவையானவர்கள் தாங்களே கயிற்றால் அளந்து பிரித்தெடுத்துக் கொள்ளப் போகிறார்களாம். இவர்களுக்குப் பக்க பலமாக.. பின் பகுதி ஏடு எரிந்துள்ளது. தொடர்ந்து படிக்க முடியவில்லை.

**மார்ச் 11 ஆம் திகதி.**

இன்று மாவட்ட தலைவரை சந்தித்து பேசினேன்! பத்திரிகைச் செய்தியை காட்டி ஆறுதல் கூறினர். நிலைமை தலைக்கு மேலே போய்விட்டது. அவராலும் எதுவும் செய்ய முடியாத நிலைமை....! கொழும்பிலிருந்து தலைவர் செய்தி அனுப்பியிருந்தார்.

என்ன நடந்தாலும் உறுதியுடன் நின்று போராடனுமாம். நாங்க போராடிக்கிட்டு தான் இருக்கலாம்...... இரண்டு தினங்களாக நித்திரை கிடையாது: லயத்தைச் சுற்றி நான்கு திசைகளிலும் இளைஞர்கள் காவல் செய்கின்றோம். நாளை எமது டிவிசனையும் அளக்கின்றார்களாம்.....! எங்கள்

தோட்டத்தை பிரிக்க விடமாட்டோம். எங்கள் குருவிக் கூட்டை யார் கலைத்தாலும் உயிரை கொடுத்து தடுப்போம். மேலே படிக்க முடியாத படி ஏட்டை தீ அனைத்துள்ளது. அடுத்த ஏட்டைப் புரட்டுகின்றேன். பாதி எரிந்த ஏட்டில் கரிக் கோலங்கள் தான் உள்ளன. குறிப்பு எழுதப்படவில்லை. அந்தக் கைகள் அன்று பகலே ஓய்ந்துவிட்டன. போராட்டத்தில் மார்பினில் குண்டை ஏந்திய அந்தக் கைகள் சாகாவரம் பெற்று விட்டன.

இனி அந்த நாட்குறிப்புப் புத்தகத்தைத் தொடர்ந்து எழுதுவது யார். ?

மீண்டும் முன்பக்கங்களைப் புரட்டுகின்றேன். எரிந்து கருகிய ஏட்டின் முன்பக்கத்தில் 'இலட்சுமணன் தோட்டக் கமிட்டி தலைவர்' எழுத்து கரிக்கோலங் களுக்கிடையில் பளிச்சிடுகின்றது.

என் கண்கள் பனிக்கின்றன நாட் குறிப்புப் புத்தகத்தை காற்சட்டைப் பாக்கெட்டினுள் திணித்துக் கொண்டு வேகமாக நடக்கின்றேன்.

அந்த புல்லுமலையின் சரிவில் தார்ரோடு ஓரமாக "நர்சரி" பாத்தி போன்ற புதை குழி மேட்டைச் சுற்றி, அலங்கரிக்கப்பட்டுள்ள தென்னங் குருத்தோலைகளுக்கு நடுவில், சிவப்பு நிறத்தில் எழுதி; நாற் புறமும். இழுத்துக் கட்டப்பட்டுள்ள வெள்ளைத்துணி இளங்காற்றின் தழுவலுக்கு கையசைத்து இலட்சுமணனைப் போல் உறுதி எடுத்தா கொள்கின்றது.

இலட்சுமணன் நீ என்றும் வாழ்வாய்" மலை வெயிலின் தக தகப்பில் எழுத்துக்கள் பள பளக்கின்றன.

தார் ரோட்டில் நிரவி; தூவி; விடப்பட்ட வெண் மணல்கள் இன்னமும் பரவிக் கிடக்கின்றன. சிறு சிறு மூங்கில் குச்சுகளின் தலைகளில் ஒட்டப்பட்ட வெள்ளைக் கொடிகள், வளைந்து, வளைந்து செல்லும் பாதையின் இரு பக்கங்களிலும் தேயிலைச் செடிகளுக்கு மேலாக சிலிர்த்துக் கொண்டு கையசைக்கின்றன.

அந்த மரண ஊர்வலம் சென் பாதையில் நடக்கின்றேன்.

"டெவன் தோட்டம்" பெயர் பலகை பாதையோரத்தில் தலை கீழாக விழுந்து கிடக்கின்றது.

**[வீரகேசரி 1975]**



# சின்னச் சின்ன மேகங்கள்...

**வி**டியற் பொழுது, ஜன்னலைத் திறந்து அவன் முதற் பார்வையை வீசிய போதே கண்களில் பட்டது. பரந்த வெளியில் நீந்திக் கொண்டிருக்கும் அந்தச் சின்ன மேகங்கள் தான்.

அடித்துவிட்ட பஞ்சைப் போன்று வான் வெளியில் அநாதரவாகத் தத்தித் தத்தி தவழ்ந்து.... தவழ்ந்து நீந்திக் களிக்கும் குட்டி மேகங்கள். வண்ணங்களை வார்ப்படம் செய்து தூளிகட்டி ஆடும் அந்தச் சின்னச் சின்ன மேகங்களில் புதைந்து விட்ட பார்வையைப் பெயர்த்தெடுத்தான்... செவிகளில்தேன்.... சில்வண்டுகளின் ரீங்காரம். பக்கத்து வீட்டில் சுவேந்தினி பாடிக் கொண்டிருக்கிறாள். “காக்க காக்க...கதிர்வேல் காக்க...” புலரிப் பொழுதிலேயே நீராடி, கொத்துக் கொத்தாக குண்டு மல்லிகையும் பிடிபிடியாகத் துளசியையும் அரித்தெடுத்த அறுகம்புல்லையும் பிள்ளையார், முருகன்; சரஸ்வதி, இலட்சுமி படங்களின் முன்னால் வைத்து; வணங்கிவிட்டு இசையில் மூழ்கி விடுவாள்.

அவன் மனதில் சுகந்தம். இசையில் எழுந்த கிறக்கம், பாடல்கள் என்றால் அவனுக்கு உயிர். மனசைத் தொட்டுவிட்ட, மனசுக்குப் பிடித்த வரிகளைத் திருப்பித் திருப்பிப் பாடியும்' ஹம்' செய்து கொண்டே இருப்பான். இசையில், கவித்துவ படிமத்தில் மனசைக் கொட்டி ஆராதனை செய்து கொண்டே இருப்பான். நேற்று வாசித்த அந்தக் கவிதா வீச்சுக்களின் வரிகள் மனதில் அபிநயம் பிடித்துக் கொள்ள அவன் மனசை கொக்கி போட்டு எழுப்பும் வினாக்கள்,

அவள்.....

நிர்மலமான மனசில் இவளின் நினைவு எப்படித் தொற்றிக் கொண்டது?

இது பிராப்தமா? அல்லது வெறும் நினைவுகளின் ஊர்வலமா? அவன் இதுவரை கனவுகளைக் காதலித்ததே கிடையாது. நிதர்சனமே அவன் நெஞ்சம். யதார்த்தத்தையே நேசித்து வந்துள்ளது. ஆனால் இப்போது...? அப்படி என்ன அவனுக்கு நடந்துவிட்டது? சின்ன சின்ன மேகங்களாகக் கனவுகளுடன் கை கோர்த்து வானவெளியில் மிதப்பது போல் ... நீந்துவது போல ... இப்படித்தான் பள்ளி வாழ்க்கையில் ஒரு காலகட்டத்தில் அவன் வாழ்வில் ஒரு வசந்தப் பூ மலர்ந்தது. வண்ணச் சிறகுகள் விரியும் வசந்த பருவத்தின் விடியற் பொழுது..... அப்போது அதுதான் சொர்க்கம். அந்த நினைவுகள் இப்போது, காணாமல் போய்விட்டன.

கரையை அடைந்தால் காணாமல் போகும் கடல் அலைகாளக, தூரத்துத் தோட்டத்தில் தொலைந்த அந்த நாட்கள் ஏனோ இப்போது அவனுக்கு இதம் தருவதாக இல்லை.

அலையென்னும் போது தான் நினைவிற்கு வருகின்றது. அவன் கடற்கரையில் வைத்து அவளுக்குத் தனக்குப் பிடித்தமான மகா கவியின் கவிதை வரிகளைக் கூறினான். அவள் குழந்தையைப் போன்று அதன் பொருளைக் கேட்க அதனை பெருமையுடன் விளக்கிக் கூறினான்.

"சிறு நண்டு மணல் மீது படம் ஒன்று கீறும். சில வேளை அதை வந்து கடல் கொண்டு போகும்."

அவன் இந்தக் கவிதையின் வரிகளை அவளுக்குக் கூறி முடித்த சிறிது நேரத்திற்குள் அலையடித்த கடற்கரையை உற்று அவதானித்துப் பார்த்து உணர்ந்து பூரித்துப் போனாள். இந்தக் கவிதையை இசையோடு பாடும்படி அவளை அவன் கேட்டான். ஆனால், அவளால் உடனடியாகப் பாட முடியவில்லை. ஒரு குழந்தையைப் போல் திருப்பிச் சொன்னாள். அவன் இவ்வாறு பல சந்தர்ப்பங்களில் எத்தனையோ பாடல்களைப் பாடும்படி அவளைக் கேட்டுக் கொண்ட போதும் இதுவரை அவளால் அவனுக்குப் பாடிக் காட்ட முடியவில்லை.

இப்போது அவன் நினைத்தான். நேற்றுப் படித்த புதுக் கவிதையை அவள் குரல் எடுத்துப் பாடினால் எத்தனை இனிமையாக இருக்கும்! ஒரு புல்லாங்குழலை யாசித்த என்னை மூங்கிற் புதர் காட்டிலா போட்டு எரிப்பது? அட்சதையே என் அட்சய பாத்திரத்தில் ஏன் வேதனைச் சோற்றையே கொட்டுகின்றாய்?

ம்... அவள் பாட மாட்டாள். அவன் விரும்பும் இதுபோன்ற பாடல்களை அவளால் பாட முடிவதில்லை. இதைப் பற்றிய பிரக்ஞை மட்டுமல்ல, அவள் கற்ற சங்கீத ஞானம் கூட அவளை இவ்வாறு பயிற்றவில்லை. பழைய பல்லவிகளில் லயித்து விடுவதே அவள் சுகம். அவன் நினைத்தான்.

இது என்ன நினைப்பு? நினைத்த மாத்திரத்தில் ஒருத்தியை அடைந்துவிட முடிகின்றதா என்ன? வாழ்வுக்கு எத்தனை ஆதாரங்கள் அர்த்தமற்ற பொய்யான போலியான வேலிகள்.

பளிச்சென்றிருக்கும் அவள் முகம். எதையோ சதா தேடிக் கொண்டிருக்கும் அந்த விழிகள். இவள் என்னைப் பற்றி எனன்தான் நினைக்கிறாள்? வாழ்க்கையைப் பற்றி இவளது அபிப்பிராயம் தான் என்ன? இவளது மனோபாவம்........ கலை, இலக்கியம் என்று ஏதேதோ வாசிக்கின்றாள். இப்படியே இவளை அழைத்துக் கொண்டு போய்விட்டாள் என்ன? அப்படிச் செய்தால் அது தர்மத்திற்கு அப்பாற்பட்ட செயல். ஆமாம், இந்த தர்மம் தான் நம் பெண்களை ஏக்கப் பெரு மூசசில் சாபமில்லாமலே கல்லாகச் சமைக்கும் அகலிகைகளாக்கி விடுகின்றதே. எரிப்பதற்கு இன்னும் எத்தனை மதுரைகள் இங்கு மீதமிருக்கின்றன? எந்த மணிமேகலை துறவு கொள்ளத் தயாராக இருக்கின்றாள்?

அருச்சுனன் சுபத்திரையைப் புறங்கொண்டு போனான்? கிருஷ்ணன் ருக்மணியை அழைத்துக் கொண்டுபோய் மணந்து கொண்டார். இந்தக் கதைகளெல்லாம் பௌராணிகள் காலாட்சேபம் செய்கின்றார்கள். நமது வாழ்வில்........ எப்படி......? வாழக்கை என்றால் என்ன........ வாழ்க்கைக்கு ஆதாரம் எது எவை? அவன் கற்ற தத்துவசாத்திரம், காரண காரிய விளக்கம் இப்படித்தான் அவனை சிந்தனை செய்யத் தூண்டியது. அவளை அவன் சந்தித்தது சமீபத்தில் தான். அதுவும் அந்த அறைக்குக் குடிவந்த பின்னர் தான் ஏற்பட்டது. அவள் பாடல் அவன் மனசைத் தொட்டு நெகிழச் செய்கின்றது. அவள் நட்பு அவன் மனதில் புற்றெடுத்திருந்த தனிமையைப் போக்கி ஒரு புதிய பூங்காவைப் புஷ்பித்து விட்டது.

அவள் அவனுடன் கூட இல்லாமலிருந்த வேளையில்; அவளின் சிநேகம் அவனை அவளையும் அவனுள் உணர்த்தி நிற்கின்றது.

இப்போது அவன் கற்பனை உலகில் மிதக்கத் தொடங்கிவிட்டான். சிறுவனாக இருந்தபோது இவனிடம் ஒரு கார் இருந்தது. அதற்கு வாயு வேகம், மனோ வேகம் உண்டு. அவன் கூப்பிட்ட நேரத்தில் வந்து மனதில் அது ஆஜராகி விடும். எங்கு சென்றாலும் அதில் ஏறித்தான் செல்வான்.

அவன் தான் பார்த்த கார்களையும் ஒன்று சேர்த்து அதை உருவாக்கி இருந்தான். அம்மாவுக்கு மளிகைச் சாமான் வாங்கக் கடைக்குச் செல்வதென்றால் என்ன? மற்றும் கோயில், குளம் எங்கென்றாலும் அதில் ஏறித்தான் செல்வான். பத்தாம் வகுப்புப் படிக்க நகரிலுள்ள கல்லூரியில் சேர்ந்த போது அவனுடைய கற்பனைக் கார் அவனிடமிருந்து பிரிந்து போய்விட்டது. இப்போது மீண்டும் அவனுடைய நினைவுகள், கற்பனைகள், மனோரதத்தில் பறக்கத் தொடங்கி விட்டன.

அவன் சினிமாச் சித்திரங்களை, போஸ்டர் அழகிகளை மோகித்தது. கிடையாது. அழகு என்பது அவனுடைய பாஷையில் அவன் அர்த்தத்தில் வேறுபட்டதாக இருந்தது. அவன் ரதி, மதன் ஆட்டத்தைச் சிறு வயதில் பாரத்து ரசித்திருக்கிறான். கிளி வாகனத்தில், கரும்பு வில்லும் மலர்க்கணையும் கொண்டு ரதி மதன் ஆட்டம் அவன் நெஞ்சில் இன்றும் மலர்ந்து கொண்டே இருக்கின்றது.

ரதி – மதன் மலர்க்கணையுடன் இருக்கும் சித்திரத்தை அவன் தனது அறையில் மாட்டி வைத்திருக்கிறான். அது அவனுக்குப் பிடித்த ஓவியம், ஆனால் அதில்கூட அவன் யதார்த்தத்தைத் தேடிக் களைத்துப் போயிருக்கிறான்றான். சுவேந்தினி பத்து மாதங்களுக்கு முன்னர் முதன் முதலில் சந்தித்து மறையும் லட்சோப லட்ச மக்களில் ஒருவராகத்தான் நினைத்தான். பின்னர் நெருக்கமாக சந்தித்து உரையாடி உறவாட வேண்டிய சூழ்நிலைகளில் கூட அவளை ஒரு பொருட்டாக நினைக்கத் தோன்றவில்லை. அவளைத் தன்னுடையவளாக ஆக்கிக் கொள்ள வேண்டுமென்ற "தாபம்" இருந்தது கிடையாது.

ஆனால், தற்போது எழுந்துள்ள "வேட்கை" அவனுக்கு இனம் புரியாததாகவும், தேவையானதாகவும் இருந்தது. அவளுடைய பழக்கம், தான் எதிர்பார்த்திருந்த அந்த ஒருத்தி என இனம் காட்டியது. எதிர்பாராமல் ஏற்பட்ட தனிமையான சந்திப்பில் அவன் கேட்டான். சுவேந்தினி நான் நான்....... உன்னிடம் என் மனசைப் பறிகொடுத்து விட்டேன்............. ஆழ்ந்த மௌனம் நான் திருமணம் செய்ய விரும்புகிறேன். அவள் பதில் சொல்லாமல் போய்விட்டாள் அவன் மனசை வேதனை அரித்துச் சாப்பிட்டது.

இனி அவள் முகத்தில் விழிக்கவே கூடாது. வேண்டாம் வேண்டவே வேண்டாம்.....ம் வேதனை... அவன் சோர்ந்து போனான். கவலை ம்.......... அழக்கூடாது. இனி அவளோடு பேசவதே இல்லை. அடுத்த நாள் காலை அவள் சிரித்து நின்ற போது..... குழந்தைத்தனமான சிரிப்பு.... அவனது நெஞ்சுறுதி கரைந்து போய்விட்டது. அவனது கேள்விக்கு அவளிடமிருந்து பதிலில்லாத போதும், விசித்து, விசித்து அவள் அழுத போது, அவன் அவளில் கரைந்து போய்விட்டான்.

ம்.... என்று ஒரு வார்த்தை சொல்வாள் என அவன் எதிர்ப்பார்த்தான் அவன் திரும்பவும் கேட்டான். "நான் கேட்டதற்கு பதில் சொல்லவில்லையே." அவள் "நான் இன்னமும் இல்லையென்று சொல்லவில்லையே." சிரிப்பு உதிர்ந்தது.

அப்படியென்றால் நீங்கள் இன்னமும் ஒரு முடிவுக்கு வரவில்லை" அவன் மீண்டும் குழம்பிப் போனான். அவன் மனம் நிலை கலங்கித் தவித்தது. விரக்தி அவன் நெஞ்சைச் சுட்டெரித்தது. வாழ்க்கை என்பது என்ன? இதுவரை நிர்மலாமாக இருந்த மனதில் ஒரு தொற்று நோயைப் போல இவளுடைய நினைவுகள் எப்படித் தொற்றிக் கொண்டன?

அவன் மனதைத் தத்துவவிசாரம் குடைந்தெடுத்தது. காதல் என்பது கருத்தா......? காட்சியா ......? காட்சி என்றால் என்ன? புலக்காட்சியா உண்மையானதா? காண்பது தான் காட்சியா? இல்லது ஊனக் கண்களுக்குத் தெரியாத ஞான உண்மை உண்டா? உண்மை என்றால் என்ன? உண்மை நன்மையானதா? நன்மை என்றால் என்ன?

ஒருவன் கயிற்றைப் பாம்பாக நினைக்கிறான். கயிற்றரவு.......... கயிற்றரவு...... நீரில் அமுத்திய தடி வளைந்து தெரிகின்றது. காட்சி என்பதே இல்லை. எல்லாம் மாயை. தத்துவ ஞானிகளும் சித்தர்களும் ஒரு பாட்டம் அவன் மனதில் தரிசனம் தந்து போனார்கள். "கடமையைக் கடமையாகச் செய்" "காண்ட்" எழுதியவை வெறும் கரிக்கோடுகள் அல்ல.

அலுவலகத்திற்குப் போய் ஜன்னலைத் திறந்து திரைச் சேலையை நீக்கிவிட 'ஜில்' லென்று கடற்காற்று உள்ளே புகுந்தது ஜன்னல் வழியே பார்வை ஜனித்த போது....... பரந்த வானில் சின்னச் சின்ன மேககங்கள் நீந்திக் கொண்டிருந்தன. மாலையில் அலுவலகம் முடிந்த பின்னர் ஆயாசம் தீர காலிமுகக் கடற்கரையில் வந்தமர்ந்தான். வழமையை விட அலைகள் சீறிச் சீறி வீசி அடித்து மூர்ச்சித்துக் கொண்டிருந்தன. என்ன என்ன அலுவல்களோ இல்லையோ....... மக்கள் இங்குமங்கும் அலைந்து கொண்டிருந்தார்கள். குடை நிழலில் சங்கமம் தேடும் ஜோடிகள், எவரையுமே சட்டை செய்வதாகத் தெரியவில்லை. பட்டம் விடும் சிறுவர்கள், பலூன், ஐஸ்கிரிம்காரர்கள் எல்லோருமே வழமை போலத் தான்.

கலர் கலரான கனவுகளில் இளஞ் சிட்டுக்கள் மிதந்து கொண்டிருக் கின்றன. மீண்டும் அவனுடைய தத்துவ விசாரம் முளைகாட்டியது. நிதானமாக யோசித்தான். அமைதியாகச் சிரித்தான். அவள் என்ன முடிவு செய்வாள்? அது அவள் பொறுப்பு. பிரச்சினை எங்குதான் இல்லை. மனம் ஆறுதலடைந்தது.

மேல் வானத்தில் நீந்திக் கொண்டிருந்த சின்னச் சின்ன மேகங்களை காணவில்லை. நீல வானில் வரிசை பிசகாமல் பறக்கும் பறவைகளின் அழகைப் பார்த்து ரசித்தான். பறவைகள் பறந்து......... பறந்து

அந்தக் கவிதையைப் போலவே அந்தப் பட்சிகளின் ஒருமித்த பரப்பும் அவனுக்கு இதமூட்டியது.

சின்னச் சின்ன மேகங்கள்........ சின்னச் சின்ன மேகங்கள்........ பறவைகளின் சிறகடிப்பு போல ...... அவள் இதுவரை பதில் சொல்லவில்லை. சொல்லவும் வேண்டாம். அவளுக்கு எத்தனை பொறுப்புகள் உள்ளனவோ.... அவளுக்கு மட்டுமா எல்லோருக்கும் தான்...... இதுதானே வாழ்க்கை இல்லாமல் வாழ்வு...என்பது! கண்டதே காட்சி கொண்டதே கோலம்..... என்பதா.......?

கலைந்து கலைந்து ....... செல்லும் சின்னச் சின்ன மேகங்கள்.........

**நன்றி – தினகரன் – 1989 /07 / 16**



# மண்ணில் தெரியுது...

**பி**ன்னிரவில்; மாலைக்கணையென சரம்கோர்த்து; மலைகளை முற்றுகையிட்டுத் தழுவிக் கிடக்கும் பனிப்புகாரை உதறிவிட்டு இருள் போர்வை வெளிச்சத்திற்குவழி விடும் முன்னரே தோட்டம் எங்கும் அந்தச் செய்தி பரவி விட்டது!

நேற்று மாலையே ஆளுக்காள் காதைக் கடிக்க....

தோட்டத்தில் மாத்திரமின்றி அண்டிய பகுதியிலும் இனக்கலவரமாய்ப் பரவ...

எல்லோருக்கும் தெரிந்ததாகி விட்டது!

ராக்கப்பன்... ....

ராக்கப்பன் சிறையிலிருந்து விடுதலையாகி வந்துவிட்டான்!

அடர்ந்த கிராப்பு; எடுப்பான கிருதா மீசை, கலர் கலரான ஷேட், பெரிய கட்டம் போட்ட சாரம்; இத்தியாதி கோலத்துடன் புகைக்கும் பீடித்துண்டினை உதடுகளில் படாமல் பல்லிடுக்கில் அழுத்தியபடி கைகளால் தன் பேச்சுக்கு வடிவம் கொடுத்தபடி; பெட்டிக்கடைக்கு முன்பதாக 'குதிரை ரேஸ் புக்கிபங்கில்' குந்தியிருப்போருடன் அனாயசமாக; எவரையும் சட்டை செய்யாது விபரித்துக் கொண்டிருந்த அவனைக்கண்ட போதே பலருக்கு வயிற்றில் புளி கரைப்பதாகிவிட்டது.

பத்து வருடங்களுக்கு முன்னர் 'தொலைந்தது சனியன்' என்று நிம்மதியாகப் பெருமூச்சு விட்டு ஆறுதலடைந்து ஏறக்குறைய அந்த சம்பவத்தையே மறந்து போயிருந்த வேளையில்...

"விடுதலை கிடைத்தாலும் இங்கு எங்கே வரப்போகின்றான்?" 'வரமாட்டான்' என்று நினைவிலேயே முடிவு கட்டியிருந்த நிலையில்.......

இன்று....

திடீரென்று அவன் எதுவித கூச்சமுமின்றி; அட்டகாசமாய்ச் சிரித்து; வாட்ட சாட்டமாய் வந்து நிற்கும் போது....

பற்றிக் கொண்டு வருகின்றது.... 'பாவி! பதறிப் போனார்கள்.' .... 'கலங்கிப் போனார்கள்!!' 'கல்லாகிப் போனார்கள்.'

" சாட்சிக் கூண்டிலேறியவர்கள் முதல் சாடை பேசி பழித்தவர்கள்வரை சாய்த்துவிடப் போகின்றான். அதற்குத்தான் ஜெயிலிலிருந்து நேரே இங்கு வந்திருக்கின்றான்! என்ன நடக்குமோ ஏது நடக்குமோ? தலைக்கொரு விதமாய் விமர்சனம் நடந்தது.

மனம் பதைத்தோர் 'நமக்கேன் வம்பு?' என்று மௌனத் தளைகளில் மனதைப் புதைத்துக் கொண்டனர்.

தேயிலையின் தொட்டிலான அந்தத் தோட்டத்திற்கு வெள்ளைக்காரனது கம்பெனி பிரியாவிடை கொடுத்து அரை நூற்றாண்டு ஓடி விட்டது.

கம்பெனி நிர்வாகத்திற்குப் பின்னர் தோட்டம் தேசிய முதலாளிகளின் கைகளில் சிக்கி இன்று பத்து ஏக்கரும் ஐந்து ஏக்கருமாக பிரிக்கப்பட்டு ; உளிப்பிடியாகத் தேய்ந்து விட்டது.

நாலாறு கோலமாகப் பிரிந்து கிடக்கும் தோட்டத்திற்கு நாமம் "நாட்டுத் தோட்டம்!"

மலையகத்தில் தாழ் நிலத் தோட்டங்களின் இன்றைய சராசரி தலைவிதி இதுதான்!

எத்தனை பிரிவுகளோ அத்தனை சீரழிவுகள்! சிதறிய நெல்லிக்காயென சிதறல்கள்!

அன்று! கத்தியின்றி ரத்தமின்றி காந்திப்பொறி பறந்த போது, கடல் கடந்த இங்கும் வெள்ளையனின் அடக்குமுறைக்கெதிராக நடேசஐயர் போன்றோர் குடுகுடுப்பைக்காரன், பொட்டணிவியாபாரி உருவில் தோட்டங்களில் பிரவேசித்து தொழிற்சங்க இயக்கத்தை உருவாக்கி சேவை செய்தனர். இதனால் கட்டுக்கோப்புடன் தொழிற்சங்க இயக்கம் உருவாகியது. ஆனால் காலப்போக்கில் தொண்டாக, சேவையாக ஆற்ற வேண்டிய தொழிற்சங்கப் பணி, இன்று தொழிலாக விசுவரூபமெடுத்த போது.....

பிரிந்து கிடக்கும் தோட்டங்களில் குட்டி, குட்டி, சங்கங்கள் காளான்களாக; முளைத்துவிட்டன. வர்க்க ஒற்றுமை ஏற்படுத்த வேண்டியவர்களே சதிராடி பிரிக்க அடிப்படை உணர்வையே தகர்க்கும் முரண்பாடுகளை எரிமலையெனக்கக்க.

சங்கங்கள் சடைத்தன. சந்தா பிசினஸ் வளர்ந்தது. உரிமைக்கு ஒரு சங்கம் வேண்டும்! ஓரணியில் திகழ்ந்தால் மண்ணில் தெரியும் வானம்!

வர்க்க உணர்வை முன்னெடுக்க வேண்டியவர்கள் சங்கபேதம் தலைக்கேற தம்முன்னே முரண்பட்டு; குரோதம்கொண்டு; கொலைக்காரர்களாகி, கோடேறி, வெஞ்சிறைகளில் அல்லறுற.... பிளவுதானே மூலாதாரம்.

ஒற்றுமையே பலம் என்பதை உணர்ந்து கொண்டால்..... மூலதனமில்லாத வியாபாரம் இதுவென்ற அட்சரத்தைப் புரிந்து கொண்டோர் எட்டுப்பேர் சேர்ந்தா அமைச்சிடலாம்! சந்தா தலைக்குப் பத்து ரூபா என்று பாத்தா மாசம் என்னா வரும்? வருசம் சுளையா கறந்திடலாம் பணம் மட்டுமா? பதவி, பவுசுகள், கன தனவான்கள், பிரமுகர்கள் வரிசையில் இன்னும் பத்திரிகை செய்திகள் அறிக்கைகள் அப்பப்பா.... நாவில் ஜலம் ஊற நாலு பேர வச்சி கூட்டம் நடத்தி; அதனைப் படம் பிடித்து வெளிநாட்டில் காட்டி மலையக மக்களின் உயர்விற்காக என்று ஸ்தாபனங்களின் பேரால் அதிர்ஷ்ட தேவதையைத் தம் வீட்டிற்கு கொண்டு வந்துவிடும் நவீன மனித வியாபாரிகளின் அற்புத விளக்கே இந்தப் போர்வைதான்!

லயத்துக்கானை தாண்டாதவர்களெல்லாம் பட்டினங்களிலிருந்தபடியே; பண மூட்டையில் புரளச்செய்யும் ஜீபூம்பாக்களான ஸ்தாபனங்கள் மனித வியாபாரத்தில் புதிய அறுவடை!... வடிங்கள்...

கேட்பது யார்? தடுக்க யாரால் முடியும்? சொல்லுவதற்குக் காரணங்களும்; கத்துவதற்கு கோஷங்களும்; தீக்கோழியெனச் சூடிக்கொள்ள இஸங்களும் சித்தாந்தங்களும் ஏராளமாக இருக்கும்போது; வளைத்துப் பிடிக்க தொழிலாளரா கிடைக்கமாட்டார்கள். சமூக சேவை என்ற அட்சரம்வேறு காலடியில் கிடைக்கும் போது!

சங்கச் சண்டையால்; பகைமையால்; பெற்றோர் உடன் பிறப்புகளின் களியாட்டங்கள் மட்டுமன்றி; ஈமச் சடங்குகளில் கூட கலந்து கொள்ளாத அளவிற்கு வைராக்கியத்தைத் தோற்றுவித்துவிடும் வக்கிரங்களைத் தொழிலாளர் வர்க்கம் இனம் கண்டு தெளிவடையும் போது?

இப்படித்தான் அந்த துர்ப்பாக்கிய சம்பவமும் நடந்தேறியது! மாற்று தொழிற்சங்கத்திலுள்ள தன் ஒன்று விட்ட சகோதரனையே தூண்டுதலின் பேரில் ராக்கப்பனின் தந்தையான சன்னாசி கொலை செய்ய சன்னாசியின் மகன் ராகப்பனும் இரண்டாம் எதிரி என்ற முறையில் பத்து வருட தண்டனையை அனுபவிக்க வேண்டியதாகிவிட்டது. ஆலயத்தின் முன்றலில் பறந்த ஒரு தொழிற்சங்கத்தின் கொடியை யாரோ இரவில் கொளுத்தி விட்டான்.

மூண்டது கலகம். கொடிச்சண்டை தான் கொலைக்கு மூல காரணம்!

"தொட்டதற்கெல்லாம் வெட்டிட்டு வா! சரிச்சிட்டு வா! குத்திட்டு வா! குடலை உருவிட்டு வா!" என்று தொழிலாளருக்கு குறுக்கு வழிகாட்டும் சிலர்

பின்னர் பிணை எடுக்க வேண்டும், புரக்டர் பிடிக்கனும், 'மோசன் போடணும்' காசு, பணம் கொண்டு வா' என்று பறித்து இல்லாது விடில் நகை நட்டு இருக்கா? என்று கேட்டு மூக்குத்தி ஒன்னப்பிகளையும் அடகுக்கடையில் ஏற்றிவிட்டுப் பின்னர் வகை தெரியாமல் "வாடுவது" தீட்சண்யம் தொலைநோக்கு இல்லாது வழிகாட்டுவதால் ஏற்படும் பின் விளைவுகள்......

சன்னாசி ஆயுள் தண்டனையும் அவன் மகன் ராக்கப்பன் பத்து வருட கடுங்காவல் தண்டனையும் பெற்று சிறை செல்ல, அந்த சோகத்திலேயே ஏங்கி சன்னாசியின் மனைவி ராசம்மா இறந்து விட்டாள்.

தோட்டத்தில் தினமும் சொல்லம்புகளால் வேதனைப்படுவதை விட இதுமேல் தான்!

பத்து வருடங்கள் கால மாற்ற பிரசவங்கள்; வளர்ச்சியினை மட்டுமன்றி சீரழிவினையும் சுமந்து நிற்க.

அம்மனுக்கு காப்புக்கட்டிய பின்னர் அடுப்பில் எண்ணெய் சட்டியை ஏற்றாத ஊரில் புக்கி ரேஸ் விடுதிகளும் சாராயத் தவறணைகளும் கடை விரித்து காட்சிதர.

சமீபத்தில் தொழிலாளர் விடுதலைக்காக வோட்டுக் கேட்டவரே 'பாரைத்' திறந்து ஊருக்குத் தனது கன்னிச் சேவையை நல்கினார். ' தோட்டம் கெட்டுப்போச்சு' 'நாடு கெட்டுப்போச்சு' ' காலம் கலி காலம்' என்று முணுமுணுக்கும் பெரியோர்கள் கூட நாளடைவில் அடங்கிப் போய்விட்டனர்.

போதாதற்கு ராக்கப்பன் வேறு வந்து நிற்கின்றான். பத்து வருடம் என்று உள்ளே சென்றவன் குறிப்பிட்ட காலத்துக்கு முன்னரே கல்லுப்பிள்ளையாக வந்து காட்சியளிக்கும்போது.....

"இவன் ஏன் இங்கு வந்தான். கொலைகாரப்பய.... உள்ள தொல்லைகள் போதாதா? புழுங்கிய மனசுகள் எரிந்து தகிக்கின்றன.

"ஏதோ பழைய ஞாபகத்திற்கு வந்திருக்கின்றான். விரைவில் போய் விடுவான் நம்ம பொடியன்களை பழக விடாம இருந்தா சரி" முன்னேற்பாடுகள் நடந்தன.

நாட்கள் நகர்ந்தன அவன் போவதாக இல்லை. கையில் வேறு சில்லறை தாராளமாக புரண்டது. இப்போது அவனை சுற்றி ஒரு வட்டம் வளர்ந்து விட்டிருந்தது.

ஆரம்பத்தில் கோயில் பெட்டிக்கடை என்றிருந்த படுக்கை இப்போது லயத்து வரை வந்துவிட்டது. அநேகருக்கு இப்போது இவன் ஒரு விவகாரமே இல்லை.

இந்தப் பிரச்சினை அடங்கிப்போயிருந்த வேளையில் மீண்டும் இவனைப் பற்றிய செய்திகள் ஒட்டு லயத்து மாடத்தியோடு தொடுப்பு என்ற கிசுகிசுப்போடு மீண்டும் முக்கியத்துவம் பெற்றன.

ஒட்டு லயத்தில் ஒன்றிக்கட்டையாக இருக்கும் மாடத்தியின் புருஷன் கொஞ்ச காலத்திலே கண்ணை மூடிவிட்டான். மாடத்தி பார்வைக்கு சுமாராக இருப்பாள். ஊரிலுள்ள பெரிய புள்ளிகளின் சகவாசம் உண்டென்பதெல்லாம் கண்டு கொள்ளாத சங்கதிகள்.

"மாடத்தியைப் படம் பார்க்க ராக்கப்பன் அழைத்துப் போய்விட்டான்" கலவர காலத்தின் மாநிலச் செய்தி என அடிபடுகின்றது.

ஊர்ப் பெரியவர்கள் ஆளுக்கு ஆள் வரிந்து கட்டிக் கொண்டு தர்மாவேசம் பூண்டு நிற்கின்றனர்.

மாலையில் கோயிலை கமிட்டித் தலைவர் தலைமையில் ஒரு கூட்டம் கூடியது. நல்ல காரியங்களுக்கெல்லாம் பிளவுபட்டு சதிராடி நிற்கும் புள்ளிகள் இவன் விடயத்தில் ஒன்றுபட்டு முடிவு எடுத்தனர். ராக்கப்பனை ஊருக்குள் நடமாட விடக்கூடாது. தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

முடிவு.

நடைமுறையில் தான் பலன் இல்லை. ராக்கப்பன் அங்கே தான் இருந்தான் வரிந்து கட்டி நின்றவர்கள் வயிற்றெரிச்சலை கொட்டிக் கொதித்தனர்.

இப்போது மாடத்தியுடன் ராக்கப்பனுக்கான தொடர்புவெளிப்படையாகத் தெரியவந்து விட்டது.

ஏறக்குறைய கணவன் மனைவி நிலையில் சாப்பாடு படுக்கை எல்லாம் அங்கேதான். ஆனால், கண்டும் காணாமல் என்ற வகையில் தொடர.....

ஒருநாள் நடுச்சாமம் கோயில் கமிட்டித் தலைவர் ஊர்ப்பெரியவர்கள், பெட்டிக்கடை முத்தப்பா மற்றும் புள்ளிகளின் பிரசன்னத்தில் மாடத்தியின் வீட்டுக் கதவு தட்டித் திறக்கப்பட்ட போது ,

ராக்கப்பன் கையுமெய்யுமாகப் பிடிபட்டான்.

கூட்டத்தின் கையில் கம்பு, தடிகள், தீப்பந்தம்.

ஆய் ஊய் விசிலடிகள் யாரோ ஒருவன் தகரத்துக்குக் கல்லால் எறிய, ராக்கப்பனை 'நீங்க உள்ளே இருங்க' என்று அமர்த்திவிட்டு மாடத்தி வெளியே வந்தாள்.

அவள் தலை குனிந்து மன்னிப்புக் கேட்பாள் என்று எதிர்பார்த்து கூட்டம் எக்காளமிட்டுச் சிரித்திருந்த போது,

"எல்லோரும் என்னா வேடிக்கை பார்க்கவா வந்தீங்க? இது என்ன உலகத்தில நடக்காத புதுமையா? நான் ராக்கப்பனைத்தான் எடுத்துக்கிட்டேன். நாங்க புருஷன் பெண்டாட்டியா வாழப்போகிறோம். அது யாருக்கும் புடிக்கலையன்னா அவுங்க என்னைய கட்டிக்கிங்க நான் இப்பவே ராக்கப்பனை இந்த வீட்ட விட்டுட்டு போகச் சொல்லிடுறன்".

கூட்டம் வெல வெலத்தது.

"என் புருஷன் செத்து பத்து வருஷத்துக்கும் மேலாச்சி. ஆனால் இங்க உள்ளவங்க எல்லாம் என்ன வைப்பாட்டியாத்தான் வச்சு நடத்தினீங்க. நீங்க ரகசிய ரகசியமா என் கதவை வந்து தட்டுறதைவிட இதுமேல்; உங்க ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு நாளைக்கு முந்தானையை போடுறதை விட நான் ஒருத்தருக்கே போட்டுட்டுப் போறேன். இனிமே யாரும் இந்த கதவை தாண்டலாமுன்னு நினைக்காதீங்க" – மாடத்தி. "மாதவி என்றாலும் மாடத்தி என்றாலும் ஒன்றுதான். காலம் தான் வேறு .....

பெரியவர்கள் எங்கே தம் பெயரையும் இழுத்து விடுவாளோ என்று வெலவெலத்துப் போனார்கள். கூட்டம் 'சண்டாளம்' என்றபடி கலைந்து பின் வாங்கிவிட்டது. இருந்தாலும் கிராம சேவகர் என்ற "சர்பக்கணையை" ஏவியது. மாடத்தி சளைக்க வில்லை. "ஆமாம் ஆராச்சி நல்ல ஆராச்சி இவனெல்லாம் ஒரு ஆராச்சி மாத்தியா சமூர்தி எழுதித் தாங்கன்னு கேட்டதுக்கு "மெனிக்கே வீட்டுல இல்லாத போது வான்னு சொன்ன ஆளு தானே நீ." மாடத்தி காளியானாள் மீண்டும் கூட்டத்தில் யாரோ ஒருத்தன் விசிலடித்தான்.

"மே குனுகொட அபிட்ட ஓனநே" ஆராச்சியின் கோலயா ஒரு போத்தல் சாராயத்துக்காக வந்த ஆராச்சியை லாவகமாக அகற்றிப்போனான்.

அன்று விடியும் வரை மாடத்தியின் வீட்டில் விளக்கெரிந்தது.

வார இறுதியில் வருடாந்த தேர்த்திருவிழாவுக்காக ஊர்ப் பொதுக் கூட்டம் கூடியபோது திருவிழா ஒழுங்குகளுக்குப் புறம்பாக மாடத்தி ராக்கப்பன் விவகாரமும் அங்கு பேசப்பட்டு திருவிழாவில் கலந்துகொள்ள விடாமல் தடுப்பது என்று முடிவாகியது.

ஊர் முறைமையை மீறியவர்களுக்கு வழங்கிய தண்டனை.

" கரகம் அவன் வீட்டுக்குப் போகக்கூடாது".

"காவடி அவன் வாசலை மிதிக்காது".

"கொடை எடுக்கக் கூடாது".

"துள்ளுமா சீர்கொண்டு வந்து அவள் அம்மனுக்கு அர்ச்சனை செய்யக்கூடாது" ஆளுக்காள் ஆக்ஞை பிறப்பித்தனர்.

ராக்கப்பன் மாடத்தி குடும்பத்தை இவ்வாறு ஒதுக்கித் தள்ளி வைத்தாகிவிட்டது.

திருவிழா

ஊரே களைகட்டி அமர்க்களப்படுகின்றது.

அப்போதுதான் வெடித்துக்கிளம்பியது. இனக்கலவரம், நான்கு பக்கமும் எரிமலையென மூண்ட கலவரத்தில் தோட்டங்களையும் கிராமத்தையும் கொண்ட சிற்றூர் தீப்பற்றிக்கொள்ள,

கொள்ளையடிப்பு, எரியூட்டல், சொத்துக்கள் போனால் பரவாயில்லை உயிரைக் காப்பாற்றிக் கொள்வோம் என்று குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு காடுகளில் புகுந்து தஞ்சம் அடைய.

அகப்பட்டுக் கொண்டோரின் அவல ஓலம்.....

உயிர்ப்பலி,

மாடத்தியும் ராக்கப்பனும் கோயிலுக்கு மிக அண்மையிலுள்ள புல்லுமலையில் ஒளிந்து கிடக்க....

அந்நிய இராணுவமெனப் புகுந்த காடையர் கடைகளைக் கொள்ளையடித்து எரியூட்டி லயத்தை எரித்து கோயிலையும் அண்மித்துச் சூழ.

நாளை நடைபெறவிருக்கும் திருவிழாவிற்காக அலங்கரிக்கப்பட்ட ரதம் மங்களகரமாக ஆரோகணித்து எழுந்து நிற்க.

இன வெறியர்களின் தீ வெட்டிகள் ஜூவாலையினைக் கக்க... தேரை நோக்கி....

மாரியாத்தா... மாடத்தி வெதும்புகின்றாள். ராக்கப்பன் மாரியம்மன் கோயிலுக்குள் புகுந்து அம்மனின் வெட்டரிவாளை எடுத்துச் சுழற்றி , சுழற்றி வீசி வெறியர்களுக்கு மத்தியில் தன்னந்தனியனாகத் தாக்கத் தொடங்கினான்.

சில நிமிடங்களில் இரண்டொருவர் சரிந்தனர். கயவன் ஒருவன் தீப்பந்தத்துடன் தேரை நோக்கி விரைய அவனை....... நோக்கி

வெட்டரிவாளுடன் ராக்கப்பன் அருச்சுனனின் அம்பெனப் பாய்ந்தான். புல்லுமலையில் தம் தம் குடும்பங்களுடன் ஒளிந்திருப்பவர்களுக்கு தீப்புகைக்குள்ளே ராக்கப்பன் சளைக்காமல் அங்கதனாக தலை சாய்க்காது...

கரும்புகை மேலெழுகின்றது.. குருஷேத்திரக்களம்.

“ஐயோ மச்சன் நானும் வாரேன்....” மாடத்தி சேலையை வரிந்து கட்டிக்கொண்டு கோயிலை நோக்கி ஓடிவர.....

புல்லு மலையில் அழும் பச்சிளம் குழந்தைகளின் வாயிலும் துணிகள் புதைந்திருக்க “மானா புல்லு மலையின் கீழ் தொங்கலில் காடையர் சிலர் சருகுகளை குவித்து நெருப்பு வைத்துக் கொண்டிருந்தனர்.

புல்லு மலை புகையைக் கக்கியபடி உச்சி மலையை நோக்கி எரியத்தொடங்கியது.

**(நன்றி - கொழுந்து)**



# தலைக்கொரு கூரை

குஞ்சரங்கள் கூட்டம் கூட்டமாக தூங்குவதைப் போல் குவிந்து..... குவிந்துள்ள தீப்பாறைக் குவியல்களை சுற்றி வளைத்து; ஆயாசத்துடன் ஓடி வந்த "டாட்டா" பஸ் வண்டி; அந்த இராட்சதப் பாறைகளின் பாதச் சுவடென படிந்திருக்கும் பஸ் நிலையத்தினுள் புகுந்து; பெருமூச்சு விட்டவாறு நின்ரது.

நகரின் கிழக்கு எல்லையினுள் கரும்பூதமென குந்தியிருக்கும் "எத்தாகல்லுக்கு" மேலே மெல்லிய இரும்புக் கம்பிகளினால் தொடுக்கப் பட்டிருக்கும் சமாதி நிலையிலான போதிமாதவனின் பிரதியமைப்பில் இழையோடியுள்ள மின் குமிழ்கள் உயிர்ப்புப் பெற; மலையிடுக்கில் எழுந்த பெருமானின் பிரம்மாண்டமான திருமுகம் நகரை ஆசீர்வதித்துக் கருணை மழையைப் பொழிந்து கொன்டிருந்தது.

"மாத்தலே... மாத்தலே..." "ரிதிகம... ரிதிகம..." "நுவர... நுவர..." ஒவிலிகந்த... ஒவிலிகந்த... கொழும்பிலிருந்து குருணாகலுக்கு கடைசியாக புறப்பட்ட இப்பஸ் வண்டியில் வந்து சேர்ந்த பயணிகள் எப்படியேனும் மறு பஸ் எடுத்து தத்தம் வீடுகளுக்கு போய் சேர்ந்து விட வேண்டுமென்ற, அந்தரிப்பில் முட்டி மோதி இடித்துக் கொண்டு இறங்கும் போது; "இவர்களுக்காக ரன்னர்கள்" போட்டி போட்டுக் கொண்டு போடும் கோஷங்கள் வரவேற்பளிக்கின்றன.

இன்று வெள்ளிக்கிழமை வார விடுமுறைக்காக வீடு வருவோர் தொகை அதிகம். எனவேதான் நெருக்கடி. எல்லா பஸ்களும் நிரம்பி வழிகின்றன. உள்ளே இருப்பவர்கள்; "சாடின் அடைப்பின்" நெரிசலில் விழிபிதுங்கி நின்றாலும்; மிதிப்பலகையில் கால் வைத்தவரை இறங்கி "திரும்பிப்போ" என்று மறுக்காமல் உள்ளே அடைபட்டிருப்போரை திட்டி "ஏசி அதட்டி" இடம்

எடுத்து வந்தவரையும் உள்வாங்கி அணைத்துக் கொள்ளும் மினிபஸ்சின் தாராள மனசு மட்டும் நம் அனைவருக்கும் இருந்துவிட்டால், உலகில் எத்தனையோ பிரச்சினைகளுக்கே இடம் இல்லாமல் போய்விடும்.

பூதத்தையே ஒரு சிறு புட்டியில் அடைத்து விடும் “சூ..... மந்திரவாதிகள்” இந்த மினி வேன் பொடியன்களிடம் பாடம் கேட்க வேண்டும்....

“அரக்கப் பரக்க இறங்கி, ஆவப்போவது தான்” என்ன? என்ற நியாயத்தின் அடிப்படையில் எழுந்த; சலிப்பில், தாவி, முண்டியடிப்போரின் போட்டியிலிருந்து ஒதுங்கி, எல்லோருக்கும் வழிவிட்டு தன் இனத்திற்கேயுரிய மகா பொறுமையுடன்; தம் வாழ்வின் பயனே போன்ற ஏமாற்றத்துடனும் நகர்ந்து கொண்டிருந்த கறுப்பையாவையும் அவனது சகதொழிலாளி நந்தபாலாவையும் “ இக்மன்ட்ட இன்மன்ட்ட” என்று அதட்டும் கண்டக்டரின் குரல் துரிதப்படுத்தியது.

இருவரும் மூடிய ‘றப்பர்’ சிரட்டையில் கரந்துரைந்த ‘சுருட்டை’ தீண்டியதுபோல வெடுக்கென பஸ்சை விட்டு இறங்கினர்

‘மட்காட்’ தரையில் அரைந்து தேய; புல்லோட் அடித்து கிறீச்சிட்டு ஈனக்குரல் எழுப்பி நகரும் “அளவத்துக்கொட வேன் இந்த இருவரையும் பார்த்து” யனவாத....? என்று கேட்டு “நே... நே...” என்ற தலையசைப்பினால் கோபமும் வெறுப்பும் கொண்டு “ரைட் ... ரைட் ... என்ற குரலோடு ஒரு குலுக்கலுடன் உரசிக் கொண்டு கடந்து சென்றது.

பஸ் நிலையத்தை விட்டு இருவரும் வெளியே வந்தனர். முன்னால் பெரகும்பா வீதி. வீதியின் கடைசிக் கோடியில் அமைந்திருந்த நைட்கடை மட்டுமே திறந்திருந்தது. கடையின் முன் உள்ள பக்கிஸ் பெட்டியில் இருவர் குந்திக்கொண்டிருந்தனர். அவர்கள் இருவரினதும் தோற்றமே ‘பஜார் பேர்வழிகள்’ என்பதை பறைசாற்றிக் கொண்டிருந்தது. “யாரை மடக்கலாம்” என்று கண்ணிவைத்து நிற்கும் அவர்களின் பார்வையில் படாமல் கறுப்பையாவும், நந்தபாலவும் எதிர்திசையில் நடந்தனர். கடையின் முன்பகுதியில் கேஸ் அடுப்பில் தகிக்கும் கொத்து ரொட்டித் தகரம் போடும் தாளம் இருவரையும் தொடர்ந்து வந்து அழைத்தது.

பாதையோரத்தில் “கரைவலை வீசி” நின்ற ஆட்டோக்காரன்; இந்த இருவரையும் கண்டு முதலில் சுறுசுறுப்படைந்தாலும், பின்னர் வாடிச் சோர்ந்து வரும் இவர்களைப் பார்த்து சலிப்புற்று இந்த “கேஸ் நடை வண்டி” சரிப்படாது என ஊகித்து மீண்டும் ஆட்டோ வண்டியினுள்ளே தன்னை புதைத்துக் கொண்டான்.

“நந்தபால...” இருவருக்கும் இடையே நிலவிய மௌனத்தைக் கலைப்பது போல் மெதுவாக பேச்சை எடுத்தான் கறுப்பையா தலைவர். இருவரும்

இப்போது புதிய மார்க்கட் தொகுதியைக் கடந்து ரவுண்ட்ட போட்டிற்கு சமீபமாக நடந்து கொண்டிருந்தனர்.

"தலைவர் இப்ப கடையில் போய் தேத்தண்ணி குடிச்சிட்டு; மெழுகுதிரியும் நெருப்பெட்டியும் வாங்கிட்டு; பத்தரை மணிக்கு புறப்படுற ரிதிகம பஸ்சில போய் ரேந்தகொட சந்தியில இறங்கி நடந்து; தோட்டம் போயிறுவோமா...? எப்படியேனும் இரவே வீட்டுக்குப்போய்விட வேண்டுமென்ற ஆர்வம். நந்தபாலவிற்கு. மனைவிக்கு இது நிறைமாதம்.

"இல்ல; நந்தபால முந்தி நடந்தது அதுக்குள்ள மறந்திட்டியா? நம்ம சைவக்கடைக்குப் போய் இருக்கிறத சாப்பிட்டு கோச்ஸ்டேசன் முன்னுக்கிருக்கிற விறாந்தையில கொஞ்ச நேரம் கண் அசந்தமுனா விடிஞ்சிடும். காலையில முதல் பஸ் எடுத்து தோட்டத்திற்கு போனோம்னா நாளைக்கி வேலைக்கும் போயிறலாம்."

தலைவர் கறுப்பையாவின் பேச்சுக்கு மறுப்பின்றி, அவன் பின்னே நடந்தான் நந்தபால. இலட்சுமணனாக.

இருவரும் சைவக்கடையை அடைந்தபோது கடையை மூடி பலகை போட்டுக் கொண்டிருந்தார்கள். டீமேக்கர் சுடு தண்ணீர் பாய்லரைக் கழுவி சுத்தம் செய்து கொண்டிருந்தான்.

கறுப்பையா தலைவரைக் கண்ட; கடை முதலாளி சந்திரன்; "வாங்க தலைவரே வாங்க" என்று அழைத்தபடியே, "என்ன இந்த ரெண்டாங்கெட்ட நேரத்தில்" என்றார். தோட்டப்பகுதியில் ஏதாவது அசம்பாவிதம் நடந்தால் போலீசுக்கு செல்லும் முன்னர் தலைவர், சைவக் கடை முதலாளியைக் கண்டு ஆலோசனை கேட்கத் தவறமாட்டார்.

"இப்பதான் கொழும்பில இருந்து வாரோம். எல்லாம் இந்த லயத்து விசயமாகத்தான்; எட்ஓப்பீசுக்கு போய் ஜீ. எஸ்ஸை கண்டு பேசி எல்லா பிரச்சினையும் கூறிவிட்டு வார்ரோம். பஸ் இல்ல. வீட்டுக்குப் போறதுக்கு, முதல்ல வயிற்றுக்கு ஏதும் சாப்பிடு வோம்மேன்னு இந்தப் பக்கம் வந்தோம்" தலைவரின் குரலில் பெருமை இழைந்தது. சலிப்படையாது; விக்கிரமாதித்தனாக மீண்டும் மீண்டும் அலைந்து; ரொபட் புறூஸ் முயற்சியாக; "நடையாநடந்ததில்" இந்த தடவைதான் அவர் கொழும்பு சென்றதிற்கு பெரியோர்களை நேரில் சந்தித்து; தம் குறைகளை எடுத்துச் சொல்லும் வாய்ப்பு ஏற்பட்டது. அதுதான் மகிழ்ச்சிக் கடலில் மிதக்கின்றார்.

"என்னதான் இருந்தாலும் இப்ப காலம் கெட்டுப்போய் கெடக்கிறபோது நேரங்காலத்தோட வீடு வாசல் போய்சேர தெரிஞ்சிக்கிறணும். இங்கேயும் நேரத்தோட சாப்பாடெல்லாம் முடிஞ்சிறிச்சி இல்லன்னு சொல்ல முடியாது. இருக்கிறதசாப்பிடுங்க. டேய்தம்பிதலைவருக்குபாத்துவை" என்றுகுரல்கொடுத்தார்.

“கடையை மூடி படுப்போம்” என்ற நினைப்பில் மேசை நாற்காலிகளை துடைத்து அடுக்கிக் கொண்டிருந்த பையன் மீண்டும் வேலை செய்ய வேண்டியுள்ளதே என்ற கோபத்தில் வேண்டா வெறுப்புடன் இலை போட்டு மீதியிருந்த தோசைகளை பரிமாரி, ஊசிப்போன சாம்பாரை ‘தடாலென’ ஊற்றினான்

தாமரை இலையைக் கடந்து வழியும் சாம்பார் சாரத்தில் இறங்கியது. வழியும் சாம்பாரை துடைத்த படி கோபத்துடன் சப்ளை பையனைப் பார்த்த நந்தபாலாவை , சாடையில் கையமர்த்தி சமாதானப்படுத்தினார் கறுப்பையா தலைவர்.

“இவர்கள் பசி இவர்களுக்கு! அவன் கோபம் அவனுக்கு பெரிது...!! நாலு பேர் வேலையைத் தனி ஆளாகநின்று சமாளித்தால் கோபம் வராமலா இருக்கும். அதுவும் காலையிலிருந்து நின்ற நிலையில்”

சாப்பிட்டுக்கொண்டிருக்கும் தலைவரிடம் சில்லறையை எண்ணி கணக்கிட்டபடியே முதலாளி கேட்டார். “என்ன தலைவரே, மாதம் தவறாமல் கொழும்பு கொழும்புன்னு போய்க்கிட்டுதான் இருக்கிறீங்க. இந்த லயத்து பிரச்சினைக்கு ஒரு முடிவு வருமா?” குரலில் அநுதாபமா? ஏளனமா? இனங்காண முடியவில்லை. சிரிப்பை மறைத்து நிற்கும் கடாமீசை. சைவக்கடை முதலாளியும் முன்பு அட்டனில் தோட்டப் பகுதியில் வாழ்ந்தவர்.

“அப்படா இங்க மாதிரியா அங்க? என்னா ஒற்றுமை! ஒன்னுன்னா குளவிக்கூட்டைக் கலைச்சா ஒன்னா சேர்ந்து துரத்துமே அந்த மாதிரி”ன்னு பெருமைப்பட்டுக் கொள்வார்.

முதலாளி அப்படி கூறும் பொழுது, “இங்க அப்படி ஆவுங்களா. இங்கேயும் நாங்க தமிழன்னு வாழுறோமே; அதுவே பெருசுதாங்கன்னு”, என தலைவர் கறுப்பையா எடுத்துச் சொல்லி திருப்திப்பட்டுக் கொள்வார்.

கண்டி, மாத்தளை குன்றுகளுக்கு வடமேற்கில் தாழ்ந்து செல்லும், மலைப்பகுதிகளிலும், மாவத்தகம; குருணாகல் சரிவுகளிலும், பாரிய கிராமங்களுக்கிடையே சிறு சிறு காடுகளுக்கு மத்தியில் அநாதரவாக குட்டித் குட்டித் தோட்டங்களாக சிறைபட்டுக்கிடக்கும் றப்பர் தென்னந் தோட்டங்களில் வாழும், நம்மவரின் நிலை; கயிறறுந்த பட்டம் போல் இப்படி தொடர்பற்றதுதான்!

அந்த தனிமைதான்; அவர்களின் தனித்துவம்! தோட்டங்களில் இழையோடி கிடக்கும் கிராமியச் செல்வாக்கு, பேச்சுமெழியில் கூட ஒரு மணிப்பிரவாளத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. நடை உடை பாவனைகளும் சற்று வித்தியாசம்தான்.

தொடர்ச்சியில்லாது ஆங்காங்கே தொட்டம் தொட்டமாக பரந்து கிடக்கும் தோட்டங்கள், தொடர்பில்லாது அறுபட்டு கிடக்கும் உறவுகள்,. தீர்வே இன்றி நீக்கமற நிறைந்து கிடக்கும் பிரச்சினைகள்... ஓயாத உழைப்பு இவற்றின் ஒட்டு மொத்தமானகூட்டுக்கலப்புதான் இவர்கள்...

"லயத்தை ரிப்பேர் செய்யும்படி கடிதம் கொடுத்தோம். போன மாசமும் இப்படித்தான். ஒரு கடிதம் கொண்டு வந்து கொடுத்தோம். துரை ரீஜனல் ஆபிசு? அனுமதி கொடுக்கல்ல. நம்மால் முடியாதுண்ங்கிறான். இன்னைக்கி நேத்து கட்டின லயமா? வெள்ளக்காரன் கட்டுனது. இந்த பயலுகளும் தான் வன்செயல் கொளப்பமுன்னு நெருப்ப வச்சி... வச்சி கொளுத்தினாங்க. எத்தனை காலத்து லயம், மழை காத்துன்னு இத்துப் போய்; உக்கி இப்ப ஒழுகுது. காம்பிரா உள்ளுக்கும் புளங்க வசதியில்லை. பின்பக்கம் குசினி இறக்கி கட்டினா அதையும் இடிச்சி ஒடைக்கச் சொல்லுறானுக. இப்ப எங்க வீட்டில் என் மகன் குடும்பம், மகள் குடும்பம்னு மூணு குடும்பங்கள் இருக்கிறோம். நாங்க குடும்பம் நடத்துறதே பெரிய அசிங்கமுங்க" தலைவர் பெருமூச்சு விட்டுக் கூறினார்.

"என்ன தலைவரே, எனக்கு தெரியாத தோட்டத்துசங்கதிகளா... என்னமோ நம்ம ஆளுக தலைவிதி. இறைவன் விட்டபடி நடக்கும். தோசை சாப்பிட்டிங்களா?. எப்படி நல்லா இருந்திச்சா தெரியல பிளேன்டி குடிக்க முடியாது பொயிலரை அணைச்சாச்சி. இப்ப எங்க தங்க போறீங்க? கடைசி பஸ் போயிருக்குமே, முந்தி மாதிரி வெளியாளுசு இப்ப இங்க தங்க முடியாது. நாங்க கடையில உள்ளவங்க பெயர்களை போலீசில பதிவு செய்திருக்கோம். எந்த நேரத்தில போலீஸ் வந்து செக்பண்ணுதோ சொல்ல முடியாது."

"இல்லங்க, நாங்க கோச்ஸ்டேசன்ல படுத்திருந்திட்டு விடியற்காலையில் வெள்ளன வீடு போய் சேர்ந்திருவோம். உங்களுக்கு என்னத்திற்கு எங்களால வீண்தொல்லை..." முதலாளியிடம் விடைபெற்றுக் கொண்டு புகையிரத நிலயத்தை நோக்கி நடந்தனர். நந்தபால ஒரு பீடியை பற்றவைத்து "தம்" இழுத்து உடலுக்கு தெம்பேற்றிக் கொண்டான்.

பத்தரை மணிக்கு இங்கிருந்து புறப்படும் ரிதிகம பஸ்சில் ஏறி; ருக்கத்தென சந்தியில் இறங்கி; கிராமங்களுக்கூடாகவும் பற்றைக் காடுகளுக்கூடாகவும் நடந்து தோட்டத்திற்குப் போய் சேர்ந்துவிட அவர்கள் உடலில் தெம்பு இல்லாமல் இல்லை.

ஒரு காலத்தில் நேரம் காலம் பாராது இப்படி வந்து போனவர்கள்தான். ஆனால் இன்று "காலம் கெட்டுபோய் கிடக்கின்றது"போகமுடியுமா?

பட்டப்பகலிலேயே ஒத்தை செத்தை வந்து விட்டால் "காசைஎடு" "உருளோசை கழுட்டு"ங்கிற காலமாச்சே, போதாதற்கு இவர்கள் தொழிற்

சங்கத்திற்கு ஆள்சேர்க்கின்றபடியால் துரை வேறு "நாட்டில்" அடி ஆள் வைத்திருக்கின்றான்.

தொழிற்சங்கத்தில் சேர்ந்த பின்னர் துரைமார்களின் "தட்டிக்கேட்க முடியாத அதிகாரத்திற்கு" ஆபத்து வந்துவிட்டது. "அரைப்பேர் போடாதே," "குறைவாக அளக்காதே," "லயத்தை திருத்து" என்றெல்லாம் கோரிக்கைகள் தட்டிக்கேட்க முடியாத அதிகாரத்திற்கு வந்த சவால், கேள்விக் கணைகள் வர இந்த பிரதேசத்தில் புகுந்த இந்த "புது இடியையும்" அதன் சூத்திரதாரிகளான கறுப்பையா தலைவர், நந்தபாலா உட்பட இன்னும் தோட்டங்களில் உள்ள சிலரையும் எப்படியும் மடக்கி விட வேண்டுமென துரைமார் கங்கணம் கட்டி நிற்கின்றனர்.

மூன்று மாதங்களுக்கு முன்னர் அந்த சம்பவம் நிகழ்ந்தது. கறுப்பையா தலைவரும் நந்தபாலவும் கொழும்பு போய், இதுபோல் இரவில் வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருக்கும் வேளையில் ரேந்தகொட சந்தியில் வைத்து காடையர்களினால் தாக்கப்பட்டனர். நந்தபால சிங்களத்தில் கூச்சலிட்டபடியால் பக்கத்து கிராமவாசிகள் ஓடிவந்து இருவரையும் காப்பாற்றினார்கள்.

எனினும் இருவரும் ஒருவாரம் குருநாகல் ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெறவேண்டி இருந்தது. எனவேதான் இவ்வாறான வேளைகளில் தோட்டங்களில் திரும்பிச்செல்வதை தவிர்த்துக் கொண்டார்கள்.

"கொழும்பிற்கு போறது சரி நேரங்காலத்தோட வாங்க" பல்லி சொல்வது போல் பயணம் வைக்கும் போதே மனைவியின் உபதேசம். ஆனால் ... பாதைக்கு இறங்கி விட்டால் நாம் நினைத்தபடி முடியுமா? புகையிரத நிலையத்திற்கு செல்லும் வழியில் பிள்ளையார் கோயிலை கடக்கும் போது நந்தபால, தலைவரை கேட்டான், "இந்த வருஷம் நம்ம தோட்டத்தில காமன்டி ஊன்றுறது இல்லையா?"

"காமன்டிமட்டுமல்ல" சிந்தாகட்டி, தேர்க்கல் எல்லபம் கும்பிடனும். அதோட உச்சி மலையில இருக்கிற கலேபண்டார கோயிலயும் பொங்க வைக்கணும். ஆனா; இப்ப தோட்டத்ல அநேகமானவுங்க சேர்ச்சிற்குதானே போறாங்க. எப்படி வரிவசூலிக்கிறது...?" தலைவரின் குரல் சோகமாக ஒலித்தது.

"ஆமா தலைவரே, நானும் சொல்லனும்னுதான் இருந்தேன். நம் தோட்டத்தில உள்ள மொத்தம் எழுபது குடும்பத்திலே அஞ்சி குடும்பம் நாங்க சிங்களவங்க. நாங்க ரிதிகம பன்சலைக்கு போறதோட, பத்தினி தெய்யோ முருகன் கோயிலுக்கும் வந்து சாமி கும்பிடுகிறோம். நம்ம தோட்டத்தில உள்ளவங்க சடங்கு, கல்யாணம்னு டவுன்ல உள்ள கோயில்களுக்கு போனா நம்ம ஆளுகளுடைய நெலமை தெரியாம அங்க உள்ள சிலர் சின்ன

விசயத்திற்கெல்லாம் ஐநூறு, ஆயிரம்னுபுடிங்கி திங்கிறாங்களாம். குளியாபிட்டி பக்கம் ஒரு ஆள் கழிப்பு கழிக்கணும் கரும்பாம்பு, செம்பாம்பு வாங்கி வா நூல்கட்டனுன்னு ஊர் உலகத்தில இல்லாத சாமான் சட்டெல்லாம் கேட்கிறதோட, ஏழைகளுக்கு ஒரு மாதிரியும், பணக்காரங்களுக்கு ஒரு மாதிரியும் நடத்துராராம். இதுனாலதாம் நம் சனங்க இப்ப ஆதரிப்பார் இல்லாம கோயிலுக்கு போகவே பயப்படுறாங்க. ஆனா பாதிரிமார்களும் சிஸ்டர்மார்களும் இப்ப தோட்டம் தோட்டமா வந்து உடுப்பு துணி வகைகள் எல்லாம் கொடுக்கிறதோட, காசு பணம் வாங்காம ஜெபம் சொல்லிக் கொடுத்து ஆதரிக்கிறாங்க. இப்ப அவுங்க தோட்டத்தில கூறின புத்திமதிகளாலதான் நம்ம தோட்டத்து ஆம்புள பொம்புளங்க ஸ்பிரிட் காயவைச்சி குடிக்கிறபழக்கத்தை விட்டிருக்காங்க..." நந்தாவின் பேச்சை இடைமறித்த தலைவர் நம்ம கோயில்களிலும் நமக்காக பாடுபடுற நல்லவங்களும் இருக்கத்தான் செய்கிறாங்க. நமக்காக பல தியாகங்களையும் செய்றாங்க. கோயில்கள் தான் நம்ம பக்திக்கும் கலாசாரத்திற்கும் அடித்தளம். கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கக் கூடாது".

"ஆனா நந்தா, இப்ப அநேகமான கோயில்கள் நம்ம ஏழைகள் மதிக்காமல் நடக்கிறபடியால்தான் இதெல்லாம் நடக்குது. அங்கேயும் எல்லோரும் நல்லவங்க இல்ல. தங்க வாசிக்காக மதம் மாத்தி சம்பாதிக்கிர போலிகளும் இருக்கிறாங்க. இந்து சமயம் இயற்கையோடு இணைஞ்ச மூத்த சமயம் ஆனால் நம்மாதிரி ஏழைகளுக்கு வழிகாட்ட யார் இருக்கா? முந்தி நாங்க வன்செயல்ல அடிபட்டு காட்டுல ஒளிஞ்சி இருந்து; பிறகு அகதி முகாம்ல இருந்தோமுல்ல, அங்கேயும் எங்கள தோட்டத்து ஆளுன்னு பிரிச்சு வைச்சுத்தான் நடத்துனாங்க. பாண் வாங்கிய போலிம்மகூட வேற வேறயாகத்தான் வைச்சாங்க..."

"அநியாயக்காரனுக... மழை வருற மாதிரி இருக்கு. வாங்க வேகமா நடப்போம்" என்றவாறு "ஆமா தலைவரே நம்ம இருக்கிற லயன் காம்பிரா நமக்கே சொந்தமாகப் போகுதுன்னு ஒரு பேச்ச அடிபடுதே..."

தலைவர் கறுப்பையா எட்டி நடையைப் போட்டவாறு கூறினார். "நந்தா உனக்கு நாட்டுல வயல், வீடு இதெல்லாம் கெடையாது. உன்ன போல குடும்பங்க எங்க மாதிரி தோட்டத்தில இருக்கீங்க. நான் இந்த தோட்டத்து லயத்திலதான் பிறந்தேன். எங்கப்பாவும் இதே தோட்டத்தில இந்த லயத்தில பிறந்திச்சாம். நாங்க பரம்பரையா இந்த தோட்டத்திலதான் வாழுறோம். இந்த லயத்தை விட்டு எங்கள போகச் சொன்னா நாங்க எங்க போவோம். இப்ப அஞ்சி வருஷம், பத்து வருஷம் ஒரு வீட்டுல கூலிக்கு வாடகைக்கு இருப்பவங்களைக்கூட வெளியே அனுப்ப முடியாம இருக்கு. அப்படி இருக்க

நேரம் பரம்பரையா இருக்க நமக்குத்தான் இந்த லயம் காம்பிரா எல்லாம் சொந்தம்'' இதுல புதுசா சொந்தம்னு சொல்லுறக்கு ஒன்றும் இல்ல ஆனா இப்புடி பரம்பரையா மாடா ஒழைச்சிதேயுற நமக்கு இந்த ஒட்ட லயம்தானா?'' மழை கொட்டத் தொடங்கிவிட்டது. இருவரும் ஓடி ரயில்வே நிலையத்திற்கு முன்பிருக்கும் விறாந்தையை அடைந்தனர்.

ரயில் நிலையத்தில் பலர் இரவு வண்டிகளுக்காக காத்து நின்றனர். தம் கைவசம் இருந்த அன்றைய செய்தித்தாளை இருவரும் தரையில் விரித்துப்படுத்த சிறிது நேரத்திற்குள் மெய்மறந்து தூங்கிவிட்டனர்.

''தூறிக்கொன்டு வந்த மழை பெரும் பாட்டமாக பெய்து கொண்டிருந்தது. எவ்வளவு நேரம் தூங்கினோம் என்று தெரியாத இருவரும் பெரும் மழையோடு பயங்கரமாக இடி இடித்து முழங்கும் ஓசை கேட்டு திடுக்கிட்டு எழுந்தனர்.

மூன்றாம் சாமம் கழிந்து பொழுது புலரும் வேளை அடைமழை விடாது பெய்து கொண்டிருந்தது. வரவர அதன் வேகம் அதிகரித்து ஓங்காரத்துடன் பெய்யத் தொடங்கியது. எங்கும் வெள்ளக்காடு. ஒருவாறு இருவரும் மறுநாள் வீடு வந்து சேரும் போது நண்பகல் தாண்டிவிட்டிருந்தது.

மழை... மழை... பெருமழை... மழை விட்டபாடாக இல்லை. தோட்டத்து கான் குட்டைகள் நிரம்பி வழிந்து பெருக்கெடுத்து ஓடுகின்றன. வானம் லயத்துக் கூரையாக பொத்துக் கொண்டு ஒழுகுகின்றது. மேட்டு லயத்தில் இருந்து ஓடி வந்த ஒருவன் ''தலைவரே எங்க லயத்துமேல் ஈரப்பலா மரம் விழுந்திருச்சின்னு ஐயையோன்னு'' ஒப்பாரி வைத்தான்.

கொட்டும் மழையையும் பொருட்படுத்தாமல் எல்லோரும் அங்கு ஓடினர். நல்லவேளை லயத்துக்கு பெரிதாக சேதம் ஒன்றும் இல்லை. விழுந்த ஈரப்பலாமரத்தின் சிறிய வாது ஒன்று மட்டுமே லயத்தை தாக்கி இருந்தது.

மழை... மழை பெருமழை... போதாதற்கு ஊளையிட்டுச் சீறும் காற்றும் சேர்ந்து ரப்பர் மரங்கள் பேயாட்டமாடிப் பயமுறுத்தின.

பட்டையை சீவி, தம்பாலை எடுத்து, அனுபவித்து, இறுதியில் தம் நெஞ்சை பிளந்து மரத்தை எரிக்கின்றார்களே என்ற ஆத்திரத்தில் அதிர்ந்து குலுங்கின.

பண்பட்ட இதயம் போல்; மூன்று தலைமுறையின் சோகங்களைத் தாங்கிக் கொண்டு; மழை, வெயில், காற்று ஆகிய இயற்கையின் சீற்றங்களை சகித்துக் கொண்டும் கல்வீச்சு, சூறையாடல், எரியூட்டல் ஆகிய இன வெறிச்செயல்களினால் புண்பட்டும் நிலைகுலைந்து போன தோட்டத்து லயங்களின் தகரங்கள் தம் ஆற்றாமையைச் சொல்லி அழ; சுவர்கள் மனமுருகி கரைந்து காரை பெயர்ந்து இடிந்து விழுந்துவிடத்துடிக்கின்றன.

சுவர்கள் சாய்ந்து விட்டால்? தொடர்ந்து பெய்யும் மழையினால் தரை ஊற்று கிளம்பி பொங்குகின்றது. துரையைத் தேடி ஓடினார் தலைவர். அவர் கொழும்பில் நடைபெறும் "றகர் விளையாட்டுப்" போட்டியில் கலந்து கொள்ள போய் விட்டிருந்தார்.

அவருக்கும் கீழே இருப்பவர்கள் ஒரு முடிவும் எடுக்க முடியாத நிலை தலைவர் ஏமாற்றுதலுடன் திரும்பி வந்தார்.

இனியும் பார்த்துக் கொண்டிருந்தால் நிலைமை மேலும் மோசமடையலாம். எல்லோருமே கறுப்பையா தலைவரை நச்சரித்துக் கொண்டிருந்தனர்.

கூரைகள் பெருமளவில் ஒழுக தரை ஊற்று கண்டு விட்டது. எவ்வளவு தண்ணீரைத்தான் அள்ளி அள்ளி வெளியே கொட்டுவது? அள்ளிய கைகள் அசந்து போய்விட்டன.

"லயத்தை ரிப்பேர் செய்" என்ற கோரிக்கையை அன்றே ஏற்று கவனித்திருந்தால் இன்று நிலைமை வேறு. அதைப்பற்றி இப்போது பேசிப்பலனில்லை. காற்றில் பறக்கத்துடிக்கும் தகரங்களையும் இடிந்து சரிந்து சாய்ந்துவிட நழுவும் சுவர்களையும் தாங்கிப் பிடிக்க வேண்டும்.

தாக்குப்பிடிக்க ஏதாவது செய்தாக வேண்டும். கொட்டும் மழையையும் பொருட்படுத்தாது சிறுவர்கள் உட்பட அனைவரும் புறப்பட்டனர். தோட்டத்தை அடுத்து காட்டுத் தொங்கலில் இருக்கும் மானாப்புல் மலையிலிருந்தும், சிந்தா கட்டி மலையில் இருந்தும் மானாப்புல் கட்டுகள் வந்து குவிந்தன. அனுபவசாலிகள் பல்வியமாக கட்டுக்கட்டாகக் கட்டி கூரையில் நிரவி விட்டனர்.

இற்றுப் போய் உடைந்த "பரால" ரீப்பைகளுக்காக; காட்டுத்தடிகளும் உக்கிப் போய் ஒழுகும் கூரைத் தகரங்களுக்கு மேலாக இலுக்கு மானாப்புல்லும் கட்டு கட்டிப் போடப்பட்டு விட்டது.

கூரையை ஊடறுத்து நிலத்தில் கொட்டிய நீர் குறைய தரை காய்ந்தது. நெளியும் சுவர்களும் நிமிர்ந்து கொண்டன. அன்றிரவு அனைவரும் அமைதியின்றி தூங்கினர். மறுநாள் மழை குறைய; சூரியன் எட்டிப் பார்த்தான்.

மரம் காஞ்சிட்டா இன்னைக்கு இல்லாட்டியும் நாளைக்காவது பால்வெட்டலாம் என்று பேசிக் கொண்டனர். அப்போது மேட்டு லயத்துப் பக்கமாக துரையும் பெரிய கன்டக்டரும் வருவதாக ஒருவர் ஓடி வந்து தகவல் கூறினார்.

தலைவர் கறுப்பையாவும் நந்தபாலவும் ஓட்டமாக அங்கு ஓடிச்சென்றனர். துரை மழையினால் ஏற்பட்ட சேதங்களையும் லயங்களையும் பார்வையிட்டுக் கொண்டிருந்தார். துரைக்கு சலாம் தெரிவித்த கறுப்பையா தலைவர் 'பார்த்தீங்களா, துரைகளே நான் எத்தனை தடவை லயத்தை ரிப்பேர் செய்ங்க

செய்ங்கன்னு ரிப்போட் செஞ்சேன். இப்ப பார்த்தீங்களா, எங்களுக்கு நடந்த கதியை, நாங்க மட்டும் இந்த தடவை காட்டுக் கம்பு தடிகளை வெட்டிப்போட்டு இலுக்கு மானாவை வச்சி கட்டாட்டி லயமே மழையில ஊறிப்போய் இடிஞ்சி விழுந்திருக்கும்ங்க. அதுனால துரை இனியும் சுணங்காமல் லயத்தை ரிப்பேர்செய்து கட்டித்தாங்க" பவ்யமாகக் கேட்ட கறுப்பையா தலைவர் துரையை வணங்கி நின்றார். தான் எடுத்த சமயோசித நடவடிக்கையை துரை பாராட்டுவார் என்ற நம்பிக்கையில் வார்த்தைகள் பெருமிதப்பட்டுத் தெறித்தன. நம்பிக்கை பூத்தமுகம்...!

" அது இல்ல தலைவரே, இப்ப நீங்க பெரிய குத்தம் செஞ்சிட்டீங்க. இந்த லயம் தோட்டத்து சொத்து. தோட்டம் அரசாங்கத்தினதும் கம்பெனியினதும் சொத்து. இதுல உள்ள ரீப்ப பராலகளை உடைச்சி மாத்தி காட்டுக் கம்புகளை போட்டுக் கட்ட உங்களுக்கு அதிகாரம் கிடையாது. தகரத்திற்கு மேலே இலுக்கு மானாப் புல்லு வைத்து யாரைக் கேட்டுக் கட்டினீங்க . இதுக்கெல்லாம் நம்ம மேல் இடத்தில அனுமதி பெறனும். உங்க உங்க விருப்பத்திற்கு இதெல்லாம் நடக்க முடியாது. அதனால நான் பொலீசில் என்றி "போட்டிட்டு ரீஜனல் ஆப்பீசுக்கும் அறிவித்து உங்கமேலே நடவடிக்கை எடுத்து 'தண்டம்' போடப் போறேன். இதை இப்போது நான் அறிவிச்சி; நடவடிக்கை எடுக்காட்டி பின்னுக்கு எனக்கும் குத்தம் கிடைக்கும்.

" துரை இதென்னங்க அநியாயம்," கறுப்பையா தலைவர் கண் கலங்கி குரல் கொடுத்தார். இடிந்து விழுற வீட்ட கட்டுறது குத்தங்களா... இது நல்ல நீதிங்க... கறுப்பையா தலைவரின் பேச்சைக் கேட்க அங்கு துரை இல்லை. அவர்தூரத்தில் நிறுத்தியிருக்கும் ஜீப் வண்டியை நோக்கி நடந்து கொண்டிருக்கின்றார்.

இதுவரை ஊமையாகக் காய்ந்த வெயில் சற்றே தணிய வானத்தில் மீண்டும் கருமேகங்கள் திரண்டுவர; வானம் இருண்டு கொண்டு வருகின்றது. வானம் ஒரே கூரைதான். மீண்டும் மெல்லிய தூறல்கள் பனித்துளியென துமிக்கின்றன. மழை.. மழை.. பெரும் மழை! மீண்டும் மழை ஒரு பாட்டம் பெய்து, அழுதுத்தான் தீர்க்கும் போலிருக்கிறது.

தலைக்கொரு கூரை....?

*(கலை ஒளி முத்தையாபிள்ளை சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற இச் சிறுகதை சிங்களத்தில் மொழி பெயர்க்கப்பட்டு பிரசுரமாகியுள்ளது.*

**(வீரகேசரி 1997)**



# ஒரு பிரளயம்

இரண்டு இலைகளுடன் சேர்ந்து ஓர் அரும்பினைக் கொண்டுள்ள தளிரையே ‘‘கொழுந்து’’ என்று கிள்ளி எடுப்பார்கள். தேயிலைச் செடியில் ஒரு கொழுந்தினை எடுத்த பின்னர் எஞ்சி செடியோடுள்ள தண்டின்பக்க வாட்டில் பலகிளைகள் வெடித்துத் தோன்றும். மொசுக் கொட்டை கூட்டுப் புழுக்களாக மொய்த்துக் கிளம்பும் இம் முடிச்சுகளிலும் வாதுகளின்: கிளைகளிலும் புதிய புதிய கொழுந்துகள் தழைத்து, தழைத்து முன்னரை விடவும் வேகமாக வளர்ந்து படரும். அடர்ந்து சிலிர்க்கும்.

கிள்ள...... கிள்ள.....’ கிளர்ந்து வளரும் தேயிலைச் செடிகள்

தேயிலைச் செடியில் முகிழ்க்கும் கொழுந்தினது கதை மட்டுமல்ல இது! உரமாகிப் புதைந்து போன தோட்டத்து பிரமாக்களினதும் அவர்களது வாரிசுகளினதும் கதையும் இதுதான்!

கொழுந்து தேசமென்ற இந்த சோக ஓவியத்தின் விதானம் மாத்தளை பகுதியேயாகும்.

மாத்தளை பகுதியின் பூர்வீகத் திருநாமம் பன்னகமம் என்பதாகும். மந்தை மேய்க்கும் சமூக தடத்திலிருந்து நிலையாக நீர்நிலைக்கருகில் விவசாயக் குடியாக அமர்ந்தபோது; பழந்தமிழன் தன்நிலம் என்னும் நல்லாளுக்கும்; வாழும் இடத்துக்கும்; அணியாக; மார்பில் சூட்டிய மணியாரம்தான் பன்னகமம், தமிழன் பண்ணை வைத்து வாழ்ந்த இடம் பன்னகமம்.

முன்பு ஏட்டில்: எழுத்தில் பன்னகமம். வாய்ப் பேச்சில் பன்னாமம். இதெல்லாம் தோட்டம் சீரழிஞ்சது போல இப்பெயரும் சீரழிஞ்ச கதையேதான்.

சோரம் போகாத கவிஞன் ஒருவன் தன்பெயரோடு பன்னாமத்தை இணைத்துக் கொண்டு இமயமாய் உயர்ந்து. இலக்கியத்திற்கு அணியாக நின்றான்.

"மாத்தளை" 'மாத்தளே; மாத்தலை" என்றெல்லாம் இப்படி எத்தனையோ கதைகள்! இராஜ்ய மணிமுடித்தரிக்கப் புறப்பட்டவர்கள் முதல்; புகலிடம் தேடி ஓடோடி வந்தவர்கள்; வாரிசுரிமை கோரிய வல்லமையாளர்கள் வரை.

"ஏன் என்று கேட்க இங்கு நாங்கள் யார்? உழைப்பதற்கும், இறப்பதற்குமே பிறந்தோம் என்று தம் இறுதி மூச்சுவரை உழைத்துத் தியாகிகளான நம் முன்னோர்கள் வரை; சிந்திய இரத்தம், பன்னகம வரலாற்றின் வரிகளை நனைத்துள்ளது."

குருதி தோய்ந்த இந்த செப்பேடு அட்சரங்களின் ஈரம் உலராமல் இருக்க; மலைகளில் உழைக்கும் நம் மக்களின் போராட்டங்கள் ஊற்றுக்கண்களாக விளங்குகின்றன.

தன் உடலெங்கும் தோட்டங்களை போர்த்திக் கொண்டுள்ள மாத்தளை குன்றுகள்; வரம் வேண்டி ஸ்வரமற்று தவமியற்றும் முனிபுங்கவர்களைப் போல; மேக மூட்டத்தினுள் தலை புதைந்திருக்க பச்சை கம்பளமென படர்ந்த தோட்டங்களில் ; புலரிக் கலைத்து பனி முத்துகள் பன்னீர் சொரிகின்றன.

இந்த தோட்டங்களை தம் சிரசிலும் மார்பிலும் குவித்துக் கொண்டுள்ள; குன்றுகளின் பாத சுவடுகளை சுற்றி வந்து அணைத்துச் செல்கின்றது வடக்கே செல்லும் 'ஏ நயின்' பிரதான வீதி

ராஜ பாட்டையென வடக்கு நோக்கிச் செல்லும் இந்த பிரதான வீதியில்; ஒரு கூப்பிடு தூரம் மட்டில் சென்று, எதிர்படும் முதலாவது முச்சந்தியில் கிழக்காக பிரியும் தார்ப்பாதையில் சுமார் ஏழெட்டு கல் தொலைவு பயணித்தால்; ஒரு தோட்டத்து குட்டி ராஜ்யமெனத் திகழும் இரத்தோட்டை நகரை அடையலாம்.

மாத்தளைக்கும் இரத்தோட்டைக்கும் நடுவில் 'சுதுகங்கை'! என்ற பெயரில் வெள்ளையற்று மங்கலாக ஓடும் ஆறு, தேர்தல் காலத்தில் மலையக தொழிற்சங்க அரசியல் பிம்பங்கள் ஏற்படுத்தும் சந்தர்ப்பவாத கூட்டு போல அவசர அவசரமாக தெளிவின்றி ஓடிக் கொண்டிருக்கின்றது.

அவ்வப் போது ஆட்களை விழுங்கி விடும் இதில் பயங்கர சுழிகளுக்கும் குறைவே இல்லை. பயங்கரமான ஆறுதான். ஆற்றுக்கு குறுக்கே; வெள்ளையரின் காலனித்துவ ஆட்சிக்கு சாட்சியாக படுத்துக் கிடக்கும் கரிய இரும்புப் பாலம்.

"தலை விதியே என்று நொந்து போய்க் கிடக்கும் பாலத்தின் மறு கோடியில்: ஏழு முகமாக காட்சி தந்து அருள் பாலித்துக் காக்கும் அன்னை" யாது மாகிய காளி' யின் ஆலயம்.

காளிம்மன் கனவில் தோன்றி, காட்டிய குறிப்பிற்கமைய, சிவ கெங்கைச் சீமையிலிருந்து பிடிமண்ணை எடுத்து வந்து, பெரியோர் சுதுகங்கைக் கரையில் தோட்டம் போட்ட காலத்தில் அமைத்த ஆலயம் இதுவாகும்.

சுதுகங்கையில் குளித்து மூழ்கி ஈர உடுப்போடு சூடம் கொளுத்தி; ஒரு சதம் காசு வெட்டி காட்டினால் போதும்; காளி குறை கேட்டு அருள்பாலிப்பாள். குரோதம் கொண்டு கொடுமையினையோ, களவினையோ செய்தோரை ஏழு நாட்களுக்குள் காட்டிக் கொடுத்து தண்டனை அளிப்பாள். அன்று முதல் இன்று வரை அசையாத நம்பிக்கை இது!

நகரங்களில் நாட்டரசன் கோட்டையரின் திருப்பணிக்கு சான்றாக கதிர்வேலாயுதன். இங்கு, காளியின் மரலடியில் தென்னம் பாளையில்: பூவின்றி "வீ யாக: காயாக தேங்காயினை பரிணமிக்கும் அபூர்வம். தளரா வளர்" தென்னை காணி அம்மனின் காலடியில் வளர்ந்து அற்புதம் விளைவிக்கின்றது.

பூஞ்சிட்டுவின் வண்ணச் சிறகில் தீட்டிய சித்திரம் போல் சிறகடிக்கும் இரத்தோட்டை நகர் குளு.... குளு...... சுகமுடையது. ஊட்டி, கொடைக்கானல், சுகவாசம்; இங்கு நித்தியமானது நகரைச் சுற்றிய மலைத் தொடர்களில் அம்மனும், முருகனும் அரிஇராமரும் கோயில் கொண்டு அருளாசி புரிகின்றனர்:

சாதிக்காய் ஏலம், கராம்பு, மிளகு, கறுவா ஆகிய மோகினிகள் இரத்தோட்டை மலைச் சரிவுகளில் பர்ணசாலை அமைத்து; அராபியர், போர்த்துக்கேயர் ஆகியோரை "சுண்டி இழுத்த" பழம் பெருமை முதலாக ஐரோப்பியரின் இனிய மாலைப் பொழுதுக்கு சுகந்த மூட்டும் இலங்கைத் தேயிலையினதும் தாய் மடியாக விளங்குகின்றது.

மன்னர்களது ஆட்சிக் காலத்தில் மலையிடுக்கில் ஒற்றர்கள் இரகசியத்தைப் பரிமாறிக் கொள்ளும் இடமாகிய விளங்கிய இரத்தோட்டை; இன்றளவும் முக்கியம் பெறும்: இருப்பின் இரகசியமும் இதுவேதான்.

வாசனைத் திரவியங்கள் கடைவிரித்து: மணம் வீசி வருக! வருக!! என மலை இடுக்குளில் கட்டும் பனிப் பதாதைகளை, தேயிலைத் தளிர்களைத் தழுவி இதம் இதமாக வீசும் சீதளக்காற்று; அசைந்து; அசைத்து அழைப்பு விடுகின்றது.

வாசனைப் பயிர்க்களும்; நறும் தேயிலையும் இப்படி ஜெமினியின் இரட்டைக் குழந்தைகளாக, சங்கூதிக்களிக்கும் சங்கொலியில் வெண்முகில்கள் மலைகளுக்கிடையில் கண்ணாமூச்சி விளையாடிக் களிக்கின்றன. வெண்முகில்கள் தூளி கட்டி ஆடும் சீரங்கவத்தை தோட்டத்திற்கு கிழக்கே; புசல்லாவை சந்திக்கும்; செட்டி தோட்டத்திற்கும் இடையில் கராம்புத் தைலமென ஒழுகி ஓடும் ஓடைக்குப் பக்கமாக; ஐந்து ஏக்கர் நிலத்தை வாங்கி தன் குடும்பத்தோடு குடியேறினார் இருளாண்டி சேர்வை

ஐம்பத்தி எட்டில் கலேவெலையில் தமிழர் வீடுகள் பலவும் தீயிடப்பட்டன. கோயில் தலைவர் ஏகாம்பரம் தலைமையில் பலரும் அகதிகளாகி உயிர் தப்ப காடுகளில் தஞ்சம் புகுந்தனர்.

ஐம்பத்தி எட்டில் நாலந்தையில் நடந்த இனப்படுகொலையில் குற்றுயிரும்: குலை உயிருமாக தப்பிப் பிழைத்த இருளாண்டி சேர்வை எடுத்த முடிவுதான இது. ஊட்டி கொடைக்கானலின் சுகானுபவத்தை காலடியில் கொட்டும். இத் தோட்ட பிரதேசத்தின் சுகானுபவத்தை, பொருளாதார வளத்தையும் பெரிசு படுத்தாமல் பிள்ளை குட்டிகளின் பாதுகாப்பு என்ற அட்சரத்தையே அடிநாதமாகக் கொண்டுதான் பிரதான வீதியில் இருந்து ஒதுக்குப் புறமான இந்த பகுதியில் வந்து குடியேறினார் சேர்வை.

ஐம்பத்தி எட்டில் இந்திய தமிழருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட விசமப் பிரசாரங்கள்; கட்டவிழ்ந்து விடப்பட்ட காட்டு மிராண்டித்தனமான தாக்குதல்கள்; நாலந்த பகுதியில் "கெடிகேயை" அண்டி வாழ்ந்த தமிழ் குடிகளை நிலை கலங்கச் செய்து விட்டன.

ஸ்ரீ கொளப்பம் ஸ்ரீ கொளப்பம் காட்டுத் தீப்போல் பரவும் கலவரம். விவரம் புரியாத தமிழர்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்ள காடுகளின் தஞ்ச மடைகின்றனர்.

ஐம்பத்தி எட்டு இனவாதத் தீயில்: இருளாண்டியின் குடும்பம் காய்ந்த சருகாகச் சிக்கிக் கொண்டது.

"கள்ளத் தோணிகள்" என்ற நாமாவளிப் பிரகடனத்துடன்; தமிழ் எழுத்துகளில் தார்பூசல், என்று ஆரம்பித்த இன வன் செயல்கள்; ஹிங்குரன்கொட, தியேசேனபுர மெதிரிகிரிய பகுதிகளில் தமிழர் கொடுமைக்குள்ளாகி; மாத்தளை வைத்திய சாலையிலும் அம்மன் கோயிலிலும் சேர்க்கப்பட்டனர். நாலாந்த நோக்கியும் அதன் தீ நாக்கும் கரங்களும் நீண்டன.

மெதிரிகிரிய பிள்ளையார் சந்தியில்; சொர்க்கம், கைலாசம் என்பன திறக்கப்பட்டன. தமிழ்ப் பெண்கள் மணக்கோலம் அழிந்து பிணக் கோலம் பூண்டனர்.

நாலந்த பகுதி தமிழ் வீடுகள் தீக்குளிக்கும் போது; அங்கு மானப்பாங்கப்படுத்தப்பட்ட தமிழ் மக்கள் அடி, வெட்டுக் காயங்களுடன்; காட்டு வழியே கருங்காலி தோட்டத்து எல்லையை இரவோடிரவாக வந்தடைந்தனர்.

"சிங்களம் மட்டும் திரையரங்குகளில்:" நவீன 'லங்காதகனம்' வெற்றிக் கொடி நாடி ஓடிக் கொண்டிருக்க: இதன் உச்சக் கட்டத்தில் மாத்தளை நகரில் தமிழ் எழுத்துக்களுக்கு ஒரு கோஷ்டி தார் பூசி களிக்கின்றது.

கச்சேரி ரோட்டில் 'கள்ளத்தோணி பைலா'

சாராய வாடையில் எக்காளிக்கின்றது.

'செட்டி வீதி லத்திப் நானா' எட்டி விட்ட உதை: தார் வாளியையும் கொட்டி, உருட்டி தார் பூச ஏணியில் ஏறியவனை இடுப்பொடியச் செய்த லாவண்யத்தை: நேரில் கண்ட அன்னலிங்கம்சுருட்டுக்கடை கதிரவேல்பிள்ளை முதளாளி வாயாரச் சொல்லி சொல்லி மகிழும் மாண்புமிக்கது.

ஓடப்பராகி நிற்கும் ஏழையப்பர் உதையப்பாராகிவிட்டால்?

"ஐம்பத்தி எட்டாம் ஆண்டில் நாடெங்கிலும் குழப்பம், ஊர்கள் எல்லாம் தீ, ஆனால், மாத்தளையில் பூரண அமைதி. என்று எழுதிய இந்த கைக்கூலி வரலாற்று திரிபு எழுத்தைக் காணாமலேயே கதிரவேல்பிள்ளை கண்ணை மூடிவிட்டார்.

மலையகத்தை நேசித்த அந்த மாமனிதனின் இதை படித்திருந்தால் எப்படியெல்லாம் வேதனைப்பட்டிருப்பார்.

காடையர்களின் வெறியாட்டத்தில் கதி கலங்கி; காட்டுப்பாதை வழியே; தோட்டத்து வயத்திற்கு தஞ்சம் புக வந்த நாலந்த வாசிகளை வெள்ளிப்பூன், பதித்த கருங்காலி சிலம்புத் தடி, அம்மன் கோயில் வெட்டரி வாள்கள் ,கோவா குண்டும் கருமருந்தும் போட்டு இடித்து........... இடித்து............ நிரப்பிய "மசிலோடிங்கன்" சகிதம்; பெண்டு பிள்ளைகளை ஒதுக்குப் புறமாக ஒளிய வைத்துவிட்டு "தோட்டத்திற்கு வந்தா ஒரு கை பார்ப்போம் என்று "எட்டு வீடு கட்டி சிலரவரிசை" செய்து சிலம்பமாடி தற்காத்து நிற்கும் தோட்டத்து ஆண்கள், இவர்களை இன்னார் இவரென அடையாளம் தெரிந்து கொள்ளாமல்; எதிர்த்து தாக்குதல் செய்ய தயாரான போது பசித்து பால் கேட்டு அழும் குழந்தைகளின் வாயில் ஈரத்துணியை வைத்து அடைத்தும்; காட்டு வழியில் முட்கள், துகிலுரிந்து ஏற்படுத்திய ரணங்களுடன்; அரவமின்றி அகதிகள் அடிமேல் அடிவைத்து முன்னேற.......

சாவதற்கும் துணிந்து சக்கர வியூகம் வகுத்து லயத்து கோடியில் அணிவகுத்து நிறபவர்களின் நிசப்தத்தை கலைக்கும் வகையில்; சருகுகள் சலசலக்கின்றன.............

லயத்தை தாக்க ஒரு கும்பல் வருகின்றதா......? ஒரு பாவமுமறியாத எம்மை ஏன் இப்படி கொல்ல வருகின்றார்கள்?

தாமதித்தால் ...................

ஒரு கணம் தான் கோவா குண்டுகளும் கரு மருந்தும் போட்டு நிரப்பிய துப்பாக்கி அக்கினியைக் கக்கிக் கொண்டு.......... விசைக் குதிரையை ஏற்றி டக்.....க்...... இனி தட்டி விட வேண்டியதுதான் பாக்கி விரலை நிமிர்த்த.......... "தொப்புலான் சுட்டுறாத.......... சுட்டுப்புடாத......... நான் இருளாண்டி......... வேலு ஐயாமத்த குடும்பங்களோட தப்பி பிழைச்சு வாறோம். நாங்க........ நாங்க நாலந்த

ஆளுக'' கரிய இருளில் இருளாண்டி சேர்வையின் குரல் கண்டசாலாவின் குரலாக கரகரத்து இறைஞ்சி ஒலிக்கின்றது.

நல்ல நேரம் அகஸ் மாத்தாக எதுவுமே நடக்கவில்லை. இப்போது நினைத்தாலும் இரளாண்டி சேர்வைக்கு இரத்தம் உறைந்து போகின்றது.

மூன்று நாட்களின் பின்னர் அகதிகளை மாத்தளை முத்துமாரியம்மன் கோயிலுக்கு லொறிகளில் ஏற்றினார்கள்.

இந்த ''ஸ்ரீ கொளபத்துக்கு பின்னர் தோட்ட பகுதிகள்தான் பாதுகாப்பனது என்ற முடிவோடு நாலந்தையை மறந்து; இரத்தோட்டை, புசல்லா பகுதியில் காணி வாங்கி; வீடுகட்டி; குடியேறிய; இருளாண்டி ''சேர்வைக் கதையின்'' முகவுரை இது.

ஐம்பத்தி எட்டில் ஆரம்பமான லங்கா தகன அரங்கில் மேடையேறிய மற்றுமொரு துன்பியல் நாடகம் தான் இந்தியத் தமிழர் தாயகம் திரும்ப வழிவகுத்த தாஷ்கண்ட் ஒப்பந்தம்.

சம்பந்தப்பட்டவர்களின் சம்மதமின்றி இருபக்ககாய் விபரமோ, தகவலோ, தெரிவிக்கப்படாமல் : சகுனியின் தாயம் உருட்டலாக இருபக்க காய் நகர்த்தலில் நடந்தேறிய 'தாஷ் கண்ட் ஒப்பந்தம்' மன்னாரில் கால்நடைகளை விரட்டி ஏற்றுவது போல் தொழிலாளர்களை கப்பலேற்றியது.

தோட்டங்கள் சிறுகறுத்த ஜடாயுவாக சிறுத்தன, சிறுபான்ம இனம் மேலும் சிறுபான்மையாக சிதறியது.

சிதறிய மக்களை 'காணிச் சீர்திருத்தம் என்ற துச்சாதனன்' வேறு துரத்தி ..... துரத்தி துகிலுரிந்தான். இது எழுபத்தி நான்குகளில் இருளாண்டி சேர்வையின் இடுப்புக் கோவணத்தையும் உரிந்தது போல அவருடைய காணித்துண்டும் அரசாங்கத்தால் சுவீகரிக்கப்பட்டது. பக்கத்திலுள்ள தோட்டங்களும் சுவீகரிக்கப்பட்டு; இரவோடிரவாக தோட்டத்து மக்கள் விரட்டியடிக்கப்பட்டு நடுத்தெருவில் விடப்பட்டனர். முடிவில்லாத கதையின் சோக பாத்திரங்களாக தோட்டத்து மக்கள் ஆகினர். இனியும் இங்கு தாக்குப் பிடிக்க முடியாது என்பதை உணர்ந்த இருளாண்டி சேர்வையும் அவரோடு சேர்ந்த பல குடும்பங்களும் வடக்கு நோக்கி புறப்பட்டனர்.

ஒரு கொழுந்தினை கிள்ளி எடுத்து விட்டால், அதில் இன்னுமொரு கொழுந்து தழைக்கத்தானே செய்கின்றது.!

''இந்த மானங் கெட்ட பொளப்பு இனியும் வேண்டாம். வாழ்ந்தால் தன்மானத்துடன் வாழனும்'' நாலந்த தீயினால் சுட்ட புண்ணின் வடு மீண்டும் ஆறாத புரையோடிய புண்ணாக மாறாதிருக்க; பயணம் தொடர்ந்தது.

நம்ம காலத்திற்கு பிறகாவது நம்ம புள்ள குட்டிகளாவது நிம்மதியா வாழணு – சேர்வையின் மனம், திட சங்கற்பம் பூண்டது.

இந்த சபதத்துடன் முல்லைத்தீவில் கள்ளப்பாடு கிராமத்தில் குடியேறினார் இருளாண்டி சேர்வை. வந்தாரை வாழவைக்கும் வன்னி வளநாடு இன உணர்வோடு அரவணைத்து ஏற்றுக் கொண்டது. காலச்சக்கரம் வேகமாக சுழன்றது. சேர்வையின் குடும்பம் பனங்கூடலாக வளர்ச்சி கண்டு மகன்மார், மருமக்கள், பேரன், பேத்தியென இப்போது வியாபித்து, விருட்சித்து நிற்கின்றது.

இருளாண்டி சேர்வையின் மனத்தழும்பு மெல்ல மறைந்து வரும் போது; எவருமே எதிர்பாராத வகையில் எண்பத்தி மூன்று இனக்கலவரம் வெடித்து; இதுவரை வரலாறு காணாத வகையில் தமிழர் மானபங்கப்படுத்தப்பட்டும், கொலை செய்யப்பட்டும்: உயிரோடு எரித்தும்; வெட்டியும்; குத்தியும் அழிக்கப்பட்டனர்.

உடைமைகள் எரியூட்டப்பட்டன. கோயில்களும் தெய்வங்களும் கூட தீயிட்டு கொளுத்தப்பட்டன. இலட்சோப, இலட்ச தமிழ் மக்கள் அகதிகளாக அல்லல் பட்டு: வட கிழக்கு; வன்னி உட்பட; கடல் கடந்து சர்வதேசமெங்கும் தஞ்சம் புகுந்தனர். "இங்கிது பொறுப்பதற்கில்லை. எரிதழல் கொண்டு வா" – என்று அட்டூழியங்களை அடக்க, இளம் இரத்தங்கள் பூவுடன் பிஞ்சுடன் புறப்பட்டன. அணி புதிய புறநானூறு படைத்து நின்றது. ஓட; ஒளிய இடமில்லை. இருளாண்டி சேர்வையின் பேரன் படிப்பை முடிக்கவில்லை. அந்த பிஞ்சு கதையைக் கேட்ட சேர்வை சோகம் கொள்ளவில்லை. தன் பரம்பரைப் பெருமையை நினைத்து நினைத்து பூரித்து போனார்.

குருஷேத்திர போர்க்களமாக; படுகளத் திருவிழாவாக காலவரையின்றி தொடர்ந்து. அவலங்களாகவே விடியும் காலைப் பொழுதுகள்.........

டிசம்பர் மாத இறுதித் தினங்கள்..... பாலன் யேசு பிறந்த நத்தார் தினக் கொண்டாட்டங்களை நாளெல்லாம் கொண்டாடி மகிழ்ந்து பொழுது மறைய..... நாளை நல்ல விடியலுக்காக நம்பிக்கையோடு காத்திருக்கும் காலை வேளை... வழமை போல் கதிரவனும் எழுந்து வர........; கணப் பொழுதில் நிகழ்ந்த மாயம்தான் என்னே.... புரியாத பொழுது காலம் காலமாக காப்பாற்றி வந்த கடல், நொடிப் பொழுதில் சீற்றம் கொண்டு அல்லலுற்று ஆற்றாது அகதிகளாக வாடிச் சோர்ந்த மக்களை அலைகளை வீசி தகர்த்தது!

அழிப் பேரலையின் அலைகள் ஊர் மனைகளில் புகுந்து உயிர்களை காவு கொண்டது! நூற்றாண்டு பழைமைமிக்க நுட்ப மிகு கட்டிடங்கள் நொடிப் பொழுதில் சரிய....... இராட்சத அலைகள் மக்களை ஓட ஓட துரத்தி; உயிர்களை குடித்துக் கொண்டிருந்தது.

கள்ளப்பாடு கிராமத்தின் பெரும்பாலானோர் பக்கத்திலுள்ள மாதா கோவிலுக்கு காலை பூஜைக்காக சென்றிருந்தனர்.

இருளாண்டி சேர்வை இதற்கு முந்திய வாரம் தனது இளைய மகளுடைய வீட்டிற்கு விருந்தாளியாக மன்னார் போனார். இன்னமும் திரும்பி வீடு வரவில்லை. அவர் மனைவி ஆவத்தா அம்மாவும்: கடைசி மகள் லெட்சுமியுமே வீட்டில் இருந்தனர். லெட்சுமியின் கணவன் சுப்பரமணியம் கடற்றொழிலுக்குப் போய் இன்னமும் திரும்பவில்லை. அடுப்பை மூட்டி, காலை தேநீருக்காக தண்ணீரை சுடவைத்துக் கொண்டிருந்தாள் லெட்சுமி. வெளியே ஒரே அல்லோல கல்லோலம்.

கடல் நீர் காலனாக விரைந்து வந்து கொண்டிருந்தது. வீடுகளை விட்டு மரண ஓலத்துடன் ஓடிக் கொண்டிருக்கும் கிராமத்தவர்கள். "அம்மா கடல் நீர் ஊர் மனைக்குள் வந்திரிச்சி....... வாங்க வாங்க ஓடிடுவோம்." ஆவத்தா அம்மாவை இழுத்துக் கொண்டு மகள் ஓட எங்குமே அபயக் குரல்கள். புரியவில்லை புது அனுபவம்

பேயலைகள் பிணவேட்டை ஆடி துரத்திக் கொண்டு வருகின்றன. உயிர் தப்பிப் பிழைக்க ஓடிக் கொண்டிருக்கும் தாயினதும், சேயினதும் இடுப்பளவு நீர். மறுகணம் மார்பளவு. சுழன்று, சுருட்டி சுருட்டி நீர்மட்டம் உயர.... மூச்செடுக்க முடியவில்லை. தாயும் மகளும் பனை வடலிலை அணைத்துப் பிடித்து கட்டிக் கொண்டு ஜீவ மரணப் போராட்டம் நிகழ்த்துகையில் நாசிவரை தண்ணீர் ஏறுகின்றது.

"அலை சீறி; சீறி அலைக் கழித்து அடித்து; காவிச் செல்ல துருவித் துருவி இழுக்கின்றது. அலைக்கரத்தின் அரக்கப் பிடியில் சிக்கி.... தவித்து......"

"லட்சுமி என்னால் முடியல, கையைவிடப் போறேன்" தாயின் ஈனக்குரல் அவலமாக கேட்கின்றது.

"அம்மா பிடிகை விட்டுறாதீங்க நீங்க விட்டா நானும் விட்டுறுவேன். தண்ணி வடியுது கெட்டியா பிடிச்சிக்கங்க........"

உயிருக்கான போராட்டம் நம்பிக்கையோடு தொடர்கின்றது. நான் கை விட்டுட்டா மகளும் விட்டிடுவா அவ வாழ வேண்டியவ. மூச்சடைத்து, தலை, சுழன்று, நெஞ்சு வலித்த போதும் ஆவத்தா அம்மாவின் மரத்துப்போன கைகள் பிடியை விடவில்லை.

வடலிலை பிணைத்தது கையா? பாசமென்னும் சங்கிலித்தொடரா....?

"மக நான் புடியை விட மாட்டேன்" நீர்ச்சுழியில் தவழும் குரல்.

"அம்மா விடாதீங்க. நீர்க்குமிழை ஊடறுக்கும் மொழி"

பிடியைவிடாத " ஈனஸ்வரத்தில் குரல் வளை விரிந்து சுருங்கின்றது.

சில மணி நேர வெறியாட்டத்தின் பின்னர் பேரலை பின்வாங்கி ஓடி விட....!

விடியற் பொழுதில் கள்ளப்பாடு, கடற்பரப்பில் கலங்கள் வந்து பொருட்களை குவிக்கும் வேளையில்; பிண மலை குவிந்துள்ளது.

எங்கும் அவலக் குரல்கள்......

ஆழிப் பேரலை, பேயலையாக பிணம்குவித்த அவலம்.....

கடல் காவு கொண்ட ஊரில் எஞ்சித் தப்பியோர் உடன்பிறப்புகளையும் சொந்தங்களையும் ஊராரையும் இழந்து கதறி கதறி அழும் கண்ணீர்க் கதை. தேற்றுவாரின்றி தேம்பி அழுவோர் அஞ்சி நின்று திகைக்க............ ;

கள்ளப்பாடு முதலான ஊர்களை காவு கொண்ட கடல் பின்வாங்கி ஓடிவிட்டது. அங்காங்கே தப்பிப் பிழைத்தவர்கள் செய்வதறியாது வீழ்ந்து கிடக்க........

மகள் இலட்சுமிக்காக தாய் ஆவத்தா அம்மாளும் : தாயிற்காக மகள் இலட்சுமியும்: ஓட; ஓட; பல காத தூரம் மணல் வெளியில் துரத்தி; துரத்தி; சீறிப் பாய்ந்த இராட்சத அலையுடன் போராடி இறுதி வரை வடலியை பிடித்த கைகளை விட்டு விடாமல்; நம்பிக்கையோடு மணவில் சாய்ந்து கிடக்கின்றனர்.

**தினக்குரல் (2005-09-25)**



# இராமு தீபாவளிக்கு தனது தோட்டத்திற்கு வருகின்றான்

**வி**டிந்து வெகு நேரமாகியும், அசதியினால் படுக்கையிலேயே சுருண்டு கிடந்தான் இராமு. இரவு நடுச்சாமத்திற்குப் பின்னரும், நீண்ட நேரமாகக் கண்விழித்து சீமேந்துப் பைகளை வெட்டி "பேக்" ஒட்டினான். தீபாவளி சீசன். நாலைந்து கடைகளின் படிவாசல் ஏறி இறங்கினாலே போதும்! பேக்குகளைக் கரையேற்றி விடலாம். பேக்குகளில் கிடைக்கும் பணம் றூம் ரெண்டிற்குச் சரி.

"பஜாரில்" போதிய அறிமுகம் உள்ளது. என்றாலும் "பேர்ச்சஸ்சிற்கு முந்திக் கொள்" என்பதற்கொப்ப, முந்திக் கொண்டு கடை கடையாகப் போட்டாக வேண்டும். வீட்டுக்கு வீடு வாசற்படி உண்டோ இல்லையோ எல்லா சிறிய வீடுகளிலும் பேக் ஒட்டப்படுகிறது. வாசற்படி இருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன? வயிற்றைக் கழுவ ஏதோ வருமானம் கிடைக்கின்றதே! இதில் வேறு எங்கும் ஏகமாய் வியாபித்து இருக்கும் பொலிதீன் அசுரனின் போட்டி வேறு.

பகல் பிடவைக் கடை வேலை முடிந்து; றூமிற்குத் திரும்பி வரும் போதே இரவு மணி ஒன்பதைத் தாண்டி விட்டது. பகலெல்லாம் கால்கள் கடுக்க, நின்ற நிலையிலேயே வேலை. தூக்க கலக்கம்........... மயக்கம் போல தலை சுற்றுகின்றது. கண்கள் எரிகின்றன, ஒட்டிய பேக்குகள் காய்ந்தும் காயாத நிலையில் இன்னமும் எண்ணி அடுக்கிக் கட்டப்படாத நிலையில் றூம் எங்கும் பரவிக் கிடக்கின்றன.

இன்று ஞாயிற்றுக்கிழமை. ஒய்வுதான்.......ம்..... ஒய்வு... களைப்பு தூக்கம்.... தூக்கம் ..... களைப்பு என்று சுகத்தைப் பெரிதாக நினைத்துக் கொள்ள முடியுமா?

“பொழுது போகின்றதே, இன்றைய ஒரு பொழுதுதானே இடையில்! இன்னும் எத்தனையோ வேலைகள் பாக்கி. மீதியுள்ள சகலத்தையும் செஞ்சிறனுமே” என்ற கரிசனையும், “அப்பாடா ஒரு வருஷத்திற்குப் பிறகு தோட்டத்து மண்ணை மிதிக்கப் போகிறேன்” என்ற உள்ளக் கிளுகிளுப்பும் மேலிட “முருகா.... முருகா” என்று உச்சரித்துப் பிரார்த்தித்ப் படியே நெட்டி முறித்துப் படுக்கையை விட்டு எழுந்த போது, கீழே மேடும் பள்ளமுமான தரையில் அடுக்கிய “பக்கீஸ்” பெட்டிப் படுக்கை, கட..... கட...... சட...... சடவென ஆவர்த்தனம் செய்து கொள்கின்றது.

“பக்கீஸ்” பெட்டிப் பலகைகளுக்குப் மேலே அடுக்கிய “காட் போட்” பெட்டி அட்டைகளின் மீது விரித்துப் படுத்திருந்த சாரத்தை உதறிக் கொடிக் கயிற்றில் எறிந்து விட்டு; குத்துக் கால்களை மடித்து, குந்தி முழுந்தாள்களில் நாடியைப் புதைத்து அழுத்தி; முன்னும் பின்னுமாகத் தலையை ஆட்டியவாறு மீண்டும் இராமு எண்ணங்களில் மூழ்கி..........

காலை வெயில்; தலைநகரின் வானுயர்ந்த மாளிகைகளுக்குத் திருஷ்டி பரிகாரமாக அமைந்துள்ள இந்தச் சேரிக்குடி சைகளின் அசூசையைக் கண்டு ஒதுங்காமல்; எதுவித வசதியுமே இல்லையே என ஒதுங்கிவிடாது; தேர்தல் காலத்து அரசியல் வாதியைப் போல் பல்லிளித்து பாச நேசத்துடன் உள்ளே ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சிக் கொண்டிருந்தது.

பழைய பக்கப் பலகைகள், கழித்து ஒதுக்கிய ‘ஹாட் போட்’ துண்டுகள் என்பன தடுப்புச் சுவர்களாகவும், தார்ப்பீப் பாய்களினதும், துருப்பிடித்த தகரடப்பாக்களினதும், வெட்டுத் தகரங்களினதும் கூட்டுத் தயாரிப்பில் உருவான அந்தக் காம்பிராவின் கூரையில் செங்குத்தாக விழும் காலைக் கதிர்கள் தரையில் “டூரிங் சினிமா” சிலைடுகளைப் போட்டுக் கொண்டிருந்தன.

காலை வெயில் சூடேற... சூடேற.. இந்த “நவகம்புர” பகுதிகளில் சுகாதாரத்திற்கு, இலக்கணம் வகுத்து; மூச்செடுக்க முடியாத அதன் மேதாவிலாசத்திற்கும், மகிமைக்கும் ரிஷி மூலமாய் அமைந்து, அதன் பெருமைகளையும் சிறப்புகளையும் சதா எடுத்தியம்பிக் கொண்டு, விட்டனோ பார்..... என்று ஒட்டுறவாடி பக்கத்திலுள்ள “கிராண்பாஸ்” பகுதி தோட்டங்களையும் அரவணைத்துக் கொண்டு ஓடும் சாக்கடைக் கால்வாய்; ஆழுகிய கழிவுப் பொருள்களையும், பலரக எண்ணெய் கழிவுகளையும் நிரந்தரமாகவே தன் செறிக்காத மலைப் பாம்பு வயிற்றில் பதுக்கி அடக்கிக் கொண்டு; சலனமற்று......... ஊறு கொட பகுதியின் ஊத்தை குப்பை கூளங்களையும்; முன்வயிற்றுப் பகுதிக்குள் கபளிகரம் செய்துள்ள “கொசுக்களின் தாயகம் இது தான்” என்று கட்டியம் கூறி நிற்கும் அப்பகுதியின் இளங்காலைப் பொழுதில்........

ஒரு கணம் ......

அழுகிய பூண்டுகளினதும்; சல்வீனியாவினதும் கலப்புவாடை கலந்த சேற்றின் மணம் வயிற்றைக் குமட்டும் படியாக வீச......................

அது மாறிவிட; பாதாள சாக்கடையைத் திறந்து விட்டது போல கலந்த சேற்றின் அழுக்குகளின் நெடி மூக்கைத் துளைக்க.... பின்...... காற்று இழையோடி மெதுவாக வீச, கரும்புகை, தூசு என்பன நிரவி வர.... அழுக்கு நீரின் மணம் மெல்லத் தவழ்ந்து உறவாடி வர......

தலையைச் சுற்றி கண்கள் இருண்டு மயக்கமடையச் செய்யும் காற்றுடன் நிரந்தரமாகச் சங்கமமாகிப் பவனி வரும் கந்தக வாடை பரிணமிக்க. ..........

இயற்கையையே மாற்றிவிட்ட அசாதாரணச் சூழல் ......... இவையொன்றுமே இரமுவின் சிந்தனையைத் தடைப் படுத்த வில்லை! அவன் பிரச்சினைகளில் அவன் மூழ்கி!

கொழும்பிற்கு வந்து இந்தப் பகுதியில் வாழத் தலைப்பட்ட போது இவைகளினால் இவன் பட்ட துன்பங்கள்; வேதனைகள்... அப்படா...

உடம்பு இங்கிருந்தாலும் நினைவுகளில் தோட்டத்துக் காற்றை உள்வாங்கிக் கொள்வான். இப்போது எல்லாம் பழக்கப்பட்டாகி விட்டது. நல்லது கெட்டது என்பதெல்லாம் பழக்க தோஷம் தானே! “றூம்...... றூம்” என்று தேடியலைந்து இது கிடைத்த போது, சூழல் இவனை விரட்டி ஒடச் செய்தது. தோட்டம் சொர்க்கமாக அழைத்தது. வாழ்க்கை யென்பது அழகு மட்டுமா? எத்தனை அசிங்கங்கள் என்றாலும்........... அதன் பின்னே பணம் பசையாக ஒட்டிக் கொண்டு வாழ்க்கையை நிர்ணயிக்கும் போது ஓடிவிட முடியுமா? தினம் தினம் “சனம்” அகதிகளாக வந்து குவியும் நேரத்தில் இந்தப் பகுதியில் இந்த ‘றூம்’ கிடைத்ததே பெரும் பாக்கியம்! இதனைக் கைப்பற்றியதே சாதனை தான். உழைப்பிற்கேற்ற ஊதியம் இல்லை. அடிப்படைத் தேவைகளைக் கூட நிறைவேற்றிக் கொள்ள முடியாத சம்பளம், எப்படி வசதியான வாடகை வீடு எடுப்பது? நினைத்தும் பார்க்கக் கூடாது.

சதா இரைச்சலும் ஆரவாரமும் பரபரப்புமிக்க இந்தக் சூழல் அவனை வாட்டி எடுக்க...........

மெல்ல............ மெல்ல................. பூப்பூவாக முகில்களைக் கடைந்து மலைப்பனிகளை நுகர்ந்து தேயிலை மலைகளில் தவழ்ந்து...... இளந்தளிர்களைக் கோதி, ‘சவுக்கு’ மரக்கிளைகளில் ஊஞ்சல் கட்டி ஆடி ‘கொன்னைக்’ கவனைகளில் ‘சீசோ’ ஆடி, சதா இற்றுப்போன அந்த லயத்துத் தகரங்களோடு இரகசியம் பேசிக் “கிச்சு கிச்சு” மூட்டும் பொல்லாத ஆடிக் காற்று.

தேயிலை பக்டரிக்குப் பக்கத்தில் போகும் போதே வரும் வாட்டம் போட்ட கொழுந்தின் வாடை........ தேயிலை பக்டரிக்குப் பக்கத்தில் போகாமல் வெளியே

சுற்றி வந்தாலே அடுப்பிலிருந்து அரைத்த தேயிலைக் காய்ச்சும் போது; காற்றாடிக் கொண்டு வரும் இளம் சூடான பச்சையும் வறுவலும் கலந்த நறுமணம்.............

"மண்ணைக் கொத்தி, புரட்டி பாத்தி பிடித்து தவறணையில் கன்றுகளை நாட்டி, பூவாளியில் தலை சீவி விடுவது போல தண்ணீர் ஊற்றும் போது மண் கரைய, கரையும் மண்ணைக் காலில் சரி செய்தபடியே........ தேயிலைக் கன்றுகளை நனைய விடும்போது" எட்டி நின்றாலே வந்து சூழும் மண்ணின் வாசனை

மண்வாசனையோடு பக்கத்துக் காணியிலிருந்து சிலிர்த்தோடும் நீரின் குளிர்மையும் சேர்த்து...... இளமையை ஊஞ்சலாட்ட இதம் இதமான.... சுகம்..........

அவன் மசியவில்லை.

தோட்டத்தில் வேலைக்கப்பட்ட கஷ்டங்கள்.....; இருண்ட நாட்களாகக் கழிந்த கடைசிக் காலப்பகுதி.........; ஏமாற்றங்கள்......... புரட்டுக்கள் ....... அம்மம்மா எத்தனைத் துயரம்! இப்போது தான் முகம் கொடுக்க வேண்டிய பிரச்சினைகள், சவால்கள்..... அவன் மனதில் வைத்த வைராக்கியத்தின் முன்னே, இந்தக் கிளுகிளுப்புகள் சுகங்கள் அத்தனையும் எடுபடாமல் ஓடி ஓடி.... தூரவே ஓடி ஒதுங்கி மறைந்தும் போய் விட்டன.

வேலை..... தேவை..... ஒரு வேலை அது கிடைத்து விட்டது ஊதியம்.....? ......... பணம் ......... பணம் ஒன்று தான் அவன் முன்னே பூதாகாரமாக நிற்கும் பிரச்சினைகளுக்கான ஒரே சஞ்சீவி.

தீர்ந்தும் தீராததுமாகத் தன் முன்னே..... தான் முகம் கொடுக்க வேண்டிய பிரச்சனைகள்; தனது குடும்பம் எதிர் நோக்கியுள்ள பயங்கரமான சவால்கள் எப்படித் தீரும் என்று தெரியாது........

"மீதித் தோட்டமும்" கொலனியாகப் போகின்றது. இனிப் பேச்சு வார்த்தையில் பலனில்லை.... "போராட்டம் ஒன்னுதான் வழி வெட்டு, கொத்து" என்ற ஆக்ஞைகளுக்கு அடி பணிந்து, அதனைத் தாரக மந்திரமாக ஏற்று, உணர்வோடு போராடி, கண்டி வைத்தியசாலையிலும் பின்னர் ரஜ வீதி ரிமாண்டிலுமாக இருக்கும் தோட்டத்தைச் சேர்ந்த பத்துப் பேரில் "நாலாவது எதிரியாக குற்றப் பத்திரிகை கொடுக்கப்பட்டு" பிணையின்றிக் கடந்த இரண்டு வருடமாகத் தண்டனையை எதிர்பார்த்தபடி இருக்கும் அப்பா முத்துசாமி.

கால மெல்லாம் தோட்டத்திற்காகவே உழைத்து விட்டு, முதுமையில் ஏதுவிதக் கொடுப்பனவுகளுமே இன்றி, பாரிசவாதத்தில் வீட்டில் படுத்த படுக்கையிலேயே கிடக்கும் தாத்தா சிவனாண்டி.

உழைப்பு ஒன்றைத் தவிர, வேறொன்றையுமே அறியாத அவன் அம்மா "எட்டுக்காம்பிரா லயத்து,தொங்க வீட்டு அலமேலு."

சுப்ரீம் கோட்டிலிருக்கும் அப்பாவின் வழக்கைப் பேசுவதா தன்னுடைய உயர்கல்வியைத் தொடருவதா? என்ற போராட்டத்தின் இறுதியில் படிப்பிற்கு முற்று புள்ளி வைத்துவிட்டு தையல் வேலை தேடிக் கொண்டிருக்கும் மூத்த சகோதரி பத்மா.

குடும்பத்தில் ஒருத்தரேனும் படித்து 'டீச்சர்' ஆகிவிட வேண்டுமென்ற இராமுவின் கனவை நனவாக்க, 'இமிடேஷன்' கம்மலோடு விடாப்பிடியாக, பக்கத்து நகரிலுள்ள கல்லூரிக்குச் செல்லும் இளையவள் ஜெயா.

தோட்டத்திலும் வேலை இல்லை, இனியும், ஊர்பகுதியில் வேலை கிடைக்காது, அண்ணன் ஒரு ஆள் உழைத்தால் போதாதென்று நாலாம் குறுக்குத் தெருவிற்கு மூடை சுமக்க வந்து விட்ட தம்பி இராசு.

"பாடசாலை வேண்டும்" "ஆசிரியர் வேண்டும்" என்றெல்லாம் நடத்திய போராட்டங்கள்; "கோட்டை கட்டிய மலையகக் கனவுகள்" எல்லாமே, இப்போது தூரத்து உறவுகளாக விளங்க.....

கொழும்பு அவனது உறவாகிவிட்டது.

முதலில் தீபாவளித் திருநாளைக்குத் தோட்டத்திற்குப் போகாமல், பணத்தை மட்டு அனுப்பி வைப்பது என்றுதான் தம்பியும் இராமுவும் கூட்டாக முடிவு செய்தார்கள். பின்னர், அவரது அம்மா சொல்லச் சொல்ல பத்மா எழுதிய நேர்முக வர்ணணையான கடிதம் அவனது முடிவை மாற்றும்படி ஆக்கிவிட்டது!

"வீட்டிலேயும் அப்பா இல்லாத நேரத்தில் தாத்தா இன்றைக்கோ நாளைக்கோ, கண்மூட முந்தி 'மகனைப் பார்க்கணும், பேரன்களை பார்க்கோனும் வாய்புலம்பியபடி.........." தாத்தா மேட்டு லயத்திலிருந்து வரும் போதே "விசுக்கோத்துப்" பொட்டலத்தோடு வந்து "பேராண்டி" என்று எத்தனைப் பாசத்தோடு நீட்டுவார்! முறுக்கி விடப்பட்ட மீசை; காதுல சிவப்புக்கல் கடுக்கண்கள்.

சிவானான்டி என்றால் அந்த தோட்டத்தில் மட்டுமல்ல, அந்தத் தோட்டப்பகுதியே பெருமையாகப் பேசும், தோட்டத்தில் "அருச்சுனன் தபசு" நடக்கும். இராமுவுக்கு அப்போது விபரம் தெரியும், இராசு கைக் குழந்தை. சிவனாண்டித்தான் "அருச்சுனன்" வேஷம் கட்டுவார். அருச்சுனன் என்றால் அரச்சுனன்தான். அப்பாடா........ தோட்டமே வியந்து பேசும் "பாசுபதம்" பெற அருச்சுணன் செல்லும் போது, "மோகினிப் பெண்" வந்து தடுப்பாள். அப்போது சிவனாண்டி பாடியாடுவார். "அடியே மோகினி பெண்ணே, நான் ஈசனை நோக்கி, இமயம் வரை செல்கின்றேன்."

“பரமனை நோக்கிப் பாசுபதம் வாங்கப் போகின்றேன். என்பாதையில் குறுக்கிடாதே!” வசனம் பேசும் போது சிவனாண்டியின் அழகில்......; எடுப்பில் மயங்காத தோட்டத்துப் பெண்களே இல்லை. சிவனாண்டியின் எடுப்பான நடை ...... துள்ளல்........ வில்லெடுத்துப் பன்றியுடன் சண்டை செய்ய........ ஒரு தடவை உயிரான பன்றியே இடையில் ஓடிவர..... தோட்டத்து பக்தி பரவசத்தின் உச்ச நிலை........ இப்போதும் கிழடுகள் பெருமையுடன் நினைவு கூர்ந்து, லயித்து பேசும்

அருச்சுனன் தவக்காட்சியில் அறுபது அடிக் கம்பத்தில் அநாயசமாக ஏறி நின்று, சூடத்தைக் கொளுத்தி கையிலும், நாவிலும் எரிய விட்டு, கருடப்பட்சி பறந்து வந்து வட்டமிட........... தோட்டமே சூழ நின்று அரோகரா......... .... அரோகரா கோஷமிட “ஒன்னாம் படித்தரமாம் தருமன் தம்பி அருச்சுனா முன்னங் காலை எடுத்து வைத்தான் தருமன் தம்பி அருச்சுனா” என்று படிக்கொரு பாடலாக பாடி; ....... தவத்தை முடித்துக் கம்பத்திலிருந்து இறங்கி வர, இடுப்பில் கட்டிய கச்சை மணிகள் குலுங்கிக் குலுங்கி.... கிண்கிணி நாதம் எழுப்ப, முழுச்சனமுமே முண்டியடித்துக் கொண்டு “நான் முந்தி நீ முந்தி” என்று விழுதி வாங்கிப் பூசும்..........

அது ஒரு காலம். இப்போது சிவணான்டித் தாத்தா எழுந்து நடக்க முடியாத நிலையில், ஆசையோடு பேத்தி கொடுக்கும் ஒரு வாய்க் கஞ்சி கூட தொண்டைக்கும் கீழ் இறங்காமல் வாய்வழியே வடிய.

தாத்தா இன்றோ நாளையோ என்றிருக்கும் போது எப்படிப் போகாமல் விடுவது? தீபாவளியும் கூட.

எனவேதான் தம்பியையும் அழைத்துக் கொண்டு நாளை செல்வது என்று முடிவு எடுத்தான். சிறுகச் சிறுக வீட்டிற்கு வாங்கிய பொருள்கள் மூட்டையினுள் கொலுவிருக்கின்றன.

சிக்கனமாக வாழ்ந்து சேமித்த பணம், சீட்டுப் பணம் என்பன பெட்டியில் பவித்திரமாக........

விடியற்காலையிலேயே பஸ் எடுத்தால், பத்து மணிக்கெல்லாம் மாத்தளை டவுனுக்குப் போய் விடலாம். பின்னர் வேனோ..... பஸ்சோ எடுத்தது.... ஒரு மணித்தியாலத்தில் தோட்டங்களுக்குப் பிரியும் தாம்பர வள்ளி சந்தியில் இறங்கிவிடலாம். வாழ்க்கை என்ற கதையின் அத்தியாயங்களைப் பிரிப்பதே போன்ற வடக்கே மலைகளை நீவிக் கொண்டு “ராஜரட்டை” யென விரியும் அந்தத் தார்ப்பாதையில் ஒரு ஆலமரத்து நாற்சந்தி.

பல தோட்டத் சாம்ராஜ்யங்களை இணைத்து நின்ற சந்தி, சந்தியில் ஒரு ஆலமரம். ஆலடிச்சந்தி?

சந்தியில் இன்று பல கடைகள் முளைத்து விட்ட போதும் “சந்திக் கடை” என்ற பழம் பெருமையைத் தக்க வைத்துக் கொண்டிருக்கும் சந்திக் கடை.

முன்பு இந்த சந்தியிலிருந்தே தோட்டங்கள் வியாப்பித்திருந்தன. நாற்புறமும் தேயிலை, இறப்பர். கொக்கோ, மிளகு என்ற பயிர்கள் டிவிசன் டிவிசன்களாகத் தோட்டம் விரிந்து கிடந்தது.

இப்போது நாலாயிரத்திற்கும் அதிகமான ஏக்கர் நிலப்பரப்பில் பேருக்கு ஒரு இரு நூறு ஏக்கர் தேயிலை. அதுவும் பழைய மலை மூடிய "ஸ்டோர்" எலும்பும் தோலுமாக! இடையிடையே ஐம்பது ஏக்கருக்கு குறைவான குட்டித் தோட்டங்கள் செக்ரோல் கிடையாது கை காசுச் சம்பளம்.

கூலியின்றி வாழ எழுபத்தேழிலும், எண்பத்து மூன்றிலுமாகப் பல தடவைகள் அக்கின் பிரவேசம் செய்து தப்பிய கிழட்டு லயங்கள்; பல. இடைக்கிடையே இவைகளில் வவுனியா, கிளிநொச்சி என்று அடைக்கலம் சென்றும்; செல்லாமலும், பயந்து அஞ்சியும் அஞ்சாமலும் வாழ்ந்து வரும் பல குடும்பங்கள் வேறு வழி இன்றி..........

ஒரு காலத்தில் "தாய் இல்லாத பிள்ளையும்" பிழைக்கும் என்று பெயரெடுத்த தோட்டம் தான் தாம்பரவள்ளி! இப்போது தாயோடு பிள்ளை கலங்கித் தவிக்கும் நிலை, தேயிலை வளர்ந்து செழித்த இடத்தில் கவலை வளர்ந்து... வாட்ட........;

அம்மா கடிதத்தை முடிக்கும் போது மறக்காமல் குறிப்பிட்டு எழுதியிருந்தாள். "வருவதென்றால் இரவில் வரவேண்டாம். நேரத்துடனேயே புறப்பட்டு வரவும்" சென்ற பொங்கலுக்கு, கொழும்பிலிருந்து இரவு தோட்டத்திற்கு வந்த இளைஞர்களான சங்கரையும், கோபாலுலையும் கொலனியைக் கடந்து வரும்போது சிகரெட் கேட்டு வழிமறித்ததில் ஏற்பட்ட கலாட்டா. பின்னர் "லயத்திற்குப் 'புலி' வந்திரிச்சின்னு..... லயம் லயமா... தோட்டந்தோட்டமா... சல்லடை போட்டுத் தேடும் வரை நிலைமை மோசமாகி விட்டது.

இப்போது லயத்தில் செத்த வீடு என்றாலும் "சீட்டுக் கட்டு" டன் அழையா விருந்தாளியாக வந்து "பூர்வா" சூது சீட்டாட்டத்தில் இறங்கும் கும்பல்கள்.

ஆலமரத்துச் சந்தியில் இறங்கினால் "ஜில்" என்று குளிர் காற்று வீசும். சந்திக்கு வடக்குப் புறமாக, "அம்மன் கோயில்" கடைகளைத் தாண்டி நடந்தால், தோட்டத்தில் புனர் ஜென்மம் எடுத்திருக்கும் கொலனிகள், பிறவித் தொடராய் நீண்டு கிடக்கும் செம்மண் பாதையும் நீண்டு செல்லும்.

செம்மண் பாதை சென்றடையும் மலையடி வாரத்தில், ஒரு 'கான்' சிலிர்த்து ஓடுகின்றது. கானுக்கு இரு புறமும், சூரிய காந்திப் பூக்கள். கானைத் தாண்டினால் பல இன மரங்கள். கூட்டாகப் பிணைந்து வளர்ந்த...... "வால்ராசா" கோயில், வால்ராசா கோயில் முடக்கிற்கு மேற்கே பாட மாத்தி பாட மாத்திக்கு மேலே சரிவில் மாடாசாமிக் கோயில். அதற கப்பால் பாதையில்

ஒரு மென் வளைவு. பக்கத்திலிருக்கும் குன்றில் எலும்பும் தோலுமாக நிற்கும் தோட்டத்துப் பழைய ஸ்டோர், ஸ்டோர் முடக்கிற்கு மேலே "காமன் பொட்டல்" காமன் பொட்டல்" காமன் பொட்டலுக்குச் சமாந்தரமாகப் "பீலிக்கரை அங்கிருந்து அண்ணாந்துப் பார்த்தால் மேகம் சூழ்ந்து கிடக்கும் "சிந்தாக்கட்டி" மலை, சிந்தாக்கட்டி மலையின் குழந்தைகளாக சிறியதும் பெரியதுமான முடிச்சு மலைகள்.

குன்றுகளின் மடியில் தோட்டச் சிதைகளின் பூட்டறைகளாக, எதிரும் புதிருமாக அமைந்த பழைய லயன்கள். மூன்றாம் பிறையில் "கம்பல்" நட "காமன் கூத்து" ஆரம்பமாகும் முழுத் தோட்டத்து சனங்களுமே, சமயச் சடங்கில் ஈடுபடுவர் லயன்கள் விழாக் கோலம் பூண்டு விடும்.

காம தகனத்தன்று முன்பு "ஆலமரத்துச் சந்திய"யில் இருந்து தான் "இந்திர லோகத் தூதுவனை" ஒத்த தப்பு அடித்து "யாருக்கடா தூதா, நீ ஓலை கொண்டு வாராய்! இந்திர லோகத்து தூதா, நீ இமைப்பொழுதில் சொல்லு.." என்று புஜங்களில் கட்டிய பந்தங்கள் கொழுந்து விட்டு எரிய, கைகளில் ஜூவாலையிடும் பந்தங்கள் சுழல ஆடிவரச் செய்வார்கள்.

இப்போது அந்தியாகி விட்டால், தோட்டத்தவர்கள் சந்திப் பக்கமே போக முடியாத நிலை.

ஏத்தரோட்டு வாகைமர முடக்கில் இருந்துதான், அகோர "வீரபத்திரரை", அழைத்து வருவார்கள்.

இப்போது ஏத்த ரோட்டு வாகை மர முடக்கில், புதிதாக ஒரு "பார்" முளைத்துள்ளது. வம்புச் சண்டைக்குப் பெயர் பெற்ற இடம். நமக்கு ஏன் வீண் சண்டை என தோட்டத்தவர் போவது கிடையாது.

ரதிமதன் வில்லெடுத்து ஆடிவந்து திரும்பும் இடம் "தொரப்பீலி" தோட்டத்திற்கு தொரப்பீலி டாங்கியிலிருந்து தான் குடிப்பதற்குத் தண்ணீர் வரும். சில்லென்று குளிர்ந்த நீர். இப்போது தொரப்பீலி, தெருப்பீலியாகக் கிடக்கின்றது.

சிறகறுந்த சடாயு என ஆகிவிட்ட தோட்டத்தின் அம்சங்கள் இவை.

இந்தச் சிறகறுப்பில், இரு நூறு ஏக்கரைக் காப்பாற்றி விட்ட, இராமுவின் தந்தை தண்டனையை எதிர்பார்த்தபடி கண்டி ரிமாண்டில்! வழக்கு சுப்ரீம் கோட்டில்! தவனை பல ஓட; பணம் தண்ணீராகக் கரைகின்றது.

ஆரம்பத்தில், "குத்திவிட்டு வா! வெட்டிவிட்டு வா! நாங்கள் இருக்கின்றோம்," என்றவர்கள், "தியாகம் செய்யாமல் முடியுமா? காசை எடு!..... பணத்தைக் கொண்டு வா!......... நகைகளைக் கழட்டி ஈடு வை" என்றார்கள். ஈட்டுக்கடைத்தலைவர்கள்

ஒன்ன புத்தட்டும் வட்டிக்கடை ஏறிவிட்டது. பணத்தைப் பார்த்தால் ஆகுமா? அப்பாவை வெளியே எடுத்தாக வேண்டுமே!

தேர்தல் வந்தது. மாவட்ட பிரதி நிதி, தேர்தலில் நின்றார். "இந்த வெற்றியோடு எல்லாம் சரி" என்றார் "அப்பாவையும் வெளியே கொண்டாந்திரலாம். உன்னையும் என்னோடயே வச்சிக்கிடுவேன். நீ தான் என் பொடி காட்" இராமு மயங்கி போனான்.

தோட்டம் தோட்டமாக ஏறி இறங்கி, வாக்கு வேட்டை, ஆடினார்கள் ஊர் வலங்கள் கோஷங்கள், கல்லடி பொல்லடிகள், பம்பரமாகச் சுழன்று, உயிரைப் பணயம் வைத்து, இராமு, இராசு நண்பர்களெல்லாம் அரசியல் வேலை செய்தார்கள்.

இரவு பகலாக ஓய்வு ஒழிச்சலின்றி! நடை நடையாக நடந்து.

தேர்தலில் பிரதிநிதி வெற்றி பெற்றார்.

ரிமாண்டிலிருக்கும் தியாகி முத்து சாமியின் தனயன்கள் 'சின்ன உங்கா', 'பெரிய உங்கா, வான ராமுவும், ராசுவும் பிரதிநிதியின் மெய்க்காப்பாளராக நின்று வெற்றிக் கனியைப் பறித்தார்கள்.

சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டு, புதிய காரில் ஊர் வந்த பிரதி நிதியை மகிழ்ச்சியில் கட்டித் தழுவ இராமு நெருங்கிய போது, ஆளும் கட்சி எம். பியான அவரைத் தொடவிடாது, "சோதனை போட வேண்டும். தள்ளி நில்" என்று தடுத்தார்கள் கூட வந்த "கபட்டி கமீஸ்" அணிந்த மெய்க்காப்பாளன். அவன் கையிலிருந்த "வாக்கி டோக்கி" சமிக்ஞை வேறு பயம் காட்டியது.

இராமுவிற்கு அவமானாகப் போய்விட்டது. நாட்கள் விரைந்து ஓடிக் கொண்டிருந்தன மந்தரியாகிவிட்ட பிரதிநிதியைப் பல தடவைகள் சந்தித்தும் இராமுவால் வேலை பெற முடியவில்லை. இப்போது அவரைச் சந்திப்பதே ஒரு வேலை தேடுவது போல; கஷ்டமாகி விட்டது. தேர்தல் காலத்தில் இல்லாத சொந்தபந்தங்கள் புடை சூழ அவர் இப்போது.. பிசி .. பிசி..

'இனி அவரை நம்புவதால் பிரயோசனம் இல்லை' என்று முடிவெடுத்த ராமு, தனக்கிருந்த கொஞ்ச அறிமுகங்களோடு கொழும்பு வந்து விட்டான்.

இராமுவிற்குப் புடவைக் கடையில் வேலை கிடைத்தது. வெல்லம்பிட்டியிலிருந்த ஒருவர் சிபாரிசில் ஊறுகொட பகுதியில் இருக்கும் இந்த றூம் கிடைத்தது. பின்னர் தம்பி இராசுவையும் அழைத்துக் கொண்டான்.

"முதலில் இராசுவுக்கு "பெட்டா" வில் பேமன்டில் தினக்கூலிக்குத் தட்டுப்போடும் வேலை" கிடைத்தது. சாப்பாட்டிற்கே வருவாய் போதவில்லை. கூலியை அதிகரித்துத் தரும்படி கேட்க, "ஐடன்டி" இல்லாதவனுக்கு பஜாரில் வேலை கொடுத்ததே பெரிசு" என்று பெருமை பேசினார்கள்.

“பத்தாது பார்த்துக் கொடுங்க” என்று நயந்து போனபோது, “நன்னத்தாரி பலயாங்” நாலு படி மேலே போய் விரட்டி விட்டார்கள்.

இராமுவிடம் கேட்காமலே; நாலாம் குறுக்குத் தெருவில் நாட்டாமை வேலைக்குச் சேர்ந்து விட்டான் இராசு.

தம்பி நாட்டாமை வேலைக்குச் சேர்ந்ததினால் இராமு அதிகக் கவலைப் பட்டான்.

இவருடைய உழைப்பும் சேர, அப்பாவின் வழக்கிற்குப்போக சீட்டும் கட்ட முடிந்தது. அம்மாவிற்கும் மாதம் தவறாமல் பணம் போய்க் கொண்டிருந்தது.

இடையில், அடையாள அட்டை இல்லாதபடியால், இராசு பிடிபட்டு, ஒரு வாரம் பொலிஸ் நிலையத்திற்கு விருந்தாளியாகப் போய் வந்தான். இராசுவை வெளியே எடுக்க ரூபா இரண்டாயிரத்துக்கு மேல் போய்விட்டது. இரண்டாயிரம் செலவோடு இராசுவை மீட்டெடுத்ததே பெரிய காரியம் தான். இராசுவோடு பிடிபட்ட பக்கத்துத் தோட்டத்துக் கணபதி, இன்னமும் நாலாம் மாடி விசாரணையில்!

வழமை போலவே “அப்பாவி மலையக இளைஞர்களைக் கைது செய்யாதே “என்று பிரதிநிதி; தன் படத்தோடு அறிக்கை விட்டிருந்தார்.

அதே நாளிதழின் மற்றைய பக்கத்தில் அவர் இஸ்ரவேல் சென்று தொழிலாளர்களை சந்திப்பதாகவும் செய்தி வெளியாகியிருந்தது.

இன்னும் கொஞ்சம் பணம் சேர்க்க வேண்டும், தோட்டத்திற்கு இப்போதைக்கு போவதில்லை என்று நினைத்திருந்த வேளையில் “தீபாவளிக்குக் கட்டாயம் வரும்படி” எழுதிய அம்மாவின் கடிதம் வந்தது.

அம்மாவிற்கு ஒரு சேலை சட்டை.......

தாத்தாவிற்கு ஒரு வேட்டி....... சால்வை .... சட்டை.....

செத்துப் போன பாட்டிக்கு படையல் போட சிவப்பு நிறத்தில் ஒரு சாரி. அப்பாவுக்கு கமிசு........ திரும்பி வந்து உடுத்திக் கொள்வார் தானே என்ற நம்பிக்கையில்.

தங்கைமார்களுக்கு அவ்வப்போது இருவரும் பேமண்டில் கண்டு வாங்கிய மணிச் சாமான்களுடன் ஆசை ஆசையாக வாங்கி வைத்த உடுதுணி வகைகள்.

மறக்காமல் அடிக்கடி தொங்கலயத்திலிருந்து, “பேராண்டி வந்துட்டானா?.....” என்று வாஞ்சையுடன் விசாரிப்பதோடு, “நான்தான் தொப்புள் கொடி வெட்டினேன். பேராண்டி இந்தக் கட்டையை ஆடிப்பாடி... கோடி போட்டு தூக்கி புதைச்சிறு” என்று நம்பிக்கையோடு வேண்டிக் கொள்ளும் ஆராயி பாட்டி தவறாமல் தீபாவளிக்கு வருவாள் அவளுக்கு ஒரு நூல் சேலை!

“கொட்டகொல” தொட்டிச்சி அம்மனுக்கு பூஜைக்கு ஒரு பட்டு!

எல்லாமே ரெடி பாக்கி;

தங்கச்சி பத்மாவிற்கு ஒரு தங்கச் செயின் ஆடர் கொடுத்து விட்டு அடிக்கடி போய் வருகின்றான் இராசு.

இராசு கூறினான், “அண்ணா நீங்க எல்லாம் ரெடி பண்ணுங்க...... நான் ஒரு ஏலச்சீட்டு போட்டிருக்கேன். வசதியிருந்தா அந்திக்கு இல்லாட்டி இரவு வந்திடுறேன் அப்படியும் இல்லாட்டி காலையில் ஆறுமணிக்கெல்லாம் நகையோட வந்திடுவேன். காலையில் உடனே புறப்பட்டிறலாம்”

தம்பி வருவதற்கு முன்னர் ஒட்டிய பேக்குகளைக் கடைகளில் போட்டு விட்டு, இரவு அவனை எதிர்பார்த்தபடி, தூங்கிப் போனான் இராமு.

அன்று இரவு இராசு வரவில்லை. எப்போது விடியும்.........? .........? நடுநிசி கடந்து இரவு விடிய துயில் எழுகின்றது.

திக்கெங்கும் பெரும் இரைச்சல் ..... பேரிரைச்சல்... கூச்சல்கள். . ஆரவாரம்.

திடுக்கிற்று எழுந்தான் இராமு.

என்ன நடந்தது..... ஏது நடந்தது என்ற தவிப்பு.....

வீசியடிக்கும் வெப்பக் காற்று!

அனல் ஜுவாலை..... தகிக்கும் தீச் சுவாலை.

வீசும் அனல் காற்றின் வெப்பம். திசையெங்கும் பரவ ... மக்களின் அவலக் கூக் குரல்.

துப்பாக்கி வேட்டுக்களின் தீவிர ஓசை திக்கெங்கும் பதறி, சிதறி ஓடும் மக்கள் கூட்டம்.

குழந்தைகள்.... பொக்கிஷங்களோடு அல்லலோலகல்லோலப்பட்டு, இங்கு மங்குமாக..... செய்வதறியாது உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு...

“கொலன்னாவ தெல்டாங்கியட்ட கினிதியலா” ....... “போம்ப காலா” தீயோடு போட்டியிட்டு பரவும் செய்திகள். “நம்ம பகுதிக்கு நெருப்பு வருமா.... சேரிக் குடிசைவாசிகள் முணுமுணுக்கின்றார்.”

தூரத்தே தரைக்கும் வானுக்குமாக தீச்சுவாலை...... டும் ........ டும்..... துப்பாக்கிகள் உயிர்ப் பெற்று முழங்குகின்றன பகுதியே யுத்த பூமியாகப் பரிணமிக்க...

எங்கும் ஒரே களேபரம்.

விடிந்து விட்டது.

விளைந்த அனர்த்தம் புரிந்தும் புரியாத நிலை .... பிராமாண்டமான எண்ணெய்க் குதங்கள் பற்றி எரிந்து கொண்டே இருக்க, கரும்புகை விண்ணை மறைத்து நிற்கின்றது. தீயின் கோர நாக்குகள் நாலா திக்கிலும் பரவ...

கலக்கம் .......... பதற்றம்............

என்ன செய்வது.......?.....?

சுற்றி வளைத்த காவல், வேலி போட்டு நிற்கின்றது.

வேட்டுச் சத்தங்கள் தொடர்ந்து கொண்டே. உள்ளன.

“போன தம்பி” – இன்னமும் திரும்பி வரவில்லை . தீபாவளிக்கு வீட்டுக்குப் போக வேண்டும். முருகா! ... தம்பிக்கு என்ன நடந்ததே......!

இராமு கலங்கி நிற்கின்றான்.......

சேரி மக்கள் பொறி கலங்கித் தெருவில் நிற்கின்றனர். இனக் குரோதமான வசைகள் வானளாவிக் கேட்கின்றன.

சற்று நேரத்திற்குள்.......

எது நடக்குமோ, என்ன நடக்குமோ என்ற பீதியில், வதந்திகள் பரவ, மக்கள் நாலாபக்கமும் சிதறி ஓட, யார் யார் எங்கே எப்படிச் சிதறிப் பதிறி ஓடினார்களோ .........., திசை மாறிப் போனவர்கள் யார்? எங்கோ தெரியவில்லை உயிரைப் பிடித்துக் கொண்டு, எங்கெல்லாமோ போய்ச் சேர....

பெரும் கூச்சல்கள் ..... ஆராவாரங்கள்....... ........... ஆக்ரோஷமான வசவுகள் ............. நெருங்கி வர......

நாம் ஒரு குற்றமும் செய்யவில்லையே ......... எங்கே போவது எல்லா வழிகளிலும். தடை...... தடைகள்

மிகவும் அண்மையில் அடித்து நொறுக்கி அவலக் குரல்கள். .... ஓலங்கள்...

பணத்தைச் சரி எடுத்துக் கொண்டு...... பொருள்களோடு வீட்டைப் பூட்டி விட்டு, மெதுவாக ஓடி ... எப்படியும் போய்விடலாம். இராமு உள்ளே நுழைந்து தீபாவளிக்காக வாங்கிக் கட்டிய பொருள்களின் மூட்டையை ஒரு புறமாக வைத்து விட்டு பெட்டியைத் திறந்து; பணத்தை எடுத்து மடியில் மறைவாக வைத்த போது....

“ஹா ....... காப்பாங்........ மரப்பாங்........... கினி தியாபங்.. ........ கினி தியாபங்........” சேரியை அடித்து நொறுக்கிக் கொண்டு வந்த கும்பல் இவனுடைய றூமையும் நெருங்கிக் கதவை உடைத்து........

“மரப்பாங்.........ஆ......வரேங்......”

அடித்து நொறுக்கி ஒவ்வொரு வீடாகச் சோதனை செய்து கொண்டு, அறியாத முகங்கள் ........... இரத்த வெறியுடன் கும்பல் கும்பலாக, பயங்கர வாள்கள்........ இரும்புக் கம்பிகள் ......... வெட்டரி வாள்கள் கம்புகள் சகிதம் ... அடித்து நொறுக்கி ........வெட்டி.......,

அவலக குரல்கள்.... அழுகையொலிகள்... கேட்பாரில்லையா? பூமிக்கும் வானத்துக்குமாகக் கனிந்து கொண்டு இருக்கும் தீயைப் பற்றியே எங்கும் பேச்சு ..... வேடிக்கை பார்க்கும் கூட்டம் வேறு......!

அடிபட்டோரினதும் வெட்டுபட்டோரினதும் அவலக் குரல்கள்......... இராமுவின் றூம் கதவை அடித்து நொறுக்கி, உள்ளே பாயும் போது

"நா...... நா..... நான்...." நடுங்கும் கைகள் அடையாள அட்டைளை நீட்ட, "தெமலத...." ஆவேசக் குரல்கள்.......

"நம......?......", "ராமு..... கொட்டகல தோட்டம் ........... தோட்டம். ....." சொல்லி முடிக்கவில்லை.

"கொட்டகல தோட்டம்.....?......?..."

"கொட்டகல........ கொட்டித........."

குரல்கள் கோரஸமாக ஒலிக்க......

"காப்பாங்..... காப்பாங்...... மரப்பாங்"

எத்தனை வாள் வெட்டுகள், எத்தனை இரும்படிகள், உடம்பில் எங்கெல்லாம் விழுந்தனவென்று தெரியாது. இராமு..... தலை பிளந்து, கண்கள் பிதுங்கி, கழுத்து முறிந்து...... இரத்தம் பீரிட....... "ஐயோ! அம்மா....." குரல் வெளியே வரவில்லை.

நிலத்தில் சரிந்தான்.

"சுத்த கரப்பாங்....." தேனீயாய்த் தம்பியும் தானும் சேர்ந்த பணத்தை மடியிலிருந்து உருவி எடுப்பதையோ, ஆசையோடு தீபாவளிக்கு வாங்கிய பண்டங்கள், பொருள்களைச் சூறையாடிச் செல்வதையோ தடுக்க முடியாது நிலத்தில் சரிந்தான்.

அடி, வெட்டு, குத்து....... இவைகளில் எது இராமுவின் உயிரைப் பறித்ததோ ..... தெரியாது.

பிரியும் இராமுவின் உயிரைத் தடுத்து, அரவணைத்துக் கொள்வது போல அடித்து நொறுக்கப்பட்ட அந்தப் பழைய காம்பிரா தகர்ந்து தரையோடு அவன் மீது வீழ்ந்து போர்த்துக் கொள்கின்றது.

வீணர் கும்பல்.... கைவரிசை காட்டி மறைய....; நிலைமை கட்டுக்கடங்கிட .. நேற்று மாலை குறித்த நேரத்தில், தங்கைக்கு ஆடர் செய்த நகை கிடைக்காத படியினாலும், காலையில் கட்டுங் கடங்காத காடைத்தனம், வீதித் தடை என்பவற்றினாலும் றூமிற்கு வந்து அண்ணனைப் பார்க்க முடியாத இராசு, மறுநாள் வந்து கேள்விக் கணைகளுக்கும், பலத்த, விசாரணைகளுக்கும் பின்னர், அண்ணன் இராமுவின் பிரேதத்தைப் பெற்றுக் கொண்டான்.

தீபாவளித் திருநாள்........

பட்டாசு வெடிகள் வெடிக்க........

வானவெடிகள் மத்தாப்புகள் வெடித்துச் சிதற,

புத்தாடைகள் அணிந்து......

பட்சணங்கள் தின்பண்டங்கள்....

கோயிலில் பூசை நடைபெற.....

உற்றார் உறவினர் வந்து குதூகளிக்க....

தீபாவளித் திருநாள் ........ இருள் நீங்கி ஒளி

பிறந்த திருநாள்......

ஆல மரத்துச் சந்தி.... ஜில்லென்று குளிர்காற்று வீசும் தோட்டம். வால்ராசா கோயில். வால்ராசா கோயிலுக்கு மேற்கே பாடமாத்தி. பாடமாத்திக்கு மேலே சரிவில் மாடசாமிக் கோயில், அதற்கப்பால் பாதையில் ஒரு மென்வளைவு, பக்கத்திலிருக்கும் குன்றில் எலும்பும் தோலுமாக நிற்கும் தோட்டத்தின் பழைய ஸ்டோர். ஸ்டோர் முடக்கில் காமன் பொட்டல், காமன் பொட்டலுக்குச் சமாந்தரமாகப் பீலிக் கரையைச் சுற்றி, எதிரும் புதிருமாக அமைந்த லயன்கள். லயன்களின் நடுவே, எட்டுக் காம்பிரா லயத்தின் தொங்க வீட்டை நோக்கி, கொழும்பிலிருந்து இராமுவின் பிரேதத்தைச் சுமந்து வந்த வண்டி, சிலு சிலு வென்று ஓடும் தண்ணீர்க் கானைத் தாண்டி: இரு புறமும் மண்டிக் கிடக்கும் சூரியகாந்திப் பூக்களின் அஞ்சலியை ஏற்றுக் கொண்டு ... அந்தச் செம்மண் பாதையில் செல்ல வண்டியின் முன் சீட்டில் அமர்ந்து, லயத்திற்குச் செல்லும் வழியை இராசு காட்டிக் கொண்டுவர, இராமுவின் பிரேத வண்டி ஊர்ந்து ........

லயத்துக் கோடியிலிருந்தே, தூரத்தே மகனின் பிரேதம் வருதைக் கண்ட தாய், "நான் தேடிய ராசவே......" என்று பெரிதாக ஒப்பாரி வைத்துக் கொண்டு ... வாயிலும் வயிற்றிலுமாக அடித்துக் கொண்டு கதறி அழ... கூடவே தங்கைகளும்... கதறி அழ .... அழுது புரண்டு ...

ஒரு தோட்டத்து இளைஞன் தீபாவளிக்குத் தனது தோட்டத்திற்கு வருகின்றான்.

*(துரைவி – தினகரன் சிறுகதைப்போட்டியில்*
*இரண்டாம் பரிசு பெற்ற சிறுகதை)*



# தோழர் விக்கிரம யாழ்ப்பாணம் செல்கின்றார்.

**மா**த்தளை மணிக்கூட்டுச் சந்தி மீன்மார்க்கட்டிலிருந்து, இராஜ வீதிக்குச் செல்லும் படிக்கட்டுகளில் ஏறி; விஹாரரோட்டை நோக்கி "தோழர் விக்கிரம" என்ற விக்கிரம ஆராச்சி 'கன்வென்ட்' மதில்களுக்கு சமாந்தரமாக நடைபயிலும் போது "சகோதரயா – சகோதரயா" என்ற குரல் பின்னாலிருந்து சன்னமாக ஒலித்தது.

பழக்கப்பட்ட குரல்தான். டவுனில் தாமதிக்காமல், உச்சிவெயில் ஏறும் முன்னர் வீடு வந்து விடும்படி அவர் மனைவி "மெனிக்கே ஆமினி" சற்று கண்டிப்பாகவே கூறியிருந்தபடியால், கொங்காவெல ஞாயிறு சந்தையில் அவசர அவசரமாக வாங்கியவைகளோடு ஹெரிசன்ஸ் ஜோன்ஸ் குறுக்கில் ஏறி, மீன் மார்க்கட்டில் இரண்டு "கூரி சாளையாவையும்" வாங்கிக்கொண்டு உச்சிவெயில் தலைக்கேறும் முன்" வீடு போய் சேர்ந்து விட வேண்டும் என்று தோழர் விக்கி விரைவாக நடந்த போதுதான் இந்த அழைப்பு கேட்டது.

முன்பெல்லாம் ஞாயிறு சந்தைக்குப் போய்; கிருமிநாசினி மருந்தடிக்காத; நாட்டுக் காய்கறிகளாகப் பார்த்துப்பார்த்து வாங்கிக் கொண்டு; பின்னர் தர்மபால மாவத்தையிலுள்ள பென்சனியர் கிளப்பிற்குப் போய், பழைய சிநேகிதங்களை யெல்லாம் கண்டு வாயாரப்பேசி, "நாலுரவுன்ட்" வரை எடுத்து விட்டு ஆட்டோவில் ஏறி வீடு வந்து சேரும் போது ஆமினேபகல் சாப்பாடு பிந்திவிட்டது "கட்டியத்தெக்க செட்டுனாத" என்று கோபம் கொள்வாள்.

வழமையான கோபம் தான்; பாசத்தின் மறுபக்கம் இது! பென்சனியர் கிளப்பில் ஒன்று சேரும் தினம் இறந்த கால இனிமைகளை மீட்டும் வீணை. அந்த வீணாகானம். சங்கமித்து விட்ட தோழமைகளுடன் மனம் விட்டு பேசி,

வாய்விட்டுசிரித்து தர்க்கித்து, விமர்சித்து இறந்த காலத்தின் உயிர்ப்புள்ள நிகழ்ச்சிகளை மட்டுமன்றி நிகழ்காலத்தின் சமூக, அரசியல், பிரச்சினைகளின் கள நிலவரங்களை அலசி ஆராய்ந்து. உள்ளூர் சர்வதேச நிகழ்வுகளின் சங்கப்பலகையாக நடக்கும் அந்த சந்திப்பு அர்த்தம் நிறைந்தது. மனதிற்கு ஆறுதல் தருவது.

இன மத மொழி பேதங்களுக்கு அப்பால் “கொமரேட்” என்ற இணைப்புடனும், புரிந்துணர்வுடனும் “அடே மச்சான்” என்ற பாசத்துடன் வேற்றுமையின்றி பழகி சங்கமிக்கும் அந்த சந்திப்பு. மாந்தர் என்பார் இவர் தானா? மானுடம் என்பதும் இதுதானா? என்ற வரிகளுக்கு அர்த்தமான நித்தியநிதர்சன தரிசனமுமாகும்.

“சாராயத்தை ஊத்து சங்கீதத்தை காட்டு” என்பது போல இந்துஸ்தானி சங்கீதம், கர்நாடக சங்கீதம், பெல்கவி, ஆங்கில பாடல்கள், பைலாக்கள் எல்லாம் ஒருவர் ஒரு வரியை ஆரம்பிக்க “தன்னோ புதுன்கே” “அதிரமணி நில்மலதாரா”... “ரோசா பொல்லகனிங் பல்லாமரான்ட;” “டிங்கிரி; டிங்காலே மீனாட்சி...” “அடி, என்னடி ராக்கம்மா...” வரை கதம்பமாக ஒலிக்கும் இந்த சங்கீத ராட்டினத்தில் அவ்வப் போது தாள லய, அபிநய, ஓரங்க, கூட்டு நடனமும் அரங்கேறுவதும் உண்டு. சில வேளைகளில் குழந்தைத்தனமாகவும் இது காட்சியளிக்கும்.

பல்லு போனாலும் சொல்போகாத சுருதிலயம் என மேலோங்கி நிற்கும் ராகத்தில் ஓய்வு பெற்ற முன்னாள் ஓவசியர் நடராஜா ஆரம்பித்துவைத்த பாடலை சிங்கரெஜிமெட் செக்கன் லெப்டினன் ஹெட்டிபொல முடித்து வைத்து “அப்லாஸ்” வாங்கும் கச்சேரியாக பரிமளிக்கும்; பரிமாணம் பெறுவது போன்ற பல அம்சங்கள் அடங்கியுள்ளமை ஒரு தனிச் சிறப்பாகும். இவ்வாறான மாலை சந்திப்புக்கள் நடுநிசி வரை நீள்வதும் உண்டு.

இறந்தகாலத்தின் இறவாத நினைவுகள் இந்த சந்திப்புகள் அவ்வப்போது அரங்கேறும் போது ஏற்படும் சுகானுபாவத்தின் சுகந்தத்தில்; இந்த உள்ளங்கள் இளமை பூரிப்பில் பூத்து குலுங்கும்.

தியத்தலாவை கெடட் கேம்பில் அணி வகுப்பு மரியாதைக்கு பின்னர் நடைபெற்ற இரவு நேர விருந்துபசாரத்தில் பங்கு பற்றி நிதானமாக நடந்து வந்து “நாளை முதல் குடிக்க மாட்டேன் சத்தியமடி முத்து என்று செக்கன் லெப்டினன் மனைவியை நினைத்து பாடியது முதல்; மாத்தளை ஹொக்கி டீம்முக்கு கப்டனாக விளங்கிய அப்புகஸ்பிட்டிய சுப்பையா புல்பெக்கிலிருந்து தனியே பந்தை உருட்டிச் சென்று மறுபக்கத்திலுள்ள கோல் போஸ்டில் கோலை செலுத்தி; வெற்றியீட்டி, டெல்லி டீமை மண்கவ்வச் செய்த சாதனை.

முண்டாசு கட்டிய சிங் ஹொக்கி பிளேயர்கள் லாவகமாக சூழலும் இவரது ஹொக்கி ஸ்டிக்குக்கு பின்னும் உள்ளும் சிறைபட்டு நிற்கும் பந்தினை தடுத்து தம்பக்கம் எடுக்க முடியாது; பின்னாலேயே ஓடி வரும் பரிதாபம்; மாத்தளை ஹொக்கி வீரர்களின் திறமைக்கு என்றுமே சான்று பகர்வதாகும். இந்தவரிசையில் எ. ஜி. எம் பாறுக்; ஜனாப் மூசீன்; மாத்தளைதான் இலங்கை ஹொக்கியின் தொட்டில் .

அதிபர் ஜனாப் இசட் ஒம்ர்தீன் அவர்கள் நடந்து வரும்போது; சரக்... சரக்.. எனும் காலடி ஓசை கேட்டு; வகுப்பறைக்கு ஓடிச் செல்லும் மாணவர்களை மட்டுமின்றி ஆசிரியர்கள் பற்றி, அபுதாலிப் அப்துல் லத்தீப் அவர்களுக்கு லெனின் சமாதான பரிசு கிடைத்தமை, பண்ணாமத்துக்கவிராயர் பலஸ்தீன கவிதைகளை மொழி பெயர்த்து ஆற்றிய இலக்கிய பணி. அவருடைய சொல்லாட்சி, நவாலியூர் சொக்கநாதன் எழுதிய மாத்தளை முத்து மாரியம்மன் குறவஞ்சியை கவிஞர் ஈழவாணனும், வீ. கந்தவனமும் வெளியிட்டு ஆற்றிய விமர்சன உரைகள் மட்டுமா?

அதிபர் சுதுமலை தம்பிராஜா, அளவெட்டி கு. திரவியராசா ஆசிரியர் ஆகியோர் பாடசாலை கதம்ப விழாவில் அரங்கேற்றிய நாடகங்கள் பற்றிய இலக்கிய மஞ்சரியும் இடைக்கிடையே குறிஞ்சி மலர்களென மலரும்.

கவிஞர் சுபத்திரன், சாருமதி, புதுவை இரத்தினதுரை, சில்லையூர் செல்வராஜன், மாத்தளை ஆ. இராஜசிங்கம் மலைத்தம்பி, திருகோணமலைக் கவிராயர் ஆகியோர் பாரதியின் பேத்தி விஜயபாரதியின் முன்னே பாக்கிய வித்தியாலய அரங்கில் "இதய நெருப்பெடுத்து இலக்கிய கவி வடித்த நாளில் பொழிந்த இலக்கிய வேட்கையும் அவ்வப்போது நினைவு மலரில் மலரும். செ. கனேசலிங்கம், எஸ். பொன்னுத்துரை, பேராசிரியர் தில்லைநாதன் இர. சிவலிங்கம் ஆகியோர், தமிழக கு. அழகிரிசாமி அவர்களுக்கு ஈழத்து சிறுகதைச் சிறப்பை எடுத்துக்காட்டியமை இன்றும் மணதில் மணக்கும் மலராகும்.

"காட்டிற்கு கரடி, புலி, சிங்கம் கோட்டிற்கு எதிர்மான சிங்கம் " பீடிக்கு சொக்லால் ராம் செட் பீடி என்று கோமாளி வேடக்காரன் ஆடி; ஆடி, பாடிப்பாடி விளம்பரம் செய்த தகவல்களை வியந்து விமர்சிப்பதோடு அது முடிந்து விடுவதில்லை.

சிந்து பாத்தின் கன்னித்தீவு, கடற்பிரயாண சித்திரத் தொடர்கதை என அது தொடரும்... தொடரும்...

புறன் அப்புவை தூக்கிலிட்டது அவருக்கு சேர்மன் தம்பிராஜா நினைவுத்தூபி எழுப்பியது; தம்பிராஜா எலிசபெத் மகாராணியை வரவேற்றது வி.டி நாணயக்காராவை துப்பாக்கியால் சுட்டது முதல் கொங்காவெல கொய்யா

முதலாளி காட்சியானது வேகட பொலவின் வீரசாகசங்கள், மேஜர், ரிச்சட் உடுகம யாழ்ப்பாணத்திற்கு சென்றது அப்போது ஏற்பட்ட கலவரம்........

வில்லியம் கொபல்லாவ அவர்கள் சனாதிபதியானது; சேர் ரிச்சர்ட் அலுவிஹார முதல் பொலிஸ் மா அதிபராக பதவியேற்றது முதலான மாத்தளை வரலாற்றின் பக்கங்களை திருப்பி; மனோரதியக் குதிரையை கட்ட விழ்த்து களிப்பில் மூழ்குவது மட்டுமல்ல இன்னும் எத்தனை எத்தனையோ புதையல்கள். புதைய மறுத்து நினைவுச் சஞ்சாரம் புரியும் வைரச்சுரங்கம்.

நினைவுகளின் சங்கமத்தில் மனதில் பதித்த அழியாச் சுடர்கள்.

முதியோர்கள் சமூகத்தின் சுமை என்று கூறியது யார்? அவர்களுக்கென ஒரு பொருளாதார பின்னணி மட்டும் இருந்து விட்டால் அவர்களின் வாழ்வே தனி வழி. தனிக்காட்டு இராஜாக்கள்தான். யாருக்கும் சுமை இல்லை.

கடந்த சில மாதங்களாக "விக்கி"யால் இந்த சந்திப்புகளில் பங்கு கொள்ள முடியாமல் போய்விட்டது. திடீரென ஒரு நாள் மாலை நெஞ்சு வலி ஏற்பட்டது. வலி அதிகமாக துடிதுடித்துப் போய்விட்டார். உடனே வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். இரண்டு நாள்கள் வார்டில் தங்கும்படி ஆகிவிட்டது. பரிசோதனைகள் பலவற்றையும் செய்த பின்னர் பயப்படும் படியாக ஒன்றுமில்லை "ஹைபிரசர்" சாப்பாட்டில் கவனமும், ஓய்வும் அவசியம் என்று கூறி அனுப்பிவைத்தது ஆதாரவைத்தியசாலை.

வீட்டிலேயே அடைந்து கிடப்பது எரிச்சலாக இருந்தபடியால் இன்று நீண்ட நாள்களுக்கு பின்னர் நகருக்கு வந்தார்; விக்கி. ஆமினேவின் பல நிபந்தனைகளோடு! தான்!.

நகரிலிருந்து வீடு திரும்பும் வழியில் அழைப்புச் சத்தம் கேட்டு திரும்பினார் விக்கி. பழக்கப்பட்ட குரல்தான் தோழர் பஸ்நாயக்க தன்னை நோக்கி வேகமாக வருவது தெரிந்தது. விக்கிரம மாத்தளை கச்சேரியில் சீப்கிளாக்காக கடமையாற்றிய பொழுது பஸ்நாயக்க கிறிஸ்து தேவ கல்லூரியில் ஆங்கில ஆசிரியராக பணிபுரிந்தார்.

தோழர் விக்கரமவுக்கு அருகில் வந்து சேர்ந்த பஸ்நாயக்காவினால் உடனடியாக பேச முடியவில்லை லேசாக மூச்சு இரைத்தது. பஸ்நாயக்காவின் முகத்தில் வியர்வை துளிகள் கொப்பளித்து இருந்தன. குள்ளமான உருவம். நரைத்த தலை "பட்டேல் மீசை" அதில் செம்பட்டை கலர் ஒளிவிட்டது.

"தோழரை பார்க்க நான் வீட்டிற்கு வர இருந்தேன். உங்களுக்கு சுகமில்லையென்று கேள்விப்பட்டேன். இப்போது எப்படி...?

"பெரிதாக ஒன்றுமில்லை. ஈ.சி.ஜி எல்லாம் எடுத்து பார்த்தாகி விட்டது. குடிப்பதற்கு கொஞ்சம் மருந்து தந்துள்ளார்கள்."

“எதற்கும் உடம்பை கவனமாக பார்த்துக்கொள்ளுங்கள் போன் செய்தால் ஏன் ரிசீவரை தூக்குவதில்லை. நான் பல தடவைகள் முயற்சி செய்தேன் இப்போது டெலிபோன் என்பது ஒரு தொல்லையாகிவிட்டது. யார் எப்போது எதற்காக எடுக்கிறார்கள் என்று தெரியாமல் போய்விட்டது. அநாவசியமான தொல்லை” ஆம் ஆம்”

இருவரும் வாய்விட்டு சிரிக்கிறார்கள்.

“சரி ஏதோ அவசரமாக சொல்ல வந்தீங்களே விக்கிரம கேட்டார்.

“ ஆமாம், உங்களை கண்ட சந்தோஷத்தில் அதனை மறந்து விட்டேன் நாங்கள் எல்லோரும் யாழ்ப்பாணம் செல்ல ஏற்பாடு செய்துள்ளோம். அடுத்த சனிக்கிழமை காலை ஒரு தனி வண்டியில் யாழ்ப்பாணத்திற்கு புறப்படுகின்றோம் நம்மோடு ரட்ணசாரர் தேரோவும் வருகின்றார்.”

விக்கிரமவின் முகம் தாமரையாக மலர்ந்தது. யார்? “ஒவிலிகந்த பன்சல தேரர் ரட்ணசாரர் நம்மோடு வருகின்றார். அவர் மிகவும் கருணை உள்ளம் படைத்தவர் ஆச்சே இனக்கலவரத்தின் போது பன்சலயில் பல தமிழ் குடும்பங்களை மறைத்து வைத்து காப்பாற்றிய பெருமை அவருக்கு உண்டு. சரி சரி தமிழருக்கு உதவி செய்தமையினால் சில அந்தவாதிகள் அவருக்கும் தொல்லை கொடுத்தனர். நானும் மனைவி ஆமினேவும் வருகின்றோம். நாம் யாழ்ப்பாணத்திற்கு போவோம் என்று நினைத்துப் பார்க்கவில்லை. இளமை காலத்தில் நமது தொழிற்சங்க மகாநாடுகளை அங்கே நடத்தினோம். காங்கேசன்துறை தொகுதிக்காக நடைபெற்ற இடைத்தேர்தலில் தோழர் வி. பொன்னம்பலத்திற்காக பிரச்சாரம், அரசியல் வேலை செய்தோம்.” விக்கிரம பூரித்தார்.

“ஆம், எனக்கு நினைவிருக்கின்றது. எழுத்தாளர் நண்பர்களான தோழர் அகஸ்தியர், தோழர் டேனியல் ஆகியோர் நம்மை வரவேற்று விருந்து கொடுத்தார்கள். இனமத பேதங்களின்றி வர்க்க நலனுக்கு முன்னுரிமை கொடுத்து தேசிய, சர்வதேசிய போராட்டங்களை முன்னெடுத்தார்கள். இப்போது அவர்களில் பலர் நம்மிடையே இல்லை. சிலர் இறந்து விட்டார்கள். ஒரு சிலர் அகதிகளாக வேறு நாடுகளுக்கு புலம் பெயர்ந்து போய்விட்டார்கள். **நாங்களும் அன்று நினைத்த அந்த யுகம் மலர்ந்திருந்தால் கடந்த காலங்களில் நிகழ்ந்த வேண்டத்தகாத விளைவுகள் எல்லாம் நிகழ்ந்தே இருக்காது.**” பஸ்நாயக்காவின் உள்ளம் காலசக்கரத்தில் தடம் பதித்தது, இருவரிடேயும் மௌனம் நிலவியது. கடந்தகால நினைவலைகளில் அவர்கள் சஞ்சாரம் செய்தார்கள்.

அந்த மௌனத்தை கலைத்துக் கொண்டு பஸ்நாயக்க “தென்னிலங்கை நம்பக்கத்திலும் பல தவறுகள் நிகழ்ந்து விட்டன. யாழ்ப்பாண நூலகத்தை

எதிர்த்திருக்கக் கூடாது. அது மனித குலத்தின் பொக்கிசம். ஈனச் செயலை செய்துவிட்டோம். பஸ்நாயக்காவின் குரலில் சத்திய ஆவேசம் வெளிப்பட்டது.''

''ஆமாம். அவர்கள் யாழ்ப்பாணத்தில் நடத்திய தமிழ் ஆராய்ச்சி மகாநாடு கூட குழப்பத்தில்தானே முடிந்தது. துக்ககரமானது அது மிக மிக துக்ககரமானது. இதன் வினைவுகள் பின்னால் எப்படி ஆனது பார்த்தீர்களா? பல்கலைக்கழக அனுமதியில் இனவிகிதாசாரத்தை கொண்டு வந்தது போன்ற விடயங்கள் தான் விரக்தி அடைந்த இளைஞர்கள் ஆயுத போராட்டங்களில் சேர ஒரு காரணமாயிற்று''. பஸ்நாயக்க ஒரு குட்டி பிரசங்கத்தையே நிகழ்த்தி விட்டார்.

''ஆம், 1971 – 1989ல் தென்னிலங்கை இளைஞர்கள் ஆயுத போராட்டங்களில் ஈடுபட்டார்கள். இரு பகுதிகளிலும் நமது அழியாத செல்வங்களான இளைஞர்களே மடிந்தார்கள். நமது எதிர்கால சந்ததி இவ்வாறு மடிந்தது போல் இனிவரும் காலங்களிலும் நடக்காது இருக்க நாம் தக்க பரிகாரம் செய்ய வேண்டும். இப்போது நாம் யாழ்ப்பாணத்திற்கு செல்வது வேடிக்கை பார்ப்பதற்காக அமையக்கூடாது. நமது நல்லெண்ணத்தை எடுத்துக்காட்டும் விஜயமாக அது அமைய வேண்டும். பிரிந்த மண்ணை ஒன்று சேர்த்தால் போதாது. உடைந்த உள்ளங்களையும் ஒன்றிணைக்க வேண்டும். அவர்களின் கண்ணீரை துன்ப துயரங்களை அவலங்களை போக்க வேண்டும். இதற்காக நம்போன்றோர் அங்கே செல்லவேண்டும். அது நம்முன்னே உள்ள கடமை.''

இருவரும் பேசிக்கொண்டிருக்கும் போது பாதையின் மறுபக்கத்திலிருந்து தோழர் லதீப் கைத்தடியை ஊன்றியபடி மெல்ல மெல்ல இவர்களை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தார். தலையில் தொப்பி, நரைத்ததாடி கணுக்காலுக்கும், முழங்காலுக்கும் இடையில் கட்டம் போட்ட சாரம் முழங்காலுக்கு கீழே இறங்கியுள்ள ஜிப்பா மொத்தத்தில அவரது தோற்றம் ஒரு அனுபவமிக்க ஞானியை நினைவுபடுத்தியது.

நெருங்கி வந்த தோழர் லத்தீப் ''என்ன இருவரும் எந்த கோட்டையைப் பிடிக்கத் திட்டம் போடுகின்றீர்கள்'' – என்று சிரித்தபடியே கேட்டார்.

''யாழ்ப்பாண கோட்டையைத் தான்'' ''இல்லை, அதைத்தான் உடைத்து விட்டார்களே! நாங்கள் யாழ்ப்பாணம் போகின்றோம். நீங்களும் வருகின்றீர்களா? உங்களை போன்ற ஒரு அனுபவசாலி எம்மோடு வருவது காத்திரமாக அமையும்''.

''இல்லை. இப்போது என்னால் அது முடியாது. யாழ்ப்பாணம் வர எனக்கும் ஆசைதான், எனது உடல்நிலை காரணமாக பிள்ளைகள் நீண்ட தூரம் பயணம் செய்ய சம்மதிக்க மாட்டார்கள். அந்த காலத்தில் யாழ்ப்பாண முற்ற வெளியில் நடந்த பல கூட்டங்களில் நான் பேசியிருக்கின்றேன். சாதி எதிர்ப்பு தீண்டாமை,

ஆகிய போராட்டங்களிலும் கலந்து கொண்டிருக்கின்றேன். என்னோடு நமது மாத்தளை மதார் சாய்புவும் வந்துள்ளார். அவர் அப்போது தமிழரசு கட்சியின் தீவிர ஆதரவாளர்.

தமிழரசுக்கட்சி நடத்திய மொழியுரிமை சம்பந்தமான சத்தியாகிரகப் போராட்டத்தில் கலந்து கொண்டதால் அவருக்கு அரசாங்க தொழிலும் இல்லாமல் போய்விட்டது... லத்தீப் அவர்கள் வரலாற்று ஏடுகளை புரட்டினார். சம்பவங்கள் கோர்வையாக வந்து விழுந்தன.

“ஆமாம் நான் கிறிஸ்து தேவ கல்லூரியில் படிக்கின்ற காலத்தில் டேனியல் பிரின்சிபலாக இருந்தார். அக்காலத்தில் மதார் சாய்பு தோட்டம் தோட்டமாக போய் தோட்டத்துப் பிள்ளைகளை கிறிஸ்து தேவ கல்லூரியில் சேர்த்தார். அப்போது ஆங்கிலமொழி மூலமான கல்வியும் கற்பிக்கப்பட்டது. தோட்டத்துப்பிள்ளைகளை கிறிஸ்து தேவ கல்லூரியில் மதார் சாய்பு ஆசிரியர் எட்மிஷன் எடுத்து படிப்பிக்கச் செய்தது ஒரு சாதனைதான்.”

“சத்தயாகிரகப் போராட்டத்தில் கலந்து கொண்டு தொழிலை இழந்த மதார் சாய்பு நீண்ட காலம் கஸ்டப்பட்டார். சிறந்த ஓவிய ஆசிரியரான அவர் அஜந்தா முதல் சீகிரியா வரையிலான சித்தரங்களை ஆய்வு செய்த கட்டுரைகளை எழுதினார். அவரது மாணவர்கள் அவற்றை நூலுருவாக்குவதாகக் கூறி ஏமாற்றி விட்டனர். அவரால் கல்வி கற்று உயர்நிலை அடைந்த பலர் அவரை நினைத்துக்கூட பார்க்கவில்லை.” லத்தீப் அவர்களின் பேச்சில் சத்திய ஆவேசம் ஆதங்கம் வெளிப்பட்டது.

“அவருக்கு மட்டுமா இந்நிலை? அந்தகாலத்தில் ஆசிரியர் தொழிலை ஒரு தெய்வீகப் பணியாக, தொண்டாகவும் கருதி உழைத்த அனேகருக்கு இதேகதிதான். ஆனால் எல்லா மாணவர்களும் நன்றி கெட்டவர்கள் அல்ல. ஆசிரியர்கள் ஏணிதான்.”

“அன்றொருநாள் நான் சைக்கிள்வண்டியை தர்மபால மாவத்தையில் தள்ளிக்கொண்டு செல்லும் போது அந்த வழியாக காரில் வந்த எனது பழைய மாணவர் ஒருவர் காரை மெல்ல நிறுத்தி; என்ஜினை ஆப் செய்யாமலே காரின் கண்ணாடியை சாடையாக இறக்கி; சற்று தன் முகத்தை வெளியே நீட்டி “மாஸ்டர் இன்னும் அதே பழைய சைக்கிள் வண்டிதானா?” என்று பகிடியாக பழித்து விட்டு போனான். அவனுக்கு என்ன சேர் என்று அழைக்கக் கூட மனம் வரவில்லை” – பஸ்நாயக்க நகைச்சுவையுடன் கூறினாலும் இந்த சமுதாயத்தின் போக்கு பற்றிய கவலை அதில் தொனித்தது.

“மதார் சாய்பு என்றவுடன் தான் எனக்கு நினைவிற்கு வருகின்றது. ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐம்பத்தெட்டில், ஸ்ரீ பிரச்சினையில், மாத்தளை சந்தியிலுள்ள அன்னலிங்கம் சுருட்டுக்கடை, பாக்கியலெட்சுமி ஸ்டோஸ்,

சரஸ்வதி பவான் ஆகிய தமிழ் கடைகளின் பெயர்ப்பலகையில் உள்ள தமிழ் எழுத்துக்களுக்கு ஏணிமேல் ஏறி நின்று தார் பூசியவனை; ஒரெட்டில் எட்டி உதைத்து தார் வாளியோடு ஏணியும் சரிந்து கீழே விழ அவனை இடுப்பு ஒடியச்செய்த இந்த தோழர் லத்தீப் வீரன் மட்டும் என்ன போராட்டத்தில் குறைந்தவரா?'' என்றார் விக்கிரம.

லத்தீப் நானா புன்முறுவல் பூத்தார் '' சரி பகல் தொழுகைக்கு நேரம் ஆச்சி, தோழர்களை சந்தித்தது மிக்க மகிழ்ச்சி நான் வருகின்றேன்'' என்று கொடபொல பக்கமாக நடந்தார். லத்தீப்நானாவின் ஆஜானுபாகுவான தோற்றம் முதுமையிலும் கம்பீரம் சற்றும் குறையவில்லை. அவர் நடந்து செல்லும் பாணியை தோழர்கள் இருவரும் ரசித்தனர் மிடுக்கான நடை....

மேற்காவுகை ஒட்ட மழை இறங்கி வந்து சினுங்கியது. மாத்தளை நகரின் அழகுக்கு கட்டியங்கூறி நிற்கும் அழகு மலையில் ஓங்கி வளர்ந்துள்ள ''பைனஸ்'' மரங்களை அப்பி; வெண்மேகக்கூட்டங்கள் போர்த்திக் கொண்டுள்ளன. குளிர்ப்போர்வையில் மலை உறக்கம் கொண்டுவிட்டது. வெண் மேகங்கள் படிய யானை படுத்து உறங்குவதைப் போன்ற தோற்றமுடைய அழகு மலை; இப்போது இந்திரனின் வெள்ளை ஐராவதத்தைப்போல் விளங்கியது.

முத்துமாரியம்மன் ஆலயத்தின் நவதள இராஜகோபுரத்தை வணங்கி ஆசி பெற்றவை. போல தவழ்ந்த குட்டி; குட்டி மேகங்கள் ஆலயத்திற்கு கிழக்கில் அமைந்துள்ள செந்தாக்கட்டி மலையின் உச்சியில் பழநி என அருள் பொழியும்; சென்பகப் பெருமானின் பாதங்களில் சரண்புகுந்து விடுகின்றன.

கொங்காவெல பள்ளியிலிருந்து ''அல்லா ஹு அக்பர்'' என தொழுகைக்கு அழைக்கும் பாங்கொலி தேனென ஒலித்தது.

பஸ்நாயக்காவும், விக்கிரமவும் விடைபெற்றுக்கொண்டனர். அடுத்த சனிக்கிழமை காலை புனித தோமையர் கல்லூரிக்கு முன்னாலிருந்து யாழ்ப்பாணம் செல்லும் வேனில் விக்கிரம தம்பதிகளும் யாழ் செல்வது என்பது முடிவாயிற்று.

பயண ஒழுங்கில் ஏதாவது மாற்றம் இருப்பின் பஸ்நாயக்கா டெலிபோனில் தெரிவிப்பார் என்பதும் பேசியாகியது. அதன்படி புதன்கிழமை இரவு தொலைபேசியில் தொடர்பு கொண்ட பஸ்நாயக்கா; இப்பயணத்தில் கச்சேரியை சேர்ந்த ஒரு சில குடும்பங்களும் வரவிரும்புவதாகவும் எவ்வளவோ தட்டிக்கழித்தும் என்னால் அவர்கள் வேண்டுகோளை மறுக்க முடியாமல் போய்விட்டதென்றும் எனவே வேனில் அல்லாமல் அறுபதுபேர் செல்லக்கூடிய பஸ்ஸிலேயே யாழ் செல்வது என்ற முடிவினை தெரிவித்தார்.

அத்துடன் நாகதீப, நெடுந்தீவு உட்பட வேறு பல இடங்களுக்கும் செல்வதால் புதன்கிழமையே அங்கிருந்து திரும்பவரவுள்ளதையும் எடுத்துக்கூறினார்.

யாழ்ப்பாணம் செல்கின்றோம் என்ற வார்த்தையை பஸ்நாயக்கா கூறிய பொழுதிலிருந்து தோழர் விக்கிரம கடந்த காலங்களில் தாங்கள் யாழ்ப்பாணத்தோடு நெருங்கி பழகிய தொடர்புகள்; சிவப்பு சட்டை அணிந்து கொண்டு, சிவப்பு கொடிகளை ஏந்தி தோழர்களோடு சமதர்ம கீதம் இசைத்தது "ப்ளாவில்" கள் குடித்து மீன், நண்டு வகைகளை சுவைத்தது. ஒடியற்புட்டு, கூழ் என்பனவற்றை அருந்தி மகிழ்ந்தது போன்ற நினைவுகளில் சஞ்சரிக்கத் தொடங்கிவிட்டார்.

அப்போது இனித்தது பனங்கட்டி, மட்டுமா? கஸ்தூரியார் வீதியில் நடைபெற்ற சந்திப்புகள், கைலாசபதி, சிவத்தம்பி ஆகியோரின் திறனாய்வுத்திறன், தோழர் எம்.சி. சுப்பிரமணியத்தின் எளிமை என்பனவெல்லாம் மானுடத்திற்கு இலக்கணம் வகுத்தமை. இன்றும் பசுமையானவை மட்டுமல்ல! அவை என்றும் மானிலம் சிறக்க அவசியமானவை.

இந்த நேசங்களை இப்போது வளர்க்க வல்லார் உண்டா? ஆம் உண்டு வடக்கிலும் தெற்கிலும் உண்டு, தற்காலிகமாக இவர்களது குரல் ஒடுக்கப்பட்டிருந்தாலும் அது ஓயாது. "வேறுள குழுவையெல்லாம் மானுடம் வெல்லும்"

சனிக்கிழமை பொழுது புலர்ந்து கொண்டிருந்தது. யாழ்ப்பாணம் செல்ல புனித தோமையர் கல்லூரிக்கருகில் களைகட்டி நிற்கும் பஸ் வண்டிக்கருகில் விக்கிரம தம்பதியினர் ஏறிவந்த ஆட்டோ வந்து நின்றது.

மப்பும், மந்தாரமுமான வானம், சிலு சிலு வென்று வீசும் காற்று குளிரை விதைத்துச். செல்கின்றது. தளர்ந்த உடல், தளராத மனம். விக்கிரம தம்பதியினரை குளிர்வாட்டி வதைத்து விடுமா?

யாழ்ப்பாணம் செல்லத்தயராக நின்ற பஸ்சில் விதம் விதமான "பெனர்கள்" குயுத்தியான வாசகங்கள் அவற்றில் பளபளத்தன. வண்டியினுள்ளே ஒரே ஆரவாரம். இளைஞர்களும் யுவதிகளும் அந்த அதிகாலை வேளையிலேயே குதியாட்டம் போட்டுக் கொண்டிருக்கின்றனர். கடைசி சீட்டில் விநோதமான உடையணிந்த இளைஞர்கள் பேன்ட் வாத்தியத்தில் காவடி பைலாவையும் விளாசித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் மத்தியில் அரை அர்த்தநாரீசுர நங்கை ஒருத்தி ஆடிக் கொண்டிருந்தாள்.

"சூடாமாணிகே பலலா யனவானே அப்பி பைலாவிற்கு யாப்பா பட்டுன பலண்ட அப்பியனவானே அப்பி" – என்று இட்டுக்கட்டிய சரணம் உச்சஸ்தாயில் முழங்குகின்றது. பல்லவி, அனுபல்லவி, சரணம் எல்லாம் அது தான்! மங்கலான ஒளி. தோழர் விக்கிரமவின் கண்கள் பஸ்நாயக்காவை தேடித்துளாவின. பஸ்ஸினுள்ளே மூத்தோர்கள் திறந்த வெளிச் சிறைச்சாலையில் இருப்பது போன்று அமர்ந்திருந்தனர். ரத்னாயக்கா தம்பதியினருக்கு பின்னாலுள்ள சீட்டில் நமசியும் தௌபிக்கும் மொயினும், எலி; பொறி பெட்டிக்குள் அடையுண்டது போல் தொங்கிய முகத்துடன் உட்கார்ந்திருந்தனர். தோழர் இராமாவும் மெனேஜர் ஞானப்பண்டிதன் முன்கூட்டியே யூகித்து சொல்லியது இப்போது எவ்வளவு உண்மையெனப்பட்டது.

பாடல்கள்... ஆடல்கள்... பாடல்கள் காட்டுக் கூச்சலாக ஒலித்தன, ஆடல்கள் அலங்கோலமாக விக்கிரமா தம்பதியினர் பஸ்ஸினுள் ஏறவில்லை. பஸ்ஸிலிருந்து "சகோதரயா" என்று அழைத்தபடி ரத்னாயக்கா இறங்கி வந்தார். அவர் முகத்தில் ஏமாற்றம் இழையோடியது. இனம் புரியாத வெறுப்பு படர்ந்திருந்தது. தயாரா என்ன என்று கேட்டார்.

பஸ்நாயக்க எங்கே? என்று விக்கிரம கேட்ட கேள்விக்கு இப்பதான் அறுபது பேருக்கும் காலைச் சாப்பாடு எடுக்க அருனாலோக்க பேக்கரிக்கு போயுள்ளார் என்றார் சலிப்புடன்.

பஸ்ஸினுள்ளே ஒரு கார்னிவேலே நடந்து கொண்டிருந்தது. வணதர்மரத்ன தேரரும் அவசர வேலை உண்டு என கூறி திரும்பிப் போய்விட்டதாகவும், ஹெலனும் புதிதாக சேர்ந்த ஆட்களோடு இணைந்து வர விரும்பவில்லையெனவும் ரத்னாயக்கா தெரிவித்து விட்டு மீண்டும் பஸ் ஏறி தனது மனைவிக்கு பக்கத்தில் பாதுகாப்பாக அமர்ந்து கொண்டார்.

இந்த பயணம் இப்படி போகத்தான் வேண்டுமா? விக்கிரமவின் அந்தராத்மா ஒப்பாரி சொல்லி அழுதது இப்படி ஒரு பயணம் அவசியம் தானா?

நாம் யாழ்ப்பாணத்திற்கு போவது உடைந்த உள்ளங்களை ஒன்று சேர்க்க; அகதிகளாக கவலையுடன் வாழும் நம் சகோதரர்களுக்கு ஆறுதல் சொல்ல; அவர்களின் நாளைய வாழ்விற்கு நம்பிக்கையூட்ட; அவர்களது மனங்களை வெற்றி கொள்ள; காயப்பட்ட மனங்களை தழும் பேறி வைரம் பாயாது சுகமடைய; விக்கிரமவின் எண்ணங்கள் சுழன்றன. "ஆமினே நாம் திரும்பி வீட்டுக்குப் போவோம்" அவர் குரல் திடமாக ஒலித்தது. இது ஆமினே எதிர்பார்த்தது தான்.

ஜன்னல் கண்ணாடியைத் தட்டி; ரத்னாயக்காவிடம் கூறினார். "எனக்கு உடம்பிற்கு சரியில்லை என்று கூறுங்கள் நாங்கள் வீட்டிற்குப் போகின்றோம். இந்த பணத்தை பஸ் கட்டணத்திற்காக எடுத்துக் கொள்ளச் சொல்லுங்கள்"

ஆமினே தான் கொண்டுவந்திருந்த 'கொண்டை பலகாரம்,' கொக்கிஸ், அதிரசம் ஆகிய பட்சணங்கள் அடங்கிய பார்சலை ரத்னாயக்காவின் மனைவியிடம் கொடுத்து இவற்றை நீங்கள் யாழ்ப்பாணத்தில் சந்திக்கும் ஏழைகளிடம் கொடுங்கள் என்று விநயமாக கேட்டுக்கொண்டார்.

அவர்கள் ஏறி வந்த ஆட்டோ வண்டி துரத்தி வரும் கூச்சல்களையும், 'பைலா' பாடல்களையும் செவியில் ஏற்காது வீடு நோக்கி விஹார வீதியில் விரைந்து கொண்டிருந்தது.

தோழர் விக்கிரம யாழ் நூலகத்திற்கு கையளிப்பதற்காக கொண்டு வந்த "தம்மபதம்" தேசிய இனங்களும் சுய நிர்ணயமும்" – லெனின் உட்பட புத்தகங்கள் அடங்கிய பார்சலை மடியில் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்த போதும் முச்சக்கரவண்டியின் குலுக்கலுக்கு புத்தகப் பார்சல் பிரிந்து சரிந்தது. புத்தகங்கள் விரிய பக்கங்கள் திறந்தன.

சீட்டில் அமர்ந்தபடியே லாவகமாக குனிந்து விரிந்த பக்கங்களை கையில் எடுத்தார். தம்மபதத்தின் வாசகங்கள் பளிச்சிட்டன "ஆகாயத்திலே பறந்த பட்சிகளின் அடிச்சுவட்டை காணமுடியாது" ஆசையே துன்பத்திற்கு காரணம்"

பகைமையை; குரோதத்தை பகையால் வெல்லமுடியாது அன்பினாலேயே அது முடியும். அன்புதான் இன்ப ஊற்று அன்பே உலக மகாஜோதி.

தம்மபதத்தை மூடி கைகளினால் இறுகப்பற்றிக் கொண்டார் விக்கிரம.

தர்மம்... தர்மம்... "தர்மம் தன்னை சூது கௌவும் தர்மம் மறுபடியும் வெல்லும்."

எது நடக்க விருக்கின்றதோ; அதுவும் நன்றாகவே நடக்கும்

தோழர் விக்கிரம வீட்டை சென்றடைந்தார் மீண்டும் ஒரு நாள் அவர் யாழ்ப்பாணம் செல்வார்.

**உதயன் 2010**

*(உதயன் பத்திரிகையின் வெள்ளி விழா (2010) சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு ரூபா 15,000/= பெற்ற சிறுகதை)*



# இரு தேசங்களும் ஒரு மனித சங்கிலியும்

**"அ**ப்பா எவ்வாளவு சொன்னாலும் நீங்க கேட்கவே மாட்டீங்க.... அந்த காணிப்பட்டா பத்திரத்தையும் இந்த நெருப்பிலே போடுங்க" முரளியின் குரல், அதட்டலாக சினத்துடன் ஆவேசமாக ஓங்கி ஒலித்தது. மறுப்பு சொல்ல முடியாத 'வீட்டோ' அதிகாரம், அது!

**"அவன் அப்படித்தான். பிடிவாதக்காரன்."**

அடங்கிப் போயாக வேண்டும். அடங்கி விட்டார் சுப்பையா கணக்கப்பிள்ளை. வேறு விஷயம்; அல்லது வேறு சந்தர்ப்பமாக இருந்தால் இப்படி ''பெட்டிப்பாம்பாக'' அடங்குவாரா சுப்பையா? ருத்ர தாண்டவமே ஆடி இருப்பார். இந்த விஷயம் அப்படியானது. அதுதான்! அப்படியான நேரம்.

திடீரென ஏவப்பட்ட இந்த "பாசுபதத்தால்" திகைத்து; வெல வெலத்து; செய்வதறியாது நிற்கும் சுப்பையா கணக்குப் பிள்ளை, கத்தரிப்பூ நிறத்தில், அசோக சக்கரம் பதித்து "ஜீ, நிப்பால்" அச்சொட்டாக எழுதப்பட்ட காணிப்பட்டா பத்திரத்தை மலைத்துப் போய் நிற்கும் மகள் சுந்தரியிடம் நீட்ட, அதை வெடுக்கென பிடுங்கி, நடுவீட்டில் எரிந்து கொண்டிருக்கும் இந்தியத் தபால்கள், கடதாசிகள் மீது சுக்குநூறாக கிழித்துப் போட்டான் முரளி.

எரியம் நெருப்பில் நிலப்பட்டா **நீறுபூத்து** சாம்பலாகியது. பரம திருப்தி முரளிக்கு. கறுப்பு பணத்தைத் தேடி "ரெய்டு" நடாத்தியது போல் அல்லோலகல்லோலப்பட்ட வீடு; தற்போது மயான அமைதியில் மூழ்கிவிட்டது. **திண்டுக்கல்பூட்டு, இரட்ரைச்சரணீர்** ரெங்கு பெட்டிகளெல்லாம் சோதனை முடிய மீண்டும் அட்டல் முதல்; அடுக்களை வரை கொலுவேறி விட்டன.

கொந்தளிக்கும் உள்ளத்துடன் சுப்பையாபிள்ளை வீட்டு முற்றத்தில் வந்து குந்தினார். "முருகா......" முருகனை நினைத்து வாய் முணுமுணுத்தது. சுப்பையா கணக்கப்பிள்ளை ஒரு வித்தியாசமான **பேர்வழி.** தோட்டத்து "பாஷையில் இந்த வித்தியாசமான என்ற பதத்திற்கு பல ஒருத்தக்கருத்துக்கள் உள்ளன. அது "தோட்ட நிர்வாகத்துக்கு நம்பிக்கையானவர்," "விஸ்வாசமுடையவர்" அதே வேளையில் தோட்டத் தொழிலாளர்களுக்கும் "நல்ல மனுசர்" என்பது உட்பட பல்வேறு அட்சர அர்த்தங்களையும் பரிபாசைகளையும் அது உள்ளடக்கும். அவர் "நிர்வாகத்தின் தாளத்திற்கு ஆட்டம் போடுகிறார்." "ஜால்ரா தட்டுகிறார்" என்றெல்லாம் எழுந்த எதிர்ப்புகள் வெறும் கிசுகிசுப்போடு அடங்கிப் போய்க்கிடக்கிறது.

கணக்கப்பிள்ளை ஐயாவை – "முகத்திற்கு முகம் நின்று எதிர்த்து பேசியவர்கள் இந்த தோட்டத்தில் உண்டா?" இது பயமா? மரியாதையா......? கணக்கப்பிள்ளையின் இந்த எழுதா மறையான சானக்கிய கூட்டு ஒப்பந்தத்தை பாராட்டாத துரைமார்களே கிடையாது. சிவில் சேவையின் சிலாக்கியம். தோட்டத்தில் எந்த ஒரு தொழிற்சங்கத்தையும் தலையெடுக்க விடாமல் "அவராடும் சதுராட்டத்தை" இரு தரப்பினருமே பாராட்டுவர்.

இந்த "ஆடு, புலி புல்லுக்கட்டு" காய் நகர்த்தலில் தோட்டமே அடங்கிப்போய் கிடக்கின்றது. இலாவகமான தந்திரோபாயம். எல்லோருக்குமே கைவராத தனித்துவ சாதுரியம். இதற்கு கைமாறாகத் தான் அவர் வசிக்கும் இஸ்டோர் லயத்திற்கு மேற்கிலுள்ள "சின்ன பங்களாவோடு" சேர்ந்த அவரை ஏக்கர் காணியை நிர்வாகம் ஒதுக்கிக் கொடுத்திருக்கிறது.

பேருக்குத்தான் சின்ன பங்களாவே ஒழிய; வசதிகள் சிறியவைகளல்ல! ஒரு காலத்தில் "துரைச்சாணி" குடியிருந்த கோட்டமல்லவா! பங்களாவைச்சுற்றி கனிமரங்கள்..... நினைத்தாலே வாய் ஊறும் துரை வரிக்கன். தேனில் நனைத்த பலாச்சுளைகள். கலர்கலரில் ஜம்பு. ஊதிக்கட்டிய பலூன்களாக "ஜம்போல". தோடம்; மாதுளைகள் பலவகையான மாம்பழங்கள்.

எத்தனையோ தடவைகள் "டீட்" எழுதிக் கொள்ளும்படி கணக்கப்பிள்ளையை, தனியார் தோட்ட கூட்டுநிர்வாகம் வற்புறுத்திய போதும் பிரஜா உரிமை இல்லாதபடியால் அவரால் அதனை நிறைவேற்றிக் கொள்ள முடியவில்லை. ''கைக்கெட்டியது வாய்க்கு எட்டாமல்....." பிரஜா உரிமையைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் அவர் மனம் குருதி கசிந்து வடியும்" சே.... இப்படியொரு தலைவிதியா என்று தலையில் அடித்துக்கொள்ளாமல் அடித்துக்கொண்டு; யார் யாரையெல்லாமோ நொந்து கொள்வார்.

யாரை நொந்து என்ன பயன்?

“எலெக்சன்” என்று வந்து விட்டால் தோட்டத்திலுள்ள ஏழெட்டு பேருக்குத்தான் “சந்தகாட்” வரும் தோட்டத்து ஆபிசில் கையெழுத்து வைத்து விட்டு; அவர்கள் வாக்களார் அட்டையை வாங்கிக் கொண்டு போகும் பொழுது; கணக்கப்பிள்ளைக்கு எரிச்சல் மட்டுமல்ல பொறாமையாகவும் இருக்கும். ‘‘பயலுக மேலே போய்விட்டானுகளே” என்று மனம் வஞ்சினம் கொள்ளும்.

“மாடு மேய்க்கிற மாசிமல” செலகமையில் இருந்து நேற்று தோட்டத்துக்கு வந்த வெள்ளையன் மகன் சுப்பன். சேனக்காரன் வேலு எல்லாம் “ஓட்டும் போட போறோம்.... உருளா முள நாட்டுக்கு ஓட்டுப் போட போறோம்” என்று காலையிலேயே ‘‘வெள்ளையும் சொள்ளையுமாக” உடுத்திக் கொண்டு, போட்டி போட்டுக்கொண்டு தோட்டத்து கேட் வாசலில் வந்து நிற்கும் கட்சிக்காரர்களின் வண்டியில் ஏறி; எலக்சனுக்காக “காடி” போட்டு காச்சி வடித்த கசிப்பு சாராயம் மணக்க, மாலையில் தோட்டத்து லயத்து குறுக்கில், “யாருக்கு போட்டோம்” என்று தெரியாமல் வருவது கணக்கப்பிள்ளை அறியாத ஒன்றா?

எத்தனையோ இராஜதந்திர நடவடிக்கையில் ஈடுபட்ட கணக்கப்பிள்ளைக்கு இந்த பிரஜா உரிமை மட்டும் திருஷ்டி பரிகாரமாக அமைந்துவிட்டது. தோட்டத்தில் உள்ளவர்களுக்கு; பிரஜா உரிமை விசாரணைக்காக வந்த கொழும்பு ஆபீசர்களுக்கு மேசை போட்டு, சோடா கொடுத்து; உபசரித்ததோடு மட்டுமல்ல, விசாரணைக்காக வரிசையாக வந்து நின்ற தொழிலாளர்களை அதட்டியும் தனது வல்லமையை காட்டியவருக்கே; இப்படி பிழைத்துப் போய்விட்டது. இது ஐம்பதுகளில் ........

‘‘இந்தியாவில் காணி இருக்கா?” ‘‘இங்கு இருந்து காசு பணம் அங்கு அனுபினியா?”

இப்படிபட்ட பல கேள்விச் சரங்களுக்கு கை பிசைந்து, தலை சொரிந்து நின்வர்களை ஏளனம் செய்து “ஒழுங்கா பதில் சொல்லு” “என்னா? பேமாணி மாதிரி முழிக்கிற” என்று ஐயாவால் ஏளனம் செய்யப்பட்டவர்களே “ஐயாவுக்கு நிராகரிச்சு புட்டானுக” என்று ஏளனமாக இளக்காரமாக கதைக்க, “இந்தியாவில்” காணி, நிலம் இருக்கு.

**“இந்தியாவுக்கு காசு அனுப்பிக்கிட்டு தான் இருக்கேன்.”** என்று தம்பட்டமாக விசாரணையின் போது கூறிய வார்த்தைகள் இப்படி; அவருக்கு வில்லங்கமாக அமையும் என்று; அவர் நினைக்கவே இல்லை. புலமைப்பரிசில் வினாவாக தடுமாறிப் போய்விட்டது.

“இந்த நாட்டுக்கு விசுவாசம் இல்லாதவன்” என்று இனிக்க... இனிக்க... பேசிய விசாரணை அதிகாரிகள் “மினிற்” போடுவான் என்று தெரிந்திருந்தால் “சுளையாக” பணத்தை நீட்டி அவனை மடக்கி இருக்க மாட்டாரா? என்ன....?

இந்த நாட்டில் பணத்தை நீட்டினால் “பாசாகாத” “பையில்” உண்டா? “மூவ்” ஆகாத மேட்டர் உண்டா? பணம், பணம் எல்லாமே பணம் தான்!

ஒட்டுப்பாலாக இழுத்தடிக்கப்பட்டு வந்த இலங்கை இந்தியர் பிரச்சினையை; சிரட்டைப் பாலாக முடக்க, நிறைவேற்றப்பட்டது தான் “தாஷ்கண்ட்” ஒப்பந்தம். இங்குள்ள மக்களுக்காக எங்கோ ஒரு நாட்டில் நிறைவேற்றப்பட்ட ஒப்பந்தம். ஒப்பந்தமா அது? நெஞ்சில் ஏற்றிய தீப்பந்தம். சம்பந்தப்பட்ட மக்களையோ, அல்லது அவர்களது பிரதிநிதிகளது கருத்துக்களையோ கேட்டறியாமல் எடுக்கப்பட்ட முடிவு அது. அவசரமாக ஓர் இரவில் எடுக்கப்பட்ட முடிவு.

விடிந்த போது, விழிக்காத நித்திரையை தாய் நாட்டு பிரதிநிதி அணைத்துவிட்டார். விளக்கம் சொல்வது யார்.........? இந்த கட்டைகளைப் பற்றி அந்த கட்டைக்கு அப்படி என்ன பாச உணர்வு இருக்கவா போகின்றது. தன் பெயரை வரலாற்றில் பதித்துவிட்டால் போதாதா? யார் எப்படி சீரழிந்தால் என்ன? அரசியல் அரசியல்.... மக்கள் அரசியல் பிராணிகள் தானே!

மக்களின் அபிப்பிராயத்தையோ, சம்மதத்தையோ கேளாமல் கால்நடைகளின் உரிமையாளனும், வளர்த்தவனும் பங்கு போட்டு பிரிக்கும் வகையில் இரவோடிரவாக நடந்தேறிய மந்தை வியாபாரம் அது, கால்நடைகளைக் கூட எடைப் போட்டு, நடைபிரித்து வியாபாரம் செய்யும் காலத்தில்; உழைக்கும் ஓர் இனத்தை அவலட்சணமாக...; அவமானமாக; ஆராய்ந்து பாராமல் நடைபெற்ற சதி! விடிந்த போது ஒரு பங்காளி விழிக்காத நித்திரையை அணைத்துக்கொள்ள; விழி பிதுங்கி நின்ற மக்கள் வழியறியாது; நிந்தனைப் படலாமாக திகைத்தாலும், படிவங்கள் நிரப்பும் படலம், காட்சிப் படலமாக நிகழ்கின்றது. ஒப்பந்தத்திற்கு பலியானவர்கள், பலிக்கடாவாக படிவங்களை நிரப்புகின்றனர். அத்தோடு குறுகிய கால அவசாசம் வேறு. படிவங்கள் துரித கதியில் நிரப்பப்படுகின்றன. எவருக்கும் முடிவு பற்றி எந்த விளக்கமுமே கொடுக்கப்படாத நிலை.

யாரோ.... எவரோ எழுதி நிர்ணயித்த, தங்களதும், தங்களது சந்ததியினதும் தலைவிதியை நிர்ணயிக்க தோட்டம் தோட்டமாக; மலையகம் எங்கும் கட்டுக் கட்டாக படிவங்களை நிரப்புகின்றனர். இந்த களேபரத்தில் கருங்காலி தோட்டமும் களைகட்டி நிற்கிறது. சூடு பிடித்துள்ள இந்த குட்டி வியாபாரத்தில் ஆங்கிலத்தில் எழுதத் தெரிந்தவர்களுக்கு அடித்தது யோகம். “படிவத்துக்கு பத்து ரூபாய்” “ரேட்டில்” ஸ்டாம்பிற்கு வேறு; முத்திரைக்கு

வேறு என்றெல்லாம் அறுவடை ஆகின்றது. தோட்டத்து "நைட் ஸ்கூல் மாஸ்டர்" - இராமசாமியின் ஏற்பாட்டில் ஒருவர்; இன்று கருங்காலி தோட்டத்திற்கும் வர துரித ஏற்பாடுகள் செய்தாகி விட்டன.

படிவம் நிரப்பும் மாஸ்டருக்காக, நைட் ஸ்கூல் மாஸ்டரின் **வீட்டில்;** லயத்துக் கானைக் **கொத்தி; கொத்தி;** கொழுப்பேறிய சிவப்பு கொண்டையுடன் தொங்கும் தாடி "டால்" அடிக்க தோட்டத்திற்கே **சண்டியனாகி;** எந்த ஒரு சேவலையுமே அண்ட **விடாது;** குப்பைகளைக் கிளறி.... கிளறி... பெட்டைக் கோழிகளை வெறும் அணைப்பிலேயே கருக்கட்டச் செய்யும் **நாட்டுச்சேவல்; "தாச்சியில்"** ஆக்ரோசத்துடன் கொதித்துக் கொண்டு இருக்கிறது.

படிவம் நிரப்புபவருக்காக பீரிஸ் பாரில் இருந்து கொண்டு வந்த சாராய போத்தலுக்கு மேலதிகமாக; அவருடைய மேலதிக ஆசையையும் பூர்த்தி செய்ய திம்புல்கமுவ நாட்டிலிருந்து கொண்டு வந்த முடட்டிக் கள்ளு, வேறு கொக்கோ மர நிழலில் நுரையை கக்கிக் கொண்டிருக் கின்றது. ஆள்மாற்றி ஆள காவல் வேறு அதற்கு! நுரை கொப்பளிக்கும் கள்ளில் சாரை வாய் வைத்து விடாமல் இருக்கவே இந்த முன் ஏற்பாடு.

அந்தி சாயும் முன்னரே தோட்டப் **பாடசாலையில்;** ஈசல்கள் மொய்த்து மோட்சமடைய; ''குப்பென இரைந்து" எரியும் பெற்றோல்மெச்ட் வெளிச்சத்தில் வரிசை வரிசையாக, ஒடுக்கமாக வந்த தொழிலாளர் குடும்பங்களின் படிவங்கள் நிரப்பப்பட, கணக்கப்பிள்ளையாரின் படிவத்தை அவரின் வீட்டுக்கே சென்று நிரப்புகிறார்; வந்தவர். அவர் வீட்டை விட்டு வெளியேறும் போது நாவில் ''ஜலம்" ஊறுகின்றது. "கால் அரைக்காக" வாடிநின்ற அவருக்கு வரப் புயர்ந்து வான் பாய்ந்து வடிகின்றது.

மலை நாடடான் யாரைத்தான் வாழ்விக்கவில்லை.

கணக்கப்பிள்ளை அவர் சட்டைப்பையில் திணித்துவிட்ட "என்விலப்" சாராயுதமாக தரும் சுகம் இது. சாராயமும் ஒரு ஆயுதம் தான். இது சாதிக்காத காரியம் உண்டா? யாரோ எவரோ செய்த சேவையை தன் பேரில் போட்டுக் கொள்ள வேண்டுமா? நடைபெறாத கூட்டத்தை நடந்ததாக; சேவையை தான் செய்ததாக, அறிக்கை விட அரைப்போத்தலை வாயில் ஊற்றினால் போதும் பப்ளிசிட்டி தந்து விடும் இந்த பாணம்.

**"இந்த தடவை எப்படியும் இலங்கைப் பிரசா உரிமையை எடுத்துவிட வேண்டும். எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை."** கணக்கப்பிள்ளையின் மனம் கணக்குப்போட்டு பார்க்கின்றது. தமிழ்நாட்டில், திருச்சியில், இளமைக் காலத்தில் அவர் மனதில் தொட்டிலாடிய வயல்வெளிகளும், ஐயனார் கோயிலும், கனவுலகில் வந்து குயிலாக கூவினாலும், இலங்கை பிரஸா உரிமை கிடைத்தவுடன் சொந்தமாகப்போகும் சின்ன பங்களா, காணி;

மாத்தளை நகரில் பாக்கிய வித்தியாலயத்தில் படித்து எஸ். எஸ். ஸி பாஸ் செய்து விட்டு, டீச்சர் கனவில் சிறகு விரித்து நிற்கும் மகள் அன்னபூரணி; முயற்சியுடன் படிக்கும் மகன் முரளியை இங்லீஸ் பேசும் தொரையுடன் ஒப்பிட்டு; ஒத்திகை பார்த்து கொண்டிருக்கும் தனது ஓரங்க நாடக ஆசைக்கனவுகள் நிறைவேறும் காலத்துடன்; தோட்டத்தில் எழுதாமறையாக தனக்குள் அடங்கியுள்ள சுக **போகங்களையும்;** அதிகாரங்களையும், **"கணக்கப்பிள்ளை" ஐயா - என்ற** மரியாதையையும் எப்படி இழப்பது? இழக்கத்தான் மனசு வருமா? ஒரே முடிவு. இலங்கைப் பிரஜை ஆவது தான்! முடிவெடுத்தே விட்டார்.

"மகா கனம் பொருந்திய ர்ாய.... ராய ஸ்ரீ என்று தொடங்கி சுகஷேமம் விசாரித்து "இப்பவும் இங்கு பருவமழை இல்லை. நஞ்சை புஞ்சை எல்லாம் கூட விளையவில்லை. பஞ்சம் தான். பஞ்சம் பிழைக்க பல குடும்பங்கள் மைசூர் போய்விட்டார்கள். எக்காரணம் கொண்டும் சிலோனை விட்டு இங்கு வந்து விடாதீர்கள்". இலங்கையில் இருந்து **இந்தியாவுக்கு** வரமுடியாதபடி மண்டபம் கேம்பை மூடிவிட்டார்கள் என்று தெரிந்தும் அடிக்கடி கடிதம் **எழுதி; "பெர்லீன் சுவர் எழுப்பி"** வரும் மைத்துனன் **மதுரை சோழவந்தான்** சேவகனின் கூற்றில் உண்மை இல்லை. என்று தெரிந்தாலும் செழித்து நிற்கும் தன் குடும்பத்திற்கு இலங்கையில் தங்குவதே நல்லதென முடிவு செய்து; வெள்ளைநிற படிவத்தை நிரப்பி விட்டார் கணக்கப்பிள்ளை.

இலங்கையா......? இந்தியாவா.......? அடிக்கடி ஊர் நினைவு உப்பளமாய் மனதில் படிந்தது. இளஞ்சிவப்பு நிறமும், அசோக சக்கரமும். பொறித்த படிவம் தாயக நினைவுகளை மீட்கும் வீணையின் தந்திகளாக சுருதி சேர்த்தாலும் இதயத்தை கல்லாக்கிக் கொண்டார். மைத்துனன் பரம்பரை உறவு காட்டி; காணியையும் வீட்டையும் அபகரித்துக் கொண்டார். கள்ளப்பட்டா எழுதி; ஊர் காணிகளை அபகரித்து; பரம்பரை காணி உரிமையாளர்களையே பிச்சை எடுக்க வைத்த உத்தமன் அவன்!

இதில் தொப்புள் கொடி உறவு. **வேறு** கள்ள உறுதியில் காணி உரிமையை அபகரித்தவனின் மகன்; கணக்கப்பிள்ளையின் உறவினரின் "சவ அடக்கம்," "குழி வெட்டு" என்று வேறு பணமும் பறித்தார்கள். மாத்தளை நகருக்கு படிக்கச் செல்லும் தன் மகன் முரளி **"தொரையை போல் இங்லீஸ் பேச வேண்டும். காற்சட்டை, மேற்சட்டை எல்லாம் போட்டுக்கொண்டு உத்தியோகம் பார்க்க வேண்டும்."** துரைமாரின் தயவு தனக்கு இருக்கும் போது இது ஒன்றும் தனக்கு எட்டாக் கனியல்ல. தனது துரை விசுவாசத்திற்கு, வேரில் பழுக்கும் பலா இதுவாகும். இந்தப் பலா **பழுக்கும். காலத்தால் கனியும்.**

**ஆனால்** நாளடைவில் மகனின் போக்கு அவருக்கு இந்த ஆசைக்கனவில்; எதிர்பார்ப்பில் மண்ணை அள்ளித் தூவி விட்டது. மகனின் மாற்றம் அப்படி

மகனோடு அடிக்கடி; சிவப்பு சட்டை போட்ட இளைஞர்கள் கூட வந்து; இரவு இரவாக கதைப்பது, விடியற்காலையில் சொல்லிக் கொள்ளாமல் புறப்பட்டுப் போய், நேரமில்லாத நேரத்தில் வந்து போவது என்பனவெல்லாம் அவருக்கு எரிச்சலை மூட்டின. யார்? யார்? எப்போது வருகின்றார்கள்? எப்போது போகின்றார்கள்? என்ற விபரம் தெரியாது. எதற்காக வருகிறார்கள்? ஏன் வருகிறார்கள்? அப்படி என்ன தான் பேச்சு? விடிய ....... விடிய.......

ஆரம்பத்தில் இப்படி புது முகங்கள் மகனோடு வந்து போவது மரியாதை கலந்த மகிழ்ச்சியை கணக்கப்பிள்ளைக்கு அளித்தாலும், இப்போது அதுவே சங்கடத்தையும், பயத்தையும் ஏற்படுத்துகின்றது. அவர்களது நடவடிக்கை ஆத்திரத்தை ஏற்படுத்துகின்றது. சகிக்க முடியவில்லை. "முதலில்" தன் வீட்டுக்கு மட்டுமே வந்தவர்கள் படிப்படியாக லயலயமாக போய் கதைத்து வருவது தமது குடும்பத்திற்கு மரியாதை இல்லையென்று நினைத்தார். "முதலாளி வர்க்கம்," "தொழிலாளி வர்க்கம்" "புரட்சி போராட்டம்" என்றும் மகனும் சகபாடிகளும் தோழர் தோழர் என்று பேசிக் கொள்வதும் அவருக்கு நல்லதாகப் படவில்லை. "சுரண்டலை ஒழிக்க வேண்டுமாம்" ஆத்திரப்பட்டார்.

எல்லாவற்றிற்கும் மேலாக "துரைமார் துரைமார்" என்று ஒட்டிக்கொண்டு, "உப்பைத் தின்றவனுக்கு விசுவாசமாக இருக்க வேண்டும்" என்று உணர்வாக இருக்கும் அவருக்கு; "முதலாளி தொழிலாளரின் உழைப்பைச் சுரண்டுகின்றான். பட்டாளி வர்க்கம், முதலாளி வர்க்கத்தை புரட்சி செய்து அழிக்க வேண்டும்" என்று மகன் பேசுவது தர்மமாகப் படவில்லை

அவர் நியாயம் அவருக்கு, மகனின் நியாயம் மகனுக்கு,

**சீனா;** பாரதம் மீதுபடையெடுத்து லடாக் பகுதியை ஆக்கிரமித்தது. "பாரத மாதாவுக்கு ஜே......." என்ற கோஷம் மலையக மக்கள் உள்ளத்திலும் ஒலித்தது. தாயகத்திற்கு ஆபத்து என்ற கவலை மேலோங்கியது. இந்நிலையில்; வீரமாக; உணர்வுகளின் கேசரியாக; தேசிய நாளிதழ் **ஒன்று;** இந்திய பாதுகாப்பிற்காக நிதி திரட்டியது. கணக்கப்பிள்ளை தானே முன்னின்று நிதி திரட்டி பக்கத்து அரிசி ஆலையில் பணி புரிந்த இராமநாதபுரம் அழகர்சாமியின் துணையோடு பத்திரிகைக்கு அனுப்பி வைத்தார். அனுப்பி வைத்தார். நிதி அளித்தவர்களின் பெயர் பட்டியலை பத்திரிகையில் பார்த்தபோது தாய்நாட்டிற்கு தம் பங்களிப்பினை நல்கியதாக அனைவரும் உள்ளம் பூரித்தனர்.

பஞ்சசீலம் பேசி ஏமாத்தி "சீ" பாம்பு தின்கிறவன் நாகமா கொத்திப்புட்டானே! என்று வஞ்சினம் கொண்டனர்; தோட்டத்தினர், ஆனால்

இன்று; மகன் "செஞ்சீனம் என்றும் சிகப்பு" **என்று** பேசுவதை அவரால் ஜீரணிக்க முடியவில்லை. "தருதல புள்ள புத்தி கெட்டு போச்சி" என்று சபித்துக் கொண்டார். "உலகத்தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள்" முதலாளி ஒழிக! ஒழிக!! என்று இரவோடிரவாக ஆபிசில் நோட்டிஸ் **போர்டில்** ஒட்டியதில் முரளிக்கும் பங்குண்டு. **வெளியில் சொல்ல முடியுமா....? மனதில் போட்டு ஆற்றிக்கொண்டார்.**

கவலையை சுமந்து காலம் ஓடுகின்றது.

உழைப்பால் மலையகத்தை உருவாக்கிய இலட்சோப இலட்ச மக்கள் "கள்ளத்தோணி" "நாடற்றவன்" என்ற அவமான குறியீடுகளில் இருந்து விடுபட, ஏதேதோ அருட்டுணர்வில் வந்த வந்தவர்க்கெல்லாம் வாய்க்கரிசி போட்டு, தெரியாத, புரியாத; விளங்காத; வேண்டாத வினாக்களுக்கெல்லாம் விடையளித்து பிரசா உரிமைக்காக படிவங்களைத் தற்போது நிரப்பிக்கொண்டிருக்கின்றார்கள்.

சமூகத்துக்கு பொறுப்பானவர்களே, விக்கிரமாதித்தன் வேதாளத்தை சுமந்து பதில் கூறித் தொடர்வதைப் போல மனம் நொந்து கொண்டிருக்கும் போது, அப்பாவித் தொழிலாளர்கள் என்ன செய்வது.?

நோனா தோட்டத்திலிருந்து கணக்கப்பிள்ளையின் சம்மந்தி பிச்சமுத்து வந்தார். "என்ன சம்மந்தி என்ன முடிவு எடுத்திறிக்கீங்க" என்று கேட்டார்? "உங்க மாப்பிள்ள முரளி இலங்கை பிரஜா உரிமைக்கு தான் போடனும்ணு பிடிவாதமாக இருக்கிறார். அதோட இரங்கலையில கல்யாணம் முடித்த மூத்தவன் தங்கராசும், அவுங்க மாமா, மாமியோட இலங்கைக்கு தான் மனு போடப் போறானாம். வயசுக்கு வந்த குமர்களின் வீட்டில வச்சிக்கிட்டு இனி நா எங்க இந்தியாவுக்கு போறது? மகன் முரளியின் பேச்ச மீறி என்னால ஒன்றும் செய்ய முடியாது. **சம்மந்தி"** - என்று முழுப்பொறுப்பையும் மகன் மீது போட்டு விட்டார்.

நோனா தோட்டத்து மைத்துனர் பிச்சமுத்து அடக்கமானவர், ஆழமாக சிந்திப்பவர். அமைதியாக பேசினார். "மச்சான் எல்லாம் யோசிச்சி செய்ங்க. ஐம்பத்திஎட்ட மறந்திடாதிங்க.... இனி வரப்போற காலத்தில என்னென்ன நடக்குமோ நமக்குத் தெரியாது. நாட்டு நிலம சரியில்லை. ஒரு சின்ன சந்தோசத்தில உண்மை நிலையை மறந்து விஷயம் விளங்காம இருக்கிறது தான் நம்ம சனங்க....." கவலையோடு தொடர்ந்த அவர்......... "வெள்ளைக்காரன் நம்ம வம்சத்த இங்க கொணந்து விட்டிட்டு ஒரு முடிவும் சொல்லாம போயிட்டான். இங்க நம்ம உழைக்கிறத தவிர நம்ம என்ன சுகத்த கண்டோம்? நம்ம கண்ண மூடிட்டா நம்ம பிள்ள குட்டிக போற கதி என்ன?"

**அவர்** குரலில் நிச்சயமற்ற நிலையில் வாழந்து கொண்டிருக்கு ஒரு இனத்தின் தவிப்பு தனலாய் கொதித்தது. கணக்கப்பிள்ளையால் கவலைப்பட முடிந்ததே ஒழிய; பதில் கூற முடியவில்லை நிதானமும் தீட்சணியமும் மிக்க அவர் கவலையுடன் விடை பெற்றுச் சென்றார். சுப்பையை கணக்கப்பிள்ளைக்கு தலைசுற்ற ஆரம்பித்தது. **ஐம்பத்தெட்டை மறக்கமுடியுமா?**

"சம்மந்தி" பிச்சமுத்து சொன்னா சொன்னது தான். ஐம்பத்தியெட்டை நினைக்கும் போது அவருக்கு அடிவயிறு பத்தி எரிகின்றது. என்றாலும் சுப்பையா என்ற சில்லரை, கங்காணி, துரைமாரால் "கேஜி" என்றும் தற்போது "கே.பி" என்றும் அழைக்கப்படுகின்றார். இதையெல்லாம் விட்டுக் கொடுக்க முடியமா? ''கலவரம் நடந்திச்சுதான். அதையே நினச்சிகொண்டிருந்தா எப்படி? நம்ம ஒரு குடும்பமா? எத்தனாயிரம் குடும்பம் இருக்கு,"

''**எல்லாம்** இறைவன் விட்டபடி...'' தனக்குத்தானே மனசை தேற்றிக்கொண்டு.... தோட்டத்தில் வளர்ந்து வரும் தனது செல்வாக்கு; உயர்ந்து வரும் குடும்பப், பெருமை! "அட நாட்டானும் கணக்கப்பிள்ளை ஐயா என்று கைக்கட்டி நிற்கிறானே!" எல்லாவற்றிற்கும் மேலாக சின்ன பங்களாவும், அதனை ஒட்டிக்கொண்டிருக்கிற காணி; இதனை எல்லாம் இழக்க மனசு வருமா? இப்ப தன்னை லயத்து ஆளு என்று யாரும் சொல்வானா? சொன்னாலும் நம்புவானா? எப்படி நிறுத்தாலும் தன்பக்கமே தராசு கணக்கின்றது. கணக்கப்பிள்ளைக்கு! இவவாறு, ஒரு வளர்ச்சி ஏற்படும்போது மகனின் கட்டுக்கடங்காத செயல்களினால் மறுபக்கம் குடும்பத்தில் அமைதியின்றி தவிக்க ·

இப்படியே வாழ்க்கை போராட்டம் தொடர........ தொடர.......

ஒருநாள் தகப்பனுக்கும் மகனுக்கும் நடந்த நீண்ட வாக்குவாதத்தின் பின்னர், நடுநிசிக்கு பின் வந்து குழுமும் நண்பர்களுடன் மகன் முரளி புறப்பட்டு போய் திரும்பி வீடு வராமல் இருப்பது சுப்பையா கணக்கப்பிள்ளை கட்டிய மனக்கோட்டைக்கு சுனாமியாக அமைந்தாலும்; தோட்டத்தில் இருந்து; துரைமார்களுக்கு எதிராக பேசி; செயற்பட்டு தனக்கு ஆபத்தை விளைவிக்காமல் இருப்பது ஓரளவு திருப்பதியாக இருந்தது.

**பிரஜா** உரிமைப்படிவம் நிரப்பும் நிகழ்வில் தோட்டமே முழ்கி நிற்கும் போது, இன்று திடீரென வீட்டுக்கு வந்து நின்றான். முரளி. வீடே அல்லோலகல்லோலப்பட்டது. அவனை மீண்டும் பார்த்த பாசம் ஒரு புறம். பயம் ஒரு பக்கம். "முக்கிய விடயம் முடிவு எடுத்தாக வேண்டும்." நிலப்பட்டா முதல் சகல இந்தியா ஆவணங்களையும் அழித்தது அவனது கட்டளையின் பேரில் தான்.

தனது வீட்டில், பிரஜா உரிமை படிவத்தை நிரப்பும் போது; அதனை நிரப்ப வந்தவருவுடன், தனக்கு புரியாவிட்டாலும் அவருக்கு மேலாக ஆங்கிலத்தில் ஏதேதோ விளக்கங்களை கூறுவது கணக்குப்பிள்ளைக்கு பரம திருப்தியைத் தந்தது. மகன் ஒழுங்காக படித்திருந்தால் இன்று தனக்கு எவ்வளவு பெருமையாக இருக்கும் மனதில் அவர் கட்டிய ஆசைக் கோட்டைகள் தகர்ந்து மண்ணோடு மண்ணாகிவிட்டனவே!

மறுநாள் வழமைபோல் முரளி புறப்பட்டு போய்விட்டான்.

அடுத்த வருடம் கொழும்பில் இருந்து ‘‘ரோனியோ’’ செய்யப்பட்ட ஒரு பாதித் துண்டு கடிதத்தில் இலங்கை பிரஜா உரிமைக்கு அனுப்பிய விண்ணப்பம், எது விதக் காரணத்தையும் குறிப்பிடாமல், **“மனு நிராகரிக்கப்பட்டது.”** என்று ஒவ்வொன்றாக; கட்டுக்கணக்கில் தோட்டத்து ஆபீசுக்கு வந்து குவிந்தன.

ஆறு மாதத்துக்கு முன்னர் நெருப்புக்காய்ச்சலில்; எழுபது வயதில், இறந்துபோன செல்லமுத்து கிழவனுக்கு; நடக்க முடியாத சப்பாணிக்கு; வாசக்கூட்டி சூசை ஆகியோருக்கு காலை ஒன்பது மணிக்கு கொழும்பு காலி முகத்திடலின் முன்னால் உள்ள ஆபீசில் விசாரணைக்கு ஆஜராகும் படி அழைப்பு வந்தது. தோட்டத்தில் வாயைக் கட்டி, வயிற்றைக்கட்டி, ஆடு, மாடு வளர்த்து, மகன் பெரிய சாமியை டவுனில் படிக்க வைக்கும் காளிமுத்துக்கு குடும்பத்தோடு நிராகரித்து வந்தது. இடிந்து போனது பெரியசாமி மட்டுமல்ல அவனது கனவுகளும் தான் யார் யாரையோ பிடித்து ‘‘அப்பில்’’ செய்ய சிட்டாய் பறக்கின்றான் அவன். எவருக்கு ஏன் நிராகரித்தார்கள் யாருக்கு எதற்காக சாகப் போறவயதில் அழைத்தார்கள் என்பதெல்லாம் விளங்காத விசித்திரம் தான் ஆனால் ஏதோ ஒரு சூட்சுமம் உண்டு என்பது மட்டும் உன்மை.

தனது விண்ணப்பத்தை நிராகரித்து விடக் கூடாது என்று முத்துமாரி அம்மனுக்கு நேர்த்தி வைத்தார் கணக்கப்பிள்ளை தினமும் இதே கனவும் ஏக்கமும்.... கடந்த மாதம் கொழும்புக்கு விசாரணைக்குப் போய் வந்த ஸ்கூல் லயத்து ராமசாமி கொண்டு வந்து தூது, கணக்கப்பிள்ளைக்கு அசோக வனத்துக்கு ஆஞ்சநேயர் கொண்டு வந்த கணையாழியாக அமைந்தது.

குடிவரவு, குடியகல்வு திணைக்களத்தில் நிர்வாக சேவையை கரைத்துக்குடித்து, எண்பிழை, எழுத்துப் பிழை பார்த்து தோட்டத்தவர்கள் நிரப்பி அனுப்பிய படிவத்தையே பார்த்து; கேள்வி மேல் கேள்வி கேட்டு, அவர்களை மடக்கி ‘‘எத்தனையாம் ஆண்டு பிறந்த?” என்ற கேள்விக்கு, ‘‘ஏல மலையில கொக்கோ கன்னு போட்ட போது” என்ற பதிலைக்கேட்டு

பரிகசித்து, சிரித்து மனுவை உதவிக்கமிஷனர் நிராகரித்தாலும், ராமசாமி மூலமாக தனது வீட்டுக்கு வேலைக்கார பிள்ளை ஒன்று தேவை என்ற அந்த அதிகாரியின் செய்தி கணக்கப்பிள்ளைக்கு பச்சை கொடி காட்ட; ராமசாமி மகளையே சட்டு புட்டென ஏற்பாடு வெய்து கொழும்புக்கு அனுப்பி வைத்துவிட்டார்.

**இராமசாமியின்** பிள்ளையின் படிப்பில் மண். "உங்கா பிள்ள அழுது கொண்டே பஸ் ஏறியது. தாயும் கூடவே கொழும்பு போய் பிள்ளையை ஒப்படைத்துவிட்டு வந்தார். அடுத்த வாரம் கணக்கப்பிள்ளை ஐயாவுக்கு விசாரணை கடிதம் வந்தது.

"ஐயாவிற்குசந்தோஷங்களோடு" "பஸ்" ஏறிய கணக்கப்பிள்ளை ஐயா சந்தோஷமாக திரும்பி வந்தார். இலங்கைத் திருநாடே தனக்கு "ஜன்ம பூமி" ஒப்பனை கிடைத்துவிட்ட திருப்தி.

**அவரும்** இப்போது பதிவு பிரஜை. அவர் பெயர் இப்போது வாக்காளர் பட்டியலில், அடிக்கடி மீசையை முறுக்கி மகிழ்கின்றார். தேர்தல் வந்தது. இது வரை தோட்டத்து லயத்து பக்கமே தலைவைத்து படுக்காதவர்கள் கலர், கலர் கொடிகளை கட்டிக் கொண்டு லயத்ததை வலம் வந்து வாக்குறுதிகளை வாரி வாரி வழங்கிக் கொண்டிருந்தார்கள்.

எத்தனை அன்பு, பரிவு, பாசம், வாஞ்ஞை. **"தோட்டக்காட்டான்"** என்று பழித்து ஒத்துகியவர்களை எல்லாம் ஒட்டிக்கொண்டு உதட்டில் உறவாட வைத்தது ஒட்டு........ ஒட்டு மகியையே ....... மகிமை சாதிப்பெருமை பேசியவர்கள், சாதிச்சங்கம் வைத்து; தனது உறவுக்குள்ளேயே வசதிகளை, வாய்ப்புகளை பெருக்கி; பகிர்ந்து கொண்டவர்கள், வாயார "நாம் தமிழர், தமிழர்" என வாய் இனிக்க பேசுகின்றனர். ஓட்டுக்காக ஒட்டிக்கொண்டு தமிழ், தமிழர், என்ற போர்வையில் மாரீசம்புரிகின்றனர். லயத்து பக்கத்திற்கு காலெடுத்து வைக்காதவர்கள் கூட தண்ணீர் வாங்கி குடித்து, ஓட்டுவேட்டை ஆடுகின்றனர். எப்படியெல்லாமோ வேஷம் போட்டு வென்று விட்டால் போதாதா? பதவிகளிலுள்ள பணவரவு சுக போகம் தோட்டத்தவருக்கு தெரியவா போகின்றது.

தேர்தல் காலத்தில்; "ஒப்பாரி சொல்லி அழக்கூட ஆள் இல்லாத" அனாதை பிணங்களுக்கும் மலர் வளையம், மரியாதை! போட்டி போட்டுக்கொண்டு அனுதாபம் தெரிவிக்கும் கூட்டங்கள் நிறைகின்றன. தோட்டத்தில் தேர்தல் பிரச்சார கூட்டம் வேறு! ஆள் ஆளுக்கு யார், யாரையெல்லாமோ கூட்டிக்கொண்டு வந்து வாக்கு வேட்டை ஆடுகின்றார்கள்.

தெய்வச் சிலைகள் வேறு **சீரழிகின்றன! வோட்டுக்காகத்தான்....!** எடுத்துக்கூறுவதற்கு கொள்கையில்லை. கோயிலுக்குச் **சிலைகள்.**

சிலை வடித்து, உயிர் கொடுத்து, கலை வளர்த்து கடவுள் பாதம் பணிந்தோருக்கு நிலையில்லாத பதவிக்காக தெய்வச் சிலைகள்...ம்....ம்

அம்மன் கோயில் திடலில் பைலா பாடலோடு கதம்பமாக ஒலிக்கும் ஒலிபெருக்கி பேச்சை கேட்டு "ஒட்டுப்போட்டு என்ன பிரயோசனம். நமக்கு என்ன காணி வீடெல்லாமா கிடைக்குது எலெக்ஷனுக்கு எலெக்ஷன் அடி **உதை** தானே **கிடைக்குது?"** என்று முணு முணுத்த பணிய லயத்து பாலாவை கணக்கப்பிள்ளை வாயடைக்கச் செய்கின்றார். **"வாய் கொழுப்பு அடக்கு" -** என்று கணக்கப்பிள்ளைக்கு "ஹொந்தாய்" என்று சபாஷ் கூறிய வேட்பாளர் தோட்டத்தை விட்டு புறப்பட்டு போகும் போது, தனது வேனை நிறுத்தி பாலாவை முறைத்துப்பார்த்து "மம் பலாகண்ணங்' கட்ட பரிசம் டவுமட்ட வர்ரெங் பலமு" என்று உறுமிவிட்டு போனார். "வேனும்" தன்பங்கிற்கு உறுமியது.

தேர்தல் தினம். தேர்தல் **திருவிழா!** வாக்களிப்புகளை கட்டியது. தோட்டத்தில் களிப்பு. கணக்கப்பிள்ளை வக்களித்து பிள்ளையார் சுழி போட்டார்.

தேர்தல் திருவிழா முடிந்தது. ஆட்சி அமைந்தது. பல எதிர்பார்ப்புகளுடன் தோட்டம் ஆவலுடன் காத்திருந்தது. அப்போது வடக்கில் கண்ணி வெடியில் சிக்கிய இராணுவ வீரர்களின் சடலங்கள் கொழும்பு கனத்தையில் நல்லடக்கம் செய்யும் போது வன்செயல்கள் வெடித்தன. யாருமே எதிர்பார்க்கவில்லை, **பொரல்ல தோசைக்கடையில் ஆரம்பித்த தீ தேசத்தையே எரித்தது. லங்காதகனம் நாள் கணக்கில் வாரக்கணக்கில் நீண்டது.** பசி பட்டிணி, பஞ்சம் தீர்ந்து நிம்மதியாக வாழலாம் என்றிருந்த வேளையில், இப்படி ஒரு பேரிடி... தமிழர்களின் வீடுகள், வியாபார ஸ்தலங்கள், ஆலயங்கள், தேர்கள், என்பவற்றுடன் விக்கிரங்கள் கூட அடித்து நொறுக்கப்பட்டு, தீக்கிரையாக்கபட்டன. கொலை, கொள்ளை, மான பங்கம் என்பன கட்டுக்கடங்காமல் காட்டுத்தர்பாராக அரங்கேறின.

வரலாறு காணாத வன்செயல். ஆடி மாதம் கறுப்பு ஆடி மாதமானது. நாடெங்கிலும், மானமே திரையாய் அணிந்த தமிழ்ப்பெண்கள் ஈனபங்கப்படுத்தப்பட்டனர். மேகம் மூடிய மலைகள், அக்கினி மலைகளாகின. நாடெங்கிலும் இலட்சக்கணக்கான தமிழ்மக்கள் குற்றுயிரும் குலைஉயிருமாக அகதிகளாயினர்.

பஞ்சமாபாதகம்... தட்டிக்கேட்டது யார்? தோட்டத்தில் மிஞ்சியது என்ன? ஏன் எங்களை அடித்தார்கள்? வெட்டினார்கள்? எரித்தார்கள்? மானபங்கப்படுத்தினார்கள்? நாங்கள் என்ன தவறு செய்தோம்? தோட்டத்து மக்கள் அப்பாவிகளாக அழுதார்கள். உயிர்த்தப்பி பிழைக்க, காடுகளில்,

மானாப்புல் மலைகளில் தஞ்சம் அடைய அவையும் எரிக்கப்பட்டு... தேடி கண்டு பிடிக்கப்பட்டு... அனர்த்தங்கள் ....

வவுனியா, கிளிநொச்சி, மன்னார் அகதி முகாம்கள் தோட்டத்து மக்களுக்கு அடைக்கலம் கொடுத்தன. வருஷக் கணக்கான அகதிமுகாம் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைத்து, வைரமிகு பாலைகளை வெட்டிச் சாய்த்து **ஆழக்கிணறு வெட்டி** வாழ்க்கையை ஆரம்பித்த போது மீண்டும் ஏமாற்றம் வாழ்ககைப் பயணத்தில் ... புதிய சூறாவளி. போராட்டம்**.... யுத்தம்... யுத்தம்.... உள்நாட்டு யுத்தம்.**

கவலைகளே காலங்களாக தொடர..... தொடர ..........

வடபகுதியில் போராட்டம். இருதலைக் கொள்ளிஎறும்பின் நிலை. ''பங்கரில்'' படுக்கை. நிமிர்ந்து நின்றால் தலைச் சிரச் சேதம்.'' இந்தப் போராட்டத்தில் 'ஷெல்'' விழுந்ததில் சுப்பையா கணக்கப்பிள்ளை தனது ஒரு காலையும், தனது மூத்த மகளையும் இழந்தார். இழப்புகள் எண்ணில் அடங்காமல் தொடர்ந்தன. எ.்.குப்பறவைகளின் இராஜ்ஜியம். அவற்றின் **''திட்டிவிடபார்வைகளே''** உயிரைக் குடித்தன.

கலவரத்தில் அநுராதபரத்தில் சிக்கிக்கொண்ட முரளி பதுங்கி இருந்தான். அப்போது தெரிந்த, உறவான முகங்கள் தேடி வர ஆறுதல் அடைந்தான். ''சகோதரயா'' என்று தோழமையை முன்நிறுத்தி முகம் மலர அழைத்து; அவர்கள் அடைக்கலம் தருவார்கள் என்று நம்பிக்கை கொள்ள; ''இது சகோதர சமாச்சாரம்'' இல்லை. ''இரத்த வழி போராட்டம்'' என்று மறுமொழி கூறியதோடு அவர்களில் சிலராலேயே தாக்கப்பட்டு நம்பிக்கை **இழந்து; மன்னார்** ஜெயபுரத்திற்கு வந்து சேர்ந்து விட்டது கணக்கப்பிள்ளைக்கு ஒரு வகையில் மன ஆறுதலாக இருந்தது. மானுடத்தை நேசித்த முரளி...

யுத்த மேகங்கள் ஓயவில்லை............

மானுடம் தோற்குமா? மானுடம் என்பது..........? யுத்தம் யுத்த........ மேகங்கள் ஓயவில்லை தாக்குப்பிடிக்க முடியாமல் வங்காலை படகுத்துறையிலிருந்து இராமேஸ்வரம் நோக்கி ஆபத்தான பயணங்கள் தொடர்ந்தன. மௌனம் பூத்த மனசுடன்.......... முரளி வாசிப்பில் மூழ்கி இருந்தான். அவன் கையில் உள்ள நூல் **''தேசிய இனங்களும் சுய நிர்ணயமும்.....''** சுப்பையா மௌனத்தை கலைத்து **''முரளி; நாமும் படகில் இந்தியா போய்விடுவோம்.''** அது அழைப்பு மட்டுமல்ல அது உறுதியான வேண்டுகோள், கட்டளையாக ஒலித்தது. முரளி மறுக்கவில்லை. உயிர்தப்பினால் போதும்......... வேறு வழி ஏது............. பதுங்கு குழியில் எத்தனை நாள்கள் வாழ்வது? வறுமையின் கோரப்பிடிவேறு..

காலம் கற்றத்தந்த பாடம். தெய்வ நம்பிக்கையையே உறுதியாகக் கொண்டு கணக்கப்பிள்ளையின் குடும்பம் வங்காலையில் படகேறி ஜீவ மரண போராட்டத்தின் பின்; இராமேஸ்வரம் போய்ச்சேர்ந்தது. கடலில் புயலிலும், அலையிலும் குண்டடிப்பட்டும் படகு கவிழ்ந்ததும், உயிர் துறந்தும், உறவுகளை பிரிந்தும், ஏற்பட்ட அனர்த்தங்கள் எத்தனை எத்தனையோ.....!!

ஒரு காலத்தில் தனது தகப்பனார், பாட்டனோடு தங்கச்சிமடம், அக்காமடம் கடந்து, இராமேஸ்வரத்தில் படகேறி தட்டப்பாறையில் தவழ்ந்து மன்னாரில் இறங்கி, சிலோனுக்கு வந்த கதையை சொல்ல, சுப்பையா கணக்கப்பிள்ளை கேட்டிருக்கின்றார்.

இப்போது அதே சரித்திரம் மன்னாரில் திரும்பவும் தொடர; அகதிகளாக தமிழ் நாட்டுக்கு தஞ்சம் கோரி வந்த போது, கடலில் **அனர்த்தங்கள்.** படகு விபத்துகளில் மரணித்தவர்கள் போக எஞ்சி தப்பிப் பிழைத்தவர்கள் குமரி முதல் கேரளம் வரை அகதி முகாம்களில்........ சுப்பையா கணக்கப்பிள்யையின் குடும்பம் திருவண்ணாமலையில் அமைந்த அடி அண்ணாமலை அகதி முகாமில். ஆம், அடி அண்ணாமலை கேம்பில் “ஆமாம் **துணை** வந்தணையும்சாரல் அண்ணாமலையாரே” என்று அண்ணாமலையானை துதித்தபடி. அகதி முகாம்களில் பல வருடங்களாக அகதிகளாக அகதி வாழ்க்கை..... ‘‘வடக்கத்தியான்” கள்ளத்தோணி இந்தியாக்காரன் என்ற ‘‘நாமங்கள்” போய் தன் சொந்த தாய் நாட்டிலேயே ‘‘சிலோன் அகதி” ‘‘சிலோன் காரன்” என்ற பட்டப் பெயரில் தன் சொந்த தாய் நாட்டிலேயே முத்திரை குத்தப்பட்டு வாழும் நிலை. வாழ்க்கை ஒரு சிறைதானா? வாழ்வும் ஒரு திறந்த வெளி சிறைதான்.

கால ஓட்டம் தான் எத்தனை வேகமாக சுழலுகின்றது.

காலசக்கரம் சுழல கணக்கப்பிள்ளை கண்ணை மூடி விட்டார். சுகாதாரமற்ற **சூழல்,** நோய்கள்....... **மனக்கவலை.** சிதைந்து போன **குடும்பம். இப்படி லட்சக்கணக்கானோர்....**

**வாட்டமே வாழ்க்கையாக தொடர....**

வடக்கில் உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுவிட்டது. அகதிகள் சொந்த ஊருக்குத் திரும்பலாம் அகதி வாழ்வில் அலுத்துப்போன பலர் அவசர, அவசரமாக மூட்டை கட்டுகின்றனர். இலங்கைக்குத் திரும்புகின்றனர்.

அகதி முகாமில் படிவங்கள் விநியோகிக்கப்பட்டு முரளியின் கையிலும் அது திணிக்கப்படுகின்றது. காடாகக் கிடந்த மலையகத்தை தோட்டங்களாக்கி, அந்தப் பசுமையை இதயத்தில் கொலுவேற்றி, நேசித்து, பூஜித்த அந்த மலைகள், அக்கினி மலைகளாக மாறி தீயிட்டு, கொழுத்தி சுட்டெரித்த

போது, அவன் நேசித்த மானுடம், மனித நேயம் என்பதெல்லாம் அவனை நிலை கலங்கச் செய்து நிர்க்கதி ஆக்கி; துரத்தி; விரட்டி விரட்டி அடித்த போது ......... பிறந்தமண்ணை நேசித்து, பிரஜா உரிமை பெற்று.....; அவன் இதயத்கை சுட்டெரித்த அந்த மலைகளை, அந்த முகவரியை, தேசத்தை மீண்டும் நினைப்பானா?

இந்த ஜீவ மரண போராட்டத்தில் வாழப் பழகிக்கொண்டு, அங்கேயே கல்லாய் சமைந்து, இராமரின் பாத தரிசன விமோஷனத்தை கூட நினைத்துப் பார்க்காமல் வாழ்ந்து கொண்டிருக்கும் தன் **உறவுகளுடன்;** இனத்துடன் மீண்டும் இணைவானா?

சுட்ட மண்ணா? பச்சை மண்ணா? எங்கும் மண் தான். இந்த உலகமே மண் தான். ஆனால் நாடு, தேசம் என வரம்புக்கட்டி பிரித்து, பிரிவுகண்டு மனிதன் உயர்ந்தானா? அல்லது தாழ்ந்தானா? சிறுபான்மையானவர்களால் நிம்மதியாக வாழ முடிந்ததா?

முரளி என்னதான் செய்யப்போகின்றான்? சட்டத்தின் பிடியில் ''அகதி'' என்ற பதிவில் ......... ஆயிரம் ஆயிரம் இலட்சோப இலட்சமுரளிகள் என்னதான் செய்யப்போகின்றார்கள்......... **தாய்நாடு எது....?** வாழ்வாதாரம், வாழ்விடம், இனத்துவம், எது? எது?

இருதேசங்களில் இணைந்திருக்கின்ற; மனித சங்கிலிகளின் இணைவு.........? சங்கமமில்லாத நதிகளாக.....

**வீரகேசரி 2011**

Jaffna Central College Library
11812



Matale P. Vadivelan (an Indian Tamil Origin from Selam District in Tamil Nadu, was born and bred at North Matale Estate in the District of Matale of the Central Province of the Island of Sri Lanka.

He has got Graduation in Arts Stream at University of Peradeniya, Sri Lanka. He had served as a Govt. Teacher and a Principal and he served as a Cultural Officer at the Ministry of Hindu Cultural Affairs.

He was applauded and admired in "Sahithya Vizha" and in "Arulneri Vizha" as well as he was awarded as Ilakkiya Semmal" and "Kalapoosanam" by Ministry of Cultural Affairs.

He won the first prize in Short Story Competition, held by Virakesari and "Malainattu Eluththalar Manram" for his Short Story titled Pinchu Ulaham.

He was awarded for the short story "Thuraivi - Thinakaran" and "Kalaioli Muththiyya Pillai" and awarded at Silver Jubilee - short stories of Udayan News Paper.

"Pahal Natchathirangal" drama written and directed by him, got first place in All Island School Competition.

He wrote three novels. Those are "Akkinitheertham", "Nunikkarumbu" and "Thoduvanam Nokki" and he has written more than fifty short stories. Poems and dramas have written and directed by him. Some of his short stories were translated into English and Sinhala.

His some short stories have been appeared on Tamil Nadu News Papers and on Magazines. Some selected stories, appeared on Sri Lankan papers, were republished on Tamil Nadu papers and magazines.

He has researched upcountry folkarts and he published books about it. He submitted a research paper on Malayaha Kamankooththu organized by the Department of Hindu Cultural Affairs under the patronage of Prof. K. Sivathamby in 1993.

He rendered lecture about hindu "Araneri" education at "Sekkilar Peruvizha" and he was admired by Kanchi Srimadam Kamakodi Peedam at Kanchi Periyar Jegath Guru Sri Sangarachchariyar Hall in Kanchipuram for above delivered lecture.

"Paal Maranggal" the short film has been scripted and directed by Matale P. Vadivelan.

ISBN 978 955 9396 55 0
pbd
Rs. 350.00
109010000
ADCHAYA VADAM

DESIGNED & PRINTED BY UNIE ARTS (PRIVATE) LTD. COLOMBO - 13. +94 11 2330195